APPOLO STUDY CENTRE
CHENNAI

# APPOLO STUDY CENTRE

## Political Science
## TEST – 3

| | | |
|---|---|---|
| 6th Std Term I | Unit 1 | பன்முகத் தன்மையினை அறிவோம் |
| | Unit 2 | சமத்துவம் பெறுதல் |
| 6th Std Term 2 | Unit 1 | தேசியச் சின்னங்கள் |
| | Unit 2 | இந்திய அரசமைப்புச் சட்டம் |
| 6th Std Term 3 | Unit 1 | மக்களாட்சி |
| | Unit 2 | உள்ளாட்சி அமைப்பு ஊரகமும் நகர்ப்புறமும் |
| 7th Term I | Unit 1 | சமத்துவம் |
| | Unit 2 | அரசியல் கட்சிகள் |
| 7th Term II | Unit 1 | மாநில அரசு |
| | Unit 2 | ஊடகமும் ஜனநாயகமும் |
| 7th Term III | Unit 1 | பெண்களின் மேம்பாடு |
| | Unit 2 | சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு |
| 8th Civics | Unit 1 | மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது |
| | Unit 2 | குடிமக்களும் குடியுரிமையும் |
| | Unit 3 | சமயச்சார்பின்மையை புரிந்து கொள்ளுதல் |
| | Unit 4 | மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும் |
| | Unit 6 | பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை |

| | | |
|---|---|---|
| | Unit 7 | நீதித்துறை |
| 9th Civics | Unit 1 | அரசாங்க அமைப்புகள் மற்றும் மக்களாட்சி |
| | Unit 2 | தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள் |
| | Unit 3 | மனித உரிமைகள் |
| | Unit 4 | அரசாங்கங்களின் வகைகள் |
| | Unit 5 | உள்ளாட்சி அமைப்புகள் |
| 10th Civics | Unit 1 | இந்திய அரசியலமைப்பு |
| | Unit 2 | மத்திய அரசு |
| | Unit 3 | மாநில அரசு |
| | Unit 4 | இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை |
| | Unit 5 | இந்தியாவின் சர்வதேச உறவுகள் |

**6ம் வகுப்பு – தொகுதி-I**

**அலகு– 1 பன்முகத்தன்மையினை அறிவோம்**

**இந்தியாவில் பன்முகத்தன்மை:**

- இந்தியா ஏறத்தாழ ஐந்தாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த நாகரீகத்தின் தாயகமாக விளங்குகிறது. இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வளங்களால் ஈர்க்கப்பட்டு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல்வெறு இன மக்கள் வந்தனர். சிலர் உள்ளூர் மக்களுடன் சேர்ந்து வணிகம் செய்யவும், மற்றவர்கள் படையெடுப்பு காரணமாகவும் இந்தியாவிற்கு வருகை தந்தனர். நில வழியாகவும் கடல் வழியாகவும் பல்வேறு இன மக்கள் இந்தியாவிற்குள் இடம் பெயர்ந்தனர். ஆகையால் திராவிடர்கள், நீக்ரிட்டோக்கள், ஆரியர்கள், ஆல்பைன்கள் மற்றும் மங்கோலியர்கள் போன்றோர் நவீன இந்திய இனத்தவரின் ஒருபகுதியாக உள்ளனர். மேலும் இந்தியாவிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கு சென்று தங்கினர். இவ்வாறு இடம்பெயர்ந்து தங்கியதே இந்தியாவில் பனமுகத்தன்மை மேலோங்கி இருக்க காரணமாக உள்ளது.

- இந்தியாவில் காணப்படும் பன்முகத் தன்மையினை பின்வரும் தலைப்புகளில் காணலாம். நில அமைப்புகள் மற்றும் வாழ்வியல் முறைகளில் பன்முகத்தன்மை, சமூகப் பன்முகத்தன்மை, சமயப் பன்முகத்தன்மை, மொழிசார் பன்முகத்தன்மை, பண்பாட்டுப் பன்முகத்தன்மை.

**நில அமைப்புகள் மற்றும் வாழ்வியல் முறைகளில் பன்முகத்தன்மை:**

- கண்டம் எனப்படுவது மலைகள், பீடபூமிகள், சமவெளிகள், ஆறுகள், கடல்கள் போன்ற பல்வேறு இயற்கைப் பிரிவுகள் மற்றும் கால நிலைகளை கொண்ட மிகப் பரந்த நிலப்பரப்பாகும். இவ்வனைத்தையும் இந்தியா பெற்றிருப்பதால், இந்தியா ‘‘துணைக்கண்டம்’’ என்று

அழைக்கப்படுகிறது. இக்காரணிகளே நாட்டின் பல்வேறு நில அமைப்புகளில் வாழும் மக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

- ஒரு பகுதியின் பொருளாதார நடவடிக்கைகளை அதன் நிலவியல் மற்றும் காலநிலை கூறுகள் தான் தீர்மானிக்கின்றன. கடலோரப் பகுதிகளில் வாழும் மக்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர் என்றால் சமவெளிகளில் வாழும் மக்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுகின்றனர். மலைப் பகுதிகளில் வாழும் மக்கள் கால்நடை வளர்ப்பை மேற்கொள்கின்றனர். மேலும் மலைப்பகுதிகளில் நிலவும் காலநிலையானது கா.ஃ.பி, தேயிலை போன்ற தோட்டப்பயிர்த் தொழிலுக்கு உகந்ததாக உள்ளது.

- நில அமைப்பில் காணப்படும் பன்முகத்தன்மை அப்பகுதியில் வளரும் தாவரங்கள் மற்றும் விலங்குகள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஒரு பகுதியின் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வளம் என்பது அப்பகுதியில் நிலவும் இயற்கை மற்றும் காலநிலையைப் பொறுத்து மாறுபடுகின்றது. மக்களின் உணவு, உடை, தொழில் மற்றும் வாழ்க்கைத் தரம் போன்றவை அப்பகுதியின் இயற்கை நிலை மற்றும் காலநிலையை பெரிதும் சார்ந்துள்ளன.
    - மேகாலயாவில் உள்ள மௌசின்ராம் அதிக மழை பொழியும் பகுதி ஆகும்.
    - ராஜஸ்தானில் உள்ள ஜெய்சால்மர் குறைவான மழைப்பொழியும் பகுதி ஆகும்.

**சமூக பன்முகத்தன்மை:**

**சார்ந்து வாழ்தல் மற்றும் சக வாழ்வு:**

- சமூகம் என்பது ஒரு பொது நலத்திற்காக மக்கள் இணைந்து வாழும் இடமாகும். நமது சமுதாயம் என்பது விவசாயிகள், தொழிலாளர்கள், கைவினைஞர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணாக்கர் போன்ற பலரையும் உள்ளடக்கியது ஆகும். மக்களின் மேம்பட்ட வாழ்க்கை முறைக்கு சமுதாயங்கள் ஒன்றை ஒன்றுச் சார்ந்து உள்ளன.

**குடும்பம் மற்றும் சமூகம்:**

- ஒரு சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பம் ஆகும். குடும்பம் என்பது இருவகைப்படும். கூட்டுக்குடும்பம் மற்றும் தனிக்குடும்பம் பல குடும்பங்கள் சேர்ந்து இணக்கமான சூழலில் வாழ்ந்து கொண்டிக்கின்றனர். மேலும் பல குடியிருப்புகள் இணைந்து கிராமங்களாகவும், பல கிராமங்கள் இணைந்து நகரங்களாகவும் உருவாகின்றன. குடிநீர், உணவு, மின்சாரம், கல்வி, வீட்டுவசதி போன்ற பல தேவைகளே மக்களை ஒன்றுபடுத்தி சமூக நல்லிணக்கத்துடன் வாழச் செய்கின்றன. நமது பண்பாட்டு நடைமுறைகள் அல்லது வாழ்வியல் அமைப்புகள் வேறுபட்டு இருப்பினும் அடிப்படையில் நாம் ஒருவரை ஒருவர் சார்ந்து ஒன்றாக இணைந்து வாழ்ந்து வருகிறோம்.

**சமய பன்முகத்தன்மை:**

- இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு ஆகும். அனைத்து மதங்களும் சமமானது என்று நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் அறிவிக்கிறது. மத விடுதலை நமது அடிப்படை உரிமை. இந்தியா பல மதங்களின் தாயகமாகவும், பல மதங்களின் புகலிடமாகவும் விளங்குகிறது. இந்து மதம், இஸ்லாமிய மதம். கிறிஸ்துவ மதம், சீக்கிய மதம், புத்த மதம், சமண மதம், ஜொராஸ்டிரிய மதம் போன்ற எண்ணற்ற மதங்கள் இந்தியாவில் தழைத்தோங்கி உள்ளன.

- இந்தியா பல்வேறு விழாக்களின் தாயகம் ஆகும். இந்தியாவில் பல்வேறு மதங்களைச் சார்ந்த மக்கள் பல்வேறு விழாக்களை நாட்டின் பல பகுதிகளிலும் ஒன்றுபட்டு, ஒற்றுமையாக கொண்டாடுகின்றனர். இதுவே இந்தியாவை உயர்ந்த பாரம்பரியமிக்க கலாச்சார நாடு என்பதை பறைசாற்றுகிறது. மேலும் இந்திய விழாக்களான பொங்கல், தீபாவளி, ஹோலி, விஜயதசமி, ஆயுதபூஜை, நவராத்திரி, துர்காபூஜை, தசரா, விநாயகர் சதுர்த்தி, பிஹு, கும்பமேளா, ஓணம், மிலாது நபி, ரம்ஜான், கிறிஸ்துமஸ், புத்த பூர்ணிமா, மகாவீர் ஜெயந்தி, குருநானக் ஜெயந்தி,

ரக்ஷ்பந்தன் போன்ற விழாக்கள் இந்தியாவின் பண்பாட்டுப் பன்முகத்தன்மைக்கான ஆதாரமாக விளங்குகிறது.

**மொழிசார் பன்முகத்தன்மை:**

- இந்தியாவின் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியா 122 முக்கிய மொழிகளையும், 1599 பிற மொழிகளையும் கொண்டுள்ளது. இந்தோ ஆரியன், திராவிடன், ஆஸ்ட்ரோ ஆஸ்டிக், சீனதிபெத்தியன் ஆகிய நான்கும் முக்கிய மொழி குடும்பமாகும். தமிழ் மொழியானது பழமையான திராவிட மொழி ஆகும்.

| இந்தியாவில் பேசப்படும் முதல் ஐந்து மொழிகள் (2001-ன் கணக்கெடுப்பின்படி) | |
|---|---|
| மொழி | 41.03% |
| இந்தி | 8.10% |
| வங்காளம் | 7.19 |
| தெலுங்கு | 6.99% |
| தமிழ் | 5.91% |

- வரலாற்ற ரீதியாக, இந்தியாவிற்கு வணிகம் செய்வதற்காக வருகை தந்த போர்த்துக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், டேனியர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் ஆகியோர் இந்தியாவிலேயே தங்கி இருந்ததால் மக்களின் மொழி மற்றும் பண்பாடுகள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினர். ஏனெனில் 1947-ல் இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னர், ஏறத்தாழ 300 ஆண்டுகள் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்தது. இதன் காரணமாக இந்தியாவில் ஆங்கிலம் ஒரு முக்கிய மொழியாக எழுச்சிபெற்று பள்ளிகள், கல்லூரிகளில் பயிற்று மொழியாகவும், அலுவலக மொழியாகவும் மற்று் அன்றாட வாழ்விலும் ஆங்கிலம் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையின்படி 22 மொழிகள் அலுவலக மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம்ஆண்டு இந்திய அரசால் முதல் செம்மொழியாக "தமிழ் மொழி" அறிவிக்கப்பட்டது. தற்போது 6 மொழிகள் செம்மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**பண்பாட்டு பன்முகத்தன்மை:**

- பண்பாடு என்ற சொல்லானது, மக்களின் மொழி, உடை, உணவு முறை, மதம், சமூகப் பழக்க வழக்கங்கள், இசை, கலை மற்றும் கட்டிடக் கலைகளின் பாரம்பரியத்தை குறிக்கிறது.

- ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடு அவர்களின் சமூக நடத்தையிலும் மற்றும் சமூக தொடர்புகளிலும் வெளிப்படுகிறது. இது சமூக வடிவமைப்புகளால் முன்னிறுத்தப்படும் குழு அடையாளத்தின் வளர்ச்சி நிலை ஆகும். மேலும் இவை ஒரு குழுவிற்கு மட்டுமேயான தனித்த அடையாளங்கள் ஆகும்.

- கலை மற்றும் கட்டிடக்கலை என்பது ஒவ்வொரு சமுதாயத்தின் ஒருங்கிணைந்த அங்கம் ஆகும். ஒரு சமுதாயத்தின் மரபு மற்றும் பண்பாட்டின் ஓர் பகுதியாக கலை வளர்ச்சி அடைகிறது. இந்தியாவில 29 மாநிலங்களும் 7 யூனியன் பிரதேசங்களும் உள்ளன. ஒவ்வொரு மாநிலமும் அவற்றிற்கான உயர்ந்த மரபையும் மற்றும் நுண்ணிய கலை வெளிப்பாட்டு வடிவங்களை பெற்றிருக்கின்றன.

**இந்தியாவில் புகழ்பெற்ற நடனங்கள்:**

- பண்டைய காலங்களில் நடனம் என்பது வழிபாடு மற்றும் கொண்டாட்டத்திற்கான வழியாகவும், மகிழ்ச்சி மற்றும் நன்றியை வெளிப்படுத்தவதற்கான பாவனையாகவும் கருதப்படுகிறது. இந்திய நடனங்கள் மூலம் நமது உயர்ந்த பண்பாடு வெளிப்படுகிறது.

| |
|---|
| இந்திய தொல்லியல் துறை இதுவரை கண்டு பிடித்த கல்வெட்டுச் சான்றுகளில் 60% தமிழ்நாட்டில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டவை ஆகும். அவற்றில் பெரும்பாலானவை தமிழ் மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன. |

- இசையும் நடனமும் ஒன்றுடன் ஒன்று இணைந்து இந்தியாவில் பல்வேறு வகையான இசை வடிவங்கள் பின்பற்றப்படுகின்றன. அவை இந்துஸ்தானி இசை, கர்நாடக இசை, தமிழ் செவ்வியல் இசை, நாட்டுப்புற இசை, லாவணி இசை மற்றும் கஜல் இசையாகும். இந்த இசை வடிவங்களில் சேர்க்கப்பட்ட ஏராளமான பாடல்கள், பல மொழிகளிலும் காணக்கிடைக்கின்றன.

**செயல்பாடு:**

- இந்தியாவில் நிலவும் பன்முகத்தன்மை குறித்து கற்றறிந்து உள்ளீர்கள். கீழ்காணும் அட்டவணையல் கொடுக்கப்பட்டுள்ள இரு மாநிலங்களையும் ஒப்பிட்டு எழுதுக.

**வேற்றுமையில் ஒற்றுமை:**

- இந்தியா பன்முகத்தன்மை நிறைந்த நாடாக இருப்பினும் ''நாட்டுப்பற்று'' என்ற உணர்வால் நாம் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம். நம் நாட்டின் சின்னங்களான தேசியக்கொடி, தேசிய கீதம் ஆகியவை நமது தாய்நாட்டையும், அதற்காக நாம் ஒன்று பட்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் நமக்கு நினைவூட்டிக் கொண்டே இருக்கின்றன. சுதந்திர தினம், குடியரசு தினம். காந்தி ஜெயந்தி போன்ற நாட்கள் தேசிய விழாக்களாக நம் நாடு முழுவதும் கொண்டாடப்படுகின்றன. இவையே நாம் அனைவரும் ஒரே நாட்டினர் என்ற உணர்வையும் நம் நாட்டுப்பற்றினையும் உயிர்ப்பிக்கச் செய்து கொண்டு இருக்கின்றன.

- இந்தியா ஒரு பன்முக பண்பாட்டு சமுதாயத்தைக் கொண்டுள்ளது. இந்தியாவின் பொதுவான நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், பண்பாட்டு மையங்கள் போன்றவற்றின் வாயிலாக நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற உணர்வால், ஒரே தேசத்தால் ஒன்றுபட்டு உள்ளோம். நமது விடுதலைப் போராட்டங்களும், இந்திய அரசியலமைப்புச் சட்டமும் இந்தியாவின் ஒற்றுமைக்கு சான்றாக திகழ்கின்றன.

| **இந்திய நாட்டுப்புற நடனங்கள்** | |
|---|---|
| தமிழ்நாடு | கரகாட்டம், ஒயிலாட்டம், கும்மி, தெருக்கூத்து, பொம்மலாட்டம், புலியாட்டம், கோலாட்டம், தப்பாட்டம் |
| கேரளா | தெய்யம், மோகினியாட்டம் |
| பஞ்சாப் | பங்க்ரா |
| ஜம்மு மற்றும் காஷ்மீர் | தும்ஹல் |
| குஜராத் | கார்பா, தாண்டியா |
| ராஜஸ்தான் | கல்பேலியா, கூமர் |
| உத்திரப்பிரதேசம் | ராசலீலா, சோலியா |
| அசாம் | பிஹு |

## அலகு– 2 - சமத்துவம் பெறுதல்

- நாம் வாழும் இச்சமூகம் பல்வேறு வகைகளில் வேறுபாடுகளைக் கொண்ட சமூகக் குழுக்களைக் கொண்டதாகும். நாம் ''வேற்றுமையில் ஒற்றுமை'' என்பதை நம்புவதால் அத்தகைய வேறுபாடுகளைக் களைந்து பிறருடன் அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பன்முகத் தன்மை எப்போதும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பதோடு மக்கள் தம்மிடமிருந்து வேறுபடும் பிற மக்களிடம் பகைமை உணர்வைக் கொள்வர். அவர்கள் பிற இனத்தின் மீது ஒரு பொதுவான எண்ணத்தைக் கொண்டிருப்பது சமூகத்தில் பதற்றத்திற்கு வழி வகுக்கிறது. இது போன்ற எண்ணங்கள் பாரபட்சத்திற்கு இட்டுச் செல்கின்றன.

1. **முன்முடிவு (பாரபட்சம்):**

- பாரபட்சம் என்பது மற்றவர்களைப் பற்றி எதிர்மறையான அல்லது தாழ்வான முறையில் கருதுவதாகும். அவர்களைப் பற்றி அறிந்து கொள்ளாமலேயே தவறாக முன்முடிவு எடுப்பதாகும். மக்கள் தவறான நம்பிக்கைகளையும் கருதுக்களையும் கொண்டிருக்கும் போது பாரபட்சம் ஏற்படுகிறது.

Prejudice = pre + judge

(முன்முடிவு= முன் + முடிவு / பாரபட்சம்)

- பாரபட்சம் என்ற வார்த்தை முன்முடிவினை குறிக்கிறது. முன்முடிவு என்பது மக்களின் மத நம்பிக்கைகள், அவர்கள் வாழ்கின்றன பகுதிகள், நிறம், மொழி மற்றும் உடை போன்ற பலவற்றை அப்படையாக கொண்டுள்ளது. பாரபட்சமானது பாலினரீதியாகவும் இனரீதியாகவும், வர்க்கரீதியாகவும், மாற்றுத்திறனாளிகள் மீதும் மற்றும் பிறவற்றிலும் காணப்படுகிறது.

- உதாரணமாக, கிராமப்புற மக்களை விட நகர்ப்புற மக்களின் னப்பான்மை மற்றும் நடத்தையானது நாகரிகமானது என்பது பாரட்சமாகும்.

**பாரபட்சம் உருவாவதற்கான காரணங்கள்:**

- பாரபட்சம் உருவாவதற்கு பொதுவான சமூக காரணிகள்,
    1. சமூகமயமாக்கல்
    2. நிர்ணயிக்கப்பட்ட நடத்தை
    3. பொருளாதார பயன்கள்
    4. சர்வாதிகார ஆளுமை
    5. இன மையக் கொள்கை
    6. கட்டுப்பாடான குழு அமைப்பு
    7. முரண்பாடுகள்

**ஒத்தக் கருத்து:**

- முன்முடிவு வலுவாக இருக்கும்போது ஒத்தக் கருத்து உருவாகிறது. ஒத்தக் கருத்து என்பது தவறான கண்ணோட்டம் அல்லது ஏதோ ஒன்றைப் பற்றிய தவறான கருத்தாகும். எடுததுக்காட்டாக, பெண்கள் விளையாட்டிற்கு உகந்தவர்கள் அல்ல என்பது முன்முடிவு கொள்வதாகும். ஒத்த தன்மை பற்றிய தவறான எண்ணங்கள் சிறுவயதிலேயே கற்றுக் கொள்ளப்படுகிறது. மேலும் குழந்தைகள் பொருட்கள், குழுக்கள், கருத்தியல்கள் போன்றவற்றில் வலுவான கருத்துக்களையும் தவறான எண்ணங்களையும் இளம் பருவத்திலேயே வளர்த்துக் கொள்கின்றனர். குழந்தைகள் வளரும் போது அவர்களுக்கு பொருட்கள், மனிதர்கள், நாகரிகம், நம்பிக்கை, மொழி இவற்றின் மீதான விருப்பு வெறுப்புகள் ஒத்தக் கருத்தால் மேலோங்குகிறது.

- எடுத்துக்காட்டாக, ரகுவின் கண்ணில் மென்பந்து தாக்கியதால், அவன் அழத்தொடங்கினான். உடனே அவனைப் பார்த்து அனைவரும் சிரிக்கத் தொடங்கினர். ஆனால் ரகுவின் கண்ணில் மென்பந்து தாக்கியபோது அவனது நண்பன் மணிக்கு உண்மையில் வருத்தமாக இருந்தது. ஆனால் அவனும் மற்றவர்களுடன் இணைந்து சிரிக்கத்தான் செய்தான்.

- இதிலிருந்து, நாம் ஒருவர் மீதான தவறான எண்ணத்தை ஏற்படுத்திக்கொள்ளும் போது, அங்கு ஒத்தக் கருத்து உருவாகிறது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். மேற்கூறிய எடுத்துக்காட்டிலிருந்து பெண்கள் அழுவார்கள் என்றும் ஆண்கள் அழக்கூடாது என்ற பொதுவான கருத்தை வலியுறுத்துகிறோம். ஆகையால்தான் ரகு வலியால் அழுதபோது மற்ற அனைவரும் அவனை பார்த்து சிரித்தனர். இதுவே ஒத்தக் கருத்துள்ள எண்ணமாகும்.

- பாலின அடிப்படையில் ஒத்தக் கருத்தினை பற்றி திரைப்படங்கள், விளம்பரங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்களில் சித்தரிக்கப்படுவதை காணலாம். சலவைக்கட்டி, சலவை இயந்திரம், பாத்திரங்கழுவி தொடர்பான அனைத்து விளம்பர்நகளிலும் பெண்களையே முன்னிறுத்தகின்றனர். இரு சக்கர வாகனம் போன்ற விளம்பரத்தில் ஆண்களையே முன்னிறுத்துகின்றனர். இவ்வாறு பாலின அடிப்படையில் ஒத்தக் கருத்து இருப்பதை காணலாம்.

**சமத்துவமின்மை மற்றும் பாகுபாடு:**

- சமத்துவமின்மை என்பது ஒருவர் மற்றொருவரை பாகுபாட்டுடன் நடத்துவது ஆகும். சாதி ஏற்றத்தாழ்வு, மதச் சமத்துவமின்மை, இன வேறுபாடு அல்லது பாலின வேறுபாடு போன்ற பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் பாகுபாட்டை வளர்க்கின்றன.

- மக்களுக்கெதிரான எதிர்மறையான செயல்களே பாகுபாடு எனப்படும். நிறம், வர்க்கம், மதம், பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு ஏற்படலாம். வெண்மை தோற்றமுடைய மக்களிடமிருந்து கருப்பு நிற தோற்றமுடை மக்களை வேறுபடுத்துவதும் தாழ்ந்த வகுப்பினரைக் காட்டிலும் உயர்ந்த வகுப்பினருக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதும். சிறுமியர்களைக் காட்டிலும் சிறுவர்களை திறமை வாய்ந்தவர்களாக இருப்பார்கள் போன்ற கருத்துக்கள் சமத்துவமின்மை எனக்கூறலாம்.

> **இனநிறவெறிக்கு முடிவு:**
> தென்னாப்பிரிக்காவின் முன்னாள் அதிபரான நெல்சன் மண்டேலா அவர்கள். 27 ஆண்டுகள் சிறைவாழ்க்கைக்குப்பின் 1990 ஆம் ஆண்டு விடுதலையானார். இவர் தென்னாப்பிரிக்காவிலிருந்த இனநிறவெறிக்கு முடிவு கட்டினார். தென்னாப்பிரிக்காவில் உலகளவில் அமைதி நிலவவும், மனித உரிமைகளுக்கான போராட்டத்தில் முன்னோடியாகவும் திகழ்ந்தார்.

- எந்தவொரு குடிமகனுக்கும் எதிராக மதம். இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் என்ற அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது என்று இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 15(1) அறிவுறுத்துகிறது.

**சாதி பாகுபாடு:**

- இந்தியாவில் சமத்துவமின்மை மற்றும் பாகுபாட்டிற்கான மிக முக்கிய காரணம் சாதி முறை ஆகும். ஆரம்ப காலங்களில் சமுதாயம் என்பது தொழில் அடிப்படையில் பல்வேறு குழுக்களாக பிரிக்கப்பட்டிருந்ததையே வர்ணாசிரம முறை என அறியப்பட்டது.

> **டாக்டர் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கார்**
> - இவர் இந்திய சட்ட நிபுணராகவும், பொருளாதார நிபுணராகவும், அரசியல்வாதியாகவும், சமூகச் சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார்.
> - இவர் 1915 இல் எம்.ஏ. பட்டத்தை பெற்றார். பின்னர் 1927 இல் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி பட்டத்தை பெற்றார். அதற்கு முன்னர் இலண்டன் பொருளாதாரப் பள்ளியில் D.Sc பட்டத்தையும் பெற்றிருந்தார்.
> - இவர் அரசியலமைப்பு நிர்ணய சபையின் வரைவு குழுவின் தலைவராக இருந்தார். எனவே, இவர் இந்திய அரசியமைப்பின் தந்தையாகக் கருதப்படுகிறார்.

| |
|---|
| • இவர் சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகப் பணியாற்றினார். |
| • இவரது மறைவுக்குப் பின்னர், 1990 ஆம் ஆண்டு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது, |

- இந்தியாவில் சாதி ஒடுக்குமுறைக்கெதிராக பலரும் போராடி வருகின்றனர். இவர்களுக்கு முன்னோடியாக திகழ்ந்தவர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் ஆவார். தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த இவர் சிறுவயதிலேயே சாதிப்பாகுபாட்டின் காரணமாக பெரிதும் பாதிப்புக்கு உள்ளானார். பிறகு இவர் இந்திய மக்களிடையே சமத்துவம் நிலவ பெரிதும் பாடுபட்டார்.

**பாலினப் பாகுபாடு:**

- பாலினப் பாகுபாடு என்பது இந்தியாவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையே நிலவும் உடல்நலம், கல்வி, பொருளாதாரம் மற்றும் அரசியல் சமத்துவமின்மை போன்றவற்றைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக ஒரு பெண் பள்ளிப்படிப்பை முடித்தப்பின் கல்லூரிக்கு செல்ல அனுமதி இல்லை. இதே போன்று பெரும்பான்மையான பெண்கள் அவர்கள் விரும்பும் வாழ்க்கையை தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்படாமல் திருமணத்தில் தள்ளப்படுகின்றனர். இன்னும் ஒரு சில குடும்பங்களில் பெண்பிள்ளைகள் நவீன ஆடைகளை அணிந்திட அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் அக்குடும்பத்தின் ஆண்பிள்ளைகள் அவ்வகையான ஆடைகளை அணிந்திட அனுமதிக்கப்படுகின்றனர். இதுவே பாலினப் பாகுபாடு ஆகும்.

**மதபாகுபாடு:**

- மதம் சார்ந்த பாகுபாடு என்பது நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு தனிநபரின் மீதோ அல்லது குழுவினர் மீதோ சமத்தவமின்றி நடத்துவது ஆகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வெவ்வேறு மதங்களின் மக்களுக்கிடையே பிரச்சினைகள் நிலவுகின்றன. சில மக்கள் பொது இடங்கிளல் குறிப்பாக, மத வழிபாட்டு தலங்களில் நுழைய அனுமதி இல்லை. ஏனெனில் அவர்கள் வேறொரு மதத்தை சேர்ந்தவர்கள் என்பதால், சில மதத்தவர்கள் தங்கள் சடங்குகள் மற்றும் வாழ்க்கை முறையின் காரணமாக ஒருவருக்கொருவர் முரண்படுகிறார்கள்.

**சமூக – பொருளாதார சமத்தவமின்மை:**

- சமூக பொருளாதார தளத்தில் வளர்ச்சியின் பயன்கள் சமமாக பரவுவதில்லை. எனினும் மனித மேம்பாட்டின் சமத்துவமின்மையைவிட வருவாய் பிரிவின் சமத்துவமின்மை மிக அதிகமாகக் காணப்படுகிறது. குறைவான தொழிற்வளர்ச்சி, குறைவான வேளாண் உற்பத்தி, குறைவான மனித மேம்பாடு ஆகியவை குறைந்த வருவாய் மாவட்டங்களுடன் தொடர்புடையவை. அதே போல் கல்வியறிவு குறைந்த விகிதம் உள்ள மாவட்டங்கள் குறைவான பாலின விகிதத்துடன் காணப்படுகின்றன.

| எழுத்தறிவு விகிதம் - 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு | | | | | |
|---|---|---|---|---|---|
| அதிகம் | | | குறைவு | | |
| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | விகிதம் | வ.எண் | மாவட்டத்தின் பெயர் | விகிதம் |
| 1. | கன்னியாகுமரி | 91.75% | 1. | தருமபுரி | 68.54% |
| 2. | சென்னை | 90.18% | 2. | அரியலூர் | 71.34% |
| 3. | தூத்துக்குடி | 86.16% | 3. | கிருஷ்ணகிரி | 71.46% |
| 4. | நீலகிரி | 85.20% | 4. | விழுப்புரம் | 71.88% |

| பாலின விகிதம் - 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு தலா ஆயிரம் ஆண்டுகளுக்கு நிகரான பெண்களின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|
| அதிகம் | | | குறைவு | | |
| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | பாலின விகிதம் | வ.எண் | மாவட்டத்தின் பெயர் | விகிதம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | நீலகிரி | 1041 | 1. | தருமபுரி | 946 |
| 2. | தஞ்சாவூர் | 1031 | 2. | சேலம் | 954 |
| 3. | நாகப்பட்டிணம் | 1025 | 3. | கிருஷ்ணகிரி | 956 |
| 4. | தூத்துக்குடி | 1024 | 4. | இராமநாதபுரம் | 977 |

**சமத்துவமின்மை மற்றும் பாகுபாட்டினை நீக்குவதற்கான தீர்வுகள்**

- இந்திய சமுதாயத்தில் சமத்துவமின்மை மற்றும் பாகுபாட்டினை அகற்றுவதற்கான தீர்வுகளாக கீழ்கண்டவற்றை மேற்கொள்ளலாம்.

1. அனைவருக்கும் தரமான உடல்நலம் மற்றும் கல்வியினை கிடைக்கச் செய்தல்.
2. தற்போதய பாலின பாரபட்சத்தைப் பற்றி தெரிந்து கொள்ளுதல்
3. பாலின ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதற்காக பொது வாழ்வில் மற்றும் நிறுவனத்தில் பெண்களின் திறன்களை வெளிப்படுத்துதல்
4. மற்ற மதங்களை பற்றி தெரிந்து கொள்ளும் வெளிப்படையான மனநிலை வளர்த்தல்.
5. வகுப்பறையில் குழுவாக சாப்பிடுவதை ஊக்குவித்தல் மூலம் சாதி, மதம், பாலினம் ஆகியவற்றின் எந்தவித பாரபட்சமின்றி மாணவர்களை ஒன்றாக இணைக்கச் செய்தல்
6. பல தரப்பட்ட மக்களிடமும் பேசுதல்
7. சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துதல்

**இந்திய அரசியலமைப்பு மற்றும் சமத்துவம்:**

- ஒரு அரசியலமைப்பு என்பது நாட்டின் நிர்வாகத்தை வழிநடத்தும் விதிகள் மற்றும் விதிமுறைகளின் தொகுப்பாகும். இந்திய அரசியலமைப்பின் 14-வது பிரிவு சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்கிறது. மேலும் நாட்டிற்குள் வசிக்கும் அனைவருக்கும் பாதுகாப்பினையும் தேவையற்ற பாகுபாட்டினையும் செய்கிறது.

- நமது அரசியலமைப்பு நிலத்தால் வேறுபட்டிருப்பதை கூறுகிறது. எனவே சமத்துவமானது அனைவராலும் ஏற்றுக் கொள்ளகூடியதாகும். சமுதாயத்தில் சமத்துவத்தை உறுதி செய்வதற்கான இரண்டு முக்கியமான காரணிகள் பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்தல் மற்றும் சுதந்திரத்தை உறுதிபடுத்துதல் ஆகும். பல்வேறு வகையான சுதந்திரம் என்பது அவரவர் மதத்தை பின்பற்றவும், மொழியைப் பேசவும், விழாக்களைக் கொண்டாடவும், கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்துவதும் ஆகும்.

- அரசியலமைப்பு என்பது விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் சட்டவடிவமைப்பாகும், இதன்படி ஒரு நாடு நிர்வகிக்கப்படும் சமத்துவம் என்பது தீண்டாமையை ஒரு குற்றமாகக் காண்பதாகும். இந்திய அரசியலமைப்புச் சட்ட பிரிவு 17-ன் படி இந்தியாவில் தீண்டாமை ஒழிக்கப்பட்டது. எந்த வகையிலும் தீண்டாமையைப் பின்பற்றுவது தடை செய்யப்பட்டுள்ளது.

- இன்றும் கூட நாடு முழுவதும் பல்வேறு வகையான பாகுபாடு காணப்படுகிறது. பெண்கள், விவசாயிகள், பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட சமூக வகுப்பினர் உள்ளிட்டோர் இன்னும் இந்தியாவில் சமத்துவத்திற்காகப் போராடி வருகிறார்கள்.

அலகு–I

## தேசியச் சின்னங்கள்

தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விராலிமலையில் மயில்களுக்கான சரணாலயம் உள்ளது.

### இயற்கை தேசியச் சின்னங்கள்

**தாமரை – 1950**
சேற்று நீரில் வளர்ந்தாலும் மிக அழகான மலர்கள் மலர்கின்றன.

**ஆலமரம் - 1950**
இது பெருமையின் சின்னமாகும். மருந்துவ குணம் கொண்டது.

**புலி – 1973**
பூனை இனத்தில் மிகப்பெரியது உலகின் மொத்த புலிகள் எண்ணிக்கையில் இந்தியா 70% கொண்டுள்ளது.

**மயில் - 1963**
இந்தியாவைத் தாயகமாகக் கொண்டது தோகையைக் கொண்ட பறவை மயில்.

**யானை – 2010**
ஆசியாவைத் தாயகமாகக் கொண்டது. தான் வாழும் காட்டுப் பிரதேசங்களை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**கங்கை ஆறு – 2008**
இது வற்றாத ஆறு, வரலாற்றுப் புகழ் பெற்ற தலைநகரங்கள் இவ்வாற்றங்கரையில் தோன்றி செழித்தோங்கின.

**இயற்கை தேசிய சின்னங்கள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன.**

**தமிழகத்தின் மாநில இயற்கைச் சின்னங்கள்:**

| | |
|---|---|
| மாநில விலங்கு | வரையாடு |
| மாநிலப் பறவை | மரகதப் புறா |
| மாநில மலர் | செங்காந்தள் மலர் |
| மாநில மரம் | பனைமரம் |

**பிற தேசியச் சின்னங்கள்:**

**தேசியக்கொடி**

- மூவண்ணக்கொடி நமது தேசியக் கொடியாகும். மூன்று வண்ணங்களும் சம அளவில் கிடைமட்டமாக அமைந்துள்ளன. மேல் பகுதியில் உள்ள காவி நிறம் தைரியத்தையும் தியாகத்தையும் குறிக்கிறது. கீழ்ப்பகுதியில் உள்ள பச்சைநிறம் செழுமையையும் வளத்தையும் குறிக்கிறது. இடையில் உள்ள வெள்ளைநிறம் நேர்மை, அமைதி மற்றும் தூய்மையைக் குறிக்கிறது. நடுவில் கருநீல நிறத்தில் அமைந்துள்ள அசோகச் சக்கரம் அறவழியையும் அமைதியையும் வலியுறுத்துகிறது.

- இந்திய தேசியக் கொடியை ஆந்திராவைச் சேர்ந்த பிங்காலி வெங்கையா என்பவர் வடிவமைத்தார்.
- விடுதலை இந்தியாவின் முதல் தேசியக் கொடி தமிழ்நாட்டில் உள்ள குடியாத்தத்தில் (வேலூர் மாவட்டம்) நெய்யப்பட்டது.
- இக்கொடியைப் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் (15.08.1947) செங்கோட்டையில் ஏற்றினார்.
- இக்கொடி தற்போது சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டை அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

- தேசியக் கொடியின் நீள, அகலம் 3 : 2 என்ற விகிதத்தில் அமைந்துள்ளது. நடுவில் உள்ள அசோகச் சக்கரம் 24 ஆரங்களைக் கொண்டுள்ளது.

**கொடிகாத்த குமரன்:**

திருப்பூர்க் குமரன் ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னிமலையில் பிறந்தார். இள வயதிலிருந்தே இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டார். 1932இல் காந்தியடிகளைக் கைது செய்ததைக் கண்டித்து நாடெங்கிலும் போராட்டங்கள் நடைபெற்றன. காந்தியை விடுதலை செய்யக்கோரி நடந்த போராட்டத்தில் திருப்பூர்க் குமரன் கலந்து கொண்டார். காவல் துறையினரின் கடுமையான தாக்குதலுக்கு உட்பட்டு உயிர்துறந்தார். போராட்டக்களத்தில் உயிர் நீத்தபோதும் மூவர்ணக்கொடியைக் கீழே விடவில்லை. இதனால் திருப்பூர்க் குமரன் 'கொடி காத்த குமரான்' என அழைக்கப்படுகிறார். அவரது தியாகத்தை நினைவு கூறும் வகையில் அவரது நூற்றாண்டில் இந்திய அரசு அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பித்தது.

**தேசிய இலச்சினை:**

- சாரநாத் அசோகத் தூணின் உச்சியில் அமைந்திருக்கும் நான்குமச் சிங்கம் இந்தியாவின் தேசிய இலச்சினையாக ஜனவரி 26, 1950 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- இதன் அடிப்பகுதியில் 'சத்யமேவ ஜெயதே' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. 'வாய்மையே வெல்லும்' என்பதே இதன் பொருளாகும். தேசிய இலச்சினை மேல்பகுதி, அடிப்பகுதி என இரண்டு பகுதிகளைக் கொண்டது.

- மேல்பகுதியில் நான்கு சிங்க உருவங்கள் ஒன்றுக்கொன்று பின்பக்கமாக பொருந்தியிருக்குமாறு வட்டவடிமான பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. நமது இலச்சினையில் மூன்று சிங்க உருவங்களை மட்டுமே காண இயலும்.

- அடிப்பகுதியில் யானை, குதிரை, காளை, சிங்கம் ஆகிய உருவங்கள் அமைந்துள்ளன. இவ்வுருவங்களுக்கிடையே தர்ம சக்கரம் அமைந்துள்ளது. இந்த இலச்சினை இந்திய அரசின் அலுவல் முறை கடித முகப்புகளிலும் இந்திய நாணயங்களிலும் கடவுசீட்டுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

அசோகர் காலத்தில் சாரநாத் தூணின் உச்சியில் அமைந்திருந்த நான்முகச் சிங்கம் தற்போது சாரநாத் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகிறது.

**தேசிய கீதம்:**

- 'ஜன கண மன …..' நமது தேசிய கீதமாகும். இது இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டிற்கு அடையாளச் சின்னமாக விளங்குகிறது. இப்பாடல் இரவீந்திரநாத் தாகூரால்

வங்காள மொழியில் எழுதப்பட்டது. இதன் இந்தி மொழியாக்கம் ஜனவரி 24, 1950 இல் இந்திய அரசியலமைப்புச் சபையால் தேசிய கீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1911, டிசம்பர் 27 ஆம் நாள் கொல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டின் போது இப்பாடல் முதன் முதலாகப் பாடப்பட்டது.

**பாடும்போது பின்பற்ற வேண்டியன:**

- இக்கீதத்தை சுமார் 52 வினாடிகளில் பாட / இசைக்க வேண்டும்.
- பாடும்போது அனைவரும் எவ்வித அசைவுகளும் இன்றி நேராக நிற்க வேண்டும்.
- பொருள் புரிந்து சரியாகப் பாட வேண்டும்.

**தேசியப் பாடல் - வந்தே மாதரம்:**

- வங்க எழுத்தாளர் பங்கிம் சந்திர சட்டர்ஜி எழுதிய வந்தே மாதரம் பாடலின் முதல் பத்தி விடுதலை போராட்டத்தில் முக்கியப் பங்களித்தது. இதன் காரணமாக, தேசிய கீதத்துக்கு இணையாக தேசியப் பாடல் என்ற சிறப்பு இப்பாடலுக்கு அளிக்கப்படுகிறது. என அரசியலமைப்பு சட்ட நிர்ணய மன்றத் தலைவரும் மேனாள் குடியரசுத் தலைவருமான ராஜேந்திர பிரசாத் அறிவித்தார். இப்பாடல் ஆனந்த மடம் என்ற நாவலிலிருந்து எடுக்கப்பட்டது.

**தேசிய உறுதிமொழி:**

- "இந்தியா எனது தாய்நாடு…." எனத் தொடங்கும் நமது தேசிய உறுதிமொழியைப் பிதிமாரி வெங்கட சுப்பாராவ் என்பவர் தெலுங்கில் எழுதினார்.

**தேசிய நுண்ணுயிரி:**

- நாம் அன்றாடம் சாப்பிடும் தயிர் பாலிலிருந்து உருவாகப் பயன்படுவது லாக்டோபேசில்லஸ் டெல்புரூக்கி எனும் நுண்ணுயிர். 2012-ம் ஆண்டில் இது தேசிய நுண்ணுயிராக அங்கிகரிக்கப்பட்டது. இந்தப் பாக்டீரியா வேதிவினை புரிந்து பாலில் இருக்கும் புரதத்தை மாற்றுவதால் தயிர் கிடைக்கிறது. தயிர் செரிமானத்துக்கும், வயிற்றுக் கோளாறுகளுக்கும், குளிர்ச்சி தருவதற்கும் அறியப்பட்டது.

**இந்திய நாணயம் (INR)**

- இந்தியாவின் அதிகாரபூர்வ பணத்தின் பெயர் ரூபாய். 16-ம் நூற்றாண்டில் மன்னர் ஷெர்ஷா சூரி வெளியிட்ட வெள்ளி நாணயத்துக்கு 'ருபியா' என்று பெயர். அதுவேரூபாய் என்று மருவியுள்ளது. ரூபாய்க்கான சின்னம் இந்தச் சின்னத்தை 2010-ல் வடிவமைத்தவர் தமிழகத்தைச் சேர்ந்த டி. உதயகுமார்.

**தேசிய நாட்காட்டி:**

- பேரரசர் கனிஷ்கர் காலத்தில் கி.பி. (பொ.ஆ) 78-ல் சக ஆண்டு முறை தொடங்கியது. இளவேனில் கால சம பகல் - இரவு நாளான மார்ச் 22 அன்று இந்த ஆண்டு தொடங்குகிறது. லீப் ஆண்டுகளில் இது மார்ச் 21 ஆக அமையும். சக ஆண்டு முறையையே நமது தேசிய நாட்காட்டி பின்பற்றுகிறது. பிரபல வான் இயற்பியலாளர் மேக்னாத் சாகா தலைமையிலான நாட்காட்டி சீரமைப்புக் குழுவின் பரிந்துரையின் பேரில் 1957 மார்ச் 22 முதல் தேசிய நாட்காட்டி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- பல்வேறு வேறுபாடுகளைக் கொண்ட இந்திய மக்களிடையே நாட்டுப்பற்றையும் ஒற்றுமை உணர்வையும் வளர்த்தெடுப்பதில் தேசிய சின்னங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

**தேசிய நாட்கள் சுதந்திர நாள்:**

- ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 15ம் தேதி இந்திய சுதந்திர நாள். ஆங்கிலேயர்களுக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் நாடு விடுதலை பெற்ற நாள் அது. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு உதித்த நாளாகவும் கருதப்படுகிறது.

- நாடு விடுதலை பெற்ற நாளனது மகாகவி பாரதியாரின் 'ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று ஆடுவோமே' என்ற பாடலை அகில இந்திய வானொலியில் பாடிய பெருமையைப் பெற்றவர் மறைந்த கர்னாடக இசைப் பாடகி டி.கே. பட்டம்மாள். சுதந்திர நாள் இன்றைக்கும் நாடெங்கும் கோலாகலமாக அனைத்துத் தரப்பினராலும் கொண்டாடப்பட்டுவருகிறது. அன்றைக்கு நாட்டின் பிரதமர் டெல்லி செங்கோட்டையில் கொடியேற்றுவது முக்கிய நிகழ்வு ஆகும்.

**குடியரசு நாள்:**

- 1950 ஜனவரி 26ம் தேதி இந்தியா குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. அதைக் கொண்டாடும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் குடியரசு நாள் கொண்டாடப்படுகிறது. இந்திய அரசியல் சாசனம் நடைமுறைக்கு வந்த நாளே, குடியரசு ளர். 1947-லேயே நாடு விடுதலை பெற்றுவிட்டாலும், அதற்குப் பிறகும் பிரிட்டன் அரசியே இந்தியாவின் கௌரவத் தலைவராக இருந்துவந்தார். குடியரசு நாடாக அறிவிக்கப்பட்ட பிறகு, நாட்டின் முதல் குடிமகன் குடியரசுத் தலைவர் ஆவார். குயடிரசு நாளில் அவரே செங்கோட்டையில் கொடியேற்றுவார்.

| |
|---|
| இந்தியக் குடியரசு நாளின் மூன்றாவது நாளான ஜனவரி 29, அன்று 'பாசறைக்கு திரும்புதல்' என்ற விழா சிறப்பாக நடைபெறும். அந்நாளில் தரைப்படை, கடற்படை, விமானப்படையைச் சேர்ந்த இசைக்குழுவினர் நிகழ்ச்சிகளை நடத்துவர். குடியரசு தலைவர் இந்நிகழ்வின் முதன்மை விருந்தினர் ஆவார். இவ்விழாவின் ஒரு பகுதியாக மாலை 6 மணிக்கு குடியரசுத் தலைவர் மாளிகை மின்விளக்குகளால் அலங்கரிக்கப்படும். |

**காந்தி ஜெயந்தி:**

- 'தேசத் தந்தை' மகாத்மா காந்தியின் பிறந்த நாளான அக்டோபர் 2, தேசிய நாட்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுக் கொண்டாடப்படுகிறது. காந்தியின் பிறந்த நாளைச்,'சர்வதேச அகிம்சை நாள்' ஆக 207 ல் அங்கீகரித்து ஐ.நா. சபை கொண்டாடி வருகிறது.

## அலகு–II

## இந்திய அரசமைப்புச் சட்டம்

- “அரசமைப்புச் சட்டம் ஒரு நாட்டிற்குத் தேவையான சில அடிப்படை விதிகள், கொள்ளைகளை உருவாக்கி ஆவணப்படுத்துவதோடு, தனது குடிமக்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளை வரையறுக்கிறது. பிறகு அச்சட்டத்தின் துணையோடுதான் அந்நாடு ஆளப்படும்”.

- “இந்திய அரசமைப்புச் சட்டம்தான் நமது நாட்டின் உயர்ந்தபட்ச சட்டமாக விளங்குகிறது. அது அடிப்படை அரசியல் கொள்கைகளை வரையறுப்பது, கட்டமைப்புகள், வழிமுறைகள், அதிகாரம் ஆகியவற்றை விளக்குவது, அரசு நிறுவனங்களின் கடமைகளைப் பட்டியலிடுவது, குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளை நிர்ணயம் செய்வது. வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குவது ஆகியவற்றின் வழியே ஓர் ஒட்டுமொத்தக் கட்டமைப்பை நமக்குத் தருகிறது.

- “அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் நோக்கில் இந்தியாவின் பல்வேறு பகுதிகள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 389 உறப்பினர்களைக் கொண்ட இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம் என்ற அமைப்பு 1946-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக முனைவர் ராஜேந்திரபிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- “ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், மௌலானா ஆஸாத், எஸ். ராதாகிருஷ்ணன், விஜயலக்ஷ்மி பண்டிட், சரோஜினி நாயுடு உட்படபலர் இந்த அமைப்பில் இடம் பெற்றிருந்தனர்.

- “15 பெண் உறுப்பினர்கள் இந்த அமைப்பில் இடம் பெற்றிருந்தனர்.

- “எட்டு பேர் கொண்ட அரசமைப்புச் சட்ட வரைவுக் குழு உருவாக்கப்பட்டு அதன் தலைவராக அம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் இதற்கான ஆலோசகராக பி.என்.ராவ் நியமிக்கப்பட்டார். இக்குழுவின் முதல் கூட்டம் 1946 – ஆம் ஆண்டு டிசம்பர் 9-ஆம் தேதி நடைபெற்றது. அன்றே அரசமைப்புச் சட்டத்தை எழுதும் வேலைகள் தொடங்கிவிட்டன”.

| அண்ணல் அம்பேத்கர் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை’ என அழைக்கப்படுகிறார். |
|---|

- “இக்குழுவினர் ஐக்கிய இராச்சியம் (United kingdom), அமெரிக்கா, அன்றைய சோவியத் ரஷ்யா, ஃப்ரான்ஸ், சுவிட்சர்லாந்து உட்பட 60 நாடுகளின் அரசமைப்புச் சட்டங்களை வாசித்து, அவற்றில் இருந்த சிறப்பான பகுதிகளை முன் மாதிரியாகக்கொண்டு நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கினர்”.

- அரசமைப்புச் சட்டம் இறுதி செய்யப்படுவதற்கு முன்னர் சுமார் இரண்டாயிரம் திருத்தங்கள் (Amendments) அதில் மேற்கொள்ளப்பட்டன”.

- “2 ஆண்டுகள், 11 மாதம், 17 நாட்கள் கடந்த நிலையில், 1949-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் நாள் முழுமையான அரசமைப்புச் சட்டம் தயாரானது”.

- இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம் நமது அரசமைப்புச் சட்டத்தை அன்றுதான் ஏற்றுக்கொண்டது. ஆகையினால்தான் அந்த நாளை அரசமைப்புச்சட்ட நாளாக ஆண்டுதோறும் நாம் கொண்டாடுகிறோம்.

- “64 லட்சம் ரூபாய் இதற்கென செலவிடப்பட்டது”.

- "நமது அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை ஒவ்வோர் இந்தியருக்குமான நீதி, தன்செயலுரிமை, சமத்துவத்தை உறுதி செய்வதோடு சகோதரத்துவத்தையும் வலியுறுத்துகிறது.

**முகப்புரை:**

- "அரசமைப்புச் சட்டத்தின் முன்னுரைதான் முகப்புரை என்று அழைக்கப்படுகிறது. அது இந்தியாவை இறையாண்மை, சமத்துவம், மதச் சார்பின்மை, மக்களாட்சிக் குடியரசு என்று வரையறை செய்கிறது".

**இறையாண்மை:**

- "அரசமைப்புச் சட்டம் இந்திய மக்களுக்கு முழு அதிகாரத்தை வழங்கியுள்ளது. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களிடம் நிறைவேற்று அதிகாரம் இருக்கிறது. இப்படியாக ஒரு நாட்டின் உச்சநிலை அதிகாரத்தையே இறையாண்மை என்கிறோம்.

- "மக்கள் தங்கள் விருப்பப்படி வெவ்வேறு இறை, மத நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க அனுமதிக்கும் சட்டம், அவர்களுக்கு ஒரே விதமான பாகுபாடற்ற உரிமைகளை வழங்குகிறது. அரசிற்கான மதம் என்று ஒன்று கிடையாது என்பதால் அரசு அனைத்து மதங்களையும் ஒரே தளத்தில் வைத்தே பார்க்கிறது.

- இந்திய அரசமைப்புச் சட்டமானது மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் சட்டமன்ற ஆட்சிமுறையைப் (Parliamentary form of government) பின்பற்றி ஆட்சி செய்ய வழிவகை செய்துள்ளது. இந்த அமைப்பின்படி, நிறைவேற்று அதிகாரம் சட்டமன்றத்தின் (நாடாளுமன்றத்தின்) கூட்டுப்பொறுப்பாக இருக்கும். அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஆட்சியமைக்கும்".

**அடிப்படை உரிமை:**

- ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகத்தேவையான உரிமைகளே அடிப்படை உரிமைகள் என்று அழைக்கப்படுகின்றன".

- "சம உரிமை, சுதந்திரமாகச் செயல்படும் உரிமை, சுரண்டலுக்கு எதிரான உரிமை, சுதந்திர சமய உரிமை, கலாச்சார மற்றும் கல்வி பெறும் உரிமை, சட்டத்தீர்வு பெறும் உரிமை ஆகியவை இன்றியமையாத உரிமைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன".

**அடிப்படை உரிமைகள்:**

**வழிகாட்டு நெறிமுறை:**

- "அரசுகள் சட்டமியற்றும்போதும், ஆட்சி செய்யும்போதும் கவனத்தில் கொள்ள வேண்டிய சில வழிகாட்டல்களை அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. இவை கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை அல்ல என்றாலும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை".

**ஓட்டுரிமை:**

- "பதினெட்டு வயது பூர்த்தியான இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் ஓட்டளிக்கும் உரிமையைப் பெறுகிறார்கள். இந்த உரிமையை அவர்கள் பெறுவதற்கு ஜாதி, மதம், பாலினம், பொருளாதார அடுக்கு உட்பட எதுவும் தடையாக இருக்க முடியாது".

**கடமைகள்:**

- "ஆம் இருக்கின்றன தேசியக்கொடியையும், தேசிய கீதத்தையும் மதித்து நடப்பது, எல்லா குடிமக்களும் அரசியல் சட்டத்தை மதித்து பேணுவது, சுதந்திரத்திற்காகப் போராடிய நமது தலைவர்களைப் பின்பற்றி நடப்பது, நாட்டைப் பாதுகாப்பது, நாட்டுக்காகத் தேவைப்படும் போது

சேவை செய்ய தயாராக இருப்பது, சாதி, மத, மொழி, இன, எல்லை கடந்து அனைவரும் சகோதர மனப்பான்மையுடன் இருப்பது, நமது பழம் பெருமை மிக்க பாரம்பரியத்தை காப்பது, காடுகள், நதிகள், ஏரிகள் உள்ளிட்ட இயற்கையையும் வன விலங்குகளையும் பாதுகாப்பது, அறிவியல், மனிதாபிமானம், சீர்திருத்த உணர்வுகளை வளர்ப்பது, வன்முறையைத் தவிர்த்து அரசு சொத்துக்களை பாதுகாப்பது, குழந்தைகளின் பெற்றோரோ அல்லது பாதுகாவலரோ, தமது குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகளை 6 – 14 வயதுக்குள் தருவது ஆகியவற்றை அரசியல் சட்டம் நமது கடமையாக அறிவித்துள்ளது''.

- அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவில் பி.ஆர். அம்பேத்கர், என். கோபாலசாமி. கே.எம். முன்ஷி, சையத் முஹம்மது சதுல்லா, பி.எல். மிட்டர், என். மாதவ ராவ், டி.டி.கே. டி.பி. கேதான் ஆகிய சட்ட வல்லுனர்கள் இடம் பெற்றிருந்தனர்.
- அக்குழுவின் தலைவரான பி.ஆர். அம்பேத்கர் நமது அரசியல் சட்டத்தை உருவாக்கிய முதன்மை வடிவமைப்பாளராகக் கருதப்படுகிறார்.
- நமது அரசியல் சட்டம் உருவான போது, 395 உறுப்புகள், 22 பகுதிகள் மற்றும் 8 அட்டவணைகள் இடம் பெற்றிருந்தன. தற்போது 448 உறுப்புகள், 25 பகுதிகள் மற்றும் 12 அட்டவணைகள் இடம் பெற்றுள்ளன.
- அரசமைப்புச் சட்டம் 16.09.2016-வரை 101 முறை திருத்தப்பட்டுள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உண்மைப் பிரதிகள் (இந்தி, ஆங்கிலம்) நாடாளுமன்ற நூலகத்தில் ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட பேழையில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.

## தொகுதி–III
## அலகுI - மக்களாட்சி

| |
|---|
| “மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி” ஆப்ரகாம் லிங்கன் |

- ஒரு நாட்டின் குடிமக்கள் தேர்தல் வழியில் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும், அதன்மூலம் அரசு அதிகாரத்தில் நேரடியாகப் பங்கேற்பதையும் தான் மக்களாட்சி என்கிறோம். மக்களாட்சி அமைப்பில் குறிப்பிடத்தகுந்த அளவு அதிகாரம் மக்களிடம் இருக்கும். அவர்கள் நேரடியாக அரசியலில் ஈடுபடவும், அரசின் முடிவெடுக்கும் நடைமுறைகளில் பங்குபெறவும் இயலும். மக்களாட்சியில் சில வகைகள் உண்டு”.

| |
|---|
| “மக்களாட்சியின் பிறப்பிடம் கிரேக்கம் ஆகும்’ |

- உலகெங்கும் பல்வேறு முறைகளில் மக்களாட்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் நேரடி மக்களாட்சி (Direct Democracy), பிரதிநிதித்துவ மக்களாட்சி (Representative Democracy) ஆகிய இரண்டும் பிரபலமான முறைகள்”.
- “நேரடி மக்களாட்சி முறையில் மக்களே சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றிருப்பார்கள். உதாரணமாக உங்களுடைய விளையாட்டு மன்றத்தை எடுத்துக்கொள்வோம். நீங்கள் எல்லோரும் ஒன்றுகூடி விவாதித்து மன்றத்திற்கான விதிகளை உருவாக்கிவிட முடியும். மேலும் இம்முறையில் மன்றத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்படுவதால் அவர்கள் ஒவ்வொருவரின் பார்வையும் வெளிப்படும்.

| |
|---|
| நேரடி மக்களாட்சியில் மக்களே சட்டங்களை உருவாக்குகின்றனர். அனைத்து சட்டத்திருத்தங்களையும் மக்கள்தான் அங்கீகரிப்பர். அரசியல்வாதிகள் நாடாளுமன்ற செயல்முறைகளின்படி ஆட்சி செய்வர். நேரடி மக்களாட்சியை வெற்றிகரமான செயல்படுத்தும் வரலாற்றை சுவிட்சர்லாந்து பெற்றுள்ளது. |

- “பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரிக்கும் ஒன்றை முடிவாக ஏற்றுக்கொள்வோம். எஞ்சியவர்களும் அம்முடிவிற்குக் கட்டுப்படுவார்கள்”.

**பிரதிநிதித்துவ மக்களாட்சி:**

- உறுப்பினர்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒருகுழு உருவாக்கப்பட வேண்டும்.

- அக்குழுவினா் உறுப்பினர்கள் சார்பில் மன்றத்தை நிர்வகிப்பர். அவர்களைத் தேர்ந்தெடுக்கும் விதமாக ஓட்டெடுப்பு நடைபெறும். உதாரணமாக தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போன்ற பதவிகளுக்குப் பலரும் போட்டியிடுவர். முடிவில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவினைப் பெற்றவர் அந்தந்தப் பதவிகளை அடைவார்கள். அவர்களுக்கு ஏனைய உறுப்பினர்கள் சார்பாக ஜனநாயக ரீதியாக முடிவெடுக்கும் அதிகாரம் கிடைக்கும். இதையே பிரதிநிதித்துவ மக்களாட்சி என்று கூறுகிறோம்”.

- “மக்களாட்சி அமைப்புகளில் முடிவெடுக்கும் அதிகாரம் தலைவரிடம் குவிந்திருக்காது. மாறாக அவ்வதிகாரம் ஒரு குழுவிடம்தான் இருக்கும். சட்டதிட்டங்களுக்கும், விதிமுறைகளுக்கும் உட்பட் இயங்கும் அக்குழு, தொடர்புடையோா் அனைவரையும் உள்ளடக்கிய வெளிப்படையான உரையாடல்களை முன்னெடுக்கும் பின்னர் அவர்களிடையே ஒருமித்த கருத்தொருமை ஏற்பட்டதும் இறுதி முடிவினை எடுக்கும். இதைத்தான் ஜனநாயக ரீதியாக முடிவெடுத்தல் என்கிறோம்.

| |
|---|
| 2007 ல் ஐ.நா.சபை செப்டம்பர் 15 ஆம் நாளை உலக மக்களாட்சி தினமாக |

அறிவித்துள்ளது.

- இந்தியா போன்றதொரு மக்கள்தொகை மிக்க நாட்டில் அனைவரும் நிம்மதியாக வாழ வேண்டுமென்றால் மக்கள் அனைவரும் விதிகள், வழிமுறைகள், உரிமைகள் மற்றும் கடமைகளை அறிந்து பின்பற்ற வேண்டியது அவசியமாகிறது. நமது அரசமைப்புச்சட்டம் அத்தகைய வழிமுறைகளை நமக்கு வழங்கியுள்ளது. அவைந மது நாட்டின் சட்ட ஒழுங்கைக் காப்பாற்றுவதில் பெரும்பங்கு வகிக்கின்றன''.

- அரசமைப்புச் சட்டடம் நமக்கு வழங்கியுள்ள உரிமைகள்

- அது அடிப்படை அரசியல் கொள்கைகளை வரையறுத்துள்ளதோடு, அரசு நிறுவனங்களின் வடிவமைப்பு. அவை பின்பற்றவேண்டிய வழிமுறைகள், அவற்றின் அதிகாரம் மற்றும் கடமைகளையும் விளக்குகிறது மேலும் குடிமக்களுக்கான உரிமைகள், கடமைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளையும் நிர்ணயம் செய்துள்ளது. இப்படியாக அது ஒரு சிறப்பான கட்டமைப்பை நமக்கு வழங்கியுள்ளது''.

- ''இந்திய அரசமைப்புச்சட்டம் தான் உலகில் எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டங்களிலேயே மிகப் பெரியது. இதை டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் தலைமையிலான அரசமைப்புச் சட்ட வரைவுக் குழு உருவாக்கியது. அதனால் தான் அவர் நமது அரசமைப்புச்சட்டத்தை உருவாக்கிய முதன்மை வடிவமைப்பாளராகக் கருதப்படுகிறார்''.

**மக்களாட்சியின் நோக்கம்:**

- மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சியமைப்பு மக்களாட்சி என்று அழைக்கப்படுகிறது.
- மக்களாட்சி அமைப்பில் அதிகாரம் மக்களிடம் இருக்கும். அதற்கு அவர்கள் முடிவெடுக்கும் உரிமையைப் பெற வேண்டியது அவசியமாகிறது. ஒவ்வொரு தனிநபரும் முடிவெடுக்கும் வழிமுறைகளில் நேரடியாகப் பங்கேற்க இயலாது என்பதால் முடிவெடுக்கும் அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவ அரசிற்கு வழங்கப்பட்டுள்ளது. மக்களாட்சி அரசில். 18 வயது நிறைவுற்ற அனைத்துக் குடிமக்களுக்கும் தங்களுக்கான பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பிரதிநிதியும் மக்கள் நலனைக் காப்பதைத் தனது கடமையாகக் கொள்ள வேண்டும்.

**உலகெங்கும் மக்களாட்சி:**

- உலகிலேயே முதன் முதலில் பெண்களுக்கு ஓட்டுரிமை அளித்த நாடு நியூஸிலாந்து (New Zealand)ஆகும். (1893) ஐக்கிய பேரரசில் (United Zealand) 1918 ஆம் ஆண்டும், மெரிக்க ஐக்கிய நாடுகளில் (United states ofAmerica) 1920-ஆம் ஆண்டும் தான் பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டது. அதே காலகட்டத்தில் இந்தியாவில் பணக்காரர்களுக்கு மட்டுமே ஓட்டுரிமை வழங்கப்பட்டிருந்தது. மகாத்மா காந்தி உட்படப் பலதலைவர்கள் அனைருக்கும் ஓட்டுரிமை என்ற கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர். இன்று இந்தியாவில் 18 வயது நிறைவடைந்த ஒவ்வொருவருக்கம் ஓட்டுரிமை வழங்கப்பட்டுள்ளது. (உலகளாவிய வயதுவந்தோர் உரிமைகளின்படி)

இந்தியக்குடிமக்களில் 79% பேர் தங்களது நாட்டின் மக்களாட்சியின் மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக உலக அளவிலான இப்பட்டியலில் இந்தியாவிற்கு முதலிடம் கிடைத்துள்ளது.

## உலகின் பழமையான மக்களாட்சி நாடுகள்

| வ.எண் | மக்களாட்சி நாடு | காலம் | அமைவிடம் | சிறப்புக் கூறுகள் |
|---|---|---|---|---|
| 1. | கிரேக்கம் | கி.பி. (பொ.ஆ) 5ஆம் நூற்றாண்டு | கிரீஸ் | அரசியல் தத்துவத்தின் அடித்தளம் |
| 2. | ரோமானியப் பேரரசு | கி.பி. (பொ.ஆ) 300 - 50 | தீபகற்ப இத்தாலி, ரோம் | நாகரிக வளர்ச்சியின் உலகாளவிய விரிவாக்கம் |
| 3. | சான் மரினோஸ் | கி.பி. (பொ.ஆ) 301 | இத்தாலி | பழமையான அரசியமைப்பு தற்போதும் நடைமுறையில் உள்ளது |
| 4. | ஐஸ்லாந்து | கி.பி. (பொ.ஆ) 930 | திங்வேளிர் | உலகிலேயே பழமையான மற்றும் நீண்ட காலமாக செயல்பட்டுவரும் நாடாளுமன்றத்தைக் கொண்டது |
| 5. | மனிதத்தீவு (Isle of Man) | கி.பி. (பொ.ஆ) 927 | இங்கிலாந்திற்கும் அயர்லாந்திற்கும் இடையே உள்ளது | மன்னராட்சியின் கீழ் சுயாட்சி |
| 6. | இங்கிலாந்து | கி.பி. (பொ.ஆ) 13ஆம் நூற்றாண்டு | இங்கிலாந்து | 1215 இல் எழுதப்பட்ட மகாசாசனம் (மாக்னா கார்டா) |
| 7. | அமெரிக்க ஐக்கிய நாடுகள் | கி.பி. (பொ.ஆ) 1789 | அமெரிக்க ஐக்கிய நாடுகள் | மிகப் பழமையான மக்களாட்சிகளுள் ஒன்று |

## அலகு– 2

## உள்ளாட்சி அமைப்பு ஊரகமும் நகர்ப்புறமும்

**மாநகராட்சி:**

- பல லட்சம் மக்கள் தொகையும், அதிக வருவாயும் இருக்கிற ஊர்களை மாநகராட்சியாக தமிழ்நாடு அரசு அறிவிக்கும்.
- தமிழ்நாட்டில் 12 மாநகராட்சிகள் இருக்கின்றன.
    1. சென்னை
    2. மதுரை
    3. கோயம்புத்தூர்
    4. திருச்சி
    5. சேலம்
    6. திருநெல்வேலி
    7. ஈரோடு
    8. தூத்துக்குடி
    9. திருப்பூர்
    10. வேலூர்
    11. திண்டுக்கல்
    12. தஞ்சாவூர்

| |
|---|
| 1688ல் உருவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சிதான் இந்தியாவின் மிக பழமையான உள்ளாட்சி அமைப்பாகும். |

- “கிராமங்களின் தேவைகளும், நகரங்களின் தேவைகளும் மாறுபடும் அப்படி இருக்கும் பகுதிகளில் மக்களின் தேவைகளைச் சரியாகப் பூர்த்தி செய்வதற்காக சில அமைப்புகளை நமது அரசமைப்பு உருவாக்கி இருக்கும்.

- அதன்படி நகர்ப்புறத்தை மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி என்றும் கிராமப்புறத்தை ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி என்றும் பிரித்து வைத்திருக்காங்க. இவை உள்ளாட்சி அமைப்புகள் என்று அழைக்கப்படுகின்றன.

- “தமிழ்நாட்டில் மாநகராட்சிக்கு அடுத்த நிலையில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகையுடன், வருவாய் அதிகம் இருக்கும் ஊர்களை நகராட்சி என்று பிரித்துள்ளனர்.

| |
|---|
| தமிழ்நாட்டில் முதன் முதலில் உருவாக்கப்பட்ட நகராட்சி வாலாஜாபேட்டை நகராட்சி ஆகும். (வேலூர் மாவட்டம்)<br>நகராட்சிகள் அதிகமாக உள்ள மாவட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் |

**பேரூராட்சி:**

- நகரத்திற்கும், கிராமத்திற்கும் இடைப்பட்ட ஊர் சுமார் 10 ஆயிரம் பேர் வாழக்கூடிய ஊராக இருந்தால் அதுதான் பேரூராட்சி.

- இந்தியாவிலேயே முதல் முறையாக பேரூராட்சி என்ற உள்ளாட்சி அமைப்பு தமிழ்நாட்டில் தான் அறிமுகப்படுத்தப்பட்டது”.

- மாநகராட்சிக்கு இந்திய ஆட்சிப்பணி (இ.ஆ.ப) அதிகாரி ஒருவர் ஆணையராக இருப்பார். நகராட்சிகளுக்கு அரசு அதிகாரிகள் நகராட்சி ஆணையர்களாக நியமிக்கப்படுவார்கள். பேரூராட்சியின் நிர்வாக அலுவலர் செயல் அலுவலர் (EO) ஆவார்.

- ‘‘கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்பு கிராம ஊராட்சி ஆகும். கிராம ஊராட்சி மக்களுக்கும் அரசுக்கும் இடையே இணைப்புப் பாலமாக செயல்படுகிறது. கிராமங்கள், மக்கள் தொகைக்கு ஏற்ப பல பகுதிகளாகப் (Ward) பிரிக்கப்படுகின்றன. இதன் பிரதிநிதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள்:**

- ஊராட்சி மன்றத் தலைவர்
- பகுதி உறுப்பினர்கள்
- ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் (கவுன்சிலர்)
- மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்

**ஊராட்சி ஒன்றியம்:**

- பல கிராம ஊராட்சிகள் ஒன்றிணைந்து ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சியிலும் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் (கவுன்சிலர்) ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார் அல்லவா? கவுன்சிலர்கள் தங்களில் ஒருவரை ஊராட்சி ஒன்றியத் தலைவராகத் தேர்ந்தெடுப்பர். துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார். வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO) இதன் நிர்வாக அலுவலர் ஆவார்.

- ஊராட்சி ஒன்றிய அளவில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- விழுப்புரம் மாவட்டத்தில் தான் அதிகப்படியாக 22 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. நீலகிரி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 4 ஊராட்சி ஒன்றியங்கள் தான் உள்ளன.

**மாவட்ட ஊராட்சி:**

- ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது. 50,000 மக்கள் தொகை என்ற அடிப்படையில் மாவட்டம் பல பகுதிகளாகப் (District Panchayat ward) பிரிக்கப்படுகின்றது. பகுதி உறுப்பினர்களைக் கிராம ஊராட்சி மக்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர். மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் தங்களின் ஒருவரை மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர். ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணிக்கவும் மேற்பார்வையிடவும் செய்கின்றனர்.

- உள்ளாட்சி அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. தொகுதிகள், பகுதிகள் (wards) என அழைக்கப்படுகின்றன. பகுதி உறுப்பினர்களை மக்கள் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர்.

- அவ்வாறே மாநகராட்சித் தலைவரும் (மேயர்), நகராட்சித் தலைவரும் நேரடி தேர்தல் மூலம் மக்களால் தேர்வு செய்யப்படுகின்றனர். மாநகராட்சித் துணைத்தலைவரும், நகராட்சித் துணைத் தலைவரும் அந்தந்தப் பகுதி (ward) உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படுவார்கள். என்று தனது நீண்ட உரையை முடித்தார் நம்புராஜன்.

- ”உள்ளாட்சி அமைப்புகளால் என்ன நன்மை இருக்கப்போகுது.

- நிறைய நன்மைகள் இருக்கே, பொதுமக்களுக்குத் தேவையான பணிகளை அவசியப்பணிகள், விருப்பப்பணிகள்னு பிரிக்கலாம். இவை உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்படுகின்றன.

**கிராம ஊராட்சியின் பணிகள்:**
**அவசியப் பணிகள்:**

- குடிநீர் வழங்குதல்
- தெருவிளக்கு அமைத்தல்

- தெருக்களைத் தூய்மைப்படுத்துதல்
- கழிவு நீர் கால்வாய் அமைத்தல்
- ஊர்ச்சாலைகள் அமைத்தல்
- மத்திய, மாநில அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்

**விருப்பப் பணிகள்**

- பூங்கா அமைத்தல்
- நூலகம் அமைத்தல்
- விளையாட்டு மைதானம் அமைத்தல் இன்னும் பிற

**மநாகராட்சியின் பணிகள்:**

- குடிநீர் வசதி
- தெருவிளக்கு அமைத்தல்
- தூய்மைப்பணி
- மருத்துவச் சேவை
- சாலைகள் அமைத்தல்
- மேம்பாலங்கள் அமைத்தல்
- சந்தைகளுக்கான இடவசதி
- கழிவுநீர் கால்வாய்
- திடக்கழிவு மேலாண்மை
- மாநகராட்சிப் பள்ளிகள்
- பூங்காக்கள்
- விளையாட்டு மைதானங்கள்
- பிறப்பு, இறப்பு பதிவு, இன்னும் பிற

- மன்றக்கூட்டங்களில் போடப்படம் தீர்மானங்களின்படி ஆணையாளர், அல்லது அதிகாரி அந்தப் பணிகளைத் தனக்குக் கீழுள்ள அலுவலர் மற்றும் ஊழியர்களைக் கொண்டு செயல்படுத்துகிறார். இப்படி அப்பணிகள் சிறப்பாக நடைபெற பல அடுக்குகளிலும் சிறப்பாக நடைபெற பல அடுக்குகளிலுமட் பணியாற்ற ஊழியர்கள் உண்டு".
- நேரடியாக அரசும் அளிக்கும் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளும் விரிகளாக வசூல் செய்து கொள்வார்கள்.

**கிராம ஊராட்சியின் வருவாய்:**

- வீட்டுவரி
- தொழில் வரி
- கடைகள் மீதான வரி
- குடிநீர் இணைப்புக்கான கட்டணம்
- நிலவரியிலிருந்து குறிப்பிட்ட பங்கு
- சொத்துரிமை மாற்றம் - குறிப்பிட்ட பங்கு
- மத்திய மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடு இன்னும் பிற,

**மாநகராட்சியின் வருவாய்**

- வீட்டு வரி
- குடிநீர்வரி
- கடைகள் மீதான வரி
- தொழில் வழி

- பொழுதுபோக்கு வரி
- வாகனக் கட்டணம்
- மத்திய, மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடு இன்னும்பிற

- அதுல 18 வயசு நிறைவடைந்து, அந்த ஊராட்சி வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவங்க கலந்து கொள்ளலாம். இக்கூட்டம் ஆண்டுக்கு நான்கு முறை கூடும். மாவட்ட ஆட்சித்தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர், ஆசியர் போன்றோரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுவாங்க அப்போது மக்கள் தங்கள் தேவைகளையும் குறைகளையும் நேரடியாகச் சொல்லலாம்.
- ”இக்கூட்டம் ”ஜனவரி 26 மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர்2” ஆகிய நாட்களல் கூடும்

- “உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்களைப் பலவலாக்குவது என்ற நோக்கத்திற்காகத் தேசிய பஞ்சாயத்து ராஜ் சட்டம் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் தேதி கொண்டுவரப்பட்டது. இப்படியான ஓர் அமைப்பு வேண்டும் என்று இதற்கு இப்பெயர் வைத்தவர் நம்ம மகாத்மா காந்தி”.

**பஞ்சாயத்து ராஜ் - சிறப்பம்சங்கள்:**

- கிராம சபை அமைத்தல்
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்பு
- இட ஒதுக்கீடு
- தேர்தல்
- பதவிக்காலம்
- நிதிக் குழு
- கணக்கு மற்றும் தணிக்கை இன்னும் பிற

அறிக.
சிறப்பாகச் செயல்படும் ஊராட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு விருதுகளை வழங்குகிறது. உன் ஊராட்சி அமைப்பு ஏதேனும் விருதுகளைப் பெற்றுள்ளனவா எனக் கேட்டறிக.

**உள்ளாட்சியில் பெண்களின் பங்கு:**

- அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்கள் பங்கேற்கும் வகையில் 33% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. 2011 இல் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பெண்கள் 38% இடங்களில் வெற்றி பெற்றனர் என்பது சிறப்பு,2016 ஆம் ஆண்டு தமிழக அரசு பெண்களுக்கு உள்ளாட்சியில் 50% இடஒதுக்கீடு வழங்க சட்டத்திருத்தம் செய்துள்ளது.

**உள்ளாட்சித் தேர்தல்:**

- உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக் காலம் 5 ஆண்டுகள். இதற்கான தேர்தல் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. மாநில தேர்தல் ஆணையம் இதற்கான தேர்தலை நடத்துகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாநிலத் தேர்தல் ஆணையம் உள்ளது. தமிழகத்தின் தேர்தல் ஆணையம் சென்னை கோயம்பேட்டில் உள்ளது

**தமிழ்நாட்டிலுள்ள**

கிராம ஊராட்சிகள் - 12,524
ஊராட்சி ஒன்றியங்கள் - 385
மாவட்ட ஊராட்சிகள் - 31
பேருராட்சிகள் - 561
நகராட்சிகள் - 125
மாநகராட்சிகள் - 12

# 7 th குடிமையியல்
## தொகுதி– I
## அலகு– 1 சமத்துவம்

**அறிமுகம்:**

- இயற்கை மனிதனை நிறம், உயரம், திறமை, உடல் வலிமை ஆகியவற்றில் சமமாக உருவாக்கவில்லை. மேலும் இயற்கையான சமத்துவமின்மையை சரிசெய்ய இயலாது. ஒரே மாதிரியாக உள்ள இரட்டைக் குழந்தைகள் கூட அவர்களது திறமையில் ஒன்றாக இருப்பதில்லை. சாதி, மதம், மொழி, பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சமத்துவமின்மையை சரி செய்ய முடியும். மனிதர்கள் தங்களது திறன், வலிமை, எண்ணம் ஆகியவற்றில் வேறுபடுவார்கள் என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. அது போல அவர்கள் அனைவருக்கும் திறன்கள் மற்றும் திறமைகள் மேம்பட சமமான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

**சமத்துவம் என்றால் என்ன?**

- சமத்துவம் என்பது ஒரு தனி மனிதன் அல்லது ஒரு குழு வேறுபாடு காட்டி நடத்தப்படாமல் இருத்தல் அல்லது சிறப்பாக பாதுகாக்கப்பட்ட இயல்புகளான இனம், பால், இயலாமை, சமயம் அல்லது நம்பிக்கை, பாலியல் சார்ந்த போக்கு வயது அடிப்படையில் குறைவாக நடத்தப்படாமல் இருத்தல் முதலியவற்றை உறுதி செய்தலாகும்.

- பேராசிரியர் லாஸ்கி அவர்களது கூற்றின்படி “சமத்துவம் என்பது சமமாக நடத்துவது மட்டுமல்ல வெகுமதி அளிப்பதிலும் சமத்துவம் இருப்பதாகும். முதலாவதாக சமூக சிறப்புரிமை இல்லாததும் இரண்டாவதாக போதுவான வாய்ப்புகள் அனைவருக்கும் வழங்கப்படுவதும் ஆகும்”.

**சமத்துவத்தின் முக்கியத்துவம்:**

- சமத்துவம் பல நூறு ஆண்டுகளாக மனித சமூகத்தை ஊக்குவித்து வழி நடத்திய ஆற்றல் வாய்ந்த நீதி மற்றும் அரசியல் கோட்பாடாகும். சமத்துவம் என்ற கோட்பாடு மனித இனம் அதனுடைய சாதி, நிறம், பால், இனம் அல்லது தேசியம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து மனிதர்களும் சமமான மதிப்புள்ளவர்கள் என்ற கோட்பாட்டை அறைகூவுகிறது. மக்களாட்சிக் கோட்பாடுகளான சுதந்திரம், சமத்துவம் ஆகியவை நீதியின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் போது மட்டுமே பொருளுடையவையாக இருக்கும்.

**சமத்துவத்தின் வகைகள்:**
**சமூக சமத்துவம்**

- அனைத்து குடிமக்களும் சம தகுதியை அடைய உரிமை கொண்டவர்கள் என்பதே சமூக சமத்துவம் ஆகும். சமூகத்தில் சாதி, சமயக்கொள்கை, நிறம் மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு இருத்தல் கூடாது. அனைவரும் தங்களது ஆளுமை மற்றும் நோக்கங்களை அடைவதற்கு சமமான வாய்ப்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குடிமை சமத்துவம்:**

- அனைத்து குடிமக்களும் குடியியல் உரிமைகளை அடைதல் வேண்டும் என்பதே குடிமை சமத்துவம் ஆகும். குடிமக்களிடையே உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஏழை, பணக்காரன், சாதி மற்றும் சமயக்கொள்கை ஆகியவை காரணமாக பாகுபாடு இருத்தல் கூடாது. சமத்துவ உரிமைகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதோடு, எந்த உரிமையும் எவருக்கும் மறுக்கப்படுதல் கூடாது. இங்கிலாந்தில் சட்டத்தின் ஆட்சி என்ற கோட்பாடு உள்ளது. அங்கு சட்டத்தின் பார்வையில் அனைவரும் சமம் என்பதோடு அது அனைவரையும் சமமாக நடத்துகிறது. இந்தியாவிலும் அதைப் போலவே சட்டத்தின் ஆட்சிக் கோட்பாடு பின்பற்றப்படுகிறது.

| சட்டத்தின் ஆட்சி என்ற பதத்தை, ஏ.வி. டைசி என்ற பிரிட்டிஷ் சட்ட வல்லுநர் வாதுரைத்தார். |
| --- |

**அரசியல் சமத்துவம்:**

- இந்தியா உள்ளிட்ட அனைத்து மக்களாட்சி நாடுகளும் அவற்றின் குடிமக்களுக்கு அரசியல் உரிமைகளை உறுதியளிக்கின்றன. அவை பின்வருமாறு.
    - வாக்களிக்கும் உரிமை
    - பொது அலுவலகத்தில் பங்குகொள்ளும் உரிமை
    - அரசை விமர்சனம் செய்யும் உரிமை

- குடிமக்கள் அனைவரும் அரசியல் வாழ்வில் தீவிரமாக பங்கெடுப்பதற்கு சமமான வாய்ப்பினை பெற்றிருத்தல் வேண்டும் இந்த உரிமைகள் அனைவருக்கும் வாக்குரிமை என்பதன் அடிப்படையில் மக்களுக்கு கிடைக்கின்றது. இந்தியாவில் 18 வயது பூர்த்தியடைந்த அனைவருக்கும் எவ்வித பாகுபாடும் இல்லாமல் வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. 1952 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலிலேயே இந்தியாவில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. ஆனால் சுவிட்சர்லாந்து நாட்டில் 1971 ஆம் ஆண்டில் தான் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. இந்தியாவில் 25 வயது பூர்த்தி அடைந்த எவரும் தேர்தலில் போட்டியிடலாம். அரசை விமர்சிக்கலாம் என்ற உரிமை ஒரு முக்கியமான உரிமை என்பதோடு மக்கள் தங்களது மாறுபட்ட கருத்துக்களை பல்வேறு வகையிலும் தெரிவிக்கலாம். நாட்டின் பிரதமரின் வாக்கின் மதிப்பும் ஒரு சாதாரண மனிதனின் வாக்கின் மதிப்பும் பொதுத் தேர்தலில் ஒன்றே என்பது அரசியல் சமத்துவத்தைக் குறிக்கிறது.

**பாலின சமத்துவம்:**

- மனித இனங்களில் ஆண் பெண் இருவரும் தமது தனிப்பட்ட திறனை மேம்படுத்திக் கொள்ளலாம். தங்களது விருப்பங்களை எவ்வித கட்டுப்பாடுமின்றி ஏற்படுத்தியும் கொள்ளலாம். பெண்களுக்கு சம உரிமை அளிக்கப்படவில்லை மேலும் அவர்கள் ஆண்களைக் காட்டிலும் பலவீனமானவர்கள் என்பதோடு சமூகத்தில் ஆண்களுக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தில் அவர்களை வைத்துள்ளனர். அவர்கள் சமமாக நடத்தப்பட வேண்டும். சமமாக நடத்தப்பட வேண்டும் என்பது அவர்கள் இருவரும் ஒன்றாக ஆக வேண்டும் என்பது இல்லை. ஆனால் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் வாய்புகள் ஆகியவை ஆண், பெண் என்பதை பொறுத்து அமைதல் கூடாது. பாலியல் சமத்துவம் என்பது ஆண் பெண் இருவரும் வாய்ப்புகள் மற்றும் வளங்களை பெறுதல் ஆகும். பெண்கள் பொருளாதார நடவடிக்கைகளில் பங்கெடுக்கவும் முக்கியமான முடிவுகளை எடுக்கவும் உரிமை கொண்டவர்கள் ஆவர். பெண்கள் தமது திறன் மற்றும் கடின உழைப்பால் எவ்விதத்திலும் ஆண்களுக்கு குறைவானவர்கள் அல்லர் என்பதை நிரூபித்துள்ளனர். பெண்கள் தற்போது எல்லை பாதுகாப்பு படை, விமானப் படைகளில் வெற்றிகரமாக பணிபுரிந்து வருகின்றனர். பெண்களை மேம்படுத்தும் விதமாக உள்ளாட்சி அமைப்புகளில் 50% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

- பாலின சமத்துவம் என்பது பெண்கள், ஆண்கள் சிறுவர், சிறுமியர், ஆகியோர் சமமான உரிமைகள் வாய்ப்புகள் பெற வேண்டும் என்று கூறுவதோடு அவர்கள் ஒன்று போல நடத்தப்பட வேண்டும் என யூனிசெப் நிறுவனம் கூறுகிறது. 2017 ஆம் ஆண்டில் நிலையான மேம்பாட்டிற்கான 17 குறிக்கோள்களில் பாலின சமத்துவம் என்பது ஐந்தாவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

| |
|---|
| பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து பல்வேறு முயற்சிகள் பெண்களின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ராஜா ராம் மோகன் ராய்,ஈஸ்வர சந்திர வித்யாசாகர், தயானந்த சரஸ்வதி, மகாதேவ் கோவிந்தரானடே, தாராபாய் ஷிண்டே, பேகம் ருகேயா சகாவத் உசேன் ஆகியோர் பெண்கள் சம அந்தஸ்து பெறுவதற்கு கடினமாக பணியாற்றியவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவர். |

**மனித மாண்பு:**

- மனித மாண்பு என்பது சுய மரியாதை ஆகும். மனித மாண்பு என்பது முக்கியமான மனித உரிமை என்பதோடு இதிலிருந்தே அனைத்து அடிப்படை உரிமைகளும் தோன்றுகின்றன. மாண்பு என்பது கௌரவமான மேலான சிறந்த தகுதி ஆகும். ஒவ்வொரு மனிதனும் சமூகத்தின் ஒரு மதிப்பு மிக்க உறுப்பினர் என்பதை கருதுதல் வேண்டும்.

**வாய்ப்பு மற்றும் கல்வியல் சமத்துவம்:**

- அனைத்து தனி மனிதர்களும் கல்வியினை பெறவதற்கு வாய்ப்புகளை கொண்டிருத்தல் வேண்டும். அவர்களது ஆளுமையை மேம்படுத்த வாய்ப்புகள் பெற்றிருத்தல் வேண்டும்.

- சமூகத்தில் நாம் சமமாக நடத்தப்படுவதற்கு நமக்கு சமத்துவம் தேவைப்படுகிறது. நாம் சமமாக நடத்தப்பட்டால் மதிப்பையும் மாண்பையும் பெறுவோம்.

**இந்திய அரசியலமைப்பில் சமத்துவம்:**

- உலகின் அனைத்து நாடுகளின் அரசியல் அமைப்புகளும் அதன் மக்களுக்கு சமத்துவத்தை உறுதி அளித்துள்ளன. இதேபோன்று இந்திய அரசியலமைப்பு அதன் குடிமக்களுக்கு அரசியலமைப்பு சட்டப்பிரிவுகள் 14 – 18 மூலம் சமத்துவத்தை அளிக்கிறது.

- சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும் சட்டத்தின்படி சமமான பாதுகாப்பு என்பது அரசிலயமைப்பு சட்டப்பிரிவு 21இல் மேலும் வலிமை படுத்தப்பட்டுள்ளது.

| |
|---|
| சட்டப்பிரிவு 14 சட்டத்தின் முன் அனைவரும் சமம் என உத்தரவாதம் அளிக்கிறது. |
| சட்டப்பிரிவு 15 பாகுபாட்டை தடை செய்கிறது. |
| சட்டப்பிரிவு 16 பொது வேலைவாய்ப்பில் அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கிறது. |
| சட்டப்பிரிவு 17 தீண்டாமையை ஒழிக்கிறது. |
| சட்டப்பிரிவு 18 பட்டங்கள் அளித்து வேறுபடுத்துதலை தடை செய்கிறது |

நாம் பின்வரும் வழிகளில் சமத்துவத்தை மேம்படுத்தலாம்:

- அனைவரையும் நியாயமாக நடத்துதல்.
- அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பண்பாட்டினை உருவாக்குதல்
- வாய்ப்புகள் அனைவரும் பெறுவதை உறுதிப்படுத்துதல்
- முழு ஆற்றலையும் மேம்படுத்த ஊக்குவித்தல்
- சட்டம் மற்றும் கொள்கைகளை வகுத்தல்
- கல்வி

**நிறைவு:**

- இந்தியா உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடாகும். சமத்துவம் மற்றும் நீதி என்பது மக்களாட்சியின் தூண்கள் ஆகும். மக்கள் சமமாக நடத்தப்படும் போது நீதி எட்டப்படும் சமத்துவம் என்பது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் அது தனிமனித மாண்பினை தக்க வைக்கிறது. சமூகம் நல்ல முறையில் இயங்குவதற்கு சமத்துவம் ஒரு முக்கியமான கோட்பாடு ஆகும்.

## அலகு–II
## அரசியல் கட்சிகள்

**அரசியல் கட்சிகள் என்றால் என்ன?**

- அரசியல் கட்சிகள் என்பவை தன்னார்வத்தோடு ஏற்படுத்தப்பட்ட தனி மனிதர்களின் அமைப்பு ஆகும். இவை பரந்த கருத்தியல் அடையாளங்களோடு சில கொள்கைகளை ஏற்றுக்கொண்டு சமூகத்திற்கான திட்டங்களையும் நிரல்களையும் வடிவமைக்கின்றன. மேலும் அரசியல் கட்சிகள் மக்களின் ஆதரவை பெற்று தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம் தமது கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றன. அவற்றின் அளவு, அமைப்பு மற்றும் கொள்கை ஆகிவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றன.

- எந்த ஒரு அரசியல் கட்சியும் பின்வரும் மூன்று கூறுகளைக் கொண்டிருக்கும்.
    - தலைவர்
    - செயல் உறுப்பினர்
    - தொண்டர்கள்

**அரசியல் கட்சிகளின் முக்கியத்துவம்:**

- அரசியல் கட்சிகள் மக்களாட்சியின் முதுகெலும்பு எனலாம். அரசியல் கட்சிகள் முறையாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இல்லாமல் அரசாங்கத்தை அமைக்கும் முக்கிய காரணிகளாக இருக்கின்றன. அவை பொது கருத்துக்களை உருவாக்குகின்றன. கட்சிகள் குடிமக்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடையே பாலமாக சேவை செய்கின்றன.

**ஒரு கட்சி அங்கீகரிக்கப்படுவது எவ்வாறு எனில்**

- ஐந்து ஆண்டுகளாக அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.
- வேட்பாளர்கள் குறைந்தபட்சம் 6% ஒட்டுக்களை இறுதியாக நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெற்றிருத்தல் வேண்டும்.

**அரசியல் கட்சிகளின் இயல்புகள்:**
**அரசியல் கட்சிகள்:**

- பொதுவான குறிக்கோள் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட மதிப்பீடுகளை கொண்ட மக்கள் குழுக்களாக இருக்கின்றன.
- தனக்கென கொள்கை மற்றும் திட்டங்களை கொண்டிருக்கின்றன.
- அரசியல் அமைப்பின் வழியாக ஆட்சியை கைப்பற்ற முயல்கின்றன.
- தேசிய நலன்களை வலியுறுத்த முயற்சி செய்கின்றன.

**கட்சியின் தேர்தல் அறிக்கை:**
தேர்தலுக்கு முன்பான பரப்புரையில் வேட்பாளர்கள் தங்களது கட்சி ஆட்சிக்கு வந்தால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள், கொள்கைகளை அறிவிப்பார்கள்.

**கட்சி முறைகளின் வகைகள்:**

- மூன்று வகையான கட்சி முறைகள் நடைமுறையில் இருக்கின்றன.

**ஒரு கட்சி முறை:**

- இம்முறையில் ஒரே அரசியல் கட்சி மட்டும் அரசாங்கத்தை ஏற்படுத்தும் உரிமையைக் கொண்டிருக்கும். இவ்வகையான ஒரு கட்சி முறை சீனா, வடகொரியா மற்றும் கியூ பா ஆகிய நாடுகளில் நடைமுறையில் இருக்கின்றன.

**இரு கட்சி முறை:**

- இம்முறையில் இரண்டு கட்சிகள் அதிகாரத்தை பங்கு கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும். இவற்றில் ஒன்று ஆளும் கட்சியாகவும் மற்றொன்று எதிர்க்கட்சியாகவும் செயல்படும். இருகட்சி முறை பிரிட்டன் (தொழிலாளர் கட்சி மற்றும் பழமைவாதக் கட்சி அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி) காணப்படுகின்றன.

**பல கட்சி முறை:**

- அதிகாரத்திற்கான போட்டி மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கட்சிகளிடையே இருக்குமாயின் அது பல கட்சி முறை என அழைக்கப்படுகிறது. இம்முறை இந்தியா பிரான்ஸ், ஸ்வீடன், நார்வே உள்ளிட்ட நாடுகளில் காணப்படுகிறது.

**இந்தியாவில் அரசியல் கட்சி முறை:**

- இந்தியாவில் கட்சி முறை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது. கூட்டாட்சி அமைப்பினை பின்பற்றும் நாடுகளில் இருவகையான கட்சிகள் காணப்படுகின்றன. உண்மையில் இந்தியாவில், உலகின் அதிக எண்ணிக்கையிலான கட்சிகள் காணப்படுகின்றன. இந்தியாவில் கட்சிகள் மூன்று படிநிலையில் அமைந்திருப்பதை நாம் காணலாம். அவை தேசியக் கட்சிகள், மாநிலக் கட்சிகள், பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத (சுயேட்சைகள்) கட்சிகள் ஆகும். ஒவ்வொரு கட்சியும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

**தேர்தல் ஆணையம் - சட்டபூர்வ அமைப்பு:**
இந்தியாவில் அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பதற்கு இந்தியத் தேர்தல் ஆணையம் சில விதிமுறைகளை வகுத்துள்ளது.

**சுயேட்சை வேட்பாளர்:**
சுயேட்சை வேட்பாளர் என்வர் எந்த கட்சியிலும் சேராமல் தானாக மக்களவை அல்லது மாநில சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் நபர் ஆவார்.

| தேசியக்கட்சிகள் | பிராந்திய / மாநிலக்கட்சிகள் |
|---|---|
| மக்களவைத் தேர்தலில் அல்லது நான்கு மாநிலங்களுக்கான சட்டமன்ற தேர்தலில் செல்லத்தக்க மொத்த வாக்குகளில் ஒரு கட்சி 6% வாக்குகளை பெற்றிருத்தல் வேண்டும். | மாநில சட்டப் பேரவைக்கான தேர்தலில் செல்லத்தக்க வாக்குகளில் குறைந்த பட்சம் 6% வாக்குகளை பெற்றிருத்தல் வேண்டும். |
| ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களில் நான்கு மக்களவைத் தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். | 25 தொகுதிகளுக்கு ஒரு மக்களவைத் தொகுதி அல்லது சட்டப் பேரவைத் தேர்தலில் குறைந்த பட்சம் இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். |
| இறுதியாக நடைபெற்ற மக்களவை தேர்தலில் குறைந்தபட்சம் மூன்று மாநிலங்களில் 2% தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். | மாநில சட்டமன்ற மொத்த தொகுதிகளில் 3% தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும். |

**அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள்:**

- மேலே தெரிவித்த நிபந்தனைகளை பூர்த்தி செய்த கட்சிகள் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் என அழைக்கப்படும். அவற்றிற்கு தேர்தல் ஆணையத்தால் சின்னம் ஒன்றும் ஒதுக்கீட செய்யப்படும்.

**தேர்தல் குழு சின்னங்கள்:**

- 1968 ஆம் ஆண்டின் தேர்தல் சின்னங்கள் ஆணையின்படி, ஒதுக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் ஒதுக்கப்படாத சின்னங்கள் என்று இரண்டு வகை உள்ளது.

- ஒதுக்கப்பட்ட சின்னம் என்பது அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு மட்டுமானது என பொருள்படும்.
- ஒதுக்கப்படாத சின்னம் என்பது அங்கீகரிக்கப்படாத கட்சிகளுக்கு ஒதுக்கப்படும் சின்னம் ஆகும்.

- பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி தாங்கள் விரும்பும் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட முடியாது. இத்தகைய கட்சி தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்படும் தேர்தல் குழுவில் உள்ள ஏதேனும் ஒரு சின்னத்தை தேர்வு செய்தல் வேண்டும்.

**பெரும்பான்மைக் கட்சி:**

- தேர்தலில் ஒரு அரசியல் கட்சியின் வேட்பாளர்கள் மற்ற கட்சிகளின் வேட்பாளர்களை விட அதிக எண்ணிக்கையில் தேர்வு பெற்று இருப்பின் அக்கட்சியானது பெரும்பான்மைக் கட்சி என அழைக்கப்படுகிறது. பெரும்பான்மை பெற்ற கட்சி, அரசாங்கத்தை அமைத்து ஆட்சி நடத்துகிறது. அக்கட்சி அரசு நிர்வாகத்தை நடத்த அமைச்சர்களை தேர்ந்தெடுத்து நியமிக்கிறது. அது நாட்டிற்கு சட்டம் இயற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**ஒரு அரசியல் கட்சியை தோற்றுவிப்பது எப்படி?**

| | | |
|---|---|---|
| இந்திய தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும் | குறைந்தபட்சம் நூறு உறுப்பினர்கள், அவர்கள் ஒவ்வொருவரும் வாக்காளர் அட்டையை கொண்டிருத்தல் வேண்டும் | கட்சி அமைப்பு குறித்த ஆவணத்தை கொண்டிருத்தல் வேண்டும் |

**சிறியக்கட்சி:**

- சிறியக்கட்சி என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கையில் குறைவான எண்ணிக்கையைக் கொண்ட கட்சி ஆகும்.

**எதிர்க்கட்சி:**

- தேர்தலில் பெரும்பான்மை பெற்ற கட்சிக்கு இரண்டாவதாக அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களை கொண்ட கட்சி எதிர்க்கட்சி என அழைக்கப்படுகிறது. மக்களாட்சி வெற்றிகரமாக செயல்படுவதற்கு ஆற்றல் வாய்ந்த எதிர்க்கட்சி மிகவும் அவசியம் ஆகும். அது ஆளும் கட்சி போன்றே முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். எதிர்க்கட்சி ஆளுங்கட்சியின் தன்னிச்சையான போக்கினை கட்டுப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. அது அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் அறிமுகப்படுத்தப்படும் சட்ட மசோதாக்களை தீவிரமாக விமர்சிக்கும். எதிர்க்கட்சி அரசின் தவறான கொள்கைகள் மற்றும் தோல்விகளை வெளிப்படுத்தும் அரசால் செயல்படுத்தப்படாத விவகாரங்கள் குறித்து அதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும். எதிர்க்கட்சித் தலைவர் கேபினர் அமைச்சர் அந்தஸ்தைக் கொண்டிருப்பார்.

**கூட்டணி அரசாங்கம்:**

- பல கட்சி அமைப்பில் சில நேரங்களில் ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மையை ஒரு கட்சி பெறுவதில்லை. இது போன்ற நேர்வில் சில கட்சிகள் இணைந்து அரசாங்கத்தை அமைக்கின்றன. இது கூட்டணி அரசாங்கம் என அழைக்கப்படுகிறது.

**தேர்தல் சின்னங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம்:**

- தேர்தல் சின்னம் என்பது அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட சின்னம் ஆகும். அது தேர்தலில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. தேர்தல் சின்னங்கள் வாக்காளர்களால் எளிதில் அறிந்து கொள்ளப்பட்டு நினைவில் வைத்துக்கொள்ள உதவுகிறது. விலங்குகளின் சின்னங்களை வழங்குவதை தேர்தல் ஆணையம் நிறுத்தியுள்ளது. விதிவிலக்காக யானை மற்றும் சிங்கம் ஆகிய சின்னங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. தேசிய அளவிலான

அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் சின்னம் நாடு முழுவதும் ஒன்றாக இருக்கும். இத்தகைய சின்னங்கள் வேறு எந்த கட்சிக்கும் அல்லது சுயேட்சை நபருக்கும் ஒதுக்கப்படமாட்டாது.

- மாநில கட்சிகளுக்கு அந்தக் குறிப்பிட்ட மாநிலத்தில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக சின்னம் ஒதுக்கீடு செய்யப்படும். இதனை வேறு எந்த கட்சியும் அந்தக் குறிப்பிட்ட மாநிலத்தில் பயன்படுத்த இயலாது. ஆனால் பல்வேறு மாநிலங்களில் உள்ள மாநிலக்கட்சிகள் தங்களது மாநிலங்களில் இதே போன்ற சின்னத்தை பயன்படுத்தலாம். (உதாரணமாக மகாராஷ்டிராவில் சிவசேனை கட்சி, ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஜார்க்கண்ட் முக்தி மோட்சா ஆகிய கட்சிகள் வில் மற்றும் அம்பு சின்னத்தை பயன்படுத்துகின்றன).

| தேசியக் கட்சி | பிராந்திய / மாநிலக் கட்சி |
|---|---|
| தேசியக் கட்சி என்பது இந்தியா முழுவதும் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சியாகும். | மாநிலக் கட்சிகள் என்பவை ஒரு மாநிலத்திற்குள் நடைபெறும் பல்வேறு தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சியாகும். |
| தேசியக்கட்சி குறைந்த பட்சம் நான்கு மாநிலங்களில் வலிமை உடையதாக இருக்க வேண்டும். | இது ஒன்று அல்லது இரண்டு மாநிலங்களில் வலிமை கொண்டதாக இருக்க வேண்டும். |
| இது தனக்கென பிரத்தியேகமான சின்னத்தை நாடு முழுவதற்கும் கொண்டிருக்கும். | இதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும். ஆனால் மாநிலத்தில் இத்தகைய சின்னம் வேறு மாநிலத்தில் உள்ள கட்சிக்கும் ஒதுக்கீடு செய்யப்படலாம். |
| இது மாநில, தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்களைத் தீர்த்து வைக்கிறது. | இது பிராந்திய மற்றும் மாநில நலன்களை வலியுறுத்துகிறது. |

தேசியக் கட்சிகளும், மாநிலக் கட்சிகளும் நாட்டின் வளர்ச்சியைத் தூண்டுகின்றன. மக்களின் நலனுக்காகப் பாடுபடுகின்றன.

## 7th term 2

## Unit I - மாநில அரசு

ஆசிரியர்: வணக்கம், குழந்தைகளே!

மாணவர்கள்: வணக்கம், ஐயா/அம்மா

ஆசிரியர்: (மாணவர்களின் வருகையைப் பதிவு செய்தபின்) இன்று அனைவரும் வருகை புரிந்துள்ளீர்கள். நன்று வாழ்த்துகள்.

உங்களுக்கு ஒரு செய்தி சொல்லட்டுமா? வரும் திங்கட்கிழமையன்று நம் பள்ளியில் விழாவொன்று நடைபெற உள்ளது. அவ்விழாவில், நீங்கள் அனைவரும் கட்டயாமாகக் கலந்துகொள்ள வேண்டும்.

யோகிதா: ஏதாவது கலை நிகழ்ச்சி நடைபெற உள்ளதா, ஐயா?

ஆசிரியர்: ஆம், நம் பள்ளிக்காகக் கட்டப்பட்ட புதிய கட்டடம் ஒன்றை அன்று திறக்க உள்ளோம்.

மாணவர்கள்: ஓ! அப்படியனால், இனி நாம் புதிய வகுப்பறையைப் பயன்படுத்த போகிறோம்!

முத்து: ஐயா அந்த நிகழ்ச்சிகளுக்குச் சிறப்பு விருந்தினராக யார் வருகிறார்?

ஆசிரியர்: புதிய கட்டடத்தின் திறப்புவிழாவுக்கச் சிறப்பு விருந்தினராக நம்முடைய சட்டமன்ற உறுப்பினரை அழைக்க உள்ளோம்.

இரஹீம்: சட்டமன்ற உறுப்பினரா? ஐயா, இந்தப் பெயரை நான் கேள்விப்பட்டுள்ள. ஆனால், அவர் யாரென்று எனக்குத் தெரியவில்லையே?

ஆசிரியர்: சொல்கிறேன். சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளைச் சட்டமன்ற உறுப்பினர்கள் என்கிறோம். அவர்களுள் ஒருவர்தாம், நம் பள்ளி விழாவுக்கு வருகை தர உள்ளார். அவர்,நம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஆவார்.

சரண்: சட்டமன்றப் பேரவையா? அப்படியென்றால் என்ன? எங்களுக்கு விளக்குங்கள், ஐயா,

ஆசிரியர்: ஓ! சொல்கிறேனே, முதலில் இந்தப் படங்களைப் பாருங்கள். (புனித ஜார்ஜ் கோட்டை, சட்டமன்றப் பேரவை, முதலமைச்சர், மற்ற அமைச்சர்கள் உள்ளிட்ட படங்களை ஆசிரியர், மாணவர்களுக்குக் காட்டுகிறார்)

மீனா: ஐயா, அ∴து என்ன கட்டடம்? அ∴து எங்குள்ளது? அது பார்ப்பதற்கு கோட்டையைப் போல் உள்ளதே?

ஆசிரியர்: சரியாகச் சொன்னாய், அந்தக் கோட்டை சென்னையில் தான் உள்ளது. இதுதான் ஆங்கிலேயர்களால் இந்தியாவில் கட்டப்பட்ட முதல் கோட்டை இந்த கோட்டையின் பெயர் புனித ஜார்ஜ் கோட்டை தற்போது, இந்தக்கோட்டையில் தான், தமிழகச் சட்டமன்றப் பேரவையும், செயலகமும் அமைந்துள்ளன. சட்டமன்றத்திலுள்ள கீழவையில்தான்இ மாநிலத்தின் நலன் காக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி விவாதிப்பர்.

கயல்: ஐயா, சட்டமன்றப் பேரவையில் யாரெல்லாம் உள்ளனர்?

ஆசிரியர்: சொல்கிறேன். நன்கு கவனியுங்கள். இந்தியாவிலுள்ள பல மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் தனித்தனியாக நிருவாக அமைப்புகளைக் கொண்டுள்ளன. இந்தியாவில் எத்தனை மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் உள்ளன என்று உங்களுக்கு தெரியுமா?

இரவி: நான் சொல்லட்டுமா?நம் நாட்டில் 29 மாநிலங்களும் 7 யூனியன் பிரதேசங்களும் உள்ளன. யூனியன் பிரதேசங்களுள் இந்திய நாட்டின் தலைநகரான புதுதில்லியும் இதில் அடங்கும். சரிதானே, ஐயா?

ஆசிரியர்: மிகச்சரி. நான் ஏற்கெனவே கூறியது போல, இந்திய நாடு இருவகையான அரசாங்கங்களைக் கொண்டுள்ளது. ஒன்று, புது தில்லியை தலைமையிடமாக கொண்டு செயல்படும் மத்திய அரசு: மற்றொன்று அந்தந்த மாநில அரசுகள். ஆகவே மத்திய அரசு, மாநில அரசுகளுக்கிடையே அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுச் செயல்படுவதையே கூட்டாட்சிமுறை என்கிறோம். நம் இந்திய நாடு, நாடாளுமன்ற மக்களாட்சி அமைப்பைக் கொண்டுள்ளது. அரசாங்கம் நல்ல முறையில் நடைபெறுவதற்காக, இந்தியக் குடியரசுத் தலைவரும் இந்தியாவின் பிரதம மந்திரியும் அந்தந்த மாநில ஆளுநர் மற்றும் முதலமைச்சர்களும் பொறுப்புடன் செயல்படுகின்றனர். இத்தகைய அமைப்பு முறையைத்தான் மத்திய அரசாங்கம் என்கிறோம்.

நிலா: மாநிலங்களுக்கெனத் தனி அரசாங்கம் உள்ளதா, ஐயா?

ஆசிரியர்: ஆமாம். இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் தனித்தனியாக அரசாங்க அமைப்பு உள்ளது. இந்த அமைப்பில் ஆளுநர், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் உள்ளனர். பாராளுமன்றப் பேரவையில் உள்ளவர்களைப் பாராளுமன்ற உறுப்பினர் (பா.உ.)எனவும், சட்டமன்றப் பேரவையில் உள்ளவர்களைச் சட்டமன்ற உறுப்பினர்கள் (ச.ம.உ.) எனவும் கூறுகிறோம். ஆகவே, நம் இந்திய அரசியலமைப்பில் மத்திய அரசும், மாநில அரசுகளும் இணைந்தே செயல்படுகின்றன.

ஜான்: ஓ! அப்படியானால், நம் பள்ளியில் நடைபெறவுள்ள விழாவை ச.ம.உ.தான் தொடங்கி வைக்கிறாரா? அவரை யார் நியமிக்கிறார்கள்?

ஆசிரியர்: சட்டமன்ற உறுப்பினர்களை யாரும் நியமிப்பதில்லை. அவர்கள், பொதுத் தேர்தல் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். நாம் முந்தைய வகுப்புகளில், அரசியல் கட்சிகளைப்பற்றி அறிந்துகொண்டது நினைவிலிருக்கிறதா? அத்தகைய அரசியல் கட்சிகள்தாம், தேர்தலில் குறிப்பிடத்தக்க அளவில் பங்காற்றுகின்றன. தேர்தலுக்காக நாடு, மக்கள்தொகையைப் பொருத்துப் பல தொகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு தொகுதியிலும் தங்களுடைய வேட்பாளரை அரசியல் கட்சிகள் நிறுத்துகின்றன. அந்தத் தொகுதியைச் சேர்ந்த 18 வயது நிறைவடைந்த வாக்காளர்கள், தங்கள் வாக்குகளைத் தங்களுக்கு பிடித்த வேட்பாளர்களுக்கு அளிக்கின்றனர். அதிக எண்ணிக்கையில் வாக்குகள் பெறும் வேட்பாளரே வெற்றி பெறுகின்றனர். அவ்வாறு வெற்றி பெற்றவரையே சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கிறோம். தேர்தல்களை நடத்துவதும், அவற்றைக் கண்காணிப்பதும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் பணியாகும். தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர், எந்தக் கட்சியில் அதிக எண்ணிக்கையில் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ,அந்தக் கட்சியே பெரும்பான்மைக் கட்சியாக உருவாகிறது. ஆளுநர், அந்தப் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் தலைவரை அழைத்து, மாநில அரசாங்கத்தை அமைக்குமாறு அழைப்பு விடுப்பார். பாதிக்குமேல் உள்ள தொகுதிகளில் அதிக எண்ணிக்கையில் வெற்றி பெறும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட பெரும்பான்மைக் கட்சியே மாநிலத்தில் ஆளும் கட்சியாக உருவாகிறது. பெரும்பான்மைக் கட்சிக்கு அடுத்த நிலையில், எந்தக் கட்சியில் அதிக உறுப்பினர்கள் உள்ளனரோ, அவர்களைக் கொண்டு சட்டமன்ற பிரதான எதிர்க்கட்சி உருவாகிறது. ஆளும் கட்சியைச் சேராத வேறு பல

கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியினர் என அழைக்கப்படுவர்.

ஷண்மி: ஐயா, நீங்கள் கூறும் செய்திகள் எங்களுக்கு மிகுந்த ஆர்வத்தைத் தருகின்றன. மாநில அரசாங்கத்தில் யாரெல்லாம் இடம் பெறுவார்கள் என்று கூறுங்கள்.

ஆசிரியர்: சொல்கிறேன். ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள் ஆகியோர் இருப்பர். இந்தியக் குடியரசுத் தலைவர், ஐந்தாண்டுக்கு ஒரு முறை ஆளுநரை நியமிப்பார். அந்த ஆளுநர், பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட ஆளும் கட்சியின் தலைவரை முதலமைச்சராக நியமிப்பார். ஆளுநருடன் முதலமைச்சர் ஆலோசித்துத் தம் கட்சியின் உறுப்பினர்களை கொண்டு அமைச்சரவையை (மந்திரி சபையை) உருவாக்குவார். அந்த அமைச்சரவை, மாநிலத்தில் ஐந்தாண்டு ஆட்சிபுரியும்.

இலயா: ஐயா, நான் ஆளுநராகவோ முதலமைச்சராகவோ வரமுடியுமா?

ஆசிரியர்: ஏன் முடியாது? நீங்களும் வரலாம். ஆளுநராக வரவிரும்பினால், முதலில் நீ இந்தியக் குடிமகனாக இருக்கவேண்டும். 35 வயது நிறைவடைந்தவராக இருக்க வேண்டும். வாழ்வில் சிறந்த நிலையில் இருக்கவேண்டும். இவை மட்டுமல்ல, எவ்வித வருவாய் தரும் எந்த ஒரு அரச பதவியிலும் இருக்கக் கூடாது. முதலமைச்சராக ஆக விரும்பினால், 25 வயது நிறைவடைந்திருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினராக (ச.ம.உ) இருக்க வேண்டும். ஒரு வேளை, சட்டமேலவை உறுப்பினராக (ச.மே.உ) ஆக விரும்பினால், 30 வயது நிறைவடைந்திருக்க வேண்டும்.

ஆரியா: சட்டமேலவை உறுப்பினரா? யார் அவர்? கூறுங்கள், ஐயா.

ஆசிரியர்: மாநிலச் சட்டமன்றத்தில்/சட்டசபையில் வழக்கமாக இரு அவைகள் இடம்பெற்றிருக்கும். ஒன்று, மேலவை: மற்றொன்று கீழவை. இதனை ஈரவைச் சட்டமன்றம்/சட்டசபை என்று அழைப்பர். சட்டமன்ற மேலவை என்பது, சட்டமன்ற சபை. இதன் உறுப்பினர்கள், சட்டமேலவை உறுப்பினர்கள் என அழைக்கப்படுவர். இவர்கள்,மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. கீழவை என்பது, சட்டமன்ற சபை இதன் உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களாவர். நான் முன்பே கூறியதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்தியாவிலுள்ள சில மாநில சட்டமன்றங்களில் மேலவை, கீழவை என்னும் ஈரவை அமைப்பு உள்ளது. ஆனால் நம் தமிழ்நாட்டில் கீழவை மட்டுமே உள்ளது. இதனை ஓரவை சட்டமன்றம் என்பர்.

அமர்: ஓ! அப்படியா! நன்கு புரிந்துகொண்டோம். ஐயா! ஆளுநர், முதலமைச்சர் ஆகியோரின் அதிகாரங்களையும் பணிகளையும் பற்றி எங்களுக்கு எடுத்துச்சொல்வீர்களா?

ஆசிரியர்: ஓ! கட்டாயம் சொல்கிறேன். மாநிலச் சட்டமன்றத்தின் ஃஓர் ஒருங்கிணைந்த பகுதியாக ஆளுநர் செயல்படுகிறார். இவர், மாநிலச் நிருவாகத்துறையின் தலைவராகவும் மகத்தான அதிகாரங்களை உடையவராகவும் திகழ்கிறார். மாநில அரசாங்கத்தின் அனைத்து நிருவாகத்துறை நடவடிக்கைகளும் ஆளுநரின் பெயரால் நடைபெறுகின்றன. மாநிலத்திலுள்ள அரசுப் பல்கலைக் கழகங்களின் வேந்தராகவும் அவர் இருக்கிறார். மாநில சட்டத்துறையால் இயற்றப்படுகிற அனைத்துச் சட்டமுன் வரைவுகளும் (மசோதாக்களும்) அவரின் ஒப்புதலுக்குப் பின்னரே சட்டமாகின்றன. மாநிலத் தலைமை வழக்குரைஞர், மாநிலப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்கள், மாநிலத் தலைமைத் தேர்தல் ஆணையர், அரசுப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் போன்றோரையும் ஆளுநரே நியமிக்கிறார்.

மாநில நிருவாகத்துறையில் பெயரளவுத் தலைவராக ஆளுநர் செயல்படுகிறார். மாநில நிருவாகத்துறையின் உண்மையான தலைவராக முதலமைச்சர் செயல்படுகிறார். முதலமைச்சர், தனது அமைச்சர்களுக்கு இலாகாக்களை ஒதுக்கீடு செய்கிறார்.

அமைச்சர்கள் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் மாநிலச் சட்டசபைக்குப் பொறுப்புடையவர்களாக உள்ளனர். அவர்கள் அனைவரும் முதலமைச்சரின் தலைமையின் கீழ் ஒரு குழுவாக இணைந்து செயல்படுகின்றனர். மக்களின் நலனுக்கானத் திட்டங்களையும் கொள்கைகளையும் முதலமைச்சர் வகுக்கிறார்.

அரசாங்கத்தில் சட்டமன்றம், நிருவாகத் துறை, நீதித்துறை என்னும் மூன்று பிரிவுகள் உள்ளன. சட்டமன்றம், சட்டங்களை இயற்றுகிறது. நிருவாகத்துறை சட்டங்களை செயல்படுத்துகிறது. நீதித்துறை, சட்டங்களை நிலைநாட்டுகிறது.

நந்து: ஐயா, நீதித்துறை என்று நீங்கள் குறிப்பிடுவது, நீதிமன்றங்களா?

ஆசிரியர்: ஆம். மாநில அளவில், மிகப்பெரிய நீதித்துறை அமைப்பாக இருப்பது உயர்நீதிமன்றம். இவ்வமைப்பு, சுதந்திரத் தன்மையுடன் செயல்படுகிறது. இந்திய அரசியலமைப்பின்படி, ஒவ்வொரு மாநிலத்திலும் ஓர் உயர்நீதிமன்றம் உண்டு. மாநில உயர்நீதிமன்றத்தில் ஒரு தலைமை நீதிபதியும் மற்ற நீதிபதிகளும் இருப்பர். உயர்நீதிமன்றத்திலுள்ள நீதிபதிகளின் எண்ணிக்கை எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. குடியரசுத்தலைவரால் தலைமை நீதிபதி நியமிக்கப்படுகிறார். தலைமை நீதிபதி, தமக்கு 62 வயது ஆகும் வரை, அந்தப் பதவியில் இருப்பார். உயர் நீதிமன்றத்தைத் தவிர, மாவட்ட அளவில் நீதிமன்றங்களும் தீர்ப்பாயங்களும் உள்ளன. அவை, எவ்விதச் சார்புமின்றி, மக்களுக்கு நீதி வழங்குவதை உறுதி செய்கின்றன. அவை மட்டுமல்லாமல், குடும்ப நல நீதிமன்றங்களும் உள்ளன. அவை, திருமணம்/குடும்பம் தொடர்பாக எழும் சண்டை சச்சரவுகளைத் தீர்த்துவைக்கின்றன.

மாணவர்கள்: எங்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில், இன்றைய பாடம் அமைந்தன. மிக்க நன்றி, ஐயா.

ஆசிரியர்: நான் கூறுவதைக் கவனத்துடன் கேட்ட உங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரும் திங்களன்று நடைபெற உள்ள விழாவுக்கான ஆயத்த பணிகளை நாம்தாம் மேற்கொள்ளப் போகிறோம். ஆகவே, அதற்காக என்ன செய்யலாம் என்று சிந்திப்போம். நல்லமுறையில் ஏற்பாடுகளைச் செய்து, பாராட்டுகளைப் பெறுவோம்.

## அலகு-2

## ஊடகமும் ஜனநாயகமும்

**அறிமுகம்:**

இந்தியா பாரம்பரியமிக்க நாட்டுப்புறக் கலைகள் பலவற்றைக் கொண்டது. அக்கலைகள் மூலம் கிராமப்புற மக்களிடையே கருத்துகள் பரிமாறப்பட்டன. ஹரிகதைகள் மற்றும் கூத்து போன்ற கலைகளின் மூலம் சமயக் கதைகள் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டன. இவை அந்தக் காலத்தில் சமய ஊடகங்களாகச் செயல்பட்டன. இச்சமய ஊடகங்கள் இசை, நடனம், சொற்பொழிவு, கதை சொல்லல், பொம்மலாட்டம் போன்றவற்றின் கூட்டுக்கலைகளாக இருந்தன. இவை மக்களிடையே நேரடியாக கருத்துகளை கொண்டு சேர்த்தன. இதன் மூலம் சமூகத்திற்குப் பயனுள்ள கருத்துகள் கூறப்பட்டன. இன்றைய நவீன ஊடகமுறை என்பது சிறு மற்றும் குறு அளவிலான கூட்டங்கள், கருத்தரங்குகள், நாடகங்கள், பொதுக்கூட்டங்கள் மற்றும் கருத்துப்பட்டறைகளாக இருக்கின்றன. அச்சு ஊடகம் என்பது மக்களின் பல்கலைக்கழகமாக கருதப்படுகிறது. ஏனெனில் இது மக்களுக்குத் தகவல்களை வழங்கக்கூடியதாகவும், கல்வியறிவு ஊட்டக்கூடியதாகவும் மற்றும் பொதுமக்களின் பாதுகாவலனாகவும் செயல்பட்டு வருகின்றது. இனி நாம் ஊடகத்தின் பங்களிப்பைப் பற்றி அறிந்து கொள்வோம்.

**ஊடகம்-விளக்கம்:**

ஒவ்வொரு தனிமனிதனும் ஊடகத்தின் வெளிப்பாடாகும். ஒரு நபர் மற்ற நபர்களுடனும், நிறுவனங்களுடனும் ஊடகத்தின் மூலம் தொடர்பு கொள்கிறார். ஊடகம் என்பது ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளக் கூடிய சாதனமாகும். ஊடகம் என்பது அச்சு, ஒலி, ஒளி என அனைத்து வகை பரப்பு சாதனங்களையும் உள்ளடக்கியதே ஆகும். ஊடகமானது(Media) மீடியம் (Medium) என்ற ஆங்கில வார்த்தையின் பன்மையாகும் (Plural). ஊடகம் தகவல்கள் செய்திகள், உணர்வுகள், கருத்துக்கள் மற்றும் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளக்கூடியதாகவும் இருக்கிறது.

இத்தகவல் தொடர்பு பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**தனிமனித தொடர்பு**– கடிதங்கள், தொலைப்பேசி, அலைப்பேசி, மின்னஞ்சல் மற்றும் தொலைநகல் ஆகியன தனிமனித தொடர்பு சாதனங்களாகும். இவை ஒரு நபர் மற்றொரு நபரோடு தனியாகவோ குழுவாகவோ தொடர்பு கொள்வதற்கு பயன்படுகிறது.

**வெகுஜன தொடர்பு**– செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி ஆகியன வெகுஜன மக்களோடு தொடர்பு கொள்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன. எனவே இவை வெகுஜன மக்களோடு தொடர்பு கொள்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன. எனவே இவை வெகுஜன ஊடகம் என்று அழைக்கப்படுகின்றன.

அச்சு இயந்திரம் ஜோகன்ஸ் குட்டன்பர்க் என்பவரால் 1453-இல் கண்டுபிடிக்கப்பட்டது

| ஊடகத்தின் வகைப்பாடு | |
|---|---|
| குறுகிய தொடர்பு ஊடகம் | கேபிள் தொலைக்காட்சி, நேரழ அஞ்சல், கருத்தரங்கு |
| தொலைத்தொடர்பு ஊடகம் | திரைப்படங்கள் தொலைக்காட்சி, வானொலி |
| அச்சு ஊடகம் | செய்தித்தாள்கள், இதழ்கள், பத்திரிக்கைகள் புத்தகங்கள், சுவரொட்டிகள், அறிக்கைகள் |
| இணைய ஊடகம் | கூகுள் இணைய தளங்கள் மற்றும் வலைப்பதிவுகள் |
| சமூக ஊடகம் | கீச்சகம், முகநூல், புலனம்/கட்செவி அஞ்சல் மற்றும் படவரி |

**மக்களாட்சியின் நான்காவது தூண்:**

சட்டமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறை மற்றும் ஊடகம் ஜனநாயகத்தின் நான்கு தூண்களாக கருதப்படுகிறது. ஊடகம் மற்ற மூன்று துறை செயல்பாடுகளின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்கிறது. இந்த நான்காவது தூண் நாட்டின் தொலைதூர பகுதிகளில் வாழும் அனைத்து மக்களும் நாட்டின் பிற பகுதிகளில் என்ன நடக்கிறது என்பதை அறிய உதவுகிறது.

உண்மையில் ஒரு ஜனநாயக நாட்டில் ஊடகம் என்பது தகவல்கள் மற்றும் அறிவை வழங்கும் மிக முக்கிய சாதனமாக செயல்படுகிறது.

**ஊடகத்தின் முக்கியத்துவம்:**

இவ்வுலகில் ஊடகம் மிகவும் சக்தி வாய்ந்த கட்டமைப்பு ஆகும். இது நம்மை சுற்றியுள்ள பல்வேறு சமூக, அரசியல் மற்றும் பொருளாதார செயல்பாடுகளை. பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் திகழ்கிறது. இதனை மக்கள் பல்வேறு தேவைகளுக்காக சார்ந்திருக்கின்றனர். குறிப்பாக தகவல்கள் மற்றும் பொழுதுபோக்கிக்கிற்காக சார்ந்துள்ளனர். ஊடகம் மக்களை விழிப்போடு இருக்கச் செய்கிறது. மேலும் சமூக மாற்றத்திற்கான மிக முக்கிய சாதனமாகவும் இருக்கிறது. ஊடகம் உலகின் அன்றாட நிகழ்வுகளை மட்டுமல்லாமல் ஒரு அரசின் பலம் மற்றும் பலவீனத்தை வெளிக்கொண்டு வருகிறது. தனியார் நிறுவனங்களால் தயாரிக்கப்படும் பொருட்களை மக்களறிடம் விளம்பரப்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துகிறது. அனைத்து தொலைக்காட்சி சேனல்களும் தேசிய மற்றம் பன்னாட்டு செய்திகளை ஒளிபரப்புகின்றன. பல திரைப்படங்களில் சமூகப் பிரச்சனைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. எந்தவொரு விடங்களிலும் ஊடகம் நடுநிலையான அறிக்கையை வழங்குகின்றது. இது சமூக, அரசியல் பிரச்சனைகளுக்கெதிராகவும், சமூக அநீதிக்கு எதிராகவும் போராடுகிறது. மேலும் இது மக்களின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உதவுகிறது.

**அகில இந்திய வானொலி:**
1956 ஆம் ஆண்டிலிருந்து ஆகாச வானி (வானிலிருந்து வரும் ஒலி) என்ற பெயரில் வானொலி ஒலிபரப்பை செய்து வருகிறது. இது 1936 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

**மக்களிடம் பொதுக்கருத்தினை ஏற்படுத்துவதில்-ஊடகம்:**

ஊடகம் மக்களிடையே ஒரு பொதுவான கருத்தை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. (ஒரு குறிப்பிட்ட பிரச்சனையில் மக்களின் பொதுக்கருத்து) இது சமகாலத்தின் சக்தி வாய்ந்த கருவியாகும். மக்களின் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே மாறிவிட்டது. இது மக்களின் அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்வுகள் குறித்த பார்வை மற்றும் புரிதலில் பொதுமைப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. வெகுஜன ஊடகம் அன்றாட நிகழ்வுகளைப் பற்றி நேர்மையாகவும், நுட்பமாகவும், நடுநிலையாகவும் தருகின்றது. செய்தித்தாள்கள் அரசின் கொள்கைகளுக்கு எதிராக மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் சாதனமாக திகழ்கிறது. இவ்வாறு மக்களுக்கு சமூகத்தில் நடைபறுகின்ற முக்கிய பிரச்சனைகளை பற்றிய கருத்துக்களை தெரிவிக்க அச்சு ஊடகங்களும், மின்னனு ஊடகங்களும் உதவுகின்றன.

**நெறிமுறை மற்றும் பொறுப்பு:**

நெறிமுறை என்பது நம் வாழ்க்கையை வாழ தீர்மானிக்கும் மதிப்பீடுகளின் தொகுப்பாகும். எனவே இவை முறையான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு மிகவும் அவசியமாகும். ஊடக நெறிமுறை என்பது நல்ல நடத்தைக்குரிய கொள்கைகள் அடங்கிய தொகுப்பாகும். ஊடகம் என்பது அவற்றின் செயல்பாடுகள் மற்றும் எழுத்தின் மூலமும் பிரதிபலிக்க வேண்டும். எளிதில் உணர்வுகளை தூண்டக்கூடிய தேவையற்ற செய்திகளை தவிர்க்க வேண்டும்.

ஊடகங்களின் அடிப்படை நோக்கமானது நேர்மையான, துல்லியமான, நடுநிலையான, நாகரிகமான மற்றும் நல்ல மொழிநடையில் மக்கள் நலன் சார்ந்த தகவல்கள், செய்திகள், கருத்துகள், ஆகியவற்றை மக்களுக்கு வழங்குவதாகும். ஒரு அரசு சிறப்பாக செயல்படுவதற்கு விழிப்பான மற்றும் சுதந்திரமான ஊடகம் மிகவும் அவசியமாகும்.

இது மக்களுக்கு தேவையான தகவல்களை சேகரிப்பதற்கான உரிமையை பெற்றிருக்கிறது. அதேசமயம் எந்த விதத்திலும் மக்களின் உணர்வுகளை தூண்டும் விதத்தில் இருத்தல் கூடாது. நம்பகத்தன்மையான தகவல்களை மக்களிடம் வழங்குவதில் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

**ஜனநாயகத்தில் ஊடகத்தின் பங்கு**

ஊடகமானது ஜனநாயகத்தின் முதுகெலும்பாகும். நமது ஜனநாயக சமுதாயத்தில் ஊடகம் பொமுதுமக்களின் கருத்துக்களை செயல்படுத்தும் உந்து சக்தியாகும். இது ஜனநாயகத்தின் மதிப்புகளை பலப்படுத்துகிறது. இது மக்களுக்கு அறிவையும், வலிமையும் அளிக்கிறது. மேலும்

வாக்காளர்களுக்கு விழிப்புணர்வையும், ஏற்படுத்துகிறது. அரசின் வெளிப்படைத்தன்மையும், அவற்றின் பொறுப்பினையும் உறுதி செய்கிறது. ஊடகம் அரசின் ஒவ்வொரு செயல்பாட்டினையும் மக்களிடம் எடுத்துச்செல்கிறது. இதன் மூலம் அரசின் செயல்பாடுகளையும் மக்களின் அன்றாட நிகழ்வுகளையும் குடிமக்கள் அறிந்து கொள்கிறார்கள்.

**மக்களாட்சியின் கோட்பாடு**

மக்களாட்சி என்றால் மக்களால் ஆட்சி செய்யப்படுதல் என்பதாகும். இது இரண்டு கிரேக்க சொற்களால் ஆனது. டெமோஸ்(Demos) மக்களைக் குறிக்கிறது. க்ராடோஸ் (Kratos) அதிகாரம் அல்லது ஆட்சி என்ற பொருள்.

இது நடப்பு செய்திகளை பற்றிய விவாதத்தை ஏற்படுத்துகிறது. அதனால் ஒரே பிரச்சனைகளுக்குப் பல்வேறு கருத்துக்களை பெறமுடிகிறது. ஊடகமானது மக்களுக்கு அரசு நிறைவேற்றாத வாக்குறுதிகளை நினைவூட்டுகிறது. இது கிராமப்புற மக்களுக்கு கல்வி அளிக்கிறது. பாராளுமன்றம் மற்றும் ஜனநாயகம் ஆகிய இரண்டும் ஊடகத்தின் கண்காணிப்பில் இருந்தால் மட்டுமே வலிமை அடையும். ஊடகம் அறிக்கைகள் அளிப்பது மட்டுமல்லாது அரசிற்கும் மக்களுக்கும் இணைப்பு பாலமாக செயல்படுகிறது. மேலும் ஊடகம் அரசாங்கத்தை கண்காணிக்கும் பணியையும் செய்கிறது. ஊடகம் இல்லாத ஜனநாயகம் என்பது சக்கரம் இல்லாத வாகனத்திற்கு ஒப்பாகும்.

**உள்ளூர் ஊடகம்:**

பொதுவாக ஊடகம் என்பது தேசிய மற்றும் உலக செய்திகளை அளிப்பதாகும். உள்ளூர் ஊடகம் என்பது ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் மக்களின் நலனுக்காக செயல்படுவதாகும்.

**முடிவுரை:**

தகவல் மற்றும் தொழில்நுட்ப உலகில் வெகுஜன மக்களுக்கு தகவல்களை அளிப்பதில் மிகப்பெரிய பங்கு வகிக்கிறது. ஊடகம் மக்களின் ஒற்றுமையையும், சமூக அமைதியையும் சீர்குலைக்கும் வண்ணம் எதையும் வெளியிடா வண்ணம் மிகவும் கவனமாக செயல்பட வேண்டும். ஆரோக்கியமான சமுதாயத்திற்கு ஊடகம் நல்ல தகவல்களையும், மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் விதமாகவும் செயல்பட வேண்டும். ஊடகம் இந்த உலகை சிறியதாகவும் மக்களுக்க மிக நெருக்கமாகவும் மாற்றியுள்ளது.

# 7th Term III

## அலகு -1 பெண்களின் மேம்பாடு

**அறிமுகம்**

பெண்ணியம் என்பது பெண்களை வலிமையாக்குவது மட்டும் அன்று. அவர்களிடம் ஏற்கனவே உள்ள வலிமையை உலகம் உணரும் விதமாக மாற்றுவதே பெண்ணியம் ஆகும்.

பெண்கள் சமத்துவத்திற்கான போராட்டமானது எந்த ஒரு பெண்ணியவாதிக்கோ அல்லது ஏதேனும் ஒரு அமைப்பிற்கோ சொந்தமானது அல்ல. மாறாக, அது மனித உரிமைகள் பற்றிய அக்கறை கொண்டவர்களின் கூட்டு முயற்சியாகும்.

"ஒரு ஆணுக்கான கல்வி என்பது அவருக்கு மட்டுமே பயன்படும். ஆனால் ஒரு பெண்ணுக்கு வழங்கும் கல்வியானது, ஒரு தலைமுறைக்கான கல்வியாகும்.

பெண்களைப் பலவீனமான பாலினம் என்று சொல்வது ஒரு அவதூறு. அது பெண் இனத்திற்கு ஆணினம் இழைத்த அநீதியாகும் என்று மகாத்மா காந்தியடிகள் கூறியுள்ளார்.

பெண்களின் மேம்பாடு மற்றும் தனித்துவம் என்பது அவர்கள் அரசியல், சமூகப் பொருளாதார மற்றும் நல்வாழ்வு நிலையில் பெறும் முன்னேற்றத்தையே குறிக்கும். இதுவே அவர்களின் நிலைத்த மேம்பாட்டிற்கு ஆணிவேராகும்.

நாட்டின் நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சிக்கு நமது சமூகத்தில் பெண்களுக்கு அதிகாரப் பகிர்வு அளித்தலும் பாலினச் சமத்துவம் அடைதலும் அவசியமாகும்.

**பாலினம் பற்றிய சமூக அம்சங்கள்**

சமூகவியலில் பாலினத்திற்கு இடையே வேறுபாட்டைக் காண்கிறோம். பாலியல் என்பது உயிரியல் பண்புக்கூற்றின்படி ஆண் அல்லது பெண் என சமூகத்தில் பயன்படுத்துவதாகும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை மக்கள் பேசும்போது. பெரும்பாலும் பாலியல் பற்றிய கருத்துகளே பேசப்படுகின்றன. ஆனால், பாலினம் என்பதைவிட உயிரியல் பண்பிலான வேறுபாடு மட்டுமே அது என்பது பற்றிய நமது சமூகத்தின் புரிதல் மிக அவசியமானதாகும்.

பாலினம் என்பது உயிரியல் பண்புகளைச் சார்ந்தது. குறிப்பாக, சமூகம் எவ்வாறு பாலியல் வகைகளைக் கருத்தில் கொள்கிறது மற்றும் நடத்துகிறது என்பதே இதன் கருப்பொருளாகும். பாலினம் ஆண் பெண் பங்களிப்பின் சமூக விதிமுறைகளை உள்ளடக்கியது. இது ஆண், பெண், திருநங்கை மற்றம் பிற பாலின நிலைகளை உள்ளடக்கி அதனை சமூகம் எவ்வாறு அணுகிச் செயல்படுத்துகிறது என்பதும் பார்க்கப்பட வேண்டும். அதே போன்று, பாலினம் என்பதை ஒரு நபர் எவ்விதம் உணர்கிறார் என்பதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது.

பாலினச் சமூகவியல் ஆண்மை, பெண்மைக்கு இடையிலான வேறுபாடுகளை எவ்வாறு ஆராய்கிறது மற்றும் சமூகம் எவ்வாறு புரிந்து கொள்கிறது என்பதும் ஆகும். (ஆண்கள் மற்றும் பெண்களுக்குப் பொருத்தமான நடத்தை என்ன என்று சமூகம் கருதுவதைப் பார்ப்பது) இவை எவ்வாறு சமூக நடைமுறைகளின் அடையாளத்தைப் பாதிக்கின்றது என்பதை நாம் ஆராய வேண்டும்.

**மேம்பாட்டிற்கான முக்கிய காரணிகள்:**

1. **கல்வி:** ஒருவருக்கு அறிவுப்பூர்வமாகச் சிந்திக்கும் திறன் மற்றும் தனித்தன்மை வாய்ந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது.

2. **பாலினப்பாகுபாடு:** பாலினப்பாகுபாடு பார்க்கும் சமூகம் எக்காலத்திலும் முன்னேறுவதற்கான

வாய்ப்பு அரிது.

3. சாதி, இன, சமய பாகுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட சமூகம், முன்னேற்றம் அடையாது.

40 ஆண்டுகளுக்கு முன்பே பன்னாட்டு மனித உரிமைகள் ஆணையம் 'அனைவருக்கும் கல்வி'' என்ற உரிமையை வலியுறுத்தி உள்ளது.

கல்விபெறும் பெண்குழந்தை, தாயான பின்பு பிள்ளைகளுக்கும் குடும்பத்தாருக்கும் அரவணைப்பை வழங்குவதன் மூலம் சமுதாயத்திற்குச் சிறப்புச் சேர்க்கிறார். பெண் குழந்தைகளின் அவசியத் தேவையான கல்வி, அறிவினை பெறவும் அவர்களின் திறனை மேம்படுத்தவும் அதனால் சமூகத்தில் அவர்களின் தகுதிநிலை உயரவும் அவர்களின் சுய முன்னேற்றத்திற்கும் உறுதுணையாய் இருக்கின்றது.

நமது எதிர்காலம் பெண்களை உதாசீனப்படுத்துவோர் கையிலில்லை. அது நமது மகன்களைப் போல் பள்ளிக்குக் கல்வி கற்கச் செல்லும் நமது மகள்களின் கனவுகளில் உள்ளது. அவர்களே, இவ்வுலகத்தில் தாங்கிநிற்கும் வல்லமைக் கொண்டவர் என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஐக்கிய நாடுகளின் பொது சபையில், 2012ஆம் ஆண்டு உரையாற்றும்போது கூறினார்.

**பெண்கல்வியின் இணையற்ற முக்கியத்துவங்கள்**

1. **அதிகரித்த கல்வியறிவு:** உலகெங்கிலும் கல்வியறிவற்ற இளையோரில் கிட்டத்தட்ட 63 சதவிகிதம்பேர் பெண்கள். எனவே அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி வழங்கப்பட வேண்டும் அப்போதுதான் பின்தங்கிய நாடுகளும் முன்னேற்றம் அடையும்.

2. **ஆள்கடத்தல்** : ஆள் கடத்தலில் அதிகம் பாதிக்கப்படுவது படிப்பறிவு இல்லாத பெண்கள் மற்றும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்களேயாகும். இளம் பெண்களுக்கு அடிப்படைத் திறன்கள் மற்றும் அவர்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதினால் ஆள் கடத்தல்கள் கணிசமாகக் குறைக்கப்படும் என்று ஆள்கடத்தல்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் இடைமுகமைத் திட்டம் விளக்குகின்றது.

3. **அரசியல் பிரதிநிதித்துவம்:** உலகம் முழுவதும் பெண்கள் வாக்காளர்களாகவே உள்ளனர். அவர்களது அரசியல் ஈடுபாடு கட்டுப்படுத்தப்படுகிறது. குடிமைக்கல்வி மற்றும் குடிமைப் பயிற்சி அனைத்து விதமான மேம்பாடு மற்றும் முன்னேற்றத்திற்கான தடைகளை உடைக்கின்றது என்று ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கான தலைமை மற்றும் பங்கேற்பினைப் பற்றிய ஆய்வு பரிந்துரைக்கிறது.

4. **வளரும் குழந்தைகள்:** கல்வியறிவு பெற்ற தாய்மார்களின் குழந்தைகள் கல்வியறிவு பெறாத தாய்மார்களின் குழந்தைகளை ஒப்பிடுகையில் இருமடங்கு அதிகரித்து ஐந்து வயதுக்கு மேல் வாழ வாய்ப்புள்ளது என்று ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கான கல்வி முனைப்பு நிறுவனம் பரிந்துரைத்துள்ளது.

5. **காலம் தாழ்த்திய திருமணம்:** பின்தங்கிய நாடுகளில் மூன்றில் ஒரு பெண்குழந்தைக்குப் பதினெட்டு வயதுக்குள் திருமணமாகிவிடுகிறது மற்றும் எந்த நாடுகளில் பெண்குழந்தைகள் ஏழு அல்லது அதற்கும் மேலான வருடங்கள் படிக்கிறார்களோ, அவர்ளின் திருமணம் நான்கு ஆண்டுகள் வரை தள்ளிப்போகிறது என்று ஐக்கிய நாடுகளின் மக்கள்தொகை நிதியம் பரிந்துரைக்கிறது.

6. **வருமான சாத்தியம்:** ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் (UNESCO) கூற்றுப்படி கல்வி பெண்ணின் வருமானம் ஈட்டும் திறனை அதிகரிக்கிறது. ஒரு பெண் ஆரம்பக் கல்வி பெற்றாள் கூட அந்த பெண்ணின் வருவாயில் 20 சதவீதம் வரை அதிகரிக்கிறது.

7. **மொத்த உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துதல்:** பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு கல்வி வாய்ப்புகள் வழங்கப்படும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியானது உயருகிறது. 10 சதவீதம் கூடுதலாக பெண்கள் கல்வி கற்றால் மொத்த உள்நாட்டு உற்பத்தி சராசரியாக மூன்று சதவிகிதம் அதிகரிக்கின்றது.

8. **வறுமை குறைப்பு :** பெண்களுக்குக் கல்வியில் உரிமைகள் சம வாய்ப்புகள் வழங்கப்பட்டால் அவர்களும் பொருளாதார செயல்பாடுகளில் பங்கேற்பர். இதனால் அவர்களின் வருவாய் ஈட்டும் திறன் அதிகரித்து வறுமை அளவைக் குறைக்க வழி ஏற்படும்.

சாவித்ரிபாய் புலே, பாரம்பரியத்தை உடைத்த முதல் பெண்கள் பள்ளியின் முதல் பெண் ஆசிரியர் ஆவார். பெண்கள் கல்வியை பற்றி பேசும்போதெல்லாம் நினைவில் வருபவர், இந்தியாவில் பெண் கல்வியை செயல்வடிவமாக்கிய ஜோதிராவ்புலே, சாவித்ரிபாயின் கணவர் ஆவார். இவர்கள் இருவரும் பெண்களுக்கான முதல் பள்ளியை 1848ஆம் ஆண்டு தொடங்கினார்.

| முதல் பெண் | பெயர் | நாடு |
|---|---|---|
| பிரதம மந்திரி | சிறிமாவோ பண்டாரநாயக் | இலங்கை |
| விண்வெளி | வாலென்டினா தெரேஷ்கோவா | சோவியத் ஒன்றியம் |
| எவரெஸ்ட் சிகரத்தை அளவிட்டவர் | ஜன்கோ தபே | ஜப்பான் |
| ஒலிம்பிக்கில் தங்கம் வென்றவர் | சார்லோட் கூப்பர் | இங்கிலாந்து |

**இந்தியாவின் முதன்மை பெண்மணிகள்**

1. முதல் மகளிர் பல்கலைக்கழகம் மகர்ஷிகார்வே 1916இல் ஐந்து மாணவிகளுடன் புனேவில் SNDT பல்கலைக் கழகத்தைத் தொடங்கினார்.
2. மத்திய அமைச்சரவையில் பதவி வகித்த முதல் பெண் விஜயலட்சுமி பெண்டிட்.
3. மத்திய வெளியுறவு அமைச்சர் பதவியை வகித்த முதல் பெண் சுஷ்மா ஸ்வராஜ்
4. மாநிலத்தின் இளம் வயது அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ்அவர் 25 வயதாக இருந்த போது ஹரியான அமைச்சரவையில் அமைச்சரானார்.
5. சுதந்திர இந்தியாவின் முதல் பெண் ஆளுநர் சரோஜினி நாயுடு. ஒன்றிணைந்த மாகாணங்களின் பொறுப்பாளர் ஆனார்.
6. ஐக்கிய நாடுகளின் பொது சபையில் முதல் பெண் தலைவர் விஜயலட்சுமி பண்டிட்(1953)
7. இந்தியாவில் முதல் பெண் பிரதமர் - இந்திராகாந்தி(1966).
8. முதல் பெண் காவல்துறை உயர் அதிகாரி – கிரண்பேடி (1972).
9. அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முதல் பெண் அன்னைதெரசா(1979).
10. எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் இந்திய பெண் பச்சேந்திரி பால் (1984).
11. புக்கர் பரிசு வென்ற முதல் இந்திய பெண் அருந்ததி ராய்(1997).
12. முதல் பெண் குடியரசுத் தலைவர் பிரதிபா பாடீல்(2007)
13. மக்களவையின் சபாநாயகர் பதவிவகித்த முதல் பெண் சபாநாயகர் மீராகுமார்(2009).
14. உச்சநீதிமன்ற முதல் பெண் நீதிபதி மீராசாகீப் பாத்திமா பீவி.
15. இந்திய தேசிய காங்கிரசின் முதல் பெண் தலைவர் அன்னிபெசன்ட்.
16. இந்தியாவின் முதல் பெண் மாநில முதலமைச்சர் சுச்சித கிருபாளினி.
17. முதல் பெண் காவல்துறை இயக்குநர்(DGP) காஞ்சன் சௌத்ரி பட்டாச்சார்யா.
18. இந்தியாவின் முதல் பெண் பாதுகாப்புத்துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீத்தாராமன்.
19. இந்தியாவின் முதல் பெண் நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன்.

**பெண்களின் கல்வியறிவு விகிதம் குறைவுக்கான காரணங்கள்**

1. பாலின அடிப்படையிலான சமத்துவமின்மை
2. சமூகப் பாகுபாடு மற்றும் பொருளாதார சீரழிவு
3. பெண் குழந்தைகளை வீட்டு வேலைகளில் ஈடுபடுத்துவது
4. பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கை குறைவு
5. பள்ளிகளில் குறைந்த தக்கவைப்பு வீதம் மற்றும் அதிக இடைநிற்றல் விகிதம்.

| வ.எண் | மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆண்டு | நபர்கள் | ஆண்கள் | பெண்கள் | ஆண்-பெண் கல்வியறிவு இடைவெளி வீதம். |
|---|---|---|---|---|---|
| 1 | 1951 | 18.33 | 27.16 | 8.86 | 18.30 |
| 2 | 1961 | 28.3 | 40.4 | 15.35 | 25.05 |
| 3 | 1971 | 34.45 | 45.96 | 21.97 | 23.98 |
| 4 | 1981 | 43.57 | 56.38 | 29.76 | 26.62 |
| 5 | 1991 | 52.21 | 64.13 | 39.29 | 24.84 |
| 6 | 2001 | 64.83 | 75.26 | 53.67 | 21.59 |
| 7 | 2011 | 74.04 | 82.14 | 65.46 | 16.68 |

**பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு**

- பெண்களின் பொருளாதார வளர்ச்சி அல்லது முன்னேற்றம் சமூகத்தில் தவிர்க்க முடியாத ஒன்று.
- மனித உரிமைகளை முன்னெடுக்கும் போதும் அதன் வளர்ச்சியின் போதும் பெண்கள் மேம்பாடு அவசியமான நடைமுறைகளில் ஒன்றாகும்.
- நீடித்த நிலையான வளர்ச்சிக்கு பெண்கள் முன்னேற்றம், மேம்பாடு மற்றும் பாலின சமத்துவம் அடைவது ஆகியன அவசியக் காரணிகள் ஆகும்.

**பெண்கள் பொருளாதார மேம்பாடு அடைவதால் ஏற்படும் நன்மைகள்**

1. பெண்களின் பொருளாதார மேம்பாடானது, பெண்கள் பாலியல் சமத்துவம் பெறுவதற்கும் உரிமைகளை அடைவதற்கும் வழிவகுக்கிறது.
2. பெண்களைப் பொருளாதார முன்னேற்றமடைய செய்வதும், உலகில் பாலின இடைவெளிகளை குறைப்பதும் நிலைத்த நீடித்த இலக்கை அடைய உதவுகிறது.
3. பொருளாதாரம் மேம்பாடு அடைகின்றது.
4. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான கல்வி இலக்கினை அடைவதன் மூலம் பெண்களால் பொருளாதார முன்னேற்றம் அடைய முடிகிறது.
5. மூன்று அல்லது அதற்கு மேலான பெண்கள் ஒரு நிறுவனத்தில் செயல்படும்போது, அனைத்து பரிமாணங்களிலும் அந்த நிறுவனம் வளர்ச்சியடைகிறது.

**பெண்களின் பொருளாதார மேம்பாட்டின் நோக்கங்கள்**

1. சட்டங்களில் பாலின வேறுபாடுகள் காணப்படுவது வளரும் மற்றும் வளர்ந்த நாடுகளின் பொருளாதாரத்தையம் பெண்களையும் பாதிக்கும்.
2. உலகத் தொழிலாளர் சந்தையில் பெண்கள் பங்கேற்பதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளது.
3. ஆண்களைவிட பெண்களுக்கு வேலைவாய்ப்பு குறைவாக உள்ளது.
4. முறைசாரா மற்றும் பாதிக்கப்படக்கூடிய வேலைகளில், பெண்கள் அதிகம் பணிபுரிகிறார்கள்.
5. உலகளவில் ஆண்களைவிட பெண்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்படுகிறது.
6. பெண்கள் சமமற்ற பொறுப்புணர்வுடன் ஊதியம் பெறாமல் வீட்டு பராமரிப்ப பணிகளைப் பார்க்கின்றனர்.
7. ஊதியம் பெறாத பராமரிப்பு பணி அவசியமான ஒன்று. ஆனால், அதை பொருளாதார செயல்பாடாகவோ அங்கீகாரமுடையதாகவோ கணக்கிடுவது இல்லை.
8. பெண்கள் தொழில்முனைவோராக இருப்பது குறைவு. மேலும், அவர்கள் தொழில் தொடங்குவதில் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்கிறார்கள்.
9. நிதி நிறுவனங்களையோ, வங்கிகளையோ ஆண்களை விட பெண்கள் குறைவாகவே அணுகுகிறார்கள்.
10. பெண்கள் இன்றளவும் சமூகப் பாதுகாப்பைப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவு.
11. பணிபுரியும் இடங்களில் வன்முறை மற்றும் துன்புறுத்தல் போன்ற பிரச்சனைகள், பெண்களுக்கு வயது. இருப்பிடம், வருமானம், சமூகநிலை போன்றவற்றைப் பொருட்படுத்தாமல் ஏற்படுகிறது.

இந்திய சமூகம் பன்முகத்தன்மைக்கும் ஒற்றுமைக்கும் பெயர் பெற்றது. இந்திய சமுதாயத்தைப் போலவே வேறுபட்ட சமூகத்தின் பலவீனமான பிரிவினரைப் பெற்ற இந்த

சமுதாயத்திலும் சமூக சமத்துவமின்மை நிலவுகிறது. அது பெண்கள், குழந்தைகள், ஏழை, நிலமற்ற விவசாயிகள் ஆகியோரைப் பலவீனமான பிரிவினர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் பண்டைய காலத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்தும் பிரிவின் கைகளில் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் பாகுபாட்டை எதிர்கொண்டுள்ளனர். மேலும் உரிமைகள் மற்றும் நீதிக்கான அவர்களின் போராட்டம் இந்த தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் பலவீனமான குழுவிற்கு எதிரான முந்தைய பாகுபாட்டைப் போலவே பழையது.

**சுருக்கம்**

பெண்கள் அதிகாரம் மற்றும் அது தொடர்பான பிரச்சனைகள், இப்போது உலகளவில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. தனிப்பட்ட உரிமைகள் சமூக, சமத்துவம் அரசியல் சக்தி மற்றம் பொருளாதார வாய்ப்பு ஆகியவை பெண் அதிகாரமளிப்பின் அம்சங்களாகும். உலகின், வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் பெண்களுக்கு அதிகாரமளித்தல் இலக்கை அடைய உண்மையிலேயே செயல்படுகின்றன. உலகின் மொத்த மக்கள்தொகையில் 50% பெண்கள் பகிர்ந்துகொண்டுள்ளனர். இந்த உலகில் பெண்களை மேம்பாடு அடையச் செய்யாமல் உலக அமைதியையும் நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. ஒவ்வொரு பெண்ணையும் ஒரு சுய சிந்தனையுடைய அதிகாரம் பெற்ற பெண்ணாக மாற்றுவது அனைவருடைய பொறுப்பாகும்.

---

## அலகு– 2

## சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

**அறிமுகம்**

ஒரு சந்தை என்றவுடன் நம் கண்முன்னே வருவது ஏராளமான கடைகள் மற்றும் நுகர்வோர் நெரிசலாக வந்து செல்லும் இடமாக இருக்கும். மளிகை பொர்ள்கள், ஆடை, மின்னணுப் பொருள்கள் போன்ற பல்வேறு வகையான பொருள்களை மக்கள் சந்தையில் வாங்குகிறார்கள்.

கடைகள் பலவிதமான தயாரிப்புகளையும், சேவைகளையும் விற்பனை செய்கின்றன. எனவே பழங்கால முறைப்படி ஒரு சந்தை என்பது வாங்குபவர்களும் விற்பவர்களும் தங்கள் பொருள்கள் மற்றும் சேவைகளை பரிமாறிக்கொள்ளும் இடமாக அமைந்தது.

ஆனால் பொருளாதாரத்தில் சந்தை என்றால் என்ன? பொருளாதாரத்தில் சந்தை என்பது இயற்கை இடம் சார்ந்தது எனக்கூறப்படவில்லை. பொருளாதார வல்லுநர்கள் ஒரு சந்தையை வாங்குபவர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஒன்றாக வருவதாக விவரிக்கின்றனர் மற்றும் விற்பனையாளர்கள், வாங்குபவர்கள் பொருள்களை விற்கவோ வாங்கவோ நேரடியாக வரவது அல்லது மறைமுகமாக தொடர்புக்கு வருவது. எடுத்துக்காட்டாக புத்தகச் சந்தையானது அமைத்து விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் அனைவரையும் உள்ளடக்கியதாகும் என்கிறது பொருளாதாரம். இது ஒரு புவியியல் இரப்பிடத்தைக் குறிக்க வேண்டிய அவசியமில்லை.

பொருள்கள், சேவைகள் மற்றும் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட அமைப்பு சந்தை என அழைக்கப்படும் ஒரு சந்தை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அமைப்புகள் வாங்குவதிலும் விற்பதிலும் ஈடுபடுகின்ற இடமாக அமைகின்றது. பணப்பரிவர்த்தனையில் ஈடுபடுகின்ற இரு தரப்பினரும் விற்பனையாளர் மற்றும் வாங்குபவர் என்று அழைக்கப்படுகிறார்கள். விற்பனையாளர் பணம் மற்றும் பரிமாற்றங்களை வாங்குபவருக்கு விற்கிறார். சந்தைப்போட்டித் தன்மையுடன் இருக்க ஒன்றுக்கும் மேற்பட்ட வாங்குபவர் மற்றும் விறபவர் என இருக்க வேண்டும்.

**சந்தையின் அம்சங்கள்**

பொருளாதாரத்தில் சந்தை என்ற சொல் பண்டத்திற்கான கடைகளையும் அல்லது பொருள்களின் தொகுப்பையும் குறிக்கிறது. உதாரணமாக அரிசி சந்தை, துணிகளுக்கான சந்தை, மின்னணு பொருள்களுக்கான சந்தை போன்றவற்றை குறிப்பதாகும்.

1. ஒரு சந்தை இயற்பியல் சார்ந்த அல்லது புவியியல் சார்ந்த இருப்பிடத்தைக் குறிப்பதாயில்லை. சந்தை ஒரு பொதுவான பரந்த பகுதியாகவும் பிராந்தியத்தின் தேவையையும் அளிப்பையும் விநியோகிக்கும் சக்திகளைக் கொண்டுள்ளது.
2. சந்தையை உருவாக்குவதற்கு பொருள்களை வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள் ஒரு குழுவாக இருக்க வேண்டும். இந்த விற்பனையாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையிலான உறவுகள் வணிக உறவுகளாக இருக்க வேண்டும்.
3. விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் என இருவரும் சந்தையைப் பற்றிய அறிவைப் பெற வேண்டும். தேவைக்கான தயாரிப்புகள், நுகர்வோர் தேர்வு, விருப்பத் தேர்வு, முன்னுரிமை, நவீன காலத்துக்கு ஏற்ப மாற்றங்கள் போன்ற விழிப்புணர்வைப் பெற்றிருக்க வேண்டும்.

**சந்தைகளின் வகைப்பாடு**

பரவலாக சந்தைகள் இரண்டு வகைகளாக உள்ளன. அவை தயாரிப்பு சந்தை மற்றும் காரணிச் சந்தை. காரணிச் சந்தை என்பது நிலம், மூலதனம், உழைப்பு போன்ற உற்பத்திக் காரணிகளை வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்குமான சந்தையைக் குறிப்பதாகும். சந்தைகளின் மற்ற வகைகளைப் பின்வருமாறு அறியலாம்.

**1. புவியியல் இருப்பிடத்தின் அடிப்படையில்**

**உள்ளூர் சந்தைகள்:** உள்ளூர் சந்தையில் வாங்குபவர்களும் விற்பவர்களும் உள்ளூர் பகுதியை சார்ந்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் வழக்கமாக தினசரி பயன்பாட்டின் விரைவில் வீணாகிவிடும்/அழுகும் பொருட்களை விற்கின்றனர். ஏனெனில் அத்தகைய பொருள்களின் போக்குவரத்துச் செலவு மிக உயர்ந்ததாக இருக்கும்.

**பிராந்திய சந்தைகள்:** பிராந்திய சந்தைகளானது உள்ளூர் சந்தைகளை விட பரந்த அளவிலானவை அல்லது சில சிறிய மாநிலங்கள் இணைந்த பகுதியாக இருக்கும்

**தேசிய சந்தைகள்:** தேசிய சந்தையில் பொருள்களின் தேவை ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கு மட்டும் தேவையாக இருக்கலாம். அல்லது தேசிய எல்லைகளுக்கு வெளியே இத்தகைய பொருள்களின் வர்த்தகத்தை அரசாங்கம் அனுமதிப்பிதில்லை.

**சர்வதேச சந்தை:** தயாரிப்புகளுக்கான தேவை சர்வதேச அளவிலானது மற்றும் சர்வதேச அளவில் பொருள்கள் மொத்த அளவில் வர்த்தகம் செய்யப்படும்போது அச்சந்தை சர்வதேச சந்தை என அழைக்கப்படுகிறது.

**2. நேரத்தின் அடிப்படையில்**

**மிகக் குறுகிய கால சந்தை:** மிகக் குறுகிய கால சந்தையில் பொருள்களின் அளிப்பு நிலையானது மேலும் அதை உடனடியாக மாற்ற முடியாது. உதாரணமாக பூக்கள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றிற்கான சந்தைகள் பொருள்களின் விலையானது தேவையைப் பொறுத்து அமையும்.

**குறுகிய கால சந்தை:** குறுகிய கால சந்தை என்பது முந்தைய சந்தையை விட சற்று கூடுதல் நேரம் உடையது. இங்கே அளிப்பை சற்றே மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

**நீண்ட கால சந்தை:** நீண்ட கால சந்தையில் உற்பத்தியை கணக்கிடுவதன் மூலம் விநியோகத்தை எளிதாக மாற்றியமைக்கலாம். எனவே இத்தகைய சந்தையை தேவைக்கேற்ப மாற்றலாம். எனவே சந்தையின் சமநிலை விலையை சரியான சமயத்தில் தீர்மானித்துக் கொள்ளும்.

**3. பரிவர்த்தனையின் அடிப்படையில்**

**உடனடிச்சந்தை:** பரிவர்த்தனைகள் நிகழும் இடத்திலேயே பணம் உடனடியாக செலுத்தப்படுகிறது கடன் முறை இல்லை.

**எதிர்கால சந்தை:** எதிர்கால சந்தையின் பரிவர்த்தனைகள் கடன் அடிப்படையிலான பரிவர்த்தனைகள் ஆகும். எதிர்காலத்தில் திரும்ப செலுத்த ஒரு வாக்குறுதியும் உள்ளது.

**4. ஒழுங்குமுறை அடிப்படையில்**

**ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை:** ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையானது பொருத்தமான அரசாங்க அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் நடைபெறுகின்றன. இத்தகைய சந்தை நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் இல்லை என்பதை உறுதி செய்கின்றது. ஒழுங்குபடுத்தப்பட்ட உற்பத்தி அல்லது உற்பத்திகளின் குழுவைக் குறிக்கிறது. எ.கா. பங்குச்சந்தை மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையாக உள்ளது.

**கட்டுப்பாடற்ற சந்தை:** முற்றிலும் கட்டப்பாடு எதுவுமற்ற சந்தை, சந்தையில் கண்காணிப்போ ஒழுங்குமுறையோ கிடையாது. அதுவே முடிவுகளை மேற்கொள்கிறது.

**5. போட்டியின் தன்மை அடிப்படையில்**

**முற்றுரிமை:** முற்றுரிமை என்பது ஒரு சந்தை கட்டமைப்பைக் குறிக்கிறது. அதில் ஒரு உற்பத்தியாளர் அல்லது ஒரு விற்பனையாளர் முழு சந்தையிலும் கட்டுப்பாட்டைக் கொண்டு

உள்ளனர். இத்தகைய தனி விற்பனையாளர் நெருக்கமான மாற்று பொருள்கள் இல்லாத தயாரிப்புகளில் ஒப்பந்தம் செய்யப்படுகிறார்.

**ஏகபோக போட்டி:** ஏகபோக போட்டி என்ற சொல் பேராசிரியர் எட்வர்ட்.எச்.1933ஆம் ஆண்டில் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் சேம்பர்லின் தனது ஏகபோக போட்டியின் கோட்பாட்டு நூலில் குறிப்பிட்டுள்ளார். ஏகபோக போட்டி என்ற சொல் ஏகபோக மற்றும் சரியான போட்டி என்பதன் கலவையைக் குறிக்கிறது. அதில் ஏராளமான வாங்குபவர்கள் மற்றும் தயாரிப்புகளை விற்பவர்கள் உள்ளனர். இருந்தபோதிலும் ஒவ்வொரு விற்பனையாளரின் தயாரிப்பும் ஒரு அம்சத்தில் அல்லது மற்றொன்றிலிருந்து வேறுபட்டுள்ளது.

**ஒலிகோபோலி:** ஒலிகோபோலி என்ற சொல் இரண்டு கிரேக்க சொற்களிலிருந்து பெறப்பட்டது. ஒலிகோய் என்றால் சில மற்றும் பாலி என்றால் கட்டுப்பாடு. எனவே ஒலிகோபோலி என்பது ஒரு சந்தை வடிவத்தைக் குறிக்கிறது. இதில் ஒரே மாதிரியான அல்லது வேறுபட்ட தயாரிப்புகளில் சில விற்பனையாளர்கள் உள்ளதைக் குறிக்கிறது.

**நுகர்வோர் என்பவர் யார்?**

நுகர்வோர் என்பவர் ஒரு பொருளை வாங்குதல் அல்லது ஒரு சேவையைப் பெறுவதற்காக அது அவரது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக அல்லது சுய வேலைவாய்ப்பு மூலம் தனது வாழ்வாதாரத்தை பெருக்கிக்கொள்பவர் ஆவார்.

**நுகர்வோர் என்பவர்:**

- ❖ பணம் செலுத்தியவர்
- ❖ வாக்குறுதி பெற்றவர்
- ❖ ஓரளவு பணம் செலுத்தியவர் மற்றும் ஓரளவு வாக்குறுதி பெற்றவர்

நுகர்வோரின் ஒப்புதலுடன் இத்தகைய பயன்பாடு செயல்படும்போது. அத்தகைய பொருள்கள்/சேவைகளின் பயனாளிகளும் இதில் அடங்கும்.

**2. நுகர்வோர் இல்லாதவர் யார்?**

ஒரு நபர் எப்போது நுகர்வோராய் இருக்கவியலாது:

- ❖ எந்தவொரு பொருளையோ வாங்குகிறது அல்லது எந்தவொரு சேவையையோ இலவசமாகப் பெறுகின்ற போது,
- ❖ வணிக நோக்கத்திற்காக ஒரு சேவையை அமர்த்துவது அல்லது பொருளை வாங்குவது

ஒப்பந்த அடிப்படையில் சேவையைப் பெறுவது.

**நியாயமற்ற வர்த்தக நடைமுறை என்றால் என்ன?**

“நியாயமற்ற வர்த்தக நடைமுறை” என்பது ஒரு வர்த்தக நடைமுறை அல்லது எந்த ஒரு பொருள் அல்லது சேவைகளின் விற்பனை, பயன்பாடு அல்லது விநியோகத்தை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக, நியாயமற்ற துறையை அல்லது நியாயமற்ற அல்லது ஏமாற்றும் நடைமுறை பின்பற்றப்படுவது. இந்த நடைமறைகளில் சில பின்வருமாறு:

- தவறான பிரதிநிதித்துவம்
- பொருள்கள் மற்றும் சேவைகள் தரத்தில் இல்லாத போது:
- உபயோகித்தப் பொருள், புதுப்பிக்கப்பட்ட பொருள்கள் புதியதுபோல விற்கப்படுவது.
- பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு உரிமை அல்லது நன்மை இல்லாதபோது:
- தாயாரிப்புகள;/சேவைகளுக்கு உரிமை கோரப்பட்ட உத்திரவாதம்/ பொறுப்புறுதி இல்லாபோது.
- பேரம் பேசும் விலையில் விற்பனை செய்வதற்கான தவறான விளம்பரம்.

- பரிசுகளை, பரிசு போன்றவற்றை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கான எந்த நோக்கமும் இல்லாமல் அவற்றை வழங்குவதற்காக.
- தகுதிவாய்ந்த அதிகாரத்தால் அமைக்கப்பட்ட பாதுகாப்புத் தரங்களுக்குள் வராத பொருட்களை விற்பனை செய்தல்.
- அதிக விலைகளை ஏற்றும் வகையில் அதிக எண்ணிக்கையில் உற்பத்தி செய்யப்படும் அல்லது ஒரே மாதிரியான பொருட்களின் விலையை உயர்த்தும் நோக்கத்துடன் பதுக்கல் அல்லது பொருட்களை அழித்தல்.
- மோசமான பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது வழங்குதல் அல்லது சேவைகளை வழங்குவதில் ஏமாற்றும் நடைமுறைகளை பின்பற்றுவது.

விற்பனை செய்யப்பட்ட பொருள் திரும்பப் பெறப்பட மாட்டாது (அல்லது) "பொருட்களை மாற்ற இயலாது" (அல்லது) "எந்தச் சூழலிலும் பணம் திருப்பித்தரப்பட மாட்டாது" - இது முறையற்ற வணிக நடவடிக்கை மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைக்கு ஏற்றதல்ல.

**நுகர்வோர் பாதுகாப்பு:**

நுகர்வோர் பாதுகாப்பு என்பது நுகர்வோரின் உரிமைகள், நியாயமான வர்த்தகப் போட்டி மற்றும் துல்லியமான தகவல்கள் சந்தையில் இருக்க வேண்டும் என்பதற்காக இயற்றப்பட்ட சட்டங்களின் குழு ஆகும். நியாயமற்ற நடைமுறைகளில் ஈடுபடும் வணிகத்தை போட்டியாளர்களுக்கு மேலாகப் பெறுவதைத் தடுக்க சட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவை சமூகத்தில் மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூடுதல் பாதுகாப்பையும் வழங்கும். நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்கள் என்பது நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட அரசாங்க வழிமுறைகளின் ஒரு வடிவமாகும். எடுத்துக்காட்டாக, தயாரிப்புகள் பற்றிய விரிவான தகவல்களை வெளியிட ஒரு அரசாங்கத்திற்கு வணிகங்கள் தேவைப்படலாம். குறிப்பாக பொது சுகாதாரத்தின் பாதுகாப்பு என்பது உணவு போன்ற பிரச்சினைகளை உள்ளடக்கியதாகும்.

நுகர்வோர் பாதுகாப்பு என்பது நுகர்வோர் அமைப்புகளின் யோசனைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது நுகர்வோர் சந்தையின் சிறந்த தேர்வுகளை அனைவரும் எடுக்க உதவுகிறது. மற்றும் நுகர்வோர் புகார்களுக்கு நடவடிக்கை எடுக்க உதவுகிறது. நுகர்வோர் பாதுகாப்பை ஊக்குவிக்கும் பிற நிறுவனங்களில் அரசு நிறுவனங்கள் மற்றும் சுய ஒழுங்குபடுத்தும் வணிக நிறுவனங்கள் அடங்கும்.

எடுத்துக்காட்டு: இந்தியாவில் தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் (TRAI), மற்றும் ஆயள் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் இந்தியாவின் மேம்பாட்டு ஆணையம் (IRDAI).

**நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் - 1986**

இந்திய நாடாளுமன்றத்தில் 1986-ஆம் ஆண்டு நுகர்வோரின் நலன்களைப் பாதுகாப்பதற்காக இயற்றப்பட்ட சட்டம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் ஆகும். நுகர்வோர் குறைகளைத் தீர்ப்பதற்காக நுகர்வோர் கவுன்சில்கள் மற்றும் பிற அதிகாரிகள் நுகர்வோர் தொடர்புடையவர்களோடு நுகர்வோருக்கு உதவும் வகையில் உள்ளது. இச்சட்டம் அக்டோபர் 1986இல் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு 1986 டிசம்பர் 24 முதல் இந்தியாவில் நடைமுறைக்கு வந்தது.

**எட்டு அடிப்படை நுகர்வோர் உரிமைகள்**

1. அடிப்படைத் தேவைகளுக்கான உரிமை
2. பாதுகாப்புக்கான உரிமை
3. தகவல் அறியும் உரிமை
4. தேர்ந்தெடுக்கும் உரிமை
5. பிரதிநிதித்துவ உரிமை
6. குறைதீர்க்கும் உரிமை
7. நுகர்வோர் கல்வி மற்றும் உரிமை
8. தூய்மையான சுற்றுப்புறச் சூழலைப் பெறுவதற்கான உரிமை.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் ‘‘நுகர்வோருக்கான மகா சாசனம்’’ என்று அழைக்கப்படுகிறது. இச்சட்டத்தின் வாயிலாக நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள், பொருட்களின் குறைபாடுகள் மற்றும் சேவைகளில் உள்ள குறைகளை சரிபார்க்க நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் அவசியமாகிறது. இந்தியா முழுவதும் நுகர்வோர் மன்றங்கள் மற்றும் மேல்முறையீட்டு நீதி மன்றங்களின் பரவலான வலையமைப்பை நிறுவ வழிவகுத்துள்ளது. வணிக அமைப்புகள் நுகர்வோர் புகார்களை எவ்வாறு அணுகுகின்றன என்பதையும், நுகர்வோருக்கான அதிகாரங்களை மேம்படுத்தவும் இச்சட்டம் கணிசமாக உயர்த்தியுள்ளது.

நுகர்வோர் விழிப்பணர்வை அதிகரிக்க தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் நுகர்வோர் பாதுகாப்பு சபைகள் அமைக்கப்பட்டுள்ளன. நுகர்வோரின் விழிப்பணர்வை அதிகரிக்க பல்வேறு நுகர்வோர் அமைப்புகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அதிக அளவில் செயல்பட வேண்டும்.

**நுகர்வோர் குறை தீர்க்கும் முகவர்**

தேசிய நுகர்வோர் குறை தீர் ஆணையம் மத்திய அரசால் நிறுவப்பட்டது. இவ்வாணையம் 1 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புமிக்க நுகர்வோர் குறைகளை தீர்க்க முயல்கிறது. இது மத்திய நுகர்வோர் நீதிமன்றம் ஆகும்.

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மாநில அரசால் நிறுவப்பட்டது. இவ்வாணையம் 1 கோடி ரூபாய்க்கும் குறைவான மதிப்புமிக்க நுகர்வோர் குறைகளை மாநில அளவிலான தீர்க்கும் நீதிமன்றமாகும்.

மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாநில அரசால் நிறுவப்பட்டு அது மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் எனவும் அழைக்கப்படுகிறது. மாநில அரசாங்கம் ஒரு மாவட்டத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மவட்ட மன்றங்களை நிறவலாம். இது மாவட்ட அளவிலான நீதிமன்றமாகும். இது ரூ. 20 லட்சம் மதிப்புமிக்க அளவிலான குறைகளை தீர்க்கும் மாவட்ட நீதிமன்றமாகும்.

**நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் - 2019**

இந்திய பாராளுமன்றத்தில் ஆகஸ்ட் 2019ஆம் ஆண்டு ஒரு மைல்கல் என்று அழைக்கப்படும் நுகர்வோர் பாதுகாப்பு மசோதோ, 2019-இல் நிறைவேற்றப்பட்டது. இந்த நவீன தொழில்நுட்பகாலத்தில் நுகர்வோர்களின் குறைகளை குறித்த நேரத்திலும், பயனுள்ள நிர்வாகத்தையும், நியாயமான தீர்வையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டது. புதிய நுர்வோர் பாதுகாப்புச் சட்ட ம் மத்திய அரசு அறிவிக்கும் தேதியில் இருந்து நடைமுறைக்கு வரும். புதிய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மத்திய அரசு அறிவிக்கும் தேதியில் இருந்து நடைமுறைக்கு வரும். புதிய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் முப்பது வருடங்களுக்கு மேலான சட்டமாகும். பழைய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986-இல் மாற்றங்களை ஏற்படுத்த முற்படுகிறது.

**புதிய சட்டத்தின் சிறப்பும்சங்கள்**

**1. இ - வணிக பரிவர்த்தனைகள்:**

புதிய சட்டம் நுகர்வோர் என்ற வரையறையை விரிவுபடுத்தியுள்ளது. இணையத்தின் நேர்முகக் கட்டுப்பாட்டில் இல்லாத அல்லது இணையத்தின் இயக்க கட்டுப்பாட்டில் உள்ள பரிவர்த்தனைகள், மின்னணு வழிமுறைகள், தொலைநோக்கி, நேரடி விற்பனை அல்லது பல நிலை சந்தைப்படுத்துதல் மூலம் எந்தவொரு பொருளையும் வாங்கும் எந்தவொரு நபரும் இப்போது அமைப்பில் உள்ளனர்.

**2. பணவியல் அதிகார வரம்பை மேம்படுத்துதல்:**

திருத்தப்பட்ட பணவியல் அதிகார வரம்பு: புதிய சட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட பண வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டன. அதன்படி, மாவட்ட நுகர்வோர் நீதி மன்றம் இப்போது நுகர்வோர் புகார்களை ஏற்றுக்கொள்ள முடியும். அங்கு செலுத்தப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் மதிப்பு 10,000,000 ரூபாய்க்கு மிகாமல் இருக்கும். என்றால் மாநில நுகர்வோர் ஆணையம் விசாரிக்க

முடியும். அதுவே 10,000,000 ரூபாய்க்கு மேல் மதிப்பு இருக்குமானால் அத்தகையவற்றை தேசிய நுகர்வோர் ஆணையம் விசாரிக்கும்.

**3. புகார்களை இ-தாக்கல் செய்தல்:**

புதிய சட்டம் நுகர்வோருக்கு மின்னணு முறையில் புகார்களைத் தாக்கல் செய்வதற்கும் ஒளிகாட்சித் கலந்தாய்வுக் கூடம் (VideoConferencing) மூலம் வாதிகளைக் கேட்பதற்கும் அல்லது ஆய்வு செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

**4. மத்திய நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரத்தை நிறுவுதல்:**

புதிய சட்டம் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் என அழைக்கப்படும். ஒரு ஒழுங்குமுறை அதிகாரத்தை நிறுவுவதற்கு முன்மொழிகிறது. மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் என அழைக்கப்படும் ஒரு ஒழுங்குமுறை அதிகாரத்தை நிறுவுவதற்கு முன்மொழிகிறது. மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்திற்கு ஒரு தலைமை இயக்குநர் பாதுகாப்பு ஆணையத்திற்கு ஒரு தலைமை இயக்குநர் தலைமையில் ஒரு விசாரணைப் பிரிவு இருக்கும் இது நுகர்வோர் சட்ட மீறல்கள் குறித்து விசாரனை அல்லது விசாரணையை நடத்தக்கூடும்.

**5. நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள்:**

புதிய சட்டம் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளுக்கு ஒரு குறிப்பிட்ட பரந்த வரையறையை அறிமுகப்படுத்துகிறது. இது வேறு எந்த சட்டத்தின் விதிகளின்படி வெளிப்படுத்தப்பட்டுவிட்டால், நுகர்வோர் நம்பிக்கையுடன் வழங்கிய தனிப்பட்ட தகவல்களைப் பகிர்வதும் அடங்கும்.

**6. தவறான விளம்பரத்திற்கு அபராதம்:**

தவறான விளம்பரத்திற்காக மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் ஒரு உற்பத்தியாளர் அல்லது ஒப்புதல் அளிப்பவருக்கு 1,000,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கலாம். அடுத்தடுத்த குற்றத்தில் அபராதம் 5,000,000 ரூபாய் மற்றும் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். தவறான விளம்பரத்திற்கு ஒப்புதல் அளிப்பவர் குறிப்பிட்ட தயாரிப்பு அல்லது சேவையை ஒரு வருடம் வரை ஒப்புதல் அளிப்பதை மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் தடை செய்யலாம். ஒவ்வொரு அடுத்தடுத்த குற்றத்திற்கும் தடைக்காலம் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கப்படலாம்.

**இந்தியாவில் நுகர்வோர் நீதிமன்றங்கள்:**

**தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் (NCDRC):** ஒரு தேசிய அளவிலான நீதிமன்றம் இந்தியா முழுவதற்கும் குறைதீர் ஆணையமாக செயல்படுகிறது. இழப்பீடு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இருந்தால் தேசிய ஆணையம் நுகர்வோர் நீதிமன்றங்களின் உச்ச அமைப்பாகும். இவ்வகை நுகர்வோர் நீதிமன்றங்கள் மிக உயர்ந்த மேல்முறையீட்டு நீதிமன்றமாகும். தேசிய நுகர்வோர் குறைதீர் நிவாரண ஆணையம் இந்தியாவில் ஒரு பகுதியான நீதி ஆணையமாகும். இது 1986 ஆம் ஆண்டில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் 1988-இல் அமைக்கப்பட்டது. அதன் தலைமை அலுவலகம் புது டெல்லியில் உள்ளது. இந்த ஆணையம் அதனை இந்தியாவில் உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியின் தலைமையில் செயல்படுகிறது.

**மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் (SCDRC):** மாநில அளவில் ஒரு நீதிமன்றம் செயல்படுகிறது. இழப்பீடு கோரப்பட்ட வழங்குகள் 20 லட்சத்திற்கும் மேல் இருக்குமானால் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் அதனை ஏற்கிறது. மாவட்ட ஆணையத்தின் மேல்முறையீட்டு அதிகார வரம்பை மாநில ஆணையம் கொண்டுள்ளது.

**மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் (DCDRC):** மாவட்ட நுகர்வோர் குறைதீர் நீதிமன்றம் இழப்பீடு 20 லட்சம் வரை விசாரிக்க அனுமதிக்கிறது. மாவட்ட அளவிலான நீதிமன்றம் மாவட்ட அளவில் செயல்படுகிறது.

**முக்கியமான சட்டங்கள்**

- நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986
- சட்டஅளவீட்டு சட்டம், 2009

- இந்திய தர நிர்ணய பணியகம், 1986
- அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955
- கறுப்பு சந்தைப்படுத்துதல் தடுப்பு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் பராமரிப்பு
- பொருட்களின் சட்டம், 1980

## 8 ம் வகுப்பு குடிமையியல்
## அலகு– 1 மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது

### அறிமுகம்

- நமது நாட்டில் மத்திய அரசு, மாநில அரசு என்ற இரண்டு வகை அரசாங்கங்கள் நடைமுறையில் உள்ளன. இந்தியாவில் 29 மாநில அரசாங்கங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொரு மாநிலமும் தனது நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ள தனக்கென ஒரு அரசைக் கொண்டுள்ளது. அந்த வகையில் ஒவ்வொரு மாநிலமும் நிர்வாகம், சட்டமன்றம் மற்றும் நீதித்துறையை கொண்டுள்ளது. மாநில நிர்வாகம் மாநில ஆளுநர் மற்றும் முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவையால் மேற்கொள்ளப்படுகிறது. மாநில ஆளுநர் சட்டமன்றத்தின் ஒரு அங்கமாகத் திகழ்கிறார்.

### மாநில நிர்வாகம்
### ஆளுநர்

- மாநில அரசின் தலைவராக மாநில ஆளுநர் இருப்பார் என இந்திய அரசியலமைப்பு சட்டம் குறிப்பிடுகிறது. இந்தியக் குடியரசுத் தலைவரால் ஆளுநர் நியமிக்கப்படுகிறார். இவர் மாநில நிர்வாகத்தின் தலைவராக இருக்கிறார். அவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். எனினும் பதவிக்காலம் முடியும் முன்பாகவே அவரை அப்பதவியிலிருந்து குடியரசுத் தலைவர் நீக்கலாம். அல்லது தானாகவே தனது பதவியை ஆளுநர் ராஜினாமா செய்யலாம். ஆளுநரின் பதவிக்காலம் நீட்டிக்கப்படலாம் அல்லது வேறு மாநிலத்திற்குப் பணியிட மாற்றம் செய்யப்படலாம். ஆனால் மாநில அரசாங்கம் ஆளுநரை பதவியிலிருந்து நீக்க இயலாது.

| |
|---|
| குடியரசுத் தலைவர் மாநில ஆளுநரை நியமிக்கும் போது மத்திய அமைச்சரவையின் ஆலோசனையின்படி செயல்படுகிறார். மேலும் தொடர்புடைய மாநில அரசையும் கலந்தாலோசிக்கிறார். பொதுவாக ஒருவர் ஆளுநராக அவரது சொந்த மாநில்தில் நியமிக்கப்படுவது இல்லை. |

- மாநில ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு ஒருவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். 35 வயது நிரம்பியவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் அவர் பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தில் உறுப்பினராக இருத்தல் கூடாது. இது தவிர ஆதாயம் தரும் எந்த ஒரு பதவியையும் அவர் வகித்தல் கூடாது.

### அதிகாரம் மற்றும் பணிகள்:

- ஆளுநர் ஒரு மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். மாநில அரசின் நிர்வாக அதிகாரங்கள் ஆளுநரிடம் உள்ளன. மாநில அரசாங்கத்தின் அனைத்து நிர்வாக செயல்களும் ஆளுநரின் பெயரால் மேற்கொள்ளப்படுகின்றன. ஆளுநர் முதலமைச்சரையும் அவரது ஆலோசனையின் பேரில் ஏனைய அமைச்சர்களையும் நியமிக்கிறார்.

- மாநில அரசின் தலைமை வழக்கறிஞர், மாநில அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்வதோடு சில இதர நியமனங்களையும் மேற்கொள்கிறார்.

- ஆளுநரின் அறிக்கையின் படி குடியரசு தலைவர் அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 356 ஐ பயன்படுத்தி ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்படுத்துகிறார். மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்களின் வேந்தராக ஆளுநர் செயல்படுகிறார்.

- மாநில சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும், ஒத்தி வைக்கவும் அதிகாரம் கொண்டுள்ளதோடு மட்டுமல்லாமல் சட்டமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தையும் கொண்டுள்ளார்.

- ஆளுநரின் ஒப்புதலுக்குப் பின்னரே, பண மசோதாவைச் சட்டமன்றத்தில் கொண்டுவர முடியும். சட்டமன்ற கூட்டம் நடைபெறாத போது ஆளுநர் அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்கிறார்.

- சட்டமன்றத்திற்கு ஒரு ஆங்கிலோ இந்திய உறுப்பினரை அவர்கள் போதிய அளவு பிரதிநிதித்துவம் பெறாதபோது நியமனம் செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார். மாநில சட்ட மேலவைக்கு அறிவியல், இலக்கியம், கலை, சமூக சேவை, கூட்டுறவு இயக்கம் ஆகிய துறைகளில் சிறப்பாகப் பங்காற்றிய அறிஞர்களில், ஆறில் ஒரு பங்கு அளவிற்கு பிரதிநிதித்துவ அடிப்படையில் நியமிக்கிறார்.

- மாநில அரசாங்கத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை ஆளுநரின் ஒப்புதலுடன் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பண மசோதா உள்ளிட்ட அனைத்து மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளிக்கிறார். மாநில அரசின் எதிர்பாரா செலவின நிதி ஆளுநரின் கட்டுப்பாட்டில் மட்டுமே இருக்கும்.

**ஆளுநரின் நிலை:**

- மாநில ஆளுநர் குடியரசுத் தலைவரைப் போன்று மாநிலத்தில் பெயரளவு நிர்வாகத் தலைவராக உள்ளார். எனினும் மாநில ஆளுநர் எப்போதும் பெயரளவு தலைவராக இருப்பது இல்லை. அவர் தனது அதிகாரங்களை குறிப்பிட்ட சில நேர்வுகளில் செயல்படுத்துகிறார். அவர் மத்திய அரசின் ஒரு முகவராக மாநிலத்தில் செயல்படுகிறார் எனவே இவர் மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஆகியவற்றிற்கிடையேயான உறவுகளைப் பராமரிப்பதற்குப் பொறுப்பு வாய்ந்தவர் ஆவார். ஆளுநர் முக்கியமான தருணங்களில் அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்குகிறார். மாநிலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான ஆளுநரின் அறிக்கையின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் மாநிலத்தில் நெருக்கடி நிலையை அறிவிக்கிறார். ஆளுநர் விருப்புரிமை அதிகாரத்தை செயல்படுத்தும் போது தன்னிச்சையான முடிவுகளை எடுக்கிறார். அவர் அமைச்சரவையிடமிருந்து அரசாங்கத்தின் செயல்பாடுகள் குறித்த தகவல்களைக் கோரிப்பெறலாம்.

**முதலமைச்சர்**

- ஆளுநர் மாநில சட்டமன்றத்தில் பெரும்பான்மை கொண்டுள்ள கட்சியின் தலைவரை மாநில முதலமைச்சராக நியமிக்கிறார். முதலமைச்சர் அமைச்சரவையின் தலைவர் ஆவார். முதலமைச்சரின் பதவிக்காலம் நிலையான ஒன்று அல்ல. அவர் சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் உள்ளவரை முதலமைச்சர் பதவியில் நீடிக்கலாம். சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை இழக்கும்போது அவர் பதவி விலகுதல் வேண்டும். முதலமைச்சர் பதவி விலகுதல் என்பது ஒட்டுமொத்த அமைச்சரவையும் பதவி விலகுதலைக் குறிக்கும்.

- முதலமைச்சர் மாநில சட்டமன்றத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். முதலமைச்சராக பதவி ஏற்கும்போது உறுப்பினராக இல்லாவிட்டால் 6 மாதத்திற்குள் சட்டமன்றத்தில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

**முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்:**

- முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். மாநில அரசாங்கத்தின் பல்வேறு முக்கிய முடிவுகள் அவரது தலைமையின் கீழ் எடுக்கப்படுகின்றன.

- மாநில முதலமைச்சர், அமைச்சரவையை, உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார். முதலமைச்சரின் ஆலோசனையின் பெயரில் அமைச்சர்களை ஆளுநர் நியமிக்கிறார்.

- பல்வேறு துறைகளை கண்காணித்து ஆலோசனை வழங்குகிறார். மேலும் அவர் பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.
- முதலமைச்சர் மாநில அரசாங்கத்தின் கொள்கைகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார். அவர் மாநில அரசின் கொள்கைகள் மக்களின் நலனுக்கு எதிராக இல்லாததை உறுதி செய்கிறார். மாநில அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளில் அவரது முடிவே இறுதியாக இருக்கும்.
- மாநில அரசாங்கத்தின் உயர் பதவிகளில் நியமனம் செய்யும் முக்கிய அதிகாரத்தைக் கொண்டுள்ளார். முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின் ஆலோசனையின்படியே ஆளுநர் பல்வேறு உயர் அதிகாரிகளை நியமிக்கிறார்.

**மாநில சட்டமன்றம்:**

- இந்தியாவில் மாநில சட்டமன்றம் என்பது ஆளுநரையும் ஒன்று அல்லது இரண்டு அவைகளையும் கொண்டிருக்கும். மேலவை என்பது சட்டமன்ற மேலவை எனவும் கீழவை என்பது சட்டமன்ற பேரவை எனவும் அழைக்கப்படுகிறது.

**ஈரவை சட்டமன்றம் கொண்ட மாநிலங்கள்:**

**சட்டமன்ற மேலவை:**

- ஒரு மாநிலத்தின் சட்ட மன்ற மேலவையானது நாற்பது உறுப்பினர்களுக்குக் குறையாமலும், அம்மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும் என அரசியலமைப்புச் சட்டம் குறிப்பிடுகிறது. இதன் உறுப்பினர்கள் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
    - மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மாவட்ட பஞ்சாயத்து மற்றும் நகராட்சி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
    - மேலும் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
    - பன்னிரண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
    - மற்றொரு பன்னிரண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இடைநிலை பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
    - ஆறில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மாநில ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர்.
    - சட்டமன்ற மேலவை ஒரு நிலையான அவையாகும். இதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒய்வு பெறுவர்.

- அக்காலிப் பணியிடங்களுக்கு தேர்தல் நடைபெறும். உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் ஆகும். உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒருவர் இந்தியக் குடிமகனாகவும், 30 வயது நிரம்பியவராகவும் இருத்தல் வேண்டும். இவர் மாநில சட்டமன்றத்திலும் அல்லது பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் உறுப்பினராக இருத்தல் கூடாது. தலைமை அலுவலராக அவைத்தலைவர் இருப்பார். அவைத்தலைவர் இல்லாதபோது துணைத் தலைவர் அவையை நடத்தும் பொறுப்பினை கொண்டிருப்பார். சட்டமன்ற மேலவையின் தலைவர் மற்றும் துணைத் தலைவரை அவையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்றனர்.

**சட்டமன்றப் பேரவை:**

- மாநில அரசாங்கத்தின் சட்டங்களை உருவாக்குபவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் என அழைக்கப்படுகின்றனர். (MLA) இவர்கள் பல்வேறு சட்டமன்ற தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சட்டமன்ற தேர்தலுக்காக, மாநில பல்வேறு தொகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. இவை சட்டமன்ற தொகுதிகள் என அழைக்கப்படுகின்றன. ஒரு சட்டமன்ற தொகுதி ஒரு லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலிருந்தும் ஒரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**சட்டமன்ற பேரவைக்கான தேர்தல்**

- சட்டமன்ற பேரவைக்கான தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன. இக்கட்சிகள் ஒவ்வொரு தொகுதிக்கும் தமது வேட்பாளர்களை நியமிக்கின்றன. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் மக்களிடம் தமக்கு வாக்களிக்குமாறு கோருகிறார். சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் ஒருவர் 25 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும் ஒருவர் ஒரே சமயத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொகுதிகளில் போட்டியிடலாம். எந்த கட்சியையும் சாராத ஒருவரும் தேர்தலில் போட்டியிடலாம். அவ்வாறு போட்டியிடும் வேட்பாளர் சுயேட்சை வேட்பாளர் என அழைக்கப்படுகிறார். ஒவ்வொரு கட்சியும் தனக்கென ஒரு சின்னத்தை கொண்டிருக்கும். சுயேட்சை வேட்பாளர்களுக்கும் சின்னம் வழங்கப்படும். சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒரு சட்டமன்ற தொகுதியில் வசிக்கும் 18 வயது நிரம்பிய அனைவரும் சட்டமன்ற தேர்தலில் வாக்களிக்கலாம்.

- அரசியலமைப்பின்படி ஒரு மாநில சட்டமன்றத்தில் 500 உறுப்பினர்களுக்கு மேலாகவும் 60 உறுப்பினர்களுக்கு குறைவாகவும் இருத்தல் கூடாது அட்டவணைப் பிரிவினர், பழங்குடியினருக்கு சடடமன்றத்தில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மாநில ஆளுநர் சட்டமன்றத்திற்கு ஒரு ஆங்கிலோ இந்திய உறுப்பினரை நியமனம் செய்கிறார். சட்டமன்ற உறுப்பினர்கள் ஐந்தாண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால் மாநில ஆளுநர், சட்டமன்றத்தின் பதவிக்காலம் முடிவதற்கு முன்பாகவே அதனை கலைத்து புதிதாக தேர்தல் நடத்த அழைப்பு விடுக்கலாம். சட்டமன்ற கூட்டத்திற்கு சபாநாயகர் தலைமை ஏற்கிறார். இவர் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். சபாநாயகர் இல்லாத நேர்வுகளில் துணை சபாநாயகர் சட்டமன்ற கூட்டத்திற்கு தலைமை ஏற்கிறார்.

**மாநில அமைச்சரவை**

- தேர்தலில் பெரும்பான்மை பெரும் கட்சியின் தலைவர் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்படுகிறார். தமிழ்நாட்டில் 234 சட்டமன்ற தொகுதிகளில் வெற்றி பெற்ற கட்சி ஆளுநரால் ஆட்சி அமைக்க அழைக்கப்படுகிறது. முதலமைச்சர் (இவரும் ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருத்தல் வேண்டும்) அவரது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து, அமைச்சர்களை தேர்வு செய்கிறார். இவ்வாறு முதலமைச்சர் மற்றும் அவரது தலைமையிலான பல்வேறு துறை அமைச்சர்களும் கொண்ட அமைப்பு மாநில அரசாங்கம் என அழைக்கப்படுகிறது. ஆகவே தேர்தலில் பெரும்பான்மை பெறும் கட்சி ஆட்சி அமைக்கும் எனக் கூறலாம்.

**மாநில அரசாங்கத்தின் செயல்பாடுகள்:**

- சட்டமன்றத்திற்கு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அதன் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல் வேண்டும். சட்டமன்றம் ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறை கூடும். மாநிலத்திற்கான சட்டங்களை இயற்றுவது சட்டமன்றத்தின் முக்கிய பணி ஆகும். சட்டமன்றம் மாநிலப் பட்டியல் மற்றும் மத்தியப் பட்டியலில் உள்ள துறைகள் தொடர்பாக சட்டத்தை இயற்றலாம். எனினும் நெருக்கடி நிலை நடைமுறையில் உள்ளபோது சட்டமன்றம் தனது சட்டமியற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்த இயலாது.

- மாநில சட்டமன்றம் அமைச்சரவையின் மீது கட்டுப்பாட்டினை செலுத்துகிறது. மாநில அமைச்சரவை சட்டமன்றத்திற்கு பொறுப்புள்ளதாகவும் மற்றும் பதில் அளிக்கவும் கடமைப்பட்டுள்ளது. அமைச்சரவையின் செயல்பாடுகளில் திருப்தி ஏற்படாவிட்டால் மாநில சட்டமன்றத்தில் ஒரு நம்பிக்கை இல்லா தீர்மானத்தை இயற்றி அமைச்சரவையை நீக்கம் செய்திடலாம். மாநில சட்டமன்றம் ஆனது மாநிலத்தின் நிதியைக் கட்டுப்படுத்துகிறது. நிதி மசோதாவை சட்டமன்றத்தில் மட்டுமே கொண்டுவர இயலும். சட்டமன்றத்தின் அனுமதி இல்லாமல் மாநில அரசாங்கம் வரியினை விதிக்கவோ, அதிகரிக்கவோ, குறைக்கவோ, விலகிக் கொள்ளவோ இயலாது. சட்டமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் பங்கேற்கின்றனர். மாநிலங்களவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் சட்டமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் பங்கு கொள்கின்றனர். அரசியலமைப்பைத் திருத்தும் சில நேர்வுகளில் சட்டமன்றம் பங்கு வகிக்கிறது. எனவே அரசாங்கமானது சட்டத்தை உருவாக்குதல். சட்டத்தை நடைமுறைப்படுத்துதல், நீதியை உறுதி செய்தல் ஆகிய மூன்று அடிப்படை பணிகளைக் கொண்டுள்ளது.

**மாநில அரசாங்கத்தில் சட்டங்கள்: எவ்வாறு இயற்றப்படுகின்றன?**

- நாட்டு மக்களுக்காக பல்வேறு வகையான விதிகள் மற்றும் சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. உதாரணமாக நீங்கள் ஒரு துப்பாக்கியை உரிமம் இல்லாமல் வைத்துக் கொள்ள இயலாது அல்லது சட்டப்படி ஒரு பெண் 18 வயதிற்கு முன்பாகவும் அல்லது ஒரு ஆண் 21 வயதிற்கு முன்பாகவும் திருமணம் செய்து கொள்ள இயலாது. இத்தகைய விதிகளும் சட்டங்களும் சாதாரணமாக இயற்றப்பட்டவை அல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் இதுபோன்ற சட்டங்களை உருவாக்குவதற்கு முன்பாகக் கவனமாக சிந்தித்து உள்ளது. இவை போன்ற பல்வேறு சட்டங்கள் மாநில மற்றும் மத்திய அரசாங்கத்தால் இயற்றப்படுகின்றன.

- சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் மாநிலத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகளான பொதுப்பணிகள், கல்வி, சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகியவை பற்றி விவாதிக்கின்றனர். சட்டமன்ற

உறுப்பினர்களுக்கான துறைகளின் செயல்பாடுகளை தெரிந்துகொள்ள கேள்விகளை எழுப்பலாம் இதற்கு அந்தத்துறை சார்ந்த அமைச்சர் விடையளிக்க வேண்டும். சில நிகழ்வுகள் குறித்து சட்டமன்றம் சட்டங்களை இயற்றுகிறது. சட்டம் இயற்றும் முறை பின்வருமாறு.

**சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்**

- சட்டங்களை நடைமுறைப்படுத்துவது மாநில அமைச்சரவையின் பணியாகும். தமிழ்நாடு சட்டமன்றம் சென்னையில் அமைந்துள்ளது. ஒரு மாநிலத்தில் சட்டமன்றம் மற்றும் அமைச்சரவை பொதுவாக எங்கு செயல்படுகிறதோ அதுவே மாநிலத்தின் தலைநகரம் ஆகும்.

| |
|---|
| மாநில சட்டமன்றமும் சாதாரண அல்லது பண மசோதாக்களை நிறைவேற்றுவதில் பாராளுமன்றம் பின்பற்றும் நடைமுறைகளையே பின்பற்றுகிறது. சட்டமன்றபேரவை சட்டமன்ற மேலவையைக் காட்டிலும் அதிக அதிகாரம் கொண்டதாகும். |

- சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்த மாவட்ட ஆட்சியர்கள். வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வருவாய் அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், காவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மருத்துவர்கள் என பல லட்சக்கணக்கான பணியாளர்கள் மாநில அரசாங்கத்தால் பணியமர்த்தப்பட்டிருக்கின்றனர். அவ்வகையான அலுவலர்களுக்கு மாநில அரசாங்கம் ஊதியம் வழங்குகிறது. இவர்கள் மாநில அரசின் ஆணைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

**மாநிலத்தின் நீதித்துறை :**
**உயர்நீதிமன்றம்**

- மாநிலத்தில் உயரிய நீதி அமைப்பாக உயர் நீதிமன்றம் விளங்குகிறது. அரசியலமைப்பின் படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு உயர் நீதிமன்றம் இருக்கும். எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்களுக்கு பொதுவான ஒரு உயர்நீதிமன்றமும் இருக்கலாம். மாநில உயர்நீதிமன்றமும் ஒரு தலைமை நீதிபதியையும், குடியரசுத் தலைவர் தேவைக்கு ஏற்ப அவ்வப்போது நியமனம் செய்யும் இதர நீதிபதிகளையும் கொண்டிருக்கும். உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நிலையாகவும் ஒரே மாதிரியாகவும் இருப்பதில்லை. குடியரசுத்தலைவர் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியையும் மாநில ஆளுநரையும் கலந்தாலோசித்து உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை நியமனம் செய்கிறார்.
- உயர்நீதிமன்றத்தின் நீதிபதி பின்வரும் தகுதிகளை கட்டாயம் கொண்டுருத்தல் வேண்டும்.
  - இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
  - இந்தியாவில் பத்தாண்டு காலம் நீதித்துறை அலுவலராக பணியாற்றி இருக்க வேண்டும்.
  - ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயர் நீதிமன்றங்களில் வழக்குரைஞராக குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
  - உயர் நீதிமன்ற நீதிபதி 62 வயது வரை அப்பதவியில் இருப்பார். உயர் நீதிமன்ற நீதிபதி நிரூபிக்கப்பட்ட தவறான நடத்தை மற்றும் திறமை இன்மை ஆகியவற்றின் அடிப்படையில் உச்சநீதிமன்ற நீதிபதிகளை நீக்குவது போன்று நீக்கப்படலாம்.

**உயர்நீதிமன்றத்தின் அதிகாரம் மற்றும் பணிகள்:**

- அடிப்படை உரிமைகள் மற்றும் இதர நோக்கங்களை வலியுறுத்த உயர்நீதிமன்றம் ஆட்கொண்டர்வு நீதிப் பேராணை, தகுதி முறை வினவும் நீதிப்பேராணை, தடை உறுத்தும் நீதிப்போராணை, கட்டளையிடும் நீதிப்பேராணை மற்றும் ஆவணங்களை தாக்கல் செய்ய வலியுறுத்தும் நீதிப் பேராணை ஆகியவற்றைப் பிறப்பிக்கின்றன.
- ஒவ்வொரு உயர்நீதிமன்றமும் தனது அதிகார எல்லைக்குள் உள்ள ராணுவ நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் நீங்கலாக அனைத்து சார் நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களை கண்காணிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.
- சார் நிலை நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள உள்ள ஒரு வழக்கில் அதில் சட்ட முகாந்திரம் உள்ளது என உயர்நீதிமன்றம் திருப்தியுறும் போது இவ்வழக்கினை எடுத்து தானே முடிவு செய்யலாம்.

- உயர் நீதிமன்றம் மாநிலத்தில் உள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துகிறது.
- உயர் நீதிமன்றம் உச்ச நீதிமன்றத்தைப் போலவே வழக்குகள் பற்றிய பதிவேடுகளின் ஆதாரச் சான்றாக உள்ள பதிவுரு நீதிமன்றமாக விளங்குகிறது.

- நீதி நிர்வாகத்திற்காக ஒவ்வொரு மாநிலமும் பல்வேறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டமும் மாவட்ட நீதிமன்றத்தின் எல்லைக்குள் அமைந்திருக்கும். மாவட்ட நீதிபதிகள் ஆளுநரால் நியமனம் செய்யப்படுகின்றனர். மேலே தெரிவித்த அதிகாரங்களை தனது எல்லைக்குள் செயல்படுத்தும் போது நீதிமன்றம் முழு அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் கொண்டுள்ளது. அரசியலமைப்பின் பாதுகாப்பு என்பது நீதிமன்றங்கள் சுதந்திரமாக செயல்படுவதன் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

## அலகு– 2
## குடிமக்களும் குடியுரிமையும்

**அறிமுகம்:**

- ஒரு நாட்டின் அரசாங்கத்தைப் பற்றியும், மக்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றியும் படிக்கும் இயல் குடிமையியல் ஆகும். குடிமகன் (Citizen) என்ற சொல் ‘சிவிஸ்’ (Civis) என்னும் இலத்தீன் வார்த்தையிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் பண்டைய ரோமாபுரியில் இருந்த நகர நாடுகளில் ‘குடியிருப்பாளர்’ என்பதாகும். நகர நாடுகள் அமைப்புகள் மறைந்த பின்னர் இச்சொல் நாடுகளின் உறுப்பினர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது. ஒருநாட்டின் குடிமக்கள் அனைத்து விதமான குடியியல், அரசியல் உரிமைகளை அனுபவிக்க தகுதி உடையவர்கள் ஆவர்.

**குடிமகனும் குடியுரிமையும்:**

- ஒரு அரசால் வழங்கப்பட்ட சட்ட உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவிப்பவரும், அதே வேளையில் நாட்டின் சட்டங்களை மதித்து நடப்பவரும், அவருக்கான கடமைகளை நிறைவேற்றுபவருமே அந்நாட்டின் குடிமகன் ஆவார்.
- குடியுரிமை என்பது ஒரு குடிமகன் அவர் விரும்பும் காலம் வரையில் அந்நாட்டில் சட்டப்படியாக வசிக்கும் உரிமையை வழங்குதலே ஆகும்.

**குடியுரிமையின் வகைகள்:**

- குடியுரிமை இரண்டு வகைப்படும்.
    1. **இயற்கை குடியுரிமை**: பிறப்பால் இயற்கையாக பெறக்கூடிய குடியுரிமை
    2. **இயல்புக் குடியுரிமை:** இயல்பாக விண்ணப்பித்து பெறும் குடியுரிமை.

| **இந்தியக் குடியுரிமைச் சட்டம், 1955** |
|---|
| இந்தியக் குடிமகன் தன்னுடைய குடியுரிமையை பெறுதலையும், நீக்குதலையும் பற்றய விதிகளை இச்சட்டம் கூறுகிறது. |

**குடியுரிமையை பெறுதல்:**

- 1955 ஆம் ஆண்டு இந்தியக் குடியுரிமைச் சட்டம் குடியுரிமை பெறுவதற்கான ஐந்து வழிமுறைகளை பரிந்துரைக்கிறது. அவைகள் பின்வருவனவாறு வகைப்படுத்தப்படுகின்றன.

**பிறப்பால் குடியுரிமை பெறுதல்:**

- இக்குடியுரிமை பிறப்பிடத்தால் தீர்மானிக்கப்படுகிறது. 1950 ஜனவரி 26 முதல் 1987 ஜூலை வரை இந்தியாவில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர் எந்த நாட்டவராக இருப்பினும் அவர்கள் பிறப்பால் குடியுரிமை பெறுகின்றனர்.

- 1987 ஜூலை 1 மற்றும் அதற்குப் பின் இந்தியாவில் பிறக்கும் குழந்தையின் பெற்றோரில் ஒருவர் அச்சமயத்தில் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 2004 டிசம்பர் 3 மற்றும் அதற்குப் பின் இந்தியாவில் பிறந்தவர்கள் பிறப்பால் குடியுரிமை பெறுகின்றனர். அல்லது பெற்றோரில் ஒருவர் இந்தியக் குடிமகனாகவும் மற்றொருவர் சட்ட விரோதமாக இந்தியாவிற்குள் இடம்பெயர்ந்தவராக இல்லாதிருந்தால் குடியுரிமை பெறுகின்றனர்.

**வம்சாவளியால் குடியுரிமை பெறுதல்:**

- 1950 ஜனவரி 26 முதல் 1992 டிசம்பர் 10க்கு முன்னர் வெளிநாட்டில் பிறந்திருந்தாலும் அவருடைய தந்தை இந்தியக் குடிமகனாக இருக்கும் பட்சத்தில் அவர் வம்சாவளி மூலம் இந்திய குடியுரிமையைப் பெறுகிறார்.
- 1992 டிசம்பர் 10 மற்றும் அதற்கு பின்னர் வெளிநாட்டில் பிறந்தவர்களின் பெற்றோரில் எவரேனும் ஒருவர் அச்சமயத்தில் இந்திய குடிமகனாக இருந்தால் அவர் இந்தியக் குடியுரிமையைப் பெறுகிறார்.

**பதிவு செய்தல் மூலம் குடியுரிமை பெறுதல்:**

- இந்திய வம்சாவளியைச் சார்ந்த ஒரு நபர் எந்த ஒரு நாட்டில் வசித்தாலும் அல்லது பிரிக்கப்படாத இந்தியாவிற்கு வெளிப்பகுதியில் வசிப்பவராக இருந்தாலும் பதிவு செய்தலின் மூலம் குடியுரிமை பெறலாம்.

- இந்தியக் குடிமகனை திருமணம் செய்த ஒருவர் பதிவின் மூலம் விண்ணப்பிக்கும் முன் ஏழு ஆண்டுகள் இந்தியாவில் வசித்தவராக இருத்தல் வேண்டும்.

**இயல்புக் குடியுரிமை:**

- ஒருவர் விண்ணப்பிப்பதன் மூலம் மத்திய அரசு அவருக்கு இயல்பு குடியுரிமைக்கான சான்றிதழை வழங்குகிறது.
    - எந்த ஒரு நாட்டிலும் குடிமகனாக இல்லாத ஒரு இந்தியர் அவர் வசிக்கும் நாட்டின் குடிமகனாவதை தடுக்கும் பொருட்டு இயல்பு குடியுரிமை வழங்கப்படுகிறது.

    - வெளிநாட்டுக் குடியுரிமையை ஒருவர் துறக்கும் பட்சத்தில் அவருக்கு இயல்பு குடியுரிமை வழங்கப்படுகிறது.

    - ஒருவர் இந்தியாவில் வசிக்கும் பட்சத்தில் அல்லது இந்திய அரசுப்பணியில் இருக்கும் பட்சத்தில் (அ) ஆண்டு முழுவதும் இந்தியாவில் தங்கியிருக்கும் பட்சத்தில் இக்குடியுரிமையை பெறுகிறார்.

    - நல்ல பண்புகளையும் இந்திய அரசிலமைப்பில் எட்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு மொழியில் (தற்போது 22 மொழிகள்) போதிய அறிவினையும் பெற்ற ஒருவர் இயல்புக் குடியுரிமையைப் பெற தகுதியுடையவராவார்.

**பிரதேசங்களை இணைத்தல் மூலம் பெறும் குடியுரிமை:**

- எந்தவொரு வெளிநாட்டுப் பகுதியும் இந்தியாவுடன் இணையும் போது, இந்திய அரசு அப்பகுதி மக்களை இந்திய குடிமக்களாக ஏற்றுக்கொள்கிறது. அந்த குறிப்பிட்ட நாளில் இருந்து அவர்கள் இந்திய குடிமக்களாகின்றனர். உதாரணமாக பாண்டிச்சேரி இந்தியாவுடன் இணைந்த பொழுது, இந்திய அரசு அம்மக்களுக்கு 1962 ல் இந்தியக் குடியுரிமைக்கான ஆணையை வழங்கியது.

**இந்தியக் குடியுரிமையை இழத்தல்:**

- குடியுரிமை இழப்பு பற்றிய மூன்று வழிமுறைகளை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் இரண்டாவது பகுதியின் 5 முதல் 11 வரையிலான விதிகள் குறிப்பிடுகின்றன.

**குடியுரிமையை துறத்தல் (தானாக முன்வந்து குடியுரிமையைத் துறத்தல்):**

- ஒருவர் வெளி நாட்டின் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரின் இந்தியக் குடியுரிமை அவரால் கைவிடப்படுகிறது.

**குடியுரிமை முடிவுக்கு வருதல் (சட்டப்படி நடைபெறுதல்)**

- ஓர் இந்தியக் குடிமகன் தாமாக முன்வந்து வெளிநாட்டின் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரது இந்தியக் குடியுரிமை தானாகவே முடக்கப்படுகிறது.

**குடியுரிமை மறுத்தல் (கட்டாயமாக முடிவுக்கு வருதல்):**

- மோசடி, தவறான பிரதிநிதித்துவம் அல்லது அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பாக செயல்படுதல் ஆகியவற்றின் மூலம் இந்தியக் குடியுரிமையை பெறும் ஒருவரின் குடியுரிமையை இந்திய அரசு ஓர் ஆணை மூலம் இழக்கச் செய்கிறது.

**நாட்டுரிமை மற்றும் குடியுரிமை:**
பூர்வீகம், பிறப்பு மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நாட்டினர் இயல்பாக பெறும் நிலை நாட்டுரிமை எனப்படும். சட்ட நடைமுறைகளுக:கு உட்பட்டு ஒரு நாட்டின் அரசாங்கத்தால் தனி ஒருவருக்கு வழங்கப்படுவது குடியுரிமை எனப்படும்.

| |
|---|
| ஒருவர் தனது நாட்டுரிமையை மாற்ற முடியாது. ஆனால் தனது குடியுரிமையை மாற்ற முடியும். |

**ஒற்றைக் குடியுரிமை:**

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் நமக்கு ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது. அதுவே இந்தியக் குடியுரிமை எனப்படுகிறது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய கூட்டாட்சி அமைப்பு கொண்டுள்ள நாடுகளில் இரட்டைக் குடியுரிமை வழங்கப்படுகிறது. (தேசிய குடியுரிமை, மற்றும் மாநில குடியுரிமை) இந்திய குடிமக்கள் அனைவரும் இந்தியாவில் எங்கு பிறந்திருந்தாலும், வசித்தாலும் மாநில வேறுபாடின்றி குடியுரிமைக்கான அனைத்து அரசியல் மற்றும் குடிமையியல் உரிமைகளை அனுபவிக்கின்றனர்.

| |
|---|
| முன்னுரிமை வரிசைப்படி குடியரசு தலைவர் நாட்டின் முதல் குடிமகன் ஆவார். |

**இந்தியாவில் வசிக்கும் வெளிநாட்டுக் குடியுரிமை பெற்றனர்:**




**இந்திய குடிமக்களின் உரிமைகளும், கடமைகளும்:**

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் கீழ்க்கண்ட உரிமைகளை நமக்கு வழங்கிறது.
  - அடிப்படை உரிமைகள்
  - மக்களவை தேர்தலுக்கும், மாநில சட்டமன்ற தேர்தலுக்கும் வாக்களிக்கும் உரிமை.
  - இந்திய அரசு அலுவலகங்களில் பணிபுரியும் உரிமை இந்திய பாராளுமன்றம் மற்றும் மாநில சட்ட மன்றங்களில் உறுப்பினராவதற்கான உரிமை.
- இந்திய அரசியலமைப்பு 42வது சட்டத்திருத்தத்தின் படி இந்தியக் குடிமக்களுக்கான அடிப்படை கடமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.
- (உதாரணமாக: நேர்மையாக வரி செலுத்துதல், மற்றவர்களின் கருத்துக்களுக்கும், நம்பிக்கைகளுக்கும், உரிமைகளுக்கும் மதிப்பளித்தல், நாட்டின் பாதுகாப்பிற்காகச் செயலாற்றுதல், சட்டங்களை மதித்தல் மற்றும் கீழ்படிதல்).

**ஒரு நாட்டின் குடிமக்கள் அல்லாதவர்களை இரண்டு வகையினராக நாம் அழைக்கின்றோம் அவை:**

1. **அந்நியர் (Alien):**

- ஒரு நாட்டில் வசிக்கும் குடிமகனாக அல்லாத அனைவரும் அந்நியர் எனப்படுவர்.
  உதாரணம்: வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டு மாணவர்கள்.

2. **குடியேறியவர் (Immigrant):**

- ஒரு நாட்டில் எவ்வித தடையும் இன்றி நிரந்தரமாக வசிப்பதற்கும், பணி புரிவதற்கும் உரிமை பெறும் அந்நியர் குடியேறியவர் எனப்படுகிறார்.

**நற்குடிமகனின் பண்புகள்:**

- அரசியலமைப்புச் சட்டத்தின் படி நடத்தல்

* சட்டத்துக்க கீழ்படிதல்
* சமூதாயத்திற்கு தன் பங்களிப்பை ஆற்றுதல் மற்றும் குடிமைப் பணியை செயலாற்றுதல்.
* நற்பண்புகளையும், நீதியையும் நிலைநாட்டுதல்
* வேற்றுமைகளை மறந்து நடத்தல்

**உலகளாவிய குடியுரிமை:**

* ஒரு குறிப்பிட்ட நாட்டின் குடிமகன் என்பதை விட உலகளாவிய சமுதாயத்தில் ஒவ்வொருவரும் அங்கம் என்பதே உலகளாவிய குடியுரிமை ஆகும். உலக மக்கள் அனைவருக்கும் உரிமைகளும், குடிமைப் பொறுப்புகளும் இயற்கையாகவே உள்ளன. புதிய சமுதாயத்தை உருவாக்குவதில் இன்றைய இளைஞர்களின் ஈடுபாட்டையும், பங்களிப்பையும் பெறுவதே உலகளாவிய குடியுரிமையின் அடிப்படை ஆகும்.

**வெளிநாடு வாழ் இந்தியர் தினம் (பிரவாசி பாரதிய தினம்):**
இந்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பிரவாசி பாரதிய தினம் கொண்டாடப்படுகிறது. இந்த தினம் இந்தியாவின் வளர்ச்சிக்காக வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களின் பங்களிப்பினை பெறும் வகையில் கொண்டாடப்படுகிறது. இது மாகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வருகை புரிந்த தினமான ஜனவரி 9-ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

**முடிவுரை:**
நமது அரசிலமைப்புச் சட்டம் ஒன்றைக் குடியுரிமையை வழங்குகிறது. இதன் மூலம் இந்திய மக்கள் அனைவருக்கும் சம உரிமையை வழங்குகிறது. ஒருங்கிணைந்த இந்தியாவை உருவாக்கும் பொருட்டு, இந்திய மக்களிடையே சகோதரத்துவத்தையும், ஒற்றைமையையும் நமது அரசியலமைப்ஊக்குவிக்கிறது.

அலகு-3

## சமயச்சார்பின்மையை புரிந்துகொள்ளுதல்

இந்தியா பல்வேறு நம்பிக்கைகளை சமமாக போற்றி மதிக்கப்படும் இடமாக இரப்பதோடு ஒரே தேசியக் கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கும். - **ஜவஹர்லால் நேரு**

**அறிமுகம்:**

இந்தியா பல சமய மற்றும் கலாச்சார, பண்பாட்டு நம்பிக்கைகள் கொண்ட நாடாகும். இது இந்து, சமணம், புத்தம் மற்றும் சீக்கியம் ஆகிய நான்கு பெரும் சமயங்களின் பிறப்பிடமாகும். நமது நாட்டில் பல்வேறு சமயங்கள் மற்றும் நம்பிக்கைகள் கொண்ட மக்கள் நீண்டகாலமாக அமைதியுடன் வாழ்கின்றனர். நவீன தேசிய நாடகள் அனைத்தும் பல சமயங்களைக் கொண்டிருப்பதால் அனைத்து சமயங்களையும் சகித்துக்கொள்ளும் தன்மை அவசியமானதாகும். சமயச்சார்பின்மையின் நோக்கமானது சமய நம்பிக்கை கொண்டவர்களும் மற்றும் எந்த சமயத்தையும் சாராதவர்களும் அமைதியுடன் இணக்கமாக வாழ்வதற்கான சமூகத்தை உருவாக்குவது என்பதாகும்.

இராஜாராம் மோகன்ராய், சர் சையது அகமதுகான், இரவீந்திரநாத் தாகூர், மகாத்மா காந்தி மற்றும் B.R.அம்பேத்கார் போன்ற குறிப்பிடத்தக்க பெரும் மரியாதைக்குரிய தனிநபர்கள் இந்தியச் சமூகத்தின் பல்வேறு நிலைகளில் சமயச்சார்பின்மையை நிலை நாட்ட பங்களித்துள்ளனர். இந்தியா போன்ற பல்வேறு சமய பன்முகத்தன்மை கொண்ட சமூகத்திற்கு சமயச்சார்பின்மை என்பது மதிப்புமிக்க ஒன்றாகும்.

**சமயச்சார்பின்மை எதனைக் குறிக்கிறது?**

சமயச்சார்பின்மை என்பது பிற மதங்களின் மீது சகிப்புத்தன்மையான அணுகுமுறை மற்றும் வெவ்வேறு நம்பிக்கைகளைச் சார்ந்த குடிமக்களுடன் அமைதியாக இணங்கி வாழும் ஒரு மனப்பாங்கு ஆகும். இது அனைத்து சமய சமூகங்களுடனும் அரசு கொண்டுள்ள நடுநிலைத்தன்மை மற்றும் சமத்துவக் கொள்கையாகும்.

சமயச்சார்பின்மை என்பது அரசையும் மதத்தையும் தனித்தனியாக பிரிக்கும் கோட்பாடு ஆகும். பரந்த அளவில் கூறுவதென்றால் அரசானது சமய விவகாரங்களிலோ அல்லது சமயமானது அரசின் நடவடிக்கைகளிலோ தலையிடாது இருத்தலாகும். இதன் பொருள் ஒவ்வொரு குடிமகனும் தனது மனசாட்சியின்படி சுதந்திரமாக அவரது நம்பிக்கையை பரப்புதல், பின்பற்றுதல் மற்றும் சமயத்தின் மீது இருக்கும் நம்பிக்கையை வெளியிடுதல், மாற்றிக்கொள்ளுதல் அல்லது இல்லாமல் இருத்தல் என்பதாகும்.

சமயச்சார்பின்மை என்ற சொல் லத்தீன் வார்த்தையான செகுலம்(ளுயநஉரடரஅ) என்பதிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் காலம் (an age) அல்லது உள்ளுணர்வு காலம் (the spirit of an age) ஆகும்.

ஆங்கிலேய பத்திரிக்கை எழுத்தாளரான ஜார்ஜ் ஜேக்கப் ஹோல்யோக் என்பவர் Secularism என்ற பதத்தை உருவாக்கினார்.

தனிநபர்கள் இந்தியச் சமூகத்தின் பல்வேறு நிலைகளில் சமயச்சார்பின்மையை நிலை நாட்ட பங்களித்துள்ளனர். இந்தியா போன்ற பல்வேறு சமய பன்முகத்தன்மை கொண்ட சமூகத்திற்கு சமயச்சார்பின்மை என்பது மதிப்புமிக்க ஒன்றாகும்.

**சமயச்சார்பின்மை எதனைக் குறிக்கிறது?**

சமயச்சார்பின்மை என்பது பிற மதங்களின் மீது சகிப்புத்தன்மையான அணுகுமுறை மற்றும் வெவ்வேறு நம்பிக்கைகளைச் சார்ந்த குடிமக்களுடன் அமைதியாக இணங்கி வாழும் ஒரு

மனப்பாங்கு ஆகும். இது அனைத்து சமய சமூகங்களுடனும் அரசு கொண்டுள்ள நடுநிலைத்தன்மை மற்றும் சமத்துவக் கொள்கையாகும்.

சமயச்சார்பின்மை என்பது அரசையும் மதத்தையும் தனித்தனியாக பிரிக்கும் கோட்பாடு ஆகும். பரந்த அளவில் கூறுவதென்றால் அரசானது சமய விவகாரங்களிலோ அல்லது சமயமானது அரசின் நடவடிக்கைகளிலோ தலையிடாது இருத்தலாகும். இதன் பொருள் ஒவ்வொரு குடிமகனும் தனது மனசாட்சியின்படி சுதந்திரமாக அவரது நம்பிக்கையை பரப்புதல், பின்பற்றுதல் மற்றும் சமயத்தின்மீது இருக்கும் நம்பிக்கையை வெளியிடுதல், மாற்றிக்கொள்ளுதல் அல்லது இல்லாமல் இருத்தல் என்பதாகும்.

**ஆத்திகம்:** கடவுள் அல்லது கடவுள்கள் மீது நம்பிக்கையற்றிருத்தல்.
**சமயச்சார்பின்மை:** அரசோ, சமயமோ ஒன்று மற்றொன்றின் விவகாரங்களில் தலையிடாதிருத்தல்.

**சமயச்சார்பின்மையின் நோக்கங்கள்:**

- ஒரு சமயம் சார்ந்த குழு மற்றொரு சமயக் குழுவின் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பது.
- ஒரு சமயத்தைச் சார்ந்த சில உறுப்பினர்கள் அதே சமயத்தைச் சார்ந்த மற்ற உறுப்பினர்கள் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பது.
- அரசானது எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தையும் பின்பற்ற வலியுறுத்தாமல் இருப்பது அல்லது தனி நபர்களின் சமய சுதந்திரத்தில் தலையிடாமல் இருப்பது.

''சமயம் நமக்குப் பகைமையைப் போதிக்கவில்லை: நாம் அனைவரும் இந்தியர்கள் மற்றும் இந்தியா நமது வீடு'' என்ற கவிஞர் இக்பாலின் எளிய வாக்கியம் சமயச்சார்பின்மை கருத்தை விளக்குகிறது.

**அசோகரின் 12வது பாறை அரசாணை:**

அரசானது எந்த ஒரு மதத்தைச் சார்ந்த பிரிவினருக்கும் எதிராக குற்றம் சாட்டாது என்று கி.மு (பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டிலேயே அறிவித்த முதல் பேரரசர் அசோகர் ஆவார். தனது 12வது பாறை அரசாணையில் அனைத்து மதப்பிரிவினருடன் சகிப்பு தன்மையோடு மட்டுமல்லாமல் அவர்கள் மீது மிகுந்த மரியாதைக்குரிய மனநிலையை வளர்த்துக்கொள்ளவும் தன் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**சமயச்சார்பற்ற நாட்டின் பண்புகள்:**

**சுதந்திர கோட்பாடு** – எந்த சமயத்தையும் பின்பற்ற அரசு அனுமதியளித்தல்.
**சமத்துவக் கோட்பாடு**– அரசு எந்த ஒரு சமயத்திற்கும் மற்றவற்றிற்கு மேலாக முன்னுரிமை அளிக்காதிருத்தல்.
**நடுநிலைமைக் கோட்பாடு**– சமய விவகாரங்களில் அரசு நடுநிலைமை கொண்டிருத்தல்.
சமயச்சார்பற்ற நாடு என்பது ஒரு நாடு எந்தவொரு சமயத்தையும் அதிகாரப்பூர்வமாக ஊக்குவிக்காமல் ஒவ்வொரு சமயத்தையும் சமமாக நடத்துதல் என்பதாகும். ஒவ்வொரு குடிமகனுக்கும் சமமான உரிமையை அளிப்பதோடு மட்டுமல்லாமல் சமய நம்பிக்கையை சுதந்திரமாக வெளிப்படுத்துதல், பின்பற்றுதல் மற்றும் பரப்பும் உரிமையையும் வழங்குகிறது. அரசாங்கம் அனைத்து சமயங்கள் தொடர்பாகவும் நடுநிலைமையை கொண்டிருப்பதோடு எவ்வித பாகுபாடும் காட்டுவதில்லை. சமயச்சார்பற்ற ஒரு நாட்டில் எவருக்கும் தனிப்பட்ட முறையில் சலுகை அளிப்பதில்லை என்பதோடு சமய நடைமுறைகள் மற்றும் நம்பிக்கைகள் அடிப்படையில் அரசு பாகுபாடு காட்டுவதில்லை. அனைத்து குடிமக்களும் எவ்வித சமய நம்பிக்கை கொண்டிருந்தாலும் அரசுப் பணியில் நுழைய தகுதி வாய்ந்தவர்கள் ஆவர். கல்விக் கூடங்களில் முற்றிலும் சமய போதனைகள் இருத்தல் கூடாது என்பதோடு எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கும் ஆதரவாக எந்த வரிகளும் வசூலிப்பதில்லை.

**சமயச்சார்பின்மையின் முக்கியத்துவம்:**

இந்தியாவில் அனைத்து சமயங்களையும் சமமாக நடத்த வேண்டம் என்பதன் அடிப்படையிலேயே சமயச்சார்பின்மை கோட்பாடு படிப்படியாகத் தோன்றியது. பல்வேறு சமயக் கோட்பாடகளைக் கொண்டுள்ள மக்களிடையே அமைதி மற்றும் நல்லிணக்கத்தை பராமரிக்க நமக்கு சமயச்சார்பற்ற நாடு அவசியமாகும். அது சமஉரிமைகளையும் வழங்கும் மக்களாட்சியின் ஒரு பகுதி ஆகும்.

முகலாய பேரரசர் அக்பர் மதசகிப்புத் தன்மை கொள்கையைப் பின்பற்றினார். அவருடைய தீன்-இலாஹி (தெய்வீக நம்பிக்கை) மற்றும் சுல்-இ-குல் (அனைத்து சமயத்தினரிடையே அமைதி மற்றும் நல்லிணக்கம்) ஆகியவை அவரின் சமயசகிப்புத் தன்மையை எடுத்தியம்புகிறது.

**அரசியலமைப்பும் சமயச்சார்பின்மையும்:**

சமயச்சார்பின்மை என்பது அரசியலமைப்பின் ஒரு அங்கமாகும். நமது அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் அனைத்து மக்களும் அவர்களது சமயத்தை பின்பற்ற சுதந்திரம் பெற்றிருந்தால் மட்டுமே வலிமையான மற்றும் ஒற்றுமையான நாட்டை உருவாக்க இயலும் என்பதை உணர்ந்திருந்தனர். எனவே சமயச்சார்பின்மை இந்தியாவில் மக்களாட்சி வளர்ச்சிக்கான அடிப்படைக் கொள்கைளில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சமயச்சார்பற்ற என்ற சொல்லானது 1950ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நமது அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை. பின்னர் 1976ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 42வது சட்டத் திருத்தத்தின் மூலம் முகவுரையில் சமயச்சார்பற்ற என்ற சொல் சேர்க்கப்பட்டது. (இந்தியா ஒரு இறையான்மை வாய்ந்த, சமதர்ம, சமயச்சார்பற்ற, மக்களாட்சி, குடியரசு) நமது அரசியலமைப்பின் அடிப்படை நோக்கமானது தேசிய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் தனி மனித மாண்புடனும் கண்ணியத்துடனும் ஊக்குவிப்பதாகும்.

நாட்டிற்கான தனி சமயம் எதுவும் இந்தியாவில் இல்லை. அரசானது எந்தவொரு சமயத்தையும் ஏற்படுத்தவோ ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு சிறப்பு ஆதரவினையோ அளிப்பதில்லை. இந்திய அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள சமய சுதந்திரம் நாட்டு குடிமக்கள் மட்டுமன்றி இந்தியாவில் வாழும் வெளிநாட்டவருக்கும் வழங்கப்படுகிறது. இது 1954ல் நடைபெற்ற பம்பாய் மாநிலம் - ரத்திலால் வழக்கில் மேன்மைமிக்க உச்சநீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப்பட்டது.

கஜுராஹோவில் காணப்படும் 19ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இந்து கோவிலில், வழக்கமான சிகரத்திற்குப் பதிலாக இந்து பாணியிலான கோபுரம், சமண விதானம், புத்த ஸ்தூபி மற்றும் இஸ்லாமிய பாணியிலான குவிமாடம் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

**இந்திய அரசியலமைப்பு பின்வரும் தனிச் சிறப்புக் கூறுகளைக் கொண்டுள்ளது.**

அ. அரசானது எந்த ஒரு சமயத்தாலும் தன்னை அடையாளம் காணாது அல்லது சமயத்தால் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருக்கும்.

ஆ. ஒவ்வொரும் அவரது விருப்பத்திற்கேற்ப எந்த ஒரு சமயத்தைப் பின்பற்றும் உரிமையை அரசு உறுதிசெய்கிறது.

இ. எந்த சமயத்திற்கும் அரசு முன்னுரிமை சலுகை அமைப்பதில்லை.

ஈ. எந்த ஒரு நபருக்கும் அவரது சமய நம்பிக்கையின் காரணமாக அரசு எவ்வித பாகுபாடும் காட்டாது.

உ. இது இந்திய மக்களிடையே சகோதரத்துவத்தை உருவாக்குவதோடு தனிமனித மாண்பிற்கும் நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கும் உறுதியளிக்கிறது.

சமயச்சார்பற்ற இந்திய நாடானது அனைத்து சமய விழாக்களுக்கும் பொது விடுமுறை அளிக்கிறது.

**அரசியலமைப்பு பிரிவுகளின் அடித்தளம்.**

**பிரிவு 15:** சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதை தடை செய்கிறது.

**பிரிவு 16:** பொது வேலை வாய்ப்பில் சமமான வாய்ப்பளித்தல்.

**பிரிவு 25(1):** எந்த ஒரு சமயத்தினை எற்கவும் பின்பற்றவும் பரப்பவும் உரிமை வழங்குகிறது.

**பிரிவு 26:** சமய விவகாரங்களை நிர்வகிக்கும் சுதந்திரம்.

**பிரிவு 27:** எந்தவொரு குறிப்பிட்ட சமயத்தையும் ஆதரிக்க அரசானது எந்தவொரு குடிமகனையும் வரி செலுத்துமாறு வற்புறுத்தக் கூடாது.

**பிரிவு 28:** சில கல்வி நிறுவனங்களில் மதம் சார்ந்து நடைபெறும் சமய போதனைகள் அல்லது சமய வழிபாடு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் இருக்கும் உரிமை.

**பிரிவு 29(2):** அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பாகுபாடு காட்ட தடை.

**நமக்கு ஏன் சமச்சார்பற்ற கல்வி தேவை?**

கல்வியில் சமயச்சார்பின்மை என்பது பொதுக்கல்வியை அனைத்து சமய ஆதிக்கத்திலிருந்தும் விடுவிப்பதாகும். வருங்கால குடிமக்களாகிய குழந்தைகள் சமய தொடர்பில்லாமல் அவர்களின் பண்பு நலன் மற்றும் தார்மீக நடத்தை ஆகியவற்றை மேம்படுத்தும் வகையிலான கல்வியையே பெற வேண்டும்.

**சமயச்சார்பற்ற கல்வி கீழ்க்காணும் நோக்கங்களுக்காக தேவைப்படுகிறது.**

- குறுகிய மனப்பான்மையை போக்குவதற்கும், சக்திவாய்ந்த ஆற்றல் மற்றும் அறிவான நோக்கத்தினை உருவாக்குவதற்கும்
- தார்மீக மற்றும் மனிதநேய பார்வையை உருவாக்குவதற்கும்
- இளைஞர்களை நல்ல குடிமக்களுக்காக பயிற்சியளிப்பதற்கும்
- சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் கூட்டுறவு வாழ்க்கை போன்ற மக்களாட்சியின் மதிப்புகளை பலப்படுத்துவதற்கும்
- வாழ்க்கை குறித்த பரந்த பார்வையை அளிப்பதற்கும்
- பிறரை பாராட்டுதல் மற்றும் மற்றவர் நிலையிலிருந்து புரிந்து கொள்ளும் மனப்பான்மையை வளர்ப்பதற்கும்
- அன்பு, சகிப்புத்தன்மை, ஒத்துழைப்பு சமத்துவம் மற்றும் இரக்க உணர்வை வளர்ப்பதற்கும்
- பொருள் முதல்வாத கொள்கை மற்றும் ஆன்மீக கொள்கையை ஒருங்கிணைக்கவும் தேவைப்படுகிறது.

**முடிவுரை:**

இந்தியா ஒரு சமயச்சார்பற்ற நாடு என்பதோடு சமய மேலோக்கத்தைக் தடுக்க பல்வேறு வழிகளில் செயல்படுகிறது. சமயச்சார்பின்மை சந்தேகத்திற்கிடமின்றி ஒவ்வொரு குடிமகனும் வாழ்க்கையின் மிகச்சிறந்த பேறான சுதந்திரம், மகிழ்ச்சி ஆகியவற்றை அனுபவிக்க உதவுகிறது. இந்திய அரசியலமைப்பு சமயச்சார்பற்ற கொள்கைகளை அடிப்படையாக கொண்ட அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கிறது, இது மக்களாட்சியின் ஒளிரும் சாதனையாகும்.

சமயச்சார்பின்மை நம்மை நாகரிகப் பண்புடன் வாழ அனுமதிக்கிறது. இது மக்கள் பிற சமயத்தை மதிக்க வலியுறுத்துகிறது. இது மக்களின் சமய நம்பிக்கையைப் பொறுத்தவரை சம உரிமையை வழங்குகிறது. இது இந்தியா போன்ற நாட்டிற்கு விரும்பத்தக்க ஒன்றாகும்.

**அக்பரின் கல்லறை, சிக்கந்தரா (ஆக்ரா அருகில் - இந்தியா)**

இஸ்லாம், இந்து சமயம் உள்ளிட்ட பல்வேறு சமயங்களைச் சார்ந்த கூறுகள் அவரது கல்லறையில் இடம் பெற வேண்டுமென அக்பர் வலியுறுத்தினர்.

என்னை எங்கே தேடுகிறீர்கள் நான்
உன்னுடன் இருக்கிறேன்
புனித யாத்திரையிலோ சின்னங்களிலோ அல்ல
தனிமையிலும் இல்லை
கோயில்களிலோ மசூதிகளிலோ அல்ல
காபாவிலோ அல்லது கைலாசத்திலோ அல்ல
நான் உன்னுடன் இருக்கிறேன், ஓ! மனிதனே
நான் உன்னுடன் இருக்கிறேன்

- **கபீர்.**

## அலகு-2

## மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும்

**அறிமுகம்:**

பிறப்பால் அனைவரும் சமம். உலகில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தன் விருப்பப்படி வாழ உரிமை உண்டு. மனித உரிமைகளானது தனிநபர்கள் மற்றும் சமூகம் தொடர்பானவை மனித உரிமைகள் மக்கள் சுதந்திரமாக மற்றும் விருப்பப்படி வாழ்வதை உறுதிசெய்வதுடன் இயல்பாக பெறும் அனைத்து உரிமைகளையும் குறிப்பிடுகிறது. மக்களின் சமஉரிமைகளை ஒவ்வொரு நாடும் உறுதி செய்கிறது.

**மனித உரிமைகள் என்றால் என்ன?**

மனித உரிமைகள் என்பது இனம், பாலினம், தேசிய இனம், இனக்குழுக்களின் தன்மை, மொழி மற்றும் சமய வேறுபாடின்றி அனைத்து மனிதர்களுக்குமான இயல்பான உரிமைகள் ஆகும்.

**மனித உரிமைகள் என்ற கருத்து எங்கிருந்து ஆரம்பித்தது?**

அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் தொகுப்பானது ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் வேரூன்றியிருந்தது.

**அ. எழுதப்பட்ட மனித உரிமை ஆவணங்களின் முன்னோடி:**

**மகாசாசனம்(The Magna Carta), 1215, இங்கிலாந்து** –மக்களுக்கு புதிய உரிமைகளை வழங்கியதுடன் அரசரை சட்டத்திற்கு உட்படுத்தியது.

**உரிமை மனு (The Petition of Right), 1628, இங்கிலாந்து** – மக்கள் உரிமைகளின் தொகுப்பு.

**ஹேபியஸ் கார்பஸ் சட்டம், 1679, இங்கிலாந்து** –மக்களின் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான சட்டம்.

**ஆங்கில உரிமைகள் மசோதா, 1689** –சில அடிப்படை சமூக / குடிமக்கள் உரிமைகளை அமைத்தல்.

**மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைகள் பற்றிய பிரான்ஸின் அறிவிப்பு, 1789** –சட்டத்தின் கீழ் அனைத்து குடிமக்களும் சமன் என்று கூறும் பிரான்சின் ஆவணம்.
அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம் மற்றும் உரிமைகள் மசோதா, 1791 – குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறது.

**ஆ. ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம்:**

மனித உரிமைகள் பற்றிய சிந்தனை இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் வலுவாக எழுச்சி பெற்றது. இப்போர் கற்பனை செய்ய முடியாத வகையில் மனித உரிமை மீறலுக்கு வழிவகுத்தது. போர்க் காலங்களில் மனித உயிர்கள் அதன் மதிப்பினை இழந்தன. மேலும் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் வாழ்க்கையின் இறுதிவரை கடுமையாக போராட வேண்டியிருந்தது. தனிநபர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் போதுமானதாக இல்லை என்பதை இரண்டாம் உலகப்போரின் போது நடந்த கொடுமைகள் தெளிவுபடுத்தின. உலகின் பல பகுதிகளில் பல்வேறு காரணங்களால் மனித உரிமைகள் மறுக்கப்பட்டன. மற்றும் நிக்கப்பட்டன. இது சில நாட்டின் அரசாங்கத்தால் மட்டுமே மனித உரிமைகளை பாதுகாக்க முடியாது என்பதை நிரூபித்தது. வாழ்க்கை, சுதந்திரம், உணவு, இருப்பிடம், தேசம் ஆகியவை நியாயமற்ற முறையில் மறுக்கப்படமாட்டாது என்பதை மக்கள் உறுதிப்படுத்த விரும்பினர். 1945ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சாசனச் சட்டம் உருவாக்கப்பட்ட சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில் மக்களின் இத்தகைய விருப்பங்கள் ஒரு முக்கிய

பங்கினை வகித்தன. இச்சூழ்நிலையில் 1945ஆம் ஆண்டு அக்டோபர் 24ஆம் நாள் நிறுவப்பட்ட அமைப்பான ஐக்கிய நாடுகள் சபை இந்தப் பிரச்சனையில் கவனம் செலுத்தியது. அமைதி மற்றும் சமூக, பொருளாதார விவகாரங்கள் தொடர்பான அனைத்துக் கொள்கைகளிலும் திட்டங்களிலும் முக்கிய கருப்பொருளாக இந்த மனித உரிமைகள் விளங்குகின்றன.

**மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு – முகவுரை:**

மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும், உரிமைகளும் சமமானவர்கள். அவர்கள் அறிவாற்றலையும் மனசாட்சியையும் இயற்பண்பாகக் கொண்டவர்களாகவும் எல்லா மக்கிடையேயும் பொதுவான சகோதரத்துவத்தின் உணர்வை வளர்க்க கடமைப்பட்டவர்களும் ஆவர்.

**மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு(UDHR):**

ஐக்கிய நாடுகள் சபையின் மிகப்பெரிய சாதனைகளுள் ஒன்று மனித உரிமைகளுக்கான சட்டத்தை உருவாக்கியதாகும். இந்த இலக்குகளை அடைவதற்காக ஐக்கிய நாடுகள் உரிமைக்கான ஓர் ஆணையத்தை நிறுவியது.

எலினார் ரூஸ்வெல்டின் (முன்னாள் அமெரிக்க அதிபர் பிராங்களின் டி ரூஸ்வெல்டின் மனைவி) வலுவான தலைமையால் வழிநடத்தப்பட்ட ஆணையம் உலகின் கவனத்தை ஈர்த்தது. இறுதியாக உலக மனித உரிமைகள் அறிவிப்பு ஐ.நா. பொதுச்சபையால் 1948இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல்கள் ஆகும். இந்த அறிவிப்பு ஐ.நா.பொதுச்சபையால் 1948இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல்கள் ஆகும். இந்த அறிவிப்பு பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் ஐ.நா. பொதுச்சபையால் 1948ஆம் ஆண்டு டிசம்பர்-10ஆம் நாள் அறிவிக்கப்பட்டது. (பொதுச்சபை தீர்மானம் 217A) இதை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10ஆம் நாள் மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இது 1950ஆம் ஆண்டிலிருந்து வழக்கமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இது மனித உரிமைகளின் நவீன சர்வதேச மகாசாசனம் என்றும் அழைக்கப்படுகிறது. இதன் கொள்கைகள் பெரும்பாலான நாடுகளின் (185 நாடுகளுக்கும் மேல்) அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. உலக மனித உரிமைகள் அறிவிப்பு 500க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதுவே உலகில் அதிகமாக மொழிபெயர்க்கப்பட ஆவணம் ஆகும்.

**சைரஸ் சிலிண்டர் கி.மு.(பொ.ஆ.மு) 539**

பண்டைய பாரசீகத்தின் முதல் மன்னரான மகா சைரஸ், அடிமைகளை விடுவித்து மக்கள் அனைவரும் தங்கள் சொந்த மதத்தை தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு என்று அறிவித்தார். இன சமத்துவத்தை நிலைநாட்டினார். மேற்கூறியவைகளும் மற்ற ஆணைகளும் கியூனிபார்ஃம் எழுத்துகளில் அக்காடியன் மொழியில் சிலிண்டர் வடிவிலான சுட்ட களிமண்ணில் பதிவு செய்யப்பட்டன. இது ஐக்கிய நாடுகள் சபையின் ஆறு அலுவல் மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவை உலக மனித உரிமைகள் பிரகடனத்தின் முதல் நான்கு விதிகளுக்கு இணையாக உள்ளன.

**மனித உரிமைகள் கொண்டுள்ள அடிப்படை மதிப்புகள்:**

**அ. கண்ணியம்:** வாழ்வதற்கான உரிமை, ஒருமைப்பாட்டிற்கான உரிமை, கட்டாய தொழிலாளர் முறை, அடிமை முறை இழிவான தண்டனை ஆகியவற்றிற்கான தடை.

**ஆ. நீதி:** நேர்மையான விசாரணைக்கான உரிமை, குற்றத்திற்கு ஏற்றாற்போல் தண்டணை, ஒரே குற்றத்திற்காக ஒன்றுக்கு மேற்பட்ட முறை விசாரணைக்குட்படுத்தாத உரிமை.

**இ. சமத்துவம்:** சட்டத்தின் முன் அனைவரும் சமம். இனம், மதம், பாலினம், வயது, திறமை மற்றும் இயலாமை ஆகியவற்றில் பாகுபாடின்மை.

**மனித உரிமையின் அடிப்படைப் பண்புகள்**

**இயல்பானவை:** அவை எந்தவொரு நபராலும் அதிகாரத்தாலும் வழங்கப்படுவதில்லை.

**அடிப்படையானவை:**இந்த அடிப்படை உரிமைகள் இல்லையென்றால் மனிதனின் வாழ்க்கையும், கண்ணியமும் அர்த்தமற்றதாகிவிடும்.

**உலகளாவியவை:** இந்த உலகளாவிய உரிமைகள் ஒருவரின் தோற்றம் அல்லது நிலையைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் இந்த உரிமைகள் பொருந்தும். இந்த உரிமைகள் தேசிய எல்லையைத் தாண்டி அனைத்து நாடுகளிலும் அமல்படுத்தப்படுகின்றன.

**சார்புடையவை:** இவைகள் ஒன்றுக்கொன்று சார்புடையவைகள் ஆகும். ஏனென்றால் ஒரு உரிமையைப் பயன்படுத்தும் போது மற்றொன்றை உணராமல் இருக்க முடியாது.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர்-10 நாள் உலக மனித உரிமைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. மனித உரிமைகளை உலக அளவில் அறிவித்த பெருமை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையையே சாரும்.

**மனித உரிமைகளின் வகைகள்:**

மனித உரிமைகள் பிரகடனத்தில் 30 சட்டப்பிரிவுகள் உள்ளடக்கியுள்ளன. இந்த உரிமைகள் ஐந்து முதன்மைப் பிரிவுகளாக விரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவைகள் பின்வருமாறு:

**அ. வாழ்வியல் உரிமைகள்:**

வாழ்வியல் (சிவில்) உரிமைகள் என்ற சொல் ஒவ்வொரு நபருக்கும் அரசாங்கத்தின் சட்டங்களால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடப்படுகிறது. இந்த உரிமைகள் அனைவருக்கும் சமமாக கருதப்பட வேண்டியவைகள் ஆகும். இதில் வாழ்வதற்கான உரிமை, சுதந்திரம், அடிமைத் தளையிலிருந்து விடுபடுதல், நியாயமற்ற முறையில் கைது செய்யாமை ஆகிய உரிமைகள் அடங்கும்.

**ஆ. அரசியல் உரிமைகள்:**

அரசாங்கத்தை அமைப்பதிலும், நிர்வகிப்பதிலும் அரசியல் உரிமைகள் பயன்படுத்தப்படுகின்றன. வாழ்வியல் உரிமைகளும், அரசியல் உரிமைகளும் நவீன மக்களாட்சியுடன் நேரடி தொடர்புள்ளவைகள் ஆகும். அவைகள் அரசியல் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதிலிருந்து தனிநபரை பாதுகாக்கின்றன. மேலும் ஒவ்வொரு தனி நபரையும் தங்கள் அரசியல் செயல்பாட்டில் பங்கேற்க இவ்வுரிமைகள் வழிவகுக்கிறது. கருத்துச் சுதந்தரம், அமைதியாக கூட்டம் நடத்துதல், தன் நாட்டின் அரசாங்கத்தில் பங்குகொள்ளும் உரிமை, வாக்களிக்கும் உரிமை, பேச்சுரிமை மற்றும் தகவல்களைப் பெறும் உரிமை ஆகியவைகள் அரசியல் உரிமைகளுள் அடங்கும்.

**இ. சமூக உரிமைகள்:**

ஒரு தனிநபர் சமுதாயத்தில் முழுமையாக பங்கேற்பது அவசியமானது ஆகும். சமூக உரிமைகள் என்பது வாழ்க்கைத் தரத்திற்கு தேவையான கல்வி, சுகாதாரம், உணவு, உடை, தங்குமிடம் மற்றும் சமூக பாதுகாப்பு ஆகிய உரிமைகளை உள்ளடக்கியதாகும்.

**ஈ.பொருளதார உரிமைகள்:**

பொருளாதாரத்தில் பங்கேற்பதற்கான உரிமை என்பது அனைவருக்கும் பயனளிக்கக் கூடிய வகையில் விரும்பத்தக்க வேலைக்குச் செல்வதாகும். ஒவ்வொரு தனிநபரும் தங்களின்

தேவைகளை பூர்த்தி செய்யக் மூடிய நிலைமை இருப்பதை உறுதி செய்கிறது. வேலைவாய்ப்பு, நியாயமான ஊதியத்திற்கான உரிமைகள், நியாயமான ஊதியத்திற்கான உரிமைகள், நியாயமான ஊதியத்திற்கான உரிமைகள், நியாயமான வேலை நேரம், தங்குமிடம், கல்வி, போதுமான வாழ்க்கைத் தரம், மற்றும் சொத்துரிமை ஆகிய உரிமைகள் இதில் அடங்கும்.

**உ. கலாச்சார உரிமைகள்:**

சமயசுதந்திரம், மொழியைப் பேசுவதற்கான உரிமை மற்றும் சமூகத்தின் கலாச்சார வாழ்க்கையை நடைமுறைப்படுத்துவதற்கான உரிமை, அறிவியல் முன்னேற்றத்தில் பங்கு பெறுவதற்கான உரிமை, தார்மீக மற்றும் பொருள் ஆர்வத்தைப் பாதுகாக்கும் உரிமை ஆகியவைகள் கலாச்சார உரிமைகள் ஆகும்.

**மனித உரிமைகள் ஆணையம்:**

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக ஓர் ஆணையத்தை அமைக்க ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய அங்கமான பொருளாதார மற்றும் சமூக சபை (ECOSOC) அதிகாரம் பெற்றது. மனித உரிமைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தேசிய மற்றும் மாநில அளவிலான மனித உரிமை ஆணையங்கள் நிறுவப்பட்டன.

**அ. தேசி மனித உரிமைகள் ஆணையம் (NHRC):**

இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) 1993ஆம் ஆண்டு அக்டோபர் 12ஆம் நாள் நிறுவப்பட்டது. இது சுதந்திரமான, சட்டப்பூர்வமான, அரசியலமைப்பு சாராத ஓர் அமைப்பாகும். இதன் தலைமையகம் புதுடெல்லியில் அமைந்துள்ளது. தேசிய மனித உரிமைகள் ஆணையம் என்பது ஒரு தலைவரையும் பிற உறுப்பினர்களையும் உள்ளடக்கிய ஓர் அமைப்பாகும். தலைவரையும் உறுப்பினர்களையும் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். அவர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் (அ) 70 வயது வரை இதில் எது முன்னதாக வருகிறதோ அதுவரை பதவியில் நீடிப்பார். தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஐந்து பிரிவுகளைக் கொண்டுள்ளது. சட்டப்பிரிவு, புலனாய்வுப் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் திட்டப்பிரிவு, பயிற்சி அளித்தல் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு ஆகியனவாகும்.

**மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகளுக்கு இடையேயான வேறுபாடுகள்:**

| மனித உரிமைகள் | வாழ்வியல் சிவில் உரிமைகள் |
|---|---|
| மனித உரிமைகளானது தேசிய இனம், பாலினம், இன, மதம் மற்றும் வயது ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் எல்லா இடங்களிலும் அனைவருக்கும் உரித்தானது. | சிவில் உரிமைகள் என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டில் அல்லது மாநிலத்தில் குடியுரிமை பெறுவதன் மூலம் ஒருவர் அனுபவிக்கும் உரிமைகள் ஆகும். |
| மனித உரிமைகள் உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் மற்றும் அனைத்து நாடுகளுக்கும் உரியதாகும். | சிவில் உரிமைகள் நாட்டிற்கு நாடு அல்லது அரசாங்கத்திற்கு பெரிதும் வேறுபடுகின்றன. இவை அரசியலமைப்புச் சட்டத்துடன் தொடர்பானவை |
| எந்த ஒரு தேசமும் தனிநபருக்கான மனித உரிமைகளை பறிக்கக் முடியாது. | அந்தந்த நாடுகள் பல்வேறு வகையான சிவில் உரிமைகள் மூலம் சுதந்திரங்களை வழங்கவோ அல்லது மறுக்கவோ முடியும். |
| மனித உரிமைகள் பிறப்பின் அடிப்படையில் இயற்கையாக அமையப்பெற்ற அடிப்படை உரிமைகள் ஆகும். | சிவில் உரிமைகள் சமூகத்தினால் உருவாக்கப்படுகின்றன. |

**ஆ. மாநில மனித உரிமைகள் ஆணையம்:**

தமிழ்நாட்டில் 1997ஆம் ஆண்டு ஏப்ரல் 17இல் மாநில மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது. இது மாநில அளவில் செயல்படுகிறது. இது ஒரு தலைவர் உட்பட மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கியது. இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் உள்ள மாநிலப் பட்டியல், பொதுப் பட்டியல் ஆகியவற்றின் கீழுள்ள துறைகள் தொடர்பான மனித உரிமை மீறல் தொடர்பானவைகளை மாநில மனித உரிமைகள் ஆணையம் விசாரிக்கும் (NHRC) ஏற்கனவே விசாரிக்கும் வழக்குகளைத் தவிர)

**மனி உரிமை நிறுவனங்கள்:**

உலகெங்கிலும் பல நிறுவனங்கள் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் முயற்சிகளை எடுத்துள்ளன. இந்த அரசுசாரா நிறுவனங்கள் அரசாங்கங்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பதுடன் மனித உரிமைக் கொள்கைகளின்படி செயல்படுமாறு வலியுறுத்துகின்றன. அவைகளுள் ஆம்னஸ்டி இண்டர்நேஷனல் (Amnesty international), குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் (Children's Defence fund), மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) ஆகியனவாகும்.

| |
|---|
| **இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவுகள்** |
| **பிரிவு 24**– குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடைசெய்கிறது. |
| **பிரிவு 39 (f)**– ஆரோக்கியமாக குழந்தைகள் வளர வழிவகைச் செய்கிறது. |
| **பிரிவு 45**– 6 வயது வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்ப கால குழந்தைகளுக்கும் ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியை வழங்க அரசு முயல்கிறது. |

**குழந்தைக்கான உரிமைகள்:**

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் பிரிவு-1 இன்படி பதிவெட்டு வயதுக்குட்பட்ட அனைவரும் 'குழந்தை' எனப்படுவர். குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான மாநாட்டின் அறிக்கை 1989ஆம் ஆண்டு நவம்பர் 20ல் வெளியிடப்பட்டது.

குழந்தை ஒரு முக்கியமான தேசியச் சொத்தாக கருதப்படுகிறது. தேசத்தின் எதிர்காலமானது அந்நாட்டின் குழந்தைகள் எவ்வாறு, வளர்ந்து முதிர்ச்சியடைகிறார்கள் என்பதைப் பொறுத்தது. எனவே அனைத்து வகையான சுரண்டல்கள் மற்றும் தவறான பயன்பாட்டிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பது நமது சமூகத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது. இந்தியாவில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க நமது சமூகத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது. இந்தியாவில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

| |
|---|
| 1978 – சர்வதேச பெண்கள் ஆண்டு |
| 1979 – சர்வதேச குழந்தைகள் ஆண்டு என ஐ.நா.சபை அறிவித்துள்ளது. |

**அ. கல்வி உரிமைச் சட்டம்:**

6 முதல் 14 வயது வரையிலான அனைத்துத் குழந்தைகளுக்கும் இலவசமாக மற்றும் கட்டாயக் கல்வியை அரசு வழங்குவதற்கு சட்டப்பிரிவு 21A வழிவகைச் செய்கிறது.

**ஆ. குழந்தைத் தொழிலாளர் சட்டம் (தடை மற்றும் சீரமைப்புச்சட்டம், 1986)**

இது 15வயது பூர்த்தியடையாத எந்த ஒரு குழந்தையையும் வேலைக்கு அமர்த்த தடை செய்கிறது.

**இ. சிறார் நீதிச்சட்டம்:**

இந்தச் சட்டம் போதுமான கவனிப்பு இல்லாமல் இருக்கும் குழந்தைகளை நட்பு ரீதியில் அணுகி அவர்களை சீர்திருத்த முயற்சி மேற்கொள்கிறது.

## ஈ. போக்சோ(POCSO) சட்டம், 2012

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம். குழந்தைகளின் நலனே மிக முக்கியத்துவம் அளிககப்பட வேண்டிய அம்சம் எனக் கருகிறது.

**1098 குழந்தைகளுக்கான உதவி மைய எண்:** இது இந்தியாவில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட 24 மணி நேர கட்டணமில்லா அவசரத் தொலைத் தொடர்பு சேவையாகும். குழந்தைத் தொழிலாளர்கள், குழந்தைத் திருமணம் மற்றும் ஏதேனும் வன்கொடுமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

**பெண்கள் உரிமைகள்:**

பெண்கள் மற்றும் சிறுமியின் உரிமைகளும் மனித உரிமைகளாகும். பெண்களுக்கு தங்களது உரிமைகளை முழுமையாகவும் சமமாகவும் அனுபவிக்கவும், அனைத்து பாகுபாடுகளிலிருந்தும் விடுபடவும் உரிமை உள்ளது. அமைதி, பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவைகள் மனித உரிமைகளுக்கான ஆகியவைகள் மனித உரிமைகளுக்கான அடிப்டைகள் ஆகும். ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் பெண்கள் மற்றும் ஆண்கள் இருவருக்கும் சமமான உரிமைகளை உறுதிசெய்கிறது.

1979ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டில் பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான மசோதாவை ஐ.நா.பாதுகாப்பு சபை ஏற்றுக்கொண்டது. இது பெண்களுக்கான சர்வதேச உரிமைகள் மசோதா என அழைக்கப்படுகிறது.

1995ஆம் ஆண்டில் பெய்ஜிங்கில் நடைபெற்ற நான்காவது உலக மகளிர் மாநாடு, பெண்களின் உரிமைகளை அங்கீகரிப்பதற்கும் உலகளவில் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு தளத்தை உருவாக்கியது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டங்கள் இந்த இலக்குகளை அடைவதற்கு தேவையானவற்றை கண்காணிக்கிறது. மேலும் பெய்ஜிங் மாநாட்டின் இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக யுனிபெம்(UNIFEM) என்றழைக்கப்படும் பெண்களுக்கான ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு நிதி அமைப்பு 1995 முதல் செயல்பட்டு வருகிறது. பெண்களும் சிறுமிகளும் உரிமைகளை முழுமையாக அனபவிக்கும் போதுதான் உண்மையான சமத்துவம் நிலவுகிறது.

**பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நல்வாழ்வுச் சட்டம்**

இந்த சட்டம் மூத்த குடிமக்களுக்கும் பெற்றோர்களுக்கும் வழங்குவதற்கும் அவர்களின் குழந்தைகள் மற்றும் வாரிசுதாரர்களின் சட்டப்பூர்வமான கடமையாகிறது. முதுமை காலத்தில் பாதுகாப்பும் ஆதரவும் மனித உரிமைகளாக கருதப்படுகின்றன.

| சட்டங்கள் | விதிகள் |
|---|---|
| இந்து விதவை மறுமணச் சட்டம், 1856 | விதவைகள் மறுமணத்தை சட்டப்பூர்வமாக்கியது |
| இந்து திருமணச் சட்டம், 1955 | பெண்களின் திருமண வயது 21 என்று சட்டப்பூர்வமாக்கியது. |
| இந்து வாரிசு சட்டம், 1956 | பெண்கள் தங்கள் பெற்றோர்கள் சொத்தினை மரபு வழியாக பெறுவதை உறுதி செய்கிறது. |
| வரதட்சணைத் தடைச்சட்டம், 1961 | வரதட்சணை என்ற பெயரில் மருமகளை மோசமாக நடத்துவதற்க கடுமையான தண்டனை வழங்குகிறது. |
| பெண்களை கேலி செய்வதற்கு எதிரானச்சட்டம், 1997 | பெண்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. |
| அநாகரிகமாக சித்தரித்தலுக்கெதிரான சட்டம், 1999 | பத்திரிகைகள், செய்தித்தாள்கள், போன்றவற்றில் பெண்களை அநாகரிகமாக சித்தரித்தலைத் தடைசெய்கிறது. |
| தொழிற்சாலைச் சட்டம், 1948 | பெண் தொழிலாளர்களைப் பாதுகாக்கிறது. |

| | |
|---|---|
| தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1951<br>சுரங்கச் சட்டம், 1952<br>மகப்பேறு நலச் சட்டம், 1961 | |
| வன்கொடுமை தடுப்பு சட்டம், 2005 | கணவர் மற்றும் குடும்ப உறுப்பினர்களால் பெண்கள் துன்புறுத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கிறது. |

**முடிவுரை:**

மனித உரிமைகள் ஒவ்வொருவருக்குமான சமத்துவம் மற்றும் நேர்மை பற்றியதாகும். மேலும் இது அனைவரையும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்தப்படுவதை உறுதி செய்கிறது. மனித உரிமையைப் பாதுகாப்பது அனைவரின் பொறுபாகும். மனித உரிமைகளுக்கான புரிதலும் மரியாதையையும் நமது சமூகத்தில் அமைதி, நல்லிணக்கம், பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்திற்கான அடித்தளத்தை வழங்குகிறது.

அலகு-6
பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை

**அறிமுகம்**

இந்தியா அமைதியை விரும்பும் ஒரு நாடு. பொதுவாக, இந்தியா அனைத்து நாடுகளிடமும் குறிப்பாக அண்டை நாடுகளிடம் நல்லுறவைப் பேணுகிறது. அதேநேரத்தில் அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து இந்திய எல்லையை பாதுகாப்பதற்கு, இந்தியா தன் பாதுகாப்பை பலப்படுத்துகிறது. எனவே இந்திய அரசு பாதுகாப்புத் துறைக்கு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. இப்பாடத்தில் இந்திய நாட்டின் பல்வேறு விதமான பாதுகாப்புப் படைகளைப் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாதுகாப்பு அமைப்பின் அவசியம்**

ஒவ்வொரு நாட்டின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அதன் தேசிய பாதுகாப்பு மிகவும் அவசியமானது ஆகும். இது நாட்டின் அமைதிக்கும், முன்னேற்றத்திற்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

**இந்திய பாதுகாப்புச் சேவைகள்**

இந்தியக் குடியரசுத் தலைவர் நாட்டின் தலைவராகவும், நமது பாதுகாப்பு அமைப்பில் மிக உயர்ந்த பதவி நிலையையும் வகிக்கிறார். அவர் இந்திய ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதி ஆவார்.

**இந்தியாவில் பாதுகாப்பு படைகளின் பிரிவுகள்**

**இந்திய ஆயுதப் படைகள் (Indian Armed Forces) –** ஆயதப் படையானது நாட்டின் இராணுவப் படை, கடற்படை, விமானப்படை மற்றும் கடலோரக் காவல்படை ஆகியவற்றை உள்ளடக்கிய முதன்மைப் படைகள் ஆகும். அவைகள் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றன.

**துணை இராணுவப் படைகள் (ீயசயஅடைவையசல குழசஉநள)** –அசாம் ரைபில்ஸ், சிறப்பு எல்லைப்புறப்படை ஆகியன துணை இராணுவப் படைகளாகும்.

**மத்திய ஆயுதக் காவல் படைகள் (Central Armed Police Forces)–** BSF, CRPF. ITBP, CISFமற்றும் SSBஆகியன மத்திய ஆயுதக் காவல் படைகளாகும். அவைகள் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றன. CAPF என்ற படைப்பிரிவுகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிக்கு ஏற்றவாறு இராணுவம் மற்றும் காவல் துறையுடன் இணைந்து பணியாற்றுகின்றன.

| |
|---|
| இந்திய ஆயுதப் படைகளை கௌரவிப்பதற்காக இந்திய அரசால் தேசியப் போர் நினைவுச் சின்னம் (National War Memorial) கட்டப்பட்டுள்ளது. இந்நினைவுச் சின்னம் புதுடெல்லியில் உள்ள இந்திய கேட் அருகில் 40 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. போரின்போது நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த இந்திய இராணுவ வீரர்களின் பெயர்கள் நினைவுச் சின்னத்தின் சுவர்களில் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. |

**இந்திய ஆயுதப் படைகள்**

**இராணுவப்படை**

இந்திய இராணுவப் படை என்பது நில அடிப்படையிலான ஒரு பிரிவு ஆகும். இது உலக அளவில் மிகப்பெரிய தன்னார்வப் படைப்பிரிவு ஆகம். இது ஜெனரல்(General) என்றழைக்கப்படும் நான்கு நட்சத்திர அந்தஸ்து கொண்ட இராணுவப் படைத் தளபதியால் வழிநடத்தப்படுகிறது.

தேசிய பாதுகாப்பு, தேசிய ஒற்றுமை, அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டை பாதுகாத்தல், உள்நாட்டு அச்சுறுத்தல்கள் மற்றும் நாட்டின் எல்லைக்குள் அமைதியையும், பாதுகாப்பையும் பேணுதல் ஆகியன இந்திய இராணுவப் படையின் முதன்மைப் பணிகளாகும். மேலும் இது இயற்கை பேரழிவு மற்றும் பேரிடர் காலங்களில் மனிதாப்பிமான மீட்புப் பணிகளையும் செய்கிறது. இந்திய இராணுவம் 'ரெஜிமென்ட்' என்ற ஒரு அமைப்பு முறையைக் கொண்டது. இது செயல்பாட்டு ரீதியாகவும் புவியியல் அடிப்படையிலும் ஏழு படைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

**கடற்படை (Navy)**

கடற்படையின் முதன்மை நோக்கம் நாட்டின் கடல் எல்லைகளை பாதுகாப்பதாகும். மேலும் நாட்டின் பிற ஆயுதப்படைகளுடன் இணைந்து இந்திய நிலப்பகுதி, மக்கள், கடல்சார் நலன்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் (அ) ஆக்கிரமிப்புகளைத் தடுக்க அல்லது தோற்கடிக்கும் பணியில் ஈடுபடுகிறது. இது அட்மிரல் (admiral) என்றழைக்கப்படும் நான்கு நட்சத்திர அந்தஸ்து கொண்ட கடற்படைத் தளபதியால் வழிநடத்தப்படுகிறது. இது மூன்று கடற்படைப் பிரிவுகளைக் கொண்டது.

**விமானப்படை (Air Force)**

இந்திய விமானப்படை என்பது இந்திய ஆயுதப்படைகளின் வான்வெளி படை ஆகும். இந்திய வான்வெளியைப் பாதுகாப்பதும், ஆயுத மோதலின் போது வான்வழிப் போரை நடத்துவதும் இதன் முதன்மை நோக்கமாகம். இது ஏர் சீப் மார்ஷல் (Air Chief Marshal) என்றழைக்கப்படும் நான்கு நட்சத்திர அந்தஸ்து கொண்ட விமானப்படை தளபதியால் வழிநடத்தப்படுகிறது. இது ஏழு படைப்பிரிவுகளைக் கொண்டது.

**பீல்டு மார்சல் (Field Marshal)** - இது ஐந்து நட்சத்திர அந்தஸ்து கொண்ட பொது அதிகாரி பதவி. இது இந்திய இராணுவத்தின் உயர்ந்த பதவி ஆகும்.

**சாம் மானக்ஷா** என்பவர் இந்தியாவின் முதல் பீல்டு மார்சல் ஆவார். **கே.எம்.கரியப்பா** இரண்டாவது பீல்டு மார்ஷல் ஆவார்.

இந்திய விமானப்படையில் ஐந்து நட்சத்திர அந்தஸ்து கொண்ட மார்ஷல் பதவிக்கு உயர்வு பெற்ற முதல் மற்றும் ஒரே அதிகாரி **அர்ஜுன் சிங்** ஆவார்.

1758ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட 'மெட்ராஸ் ரெஜிமென்ட்'(The Madras Regiment) இந்திய இராணுவத்தின் மிகப்பழமையான காலாட்படை பிரிவுகளில் ஒன்றாகும். இந்த 'ரெஜிமென்ட்' தமிழ்நாட்டின் உதகமண்டலத்தில் உள்ள வெல்லிங்டன் என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

1962இல் நடந்த சீன இந்திய போரானது இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதின் அவசியத்தை உணர்த்தியது. இந்திய இராணுவத்தின் அவசர ஆணையத்திற்கான அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்க பூனா மற்றும் சென்னை ஆகிய இடங்களில் 'அதிகாரிகள் பயிற்சிப் பள்ளிகள்'(Officers Trainning Schools –OTS)நிறுவப்பட்டது. 1998 ஜனவரி 1 முதல் அதிகாரிகள் பயிற்சிப் பள்ளியானது 'அதிகாரிகள் பயிற்சி அகாடமி'(Officers Training Academy – OTA) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**இந்தியக் கடலோரக் காவல்படை (Indian Coast Guard)**

இந்தியப் பாராளுமன்றத்தின் 1978ஆம் ஆண்டு கடலோர காவல் படைச் சட்டத்தின்படி, இந்தியாவின் சுதந்திர ஆயுதப் படையாக இந்தியக் கடலோரக் காவல்படை 1978இல் நிறுவப்பட்டது. இது பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. இந்த கடலோரக் காவல் படையானது

கடற்படை, மீன்வளத் துறை, சுங்கத்துறை, மத்திய – மாநில காவல்படை ஆகியவற்றுடன் ஒத்துழைத்து செயல்படுகிறது.

கி.பி (பொ.ஆ) 1025இல் தமிழ்நாட்டில் இருந்து சோழ மன்னர் முதலாம் இராஜேந்திரன் தென்கிழக்கு ஆசியாவின் கடல் சார் பகுதியான ஸ்ரீ விஜயம் மீது தன் கடற்படையெடுப்பை தொடங்கினார். மேலும் தற்போது கேதா என்றழைக்கப்படும் கடாரம் பகுதியை வென்றார். முதலாம் இராஜேந்திர சோழனின் ஸ்ரீவிஜயத்துக்கு எதிரான இந்த கடல் கடந்த படையெடுப்பு இந்திய வரலாற்றில் சிறப்பான நிகழ்வாக கருதப்படுகிறது.

**துணை இராணுவப் பாதுகாப்புப் படைகள்**

உள்நாட்டு பாதுகாப்பை பராமரிக்கவும், கடலோரப் பகுதியை பாதுகாக்கவம், இராணுவத்திற்கு உதவுவதற்கும் பயன்படுத்தப்படும் படைகள் துணை இராணுவப் படைகள் என்றழைக்கப்படுகின்றன. இரயில் நிலையங்கள், எண்ணெய் வயல்கள், சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் ஆகிய முக்கியமான பகுதிகளை பாதுகாக்கும் பணியைச் செய்கிறது. இயற்கை மற்றும் மனித பேரழிவுகளிலிருந்து மக்களை மீட்கும் பணியிலும் இப்படைகள் ஈடுபடுத்துகின்றன. அமைதி காலங்களில் இந்த துணை இராணுவப் படைகள் சர்வதேச எல்லைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை வகிக்கின்றன. அவைகள்

1. அஸ்ஸாம் ரைபிள்ஸ் (AR)
2. சிறப்பு எல்லைப்புறப்படை (SFF)

**அஸ்ஸாம் ரைபிள்ஸ் (Assam Rifles – AR)**

இது அஸ்ஸாம் பகுதியில் 1835ஆம் ஆண்டு பிரிட்டிஷாரால் உருவாக்கப்பட்டது. இது கச்சார் லெவி எனப்பட்ட குடிப்படை (இராணுவ பயிற்சி பெற்ற மக்கள் குழு) ஆகம். தற்போது இதில் 46 படைப்பிரிவுகள் உள்ளன. இது உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

**சிறப்பு எல்லைப்புற படை (Special Frontier Force – SFF)**

சிறப்பு எல்லைப்புற படை என்பது ஒரு துணை இராணுவ சிறப்புப்படை ஆகும். இது 1962இல் உருவாக்கப்பட்டது. இப்படை புலனாய்வு பணியகத்தின் (IB) நேரடி மேற்பார்வையில் இருந்தது. பின்னர் இது இந்தியாவின் புலனாய்வு அமைப்பான ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவின் கீழ் செயல்பட்டு வருகிறது.

**மத்திய ஆயுதக் காவல் படைகள் (Central Armed Police Forces – CAPF)**

துணை இராணுவப் படையில் இருந்த பின்வரும் ஐந்து படைப்பிரிவுகள் மத்திய ஆயுதக் காவல் படையாக மறுவரையறை செய்யப்பட்டு மார்ச், 2011 முதல் உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.

1. மத்திய ரிசர்வ் காவல் படை (CRPF)
2. இந்தோ – திபெத்திய எல்லைக் காவல் (ITBP)
3. எல்லைப் பாதுகாப்புப் படை (BSF)
4. மத்திய தொழிலக பாதுகாப்புப் படை (CISF)
5. சிறப்பு சேவை பணியகம் (SSB)

**மத்திய ரிசர்வ் காவல் படை (Central Reserve Police Force – CRPF)**

அரசியலமைப்பின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகவும் தேசிய ஒருமைப்பாட்டை காப்பதற்கும், சமூக நல்லிணக்கம் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், சட்டம் ஒழுங்கு மற்றும் உள்நாட்டு பாதுகாப்பினை திறம்பட மற்றும் திறமையாக பராமரிப்பதற்கும் இந்திய அரசாங்கத்திற்கு உதவுவதே மத்திய ரிசர்வ் காவல் படையின் நோக்கம் ஆகும்.

**தேசிய மாணவர் படை (National Cadet Corps – NCC)**

தேசிய மாணவர் படை என்பது இராணுவப்படை, கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு முத்தரப்பு சேவை அமைப்பாகும். இந்த அமைப்ப நாட்டின் இளைஞர்களை ஒழுக்கமான மற்றும் தேசபக்தி மிக்க குடிமக்களாக உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளது. தேசிய மாணவர் படை என்பது ஒரு தன்னார்வ அமைப்பாகும். இது இந்தியா முழுவதும் உள்ள உயர் நிலைப்பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் பல்கலைக்கழகங்களிலிருந்து மாணவர்களை தேர்ந்தெடுக்கிறது. மேலும் மாணவர்களுக்கு சிறிய ஆயுதங்கள் மற்றும் அணிவகுப்புகளில் அடிப்படை இராணுவப் பயிற்சியும் அளிக்கிறது.

மத்திய ரிசர்வ் காவல் படையின் ஒரு சிறப்புப் பிரிவே விரைவு அதிரடிப் படை(Rapid action Force – RAF) ஆகும். இது கலவரம், கூட்ட நெரிசலை கட்டுப்படுத்துதல், மீட்பு, நிவாரண நடவடிக்கைகள் மற்றும் அமைதியற்ற சூழநிலைகள் ஆகியவற்றை திறம்பட எதிர்கொள்கிறது.

**இந்தோ – திபத்திய எல்லைக் காவல் (Indo – Tibetan Border Police – ItBP)**

இது எல்லையை பாதுகாக்கும் ஒரு காவல்படை ஆகும். இப்படை அதிக உயரமான பகுதியில் செயல்படுவதில் சிறப்பு வாய்ந்தது. இந்திய – சீன எல்லைப்பகுதிகளில் லடாக் முதல் அருணாச்சல பிரதேசம் வரையிலான எல்லைப் பகுதிகளை காக்கும் பணிகளுக்காக இது பயன்படுத்தப்படுகிறது.

**எல்லைப் பாதுகாப்புப்படை (Border Security Force – BSF)**

இது இந்தியாவின் எல்லைக்காவல் படை என அழைக்கப்படுகிறது. அமைதி காலங்களில் இந்திய நில எல்லைப்பகுதிகளைக் காப்பது மற்றும் நாடு கடந்த குற்றங்களை தடுப்பது ஆகிய பணிகளைச் செய்கிறது.

**மத்திய தொழிலக பாதுகாப்புப் படை (central Industrial Security Froce – CISF)**

மத்திய தொழிலக பாதுகாப்புப் படை 1969 மார்ச் 10ஆம் நாள் இந்திய நாடாளுமன்ற சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டது. முக்கிய அரசாங்க கட்டடங்களை பாதுகாப்பது, டெல்லி மெட்ரோ பாதுகாப்பு மற்றும் விமான நிலைய பாதுகாப்பு ஆகியன இதன் முக்கிய பணிகள் ஆகும்.

| | |
|---|---|
| ஜனவரி-15 | - இராணுவ தினம் |
| பிப்ரவரி-1 | - கடலோரக் காவல்படை தினம் |
| மார்ச்-10 | - மத்திய தொழிலக பாதுகாப்பு படை தினம் |
| அக்டோபர்-7 | - விரைவு அதிரடிப்படை தினம் |
| அக்டோபர்-8 | - விமானப்படை தினம் |
| டிசம்பர்-4 | - கடற்படை தினம் |
| டிசம்பர்-7 | - ஆயுதப்படைகள் கொடி தினம் |

**சிறப்பு சேவை பணியகம் / சாஷாஸ்திர சீமா பால் (Special Service Bureau /Sashastra Seema Bal –SSB)**

இது இந்தியா – நேபாளம் மற்றும் இந்தியா – பூடான் எல்லைப் பகுதிகளை பாதுகாக்கும் ஆயுதப்படைகள் ஆகும்.

**ஊரக்காவல் படை (Home Guard)**

இந்திய ஊர்க்காவல் படை ஒரு தன்னார்வப் படை ஆகும். இது இந்தியக் காவல்துறைக்கு துணையாக பணியாற்றுகிறது. இப்படை உறுப்பினர்கள் சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளான தொழில்சார் வல்லுநர்கள், கல்லூரி மாணவர்கள், விவசாய மற்றும் தொழில்துறை பணியாளர்கள் ஆகியோர்களிலிருந்து நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் சமுதாய முன்னேற்றத்திற்காக தங்கள் ஓய்வு நேரத்தை ஒதுக்குகின்றனர். 18 முதல் 50 வயதுடைய அனைத்து இந்தியக் குடிமக்களும் ஊர்க்காவல் படையில் சேர தகுதியுடையவர்களாவர். ஊர்க்காவல் படையில் சேரும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 3 முதல் 5 ஆண்டுகள் ஆகும்.

நம் நாட்டை பாதுகாக்க, இந்திய ஆயுதப்படைகள் எப்போதும் தயாராக வைக்கப்பட்டுள்ளன. நாட்டிற்கு சேவை செய்யவும், நாட்டைக் காப்பதற்கும் இளைஞர்கள் தாமாக முன்வந்து இராணுவத்தில் சேர வேண்டும். இளைஞர்களை பணியில் சேர்க்க பாதுகாப்பு துறை தயாராக உள்ளது. நாட்டிற்கு சேவை செய்ய ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.

**II. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை**

வெளியுறவுக் கொள்கை என்பது இறையாண்மை கொண்ட ஒரு நாடு உலகின் மற்ற நாடுகளுடன் எவ்வாறு தொடர்பு கொள்ளும் என்பதை வரையறுக்கும் அரசியல் அரசியல் இலக்குகளின் தொகுப்பாகும். இது நாட்டு மக்களின் நலன்களையும் நாட்டின் பொருளாதாரத்தையும் பாதுகாக்க முயல்கிறது. நமது நாட்டின் வெளியுறவு என்பது சில கொள்கைகளையும், செயல்திட்டங்களையும் அடிப்படையாக கொண்டது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது அதன் காலனித்துவ பாதிப்புகளின் பின்னணியிலிருந்து உருவானது ஆகும்.

**இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கொள்கைகள்**

- தேசிய நலனைப் பாதுகாத்தல்
- உலக அமைதியினை அடைதல்
- ஆயுதக் குறைப்பு
- காலனித்துவம், இனவெறி மற்றும் ஏகாதிபத்தியம் ஆகியவற்றை நீக்குதல்
- நட்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- பொருளாதார வளர்ச்சி

**பஞ்சசீலம்**

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு, இந்திய வெளியுறவுக் கொள்கையை வடிபமைப்பதில் முதன்மை சிற்பியாக இருந்தார். நேரு உலக அமைதிக்கு ஆதரவாளராக இருந்ததால் தனது கொள்கை திட்டமிடலில் உலக அமைதிக்கு மிக முக்கிய இடத்தை வழங்கினார். பஞ்சசீலம் என்றழைக்கப்பட்ட அமைதிக்கான ஐந்து கொள்கைகளை அவர் அறிவித்தார். அவைகள்:

1. ஒவ்வொரு நாட்டின் எல்லையையும், இறையான்மையையும் பரஸ்பரம் மதித்தல்.
2. பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை
3. பரஸ்பர உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்
4. பரஸ்பர நலனுக்காக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல்.
5. அமைதியாக இணைந்திருத்தல்.

**அணிசேராமை**

அணிசேராமை என்ற சொல் வி.கே.கிருஷ்ணமேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது. அணிசேராமை என்பது இந்திய வெளியுறவுக் கொள்கையின் மிக முக்கிய அம்சமாக விளங்குகிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உருவான அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் தலைமையிலான இராணுவக் கூட்டில் இணையாமல் வெளிநாட்டு விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தை பராமரித்தலே அணி சேராதிருத்தலின் நோக்கம் ஆகும். அணிசேராமை என்பது நடுநிலைமையும் அல்ல,ஈடுபாடின்மையும் அல்ல. அணிசேராமை என்பது எந்தவொரு இராணுவக் கூட்டணியிலும் (அமெரிக்கா, ரஷ்யா) சேராமல் சர்வதேச பிரச்சனைகளில் சுதந்திரமாக தீர்மானிக்கம் நிலைப்பாட்டைக் குறிக்கும்.

**அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள்**

இந்தியாவின் ஜவஹர்லால் நேரு.யுகோஸ்லாவியாவின் டிட்டோ, எகிப்தின் நாசர், இந்தோனேசியாவின் சுகர்னோ மற்றும் கானாவின் குவாமே நிக்ரூமா ஆகியோராவர்.

**நெல்சன் மண்டேலா**
இவர் ஆப்பிரிக்கா தேசிய காங்கிரசின் (தென் ஆப்பிரிக்கா) தலைவராக செயல்பட்டார். இவர் இனவெறிக்கு எதிரான ஓர் உறுதியான போராளி ஆவார். நிறவெறிக்கொள்கை என்பது இனப்பாகுபாட்டின் ஒரு மோசமான வடிவம் ஆகும். இது மனிதாபிமானத்திற்கும், மக்களாட்சிக்கும் எதிரானது. இனவெறிக்கொள்கை மற்றும் அனைத்து வகையான இனப்பாகுபாட்டிற்கும் எதிராக இந்தியா போராடியது. 1990ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவில் இனவெறிக் கொள்கையை முடிவுக்கு கொண்டு வந்தது. இந்திய வெளியுறவுக் கொள்கையின் மிகச்சிறந்த வெற்றியாகும்.

**அண்டை நாடுகளுடனான இந்தியாவின் நட்புறவு**

அண்டை நாடுகளுடன் இந்தியாவின் நிலைப்பாடு தனித்துவமானது. இந்தியா எப்போதும் சர்வதேச மற்றும் பிராந்திய நாடுகளுடன் ஒத்துழைப்பை கொண்டுள்ளது. ஏனென்றால் ஒத்துழைப்பு மூலமே நாடுகளிடையேயான பிரச்சனைகளை அமைதியான முறையில் தீர்க்க முடியும் என்று இந்தியா நம்புகிறது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது நட்புறவுகளை வளர்ப்பது மற்றும் அண்டை நாடுகளுடன் ஒத்துழைப்பது என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், சீனா, பூடான், வங்காளதேசம் மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளுடன் இந்தியா பொதுவான நில எல்லைகளை பகிர்ந்து கொள்கிறது. மேலும் இலங்கையுடன் பொதுவான கடல் எல்லையையும் பகிர்ந்து கொள்கிறது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், சீனா, பூடான், வங்காளதேசம் மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளுடன் இந்தியா பொதுவான நில எல்லைகளை பகிர்ந்து கொள்கிறது. மேலும் இலங்கையுடன் பொதுவான கடல் எல்லையையும் பகிர்ந்து கொள்கிறது.

இந்தியா பின்வரும் நாடுகளுடன் எல்லைகளைப் பகிர்ந்து கொண்டு பரந்த நாடாக விளங்குகிறது.

- வடமேற்கில் - பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான்
- வடக்கில் - சீனா, நேபாளம், பூடான்
- கிழக்கில் - வங்காளதேசம்
- தூர கிழக்கில் - மியான்மர்
- தென்கிழக்கில் - இலங்கை
- தென்மேற்கில் - மாலத்தீவு

**அண்டை நாடுகளுக்கான முன்னுரிமைக் கொள்கை**

இக்கொள்கையானது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் ஒரு பகுதியாகும். இது இந்தியாவின் அண்டை நாடுகளுடனான உறவை மேம்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்துகிறது.

வளஆதாரங்கள், கருவிகள் மற்றும் பயிற்சி ஆகிய வடிவில் அண்டை நாடுகளுக்கு தேவையான ஆதரவினை இந்தியா அளித்து வருகிறது. பொருட்கள், மக்கள், ஆற்றல், மூலதனம் மற்றும் தகவல்கள் ஆகியவற்றின் தடையில்லா பரிமாற்றத்தை மேம்படுத்துவதற்காக அதிக இணைப்பும் ஒருங்கிணைப்பும் அளிக்கப்படுகிறது.

**கிழக்குச் செயல்பாடு என்ற கொள்கை**

தென்கிழக்கு ஆசியா இந்தியாவின் வடகிழக்கில் இருந்து ஆரம்பமாகிறது. மியான்மர் இந்தியாவிற்கும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள நாடுகளுக்கும் பாலமாக அமைந்துள்ளது. இக்கொள்கையின் நோக்கம் ஆசியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பதோடு, இந்தோ-பசிபிக் பகுதியில் நிலையான மற்றும் பன்முக சமநிலையை உறுதி செய்வதும் ஆகும்.

இந்தியா தனது அண்டை நாடுகளுடன் பின்வரும் பொதுவான பொருளாதார செயலாண்மைத் திறனில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

**சார்க் (SAARC)**

இந்தியா பிராந்திய ஒத்துழைப்பில் நம்பிக்கை கொண்டுள்ளது. தெற்காசிய நாடுகளுக்கிடையே சகோதரத்துவ பிணைப்புகளை வளர்ப்பதற்காகவும், ஒத்துழைப்பு மற்றும் அமைதியான முறையில் இணைந்திருத்தல் ஆகியவற்றிற்காகவும் தெற்காசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பு நிறுவப்பட்டது. சார்க் அமைப்பு 8 உறுப்பு நாடுகளைக் கொண்டது. அவைகள் இந்தியா, வங்காளதேசம், பாகிஸ்தான்,நேபாளம், பூடான், இலங்கை, மாலத்தீவு மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியனவாகும்.

**பி.சி.ஐ.எம் (BCIM)**

இது வங்காளதேசம், சீனா, இந்தியா, மியான்மர் பொருளாதார போக்குவரத்து, எரிசக்தி மற்றும் தொலை தொடர்பு ஆகியவற்றில் எல்லை கடந்து ஒரு செழிப்பான பொருளாதார மண்டலத்தை உருவாக்க இக்கூட்டமைப்பு உதவுகிறது.

**பிம்ஸ்டெக் (BIMSTEC)**

இது வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார கூட்டுறவிற்கான முயற்சி ஆகும். தொழில்நுட்ப அடிப்படையில் பொருளாதார ஒத்துழைப்பு, பன்னாட்டு வர்த்தகம், வெளிநாட்டு நேரடி முதலீடு ஆகியவற்றை வலுப்படுத்துவதும் மேம்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும். இதன் உறுப்பு நாடுகளாவன, வங்காளதேசம், இந்தியா, மியான்மர், இலங்கை, தாய்லாந்து, பூடான் மற்றும் நேபாளம்.

**பி.பி.ஐ.என் (BBIN)**

பயணிகள், சரக்கு மற்றும் எரிசக்தி மேம்பாடு ஆகியவைகளின் பரிமாற்றத்திற்கான கூட்டமைப்பில் வங்காளதேசம், பூடான், இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

சுருக்கமாக கூறினால், இந்தியா பன்முக கலாச்சாரங்களைக் கொண்ட ஒரு பெரிய நாடு. இது தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கிடையே உயர்ந்த நிலையை கொண்டுள்ளது. நாடுகளிடையே அமைதி, சுதந்திரம் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு ஆகியவற்றை பராமரிப்பதே இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் முக்கிய நோக்கமாகும். இந்தியா எந்த பெரிய இராணுவ கூட்டணியிலும் இல்லை என்றாலும், முக்கிய சக்திகளுடனான இந்திய உறவுகள் ஆழமான வியூகத்தை பெற்றுள்ளன.

## அலகு– 2

## நீதித்துறை

**அறிமுகம்**

ஒரு நாட்டின் நீதி அமைப்பு அனைவருக்கும் முறையான நீதி கிடைப்பதை உறுதி செய்ய திறனுடன் இருக்க வேண்டியது அவசியமாகிறது. இந்தியா ஒன்றிணைந்த மற்றும் ஒருங்கிணைந்த நீதித்துறை அமைப்பைக் கொண்டுள்ளது. அரசாங்கத்தின் ஓர் அங்கமாக நீதித்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. இது நீதியை நிர்வகித்தல், தகராறுகளை தீர்த்தல், சட்டங்களுக்கு விளக்கம் அளித்தல், அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலனாகவும் விளங்குகிறது.

**சட்டம் :** இது மக்களை ஆள்வதற்கு ஓர் அரசாங்கத்தாலோ (அ) நிறுவனத்தாலோ விதிக்கப்படும் விதிகளின் அமைப்பு ஆகும்.

**நீதித்துறை:** சட்டப்படி, ஒரு நாட்டின் பெயரால் நீதியை வழங்குகின்ற நீதிமன்றங்களின் அமைப்பு நீதித்துறை எனப்படுகிறது.

**இந்திய நீதித்துறையின் பரிணாம வளர்ச்சி**
**அ) பண்டைய காலத்தில் நீதித்துறை**

பண்டைய காலத்தில் நீதி என்ற கருத்து சமயத்துடன் தொடர்புடையதாக இருந்தது. அரசர் நீதியின் மூலாதாரமாக விளங்கினார். பெரும்பாலான அரசர்களின் அவைகளில் தர்மத்தின் அடிப்படையில் (நன்னடத்தை, கடமை) நீதி வழங்கப்பட்டது. இவை மரபார்ந்த சட்டத் தொகுப்புகளாகும். தர்மத்தின் சட்டங்கள் தனிமனிதனை மட்டுமல்லாது சமூகத்தையும் நிர்வகித்தது.

**ஸ்மிருதி இலக்கியங்கள்**
பண்டைய இந்தியாவில் ஸ்மிருதிகள் தனிமனிதனின் சமூகக் கடமைகளை வரையறுத்தன. அவை மனுஸ்மிருதி, நாரதஸ்மிருதி, யக்ஞவல்கிய ஸ்மிருதி போன்றவையாகும்.

கனங்களின் குடியரசுகள் தங்களுக்கென சட்ட அமைப்பைக் கொண்டிருந்தன. இதில் குலிகா எனும் நீதிமன்றத்தை நாம் காணலாம். வஜ்ஜிகளிடையே குற்ற வழக்குகளை விசாரிக்கும் எட்டு குலிகாக்களைக் கொண்ட வாரியம் இருந்தது. மேல்முறையீடானது குல நீதிமன்றத்திலிருந்து கன நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டது.

**ஆ. இடைக்கால இந்தியாவில் நீதித்துறை**

துக்ளக் ஆட்சிக்காலத்தில் உரிமையியல் நடைமுறைச்சட்டங்கள் தொகுக்கப்பட்டதைக் காண முடிகிறது. இது ஃபைகா-இ-பெரோஸ்-ஷாகி என அழைக்கப்பட்டது. இச்சட்டம் பல்வேறு விவகாரங்களில் சட்டம் மற்றும் நடைமுறை விவரங்களைப் வழங்கியது. இது அரபு மொழியில் எழுதப்பட்டு பின்னர் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. இது ஔரங்கசீப் காலத்தில் 1670ஆம் ஆண்டு ஃபட்வா-இ-ஆலம்கீர் என்ற சட்டத்தொகுப்பின்படி மாற்றி அமைக்கபபட்டது.

**இ. நவீன இந்தியாவில் நீதித்துறை**

இன்று நம் நாட்டில் உள்ள நீதித்துறை அமைப்பு மற்றும் சட்டங்கள் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியால் மதராஸ், பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட மேயர் நீதிமன்றங்களின் காலத்தில் 1727ஆம் ஆண்டுகளில் இந்த பொது சட்டத்தின் (1726 ஆம் ஆண்டு சாசனச் சட்டத்தின் கீழ்) வரலாறு தொடங்குகிறது. ஒழுங்குமுறைச்சட்டம், 1773 உச்சநீதிமன்றம் அமைப்பதற்கு வழிவகுத்தது. உச்சநீதிமன்றம் முதன் முதலாக கல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில் நிறுவப்பட்டது. சர் எலிஜா இம்ஃபே என்பவர் அந்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். 1801 மற்றும் 1824ஆம் ஆண்டுகளில் மதராஸ் மற்றும் பம்பாய்

ஆகிய இடங்களில உச்சநீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. இம்மூன்று இடங்களிலும் 1862ஆம் ஆண்டு உயர்நீதிமன்றங்கள் மேற்படி இடங்களில் நிறுவப்படும் வரையில் உச்சநீதிமன்றங்களாக செயல்பட்டன.

சிவில் வழக்குகளை தீர்ப்பதற்காக ஊரக குடிமையியல் நீதிமன்றத்தையும் (Moffssi Diwani Adalat) குற்றவியல் வழக்குகளை தீர்ப்பதற்காக ஊரக குற்றவியல் நீதிமன்றத்தையும் (Mofussil Fauzdari adalat)வாரன் ஹேஸ்டிங்ஸ் ஏற்படுத்தினார். மேற்கண்ட நீதிமன்றங்களின் மேல்முறையீட்டை விசாரிக்க சதர் திவானி அதாலத் (குடிமையியல் மேல் முறையீட்டு நீதிமன்றம்) ஆகியவை இருந்தன. காரன்வாலிஸ் பிரபு உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதி முறையை மறுசீரமைத்தார். காரன்வாலிஸ் ஆட்சியில் மாவட்ட குற்றவியல் நீதிமன்றங்கள் நீக்கப்பட்டு, கல்கத்தா, டாக்கா, மூர்ஷிதாபாத் மற்றும் பாட்னா ஆகிய இடங்களில் மாகாண மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. வில்லியம் பெண்டிங் கால ஆட்சியில் மேற்கண்ட நான்கு மாகாண மேல்முறையீட்டு நீதிமன்றங்களும் நீக்கப்பட்டன.

| |
|---|
| கல்கத்தா உயர் நீதிமன்றம் நாட்டின் மிகப்பழமையான உயர்நீதிமன்றமாகும். இது 1862ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அதே சமயம் அலகாபாத் உயர் நீதிமன்றம் நாட்டின் மிகப் பெரிய நீதிமன்றமாகும். |

சதர் திவானி அதாலத் மற்றும் சதர் நிசாமத் அதாலத் ஆகியன அலகாபாத்தில் நிறுவப்பட்டன. மெக்காலே என்பவரால் அமைக்கப்பட்ட சட்ட ஆணையம் இந்திய சட்டங்களை நெறிமுறைப்படுத்தியது. இந்த ஆணையத்தின் அடிப்படையில் 1859ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச்சட்டம், 1860ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டம், மற்றும் 1861ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச்சட்டம் ஆகியவை உருவாக்கப்பட்டன. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் கூட்டாட்சி நீதிமன்றங்களை உருவாக்கியது. இது இறுதி மேல்முறையீடு இங்கிலாந்தில் உள்ள பிரிவு கவுன்சில் நீதி குழுவிடம் கொண்டு செல்ல்ப்பட்டது. 1949ஆம் ஆண்டு பிரிவு கவுன்சில் நீதிவரையறை நீக்கப்பட்டது. இந்திய உச்சநீதிமன்றம் 1950 ஜனவரி 28ஆம் நாள் தொடங்கப்பட்டது.

**நீதித்துறை மற்றும் அரசியலமைப்புச்சட்டம்**

இந்தியா, தனக்கென ஒரு அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் உன்னதமான நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களில் நீதிக்கு உயரிய இடத்தை உருவாக்கியவர்கள் அளித்துள்ளனர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தியர்களுக்கென தனிச் சட்டமோ, நீதிமன்றமோ இல்லை. சட்டம் மற்றும் நீதிமன்றங்கள் இரண்டும் காலனி ஆதிக்கத்திற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டிருந்தன. இந்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் நீதிமன்ற மறு ஆய்வுக்கான முழு அதிகாரத்துடன் நீதிமன்றங்கள் சுதந்திரமாக செயல்படுவதை உறுதி செய்யும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க முனைந்தனர். அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 145ன்படி 1966ஆம் ஆண்டு நடைமுறை மற்றும் வழிமுறைகள் உச்சநீதிமன்ற விதிகள் ஒழுங்குபடுத்த ஏற்படுத்தப்பட்டன. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் நான்காவது அத்தியாயத்தின் கீழ் பகுதி V-(யூனியன்)-ன்படி ஒன்றிய நீதித்துறை என்ற பெயரிலும், அத்தியாயம் VI-ன் கீழ் பகுதி VI-ன்படி(மாநிலம்) துணை நீதிமன்றங்கள் என்ற பெயரிலும் நிறுவ வழிவகை செய்கிறது. சட்டப்பிரிவுகள் 124 முதல் 147 வரையிலான அரசியலமைப்புச் சட்டப்பிரிவுகள் இந்திய உச்ச நீதிமன்றத்தின் அமைப்பு மற்றும் அதிகார வரம்பினை வகுத்துக் கூறுகிறது.

**இந்தியாவில் நீதிமன்றங்களின் அமைப்பு**

**இந்திய உச்ச நீதிமன்றம்**

- இதன் முடிவுகள் அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துகிறது.
- உயர்நீதிமன்ற நீதிபதிகளை இடமாற்றம் செய்யலாம்.
- எந்தவொரு நீதிமன்றத்தின் வழக்குகளையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும்.
- வழக்குகளை ஒரு உயர்நீதிமன்றத்திலிருந்து மற்றொரு உயர்நீதிமன்றத்திற்கு மாற்றலாம்.

**உயர் நீதிமன்றம்**

- கீழ் நிதிமன்றங்களிலிருந்து வரும் மேல்முறையீடுகளை விசாரித்தல்.
- அடிப்படை உரிமைகளை பெறுவதற்காக நீதிப்பேராணைகள் வழங்கும் அதிகாரம்.
- மாநிலத்தின் எல்லைக்குள் உள்ள வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம்
- கீழ்நீதிமன்றங்களைக் கண்காணிக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் அதிகாரம்

**மாவட்ட நீதிமன்றம்**

- மாவட்ட எல்லைக்குள் எழும் வழக்குகளைக் கையாளுகிறது.
- கீழ் நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்பின் மேல்முறையீடுகளை விசாரிக்கிறது.
- கடுமையான குற்றவியல் தொடர்பான வழக்குகளை தீர்மானிக்கிறது.

**துணை நீதிமன்றங்கள்**

- உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை பரிசீலிக்கிறது.

ஒரு சுதந்திரமான நீதித்துறை என்ற கருத்தை முன்மொழிந்த முதல் அரசியல் தத்துவஞானி மாண்டெஸ்கியூ ஆவார். இவர் புகழ்பெற்ற பிரெஞ்சு தத்துவ ஞானி ஆவார். சட்டமன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று பிரிவுகளாக அரசாங்கம் செயல்பட வேண்டும். என்ற அதிகாரப்பகிர்வு கோட்பாட்டில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.

**மாவட்ட நீதிமன்றங்கள்:** மாவட்ட அளவில் சிவில் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் மாவட்ட நீதிமன்றங்கள் என்று அழைக்கப்படுகிறது.

**அமர்வு நீதிமன்றங்கள்:** குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் அமர்வு நீதிமன்றங்கள் என்று அழைக்கப்படுகிறது.

**பஞ்சாயத்து நீதிமன்றங்கள்:** கிராம அளவில் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை பஞ்சாயத்து நீதிமன்றங்கள் கையாளுகிறது.

**வருவாய் நீதிமன்றங்கள்:** வருவாய் நீதிமன்றங்கள் நில ஆவணங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கிறது. இது நில வருவாயை நிர்ணயம் செய்து நில உரிமையாளர்களிடமிருந்து அதனை வசூலிக்கிறது.

**லோக் அதாலத் (மக்கள் நீதிமன்றங்கள்):** விரைவான நீதியை வழங்க லோக் அதாலத் அமைக்கப்பட்டது. இது மக்கள் முன்னிலையில் மக்கள் பேசும் மொழியிலேயே பிரச்சனையை விசாரித்து தீர்வு காண்கிறது. ஒரு ஓய்வு பெற்ற நீதிபதி, ஒரு சமூக பணியாளர், ஒரு வழக்கறிஞர் ஆகிய மூன்று நபர்கள் கொண்ட அமர்வு இதற்கு தலைமை வகிக்கும். வழக்குரைஞர்கள் இல்லாமல் வழக்குகள் முக்வைக்கப்படுகின்றன. இந்த வழக்குகள் பரஸ்பர ஒப்புதல் மூலம் தீர்த்து வைக்கப்படுகின்றன. முதல் லோக் அதாலத் 1982ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் உள்ள ஜுனாகத்தில் நடைபெற்றது.

**விரைவு நீதிமன்றங்கள்:** இந்நீதிமன்றங்கள் 2000ஆம் ஆண்டில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் கீழ் நீதிமன்ற வழக்குகளை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கத்திற்காக தோற்றுவிக்கப்பட்டன.

**தொலைதூர சட்ட முன்னெடுப்பு(Tele Law initiative):**

கிராமப்புற மக்களுக்காக சட்ட உதவி மற்றும் நீதி அமைச்சகம், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கூட்டு முயற்சியுடன் இது தொடங்கப்பட்டது. தொழில்நுட்ப இயங்குதளமான தொலைதூர சட்ட இணைய வழியின் பொதுவான சேவை மையத்தில்(CSC)காணொளிக் கலந்துரையாடல் மூலம் வழக்குரைஞர்களிடமிருந்து மக்கள் சட்ட ஆலோசனைகளைப் பெறலாம்.

**குடும்ப நீதிமன்றங்கள்:** குடும்பம் தொடர்பான சட்ட விவகாரங்களை குடும்ப நீதிமன்றம் கையாளுகிறது. இவைகள் உரிமையியல் நீதிமன்றங்கள் ஆகும். குழந்தையின் பாதுகாப்பு, மணமுறிவு, தத்தெடுப்பு, சீறார் பிரச்சனைகள் ஆகிய குடும்பம் தொடர்பான பல்வேறு உரிமைகள், கோரிக்கைகளுக்காக இந்நீதிமன்றங்கள் பயன்படுகின்றன.

**நடமாடும் நீதிமன்றங்கள் (mobile Court):** நடமாடும் நீதிமன்றங்கள் கிராமப்புற மக்களுக்கு இடர்களை தீர்க்கும் ஒன்றாய் இருக்கும். இது கிராமப்புற மக்களிடையே நீதி அமைப்பு பற்றி அதிக விழிப்புணர்வை உருவாக்கி, அவர்களது செலவைக் குறைத்து, அவர்களின் வாழிடங்களிலேயே நீதியை வழங்க வகை செய்கிறது.

**இ-நீதிமன்றங்கள் (E-Courts):** இ - நீதிமன்றங்கள் திட்டம் 2005ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி அனைத்து நீதிமன்றங்களும் கணினி மயமாக்கப்படும். நீதித்துறை சேவை மையம் இ-நீதிமன்றத்தின் ஒரு பகுதியாகும். பொதுமக்கள் மற்றும் வழக்குரைஞர்கள் நேரடியாக வழக்கு நிலை மற்றும் அடுத்த விசாரணை தேதிகளை கட்டணமின்றி கேட்டறியலாம்.

**நீதித்துறையின் பங்கு**

நீதித்துறையின் செயல்பாட்டினை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

| | |
|---|---|
| **தகராறுகளைத் தீர்வு செய்தல்** | பின்வருவனவற்றிற்கு இடையே பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பிப்பதற்கான ஒரு இயக்க முறையை நீதிமன்ற அமைப்பு வழங்குகிறது.<br>• குடிமக்கள்<br>• குடிமக்கள் மற்றும் அரசாங்கம்<br>• இரண்டு மாநில அரசாங்கங்கள்<br>• மத்திய மாநில அரசாங்கங்கள் |
| **நீதிமன்ற மறு ஆய்வு அதிகாரம்** | நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை அமைப்பினை மீறுகிறது என நீதித்துறை நம்பும் பட்சத்தில் அச்சட்டத்தினை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என அறிவிக்கும் அதிகாரம் நீதித்துறைக்கு உள்ளது. |
| **சட்டத்தை நிலைநிறுத்துதல் மற்றும் அடிப்படை உரிமைகளை செயல்படுத்துதல்** | ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் தனக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதாய் நம்பும்பட்சத்தில் அவர் உச்சநீதிமன்றத்தையோ அல்லது உயர்நீதிமன்றத்தையோ அணுகலாம். |

**தேசிய சட்ட சேவைகள் அதிகாரம் (NALSA):**

இது 1987ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகார சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இது சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு இலவச சட்ட உதவிகள் வழங்குவதோடு பிரச்சனைகளுக்கு இணக்கமான தீர்வு காண லோக் அதாலத்தை ஏற்பாடு செய்கிறது.

**இந்திய உச்சநீதிமன்றம்**

இது இந்தியாவின் மிக உயர்ந்த நீதிமன்றம் ஆகும். இது புதுடெல்லியில் அமைந்துள்ளது. இந்திய அரசியலமைப்பின் படி உச்சநீதிமன்றம் அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலராகவும், இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாகவும் உள்ளது.

**உச்சநீதிமன்றத்தின் அதிகார வரம்பு**

**அ. முதன்மை அதிகார வரம்பு:**

உச்சநீதிமன்றத்தில் மட்டுமே முதன்முறையாக தொடுக்கப்படும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது. இது மத்திய அரசிற்கும் ஒரு மாநிலம் அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான பிரச்சனைகள் ஆகியன முதன்மை அதிகார வரம்புக்குள் அடங்கும்.

**ஆ. மேல்முறையீட்டு அதிகார வரம்பு**
உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை உச்சநீதிமன்றம் பெற்றுள்ளது.

**இ. ஆலோசனை அதிகார வரம்பு:** குடியரசுத் தலைவரால் குறிப்படும் பொது முக்கியத்தவம் வாய்ந்த கேள்வி குறித்து ஆலோசனை வழங்கும் அதிகாரத்தினை உச்சநீதிமன்றம் பெற்றுள்ளது.

**ஈ. நீதிப் பேராணை அதிகார வரம்பு:** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டப்பிரிவு 32-ன்படி உச்சநீதிமன்றமும் சட்டப்பிரிவு 226ன்படி உயர்நீதிமன்றமும் நீதிப் பேராணைகளை வழங்குகின்றன.

**உ. ஆவண நீதிமன்றம்:** இது நீதிமன்ற நடவடிக்கைகளின் பதிவுகளை பராமரிக்கிறது. மற்றும் அதன் முடிவுகள் கீழ்நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும்.

**ஊ. சிறப்பு அதிகாரங்கள்:** இது கீழ் நீதிமன்றங்களின் செயல்பாட்டை காண்காணிக்கிறது.

**உயர்நீதிமன்றம்:**

உயர்நீதிமன்றம் மாநிலங்களின் மிக உயர்ந்த நீதிமன்றமாகும். இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு உயர்நீதிமன்றம் உள்ளது. எனினும், இரண்டு அல்லது மூன்று மாநிலங்கள் தங்களுக்கென ஒரு பொதுவான நீதிமன்றத்தைக் கொண்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக பஞ்சாப், ஹரியானா, மற்றும் சண்டிகர் ஆகியவை ஒரு பொதுவான நீதிமன்றத்தைக் கொண்டுள்ளன. உயர்நீதிமன்றம் தனக்கென முதன்மை அதிகார வரம்பு, மேல் முறையீட்டு அதிகார வரம்பு, நீதிப் பேராணை வழங்கும் அதிகார வரம்பு ஆகிய அதிகார வரம்புகளை பெற்றுள்ளது. மாநிலங்களில் உயர்நீதிமன்றத்தின் கீழ் துணை நீதிமன்றங்கள் உள்ளன.

**நீதித்துறையின் சுதந்திரமான மற்றும் நடுநிலைமை செயல்பாடு**

அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் இந்தியாவில் நீதித்துறையினை சுதந்திரம் மற்றும் நடுநிலைத்தன்மையுடன் நிறுவினர். நியாயமான நீதி கிடைப்பதற்கு நீதித்துறையின் சுதந்திரம் முக்கியமானதாகும். இந்தியா போன்ற மக்களாட்சி நாடுகளில் நீதித்துறை குடிமக்களின் உரிமைகளின் பாதுகாவலனாக உள்ளது. நம் நாட்டிற்கு எவ்வகையான நீதித்துறை வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் நீதித்துறையை வடிவமைத்துள்ளனர். அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களின் இவ்வெண்ணத்திற்கு டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பின்வரும் பதிலினை அளித்தார்.

“நமது நீதித்துறை நிர்வாகத்திடமிருந்து சுதந்திரமாக இருக்க வேண்டும் அதே வேளையில் திறமை மிக்கதாகவும் இருக்க வேண்டும் என்பதில் அவையில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. மேலும் வினா என்னவென்றால் எப்படி இந்த இரண்டு நோக்கங்களையும் பாதுகாக்கமுடியும் என்பதே ஆகும்”.

ஒரு திறன்மிக்க நீதித்துறை சுதந்திரமாகவும், பொறுப்புணர்வுடனும் இருக்க வேண்டும். நீதித்துறையின் சுதந்திரம் என்பது நீதிபதிகள் பாரபட்சமற்ற முறையில் சுதந்திரமாக செயல்படுவதை குறிப்பதாகும். எடுத்துக்காட்டாக எந்தவொரு வெளிப்புற செல்வாக்கிலிருந்தும் விடுபடுதல்.

**வழக்கு செயல்முறை**

இந்தியாவில் இரண்டு வகையான சட்டப்பிரிவுகள் உள்ளன. அவை உரிமையியல் சட்டங்கள் மற்றும் குற்றவியல் சட்டங்கள் ஆகும்.

| உரிமையியல் சட்டங்கள் | குற்றவியல் சட்டங்கள் |
|---|---|
| • இது பணம், சொத்து மற்றும் சமூகம் தொடர்பான பிரச்சனைகளைக் கையாளுகிறது. | • குற்றம் என சட்டம் வரையறுக்கும் நடத்தைகள் அல்லது செயல்களை இது |

| | |
|---|---|
| எ.கா. நிலம் தொடர்பான பிரச்சனைகள், வாடகை, திருமணம் தொடர்பான பிரச்சனைகள்.<br>• உரிமையியல் நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்டவர்களால் ஒரு புகார் தாக்கல் செய்யப்பட வேண்டும்.<br>• மனுதாரரின் கோரிக்கையின்படி பணம் செலுத்தும்படியான தண்டனைகள் வழங்கப்படுகிறது. | விசாரிக்கிறது. எ.கா.திருட்டு, கொலை, பெண்களைத் துன்புறுத்துதல் ஆகியன.<br>• இது வழக்கமாக காவல்துறை விசாரணையுடன் முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்வதன் மூலம் தொடங்குகிறது. அதன் பிறகு நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்படுகிறது.<br>• குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் தண்டனை வழங்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர் சிறைக்கு அனுப்பப்படுவார். |

**பொது நலவழக்கு (Public Interest Litigation)**: இது பொதுநலனைப் பாதுகாப்பதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் வழக்கு ஆகும். உச்சநீதிமன்றம் இந்த முறையை அறிமுகப்படுத்தியது. இது ஒரு நபர் தனது வழக்கு தொடர்பான நீதிமன்றத்தை அணுக அனுமதிக்கிறது. அடிப்படை மனித உரிமைகள் மீறல், சமய உரிமைகள், மாசுபாடு மற்றும் சாலை பாதுகாப்பு ஆகியவற்றிற்காக பொது நல வழக்கை எவரும் தாக்கல் செய்யலாம். இது தொடர்பான எழுதப்பட்ட புகார் கடிதம் மூலம் இவ்வழக்கினைப் பதியலாம். பொது நல வழக்கு என்ற கருத்து இந்திய நீதித்துறைக்கு புதிதான ஒன்றாகும்.

**முடிவுரை**

மக்களாட்சி நாட்டில் நீதித்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. நீதித்துறை அரசியலமைப்புச் சட்டத்தின் பொறுப்பாளராகவும், அடிப்படை உரிமைகளின் பாதுகாவலராகவும் உள்ளது. உலகின் அதிக எண்ணிக்கையிலான பிரதிநிதிகளைக் கொண்ட மக்களாட்சி நாடான இந்தியா, நன்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் சுதந்திரமான நீதித்துறை அமைப்பைக் கொண்டுள்ளது.

## 9ம் வகுப்பு குடிமையியல்
## அலகு – 1

### அரசாங்க அமைப்புகள் மற்றும் மக்களாட்சி

**அறிமுகம்:**

- உலகின் பல நாடுகள் பல்வேறு வகையான அரசாங்க அமைப்புகளை பின்பற்றி வந்தாலும், இன்றைய உலகம் மக்களாட்சியையே பெரிதும் விரும்புகிறது. உலகளவில் அரசாங்க அமைப்புகள் எவ்வாறு வளர்ச்சியடைந்து இருக்கிறது என்பது பற்றி இப்பாடத்தின் மூலம் கற்றறிவோம்.

**அரசாங்க அமைப்புகள்:**

- அதிகாரம் யாரிடம் உள்ளது என்பதைப் பொறுத்து ஒரு நாட்டின் ஆட்சி அமைகிறது. பல்வேறு வகையான அரசாங்கங்கள் இருக்கின்றன. அவை உயர் குடியாட்சி, முடியாட்சி, தனிநபர் ஆட்சி, சிறுகுழு ஆட்சி, மதகுருமார்கள் ஆட்சி, மக்களாட்சி மற்றும் குடியரசு.

**உயர்குடியாட்சி (Aristocracy):**

- உயர்குடி ஆட்சி அதிகாரத்தில் அதகாரம், சிறு, சிறப்புரிமைகள் பெற்ற ஆளும் வர்க்கத்தினரிடம் காணப்படுகிறது. எ.கா. இங்கிலாந்து ஸ்பெயின்.

**முடியாட்சி (Monarchy):**

- ஒரு நபர் (வழக்கமாக அரசர்) ஆல் அமைக்கப்படும் அரசாங்கமே முடியாட்சி (அரசியலமைப்பு முடியாட்சி) எனப்படும். எ.கா, பூடான், ஓமன், கத்தார்.

**தனிநபர் ஆட்சி (Autocracy):**

- முழு அதிகாரம் கொண்ட ஒரு நபரால் அமைக்கப்படும் அரசாங்கமே தனிநபர் ஆட்சி ஆகும். எ.கா: வடகொரியா, சவுதி அரேபியா.

**சிறு குழு ஆட்சி (Oligarchy):**

- மக்களின் சிறிய குழு ஒன்று ஒரு நாட்டையோ (அ) அமைப்பையோ கட்டுப்படுத்துவதே “சிறு குழு ஆட்சி” எனப்படும். எ.கா. முன்னாள் சோவியத் யூனியன், சீனா, வெனிசுலா வடகொரியா.

**மதகுருமார்களின் ஆட்சி (Theocracy):**

- மதகுருமார்கள் தம்மை கடவுளாகவோ (அ) கடவுளின் பெயரால், மதகுருமார்களால் அமைக்கப்படும் அரசாங்கமே “மதகுருமார்களின் ஆட்சி” எ.கா. வாட்டிகள்.

**மக்களாட்சி: (Democracy):**

- ஒரு நாட்டின் தகுதியுள்ள குடிமக்களால் வாக்களிக்கப்பட்ட தனிநபரோ அல்லது குழுவாகவோ தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் அமைக்கப்படும் அரசாங்கமே “மக்களாட்சி” எனப்படும். எ.கா: இந்தியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிரான்ஸ்.

**குடியரசு (Republic):**

- மக்களிடமோ அல்லது அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளிடமோ உயரிய அதிகாரம் இருக்கின்ற அரசாங்க முறையே “குடியரசு” எனப்படும். இவ்வகை அரசாங்கத்தில் ஒரு முடிமன்னரை காட்டிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட (அ) நியமிக்கப்பட்ட குடியரசுத்தலைவர் இருப்பார். (எ.கா) இந்தியா, ஆஸ்திரேலியா.

| |
|---|
| பொ.ஆ. 500ம் ஆண்டு ரோம் நாட்டில் முதன் முதலில் “குடியரசு” (Republic) எனும் சொல் வடிவமைக்கப்பட்டது. இச்சொல் “res publica” எனும் லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் “பொது விவகாரம்”(Public matter) என்பதாகும். |

இந்திய அரசியலமைப்பு நவம்பர் 26, 1949 ல் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஜனவரி 26. 1950 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. எனவே, ஜனவரி மாதம் 26ஆம் நாள், 1950 ஆம் ஆண்டு இந்தியா குடியரசு நாடாக மலர்ந்தது.

**மக்களாட்சி என்றால் என்ன?**

- மக்களாட்சி என்பது மக்கள் தங்கள் ஆட்சியாளர்களை தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதியளிக்கும் ஆட்சி முறையே ''மக்களாட்சி'' ஆகும்.
- இம்முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மட்டுமே ஆட்சி செய்ய முடியும்.
- மக்கள் சுதந்திரமாக தாங்கள் விரும்பிய கருத்துக்களைத் தெரிவிக்கவும். ஓர் அமைப்பை ஏற்படுத்தவும், போராட்டங்களை நடத்தவும் உரிமை பெற்றவர்கள் ஆவர்.

மக்களாட்சி (Democracy) எனம் சொல் 'DEMOS' மற்றும் 'CRATIA' எனம் இரு கிரேக்க சொற்களிலிருந்து பெறப்பட்டதாகும். டெமாஸ் என்றால் 'மக்கள் கிரஸி என்றால் அதிகாரம்'(power of the people) என்று பொருள்படும்.

**மக்களாட்சி என்பதன் பொருள்:**

- ஒரு நாட்டில் மக்களின் உயர்ந்த அதிகாரங்களை பெற்று அமைக்கும் ஆட்சி முறையே ''மக்களாட்சி'' எனப்படும். இதன் பொருள் ''நாட்டு மக்களின் கைகளில் அட்சி அதிகாரம்'' உள்ளது என்பதாகும். மேலும் மக்கள் தங்களது பிரதிநிதிகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள்.

**வரையறை:**

- ''ஒரு உண்மையான மக்களாட்சியை, 20 பேர் குழுவாக அமர்ந்து கொண்டு செயல்படுத்த முடியாது. இது கீழ்நிலையிலுள்ள ஒவ்வொரு கிராம மக்களாலும் செயல்படுத்தப்படுவதாகும்'' என தேசப்பிதா' மகாத்மா காந்தி' குறிப்பிடுகிறார்.

**மக்களாட்சியின் சிறப்புக் கூறுகள்:**

1. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் இறுதி முடிவை மேற்கொள்ளும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள்.
2. சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்கள்.
3. 18 வயது நிறைவு பெற்ற அனைவருக்கும் சம மதிப்புடைய வாக்குரிமை.
4. அடிப்படை உரிமைகள் மற்றும் தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்.

''மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி'' மக்களாட்சி' என்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மேனள் குடியசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் மக்களாட்சிக்கு வரையறை கூறினார்.

**மக்களாட்சி அரசாங்க அமைப்புகள்**

**மக்களாட்சியின் பரிணாம வளர்ச்சி:**

- ஏதென்ஸ் உட்பட பண்டைய கிரேக்க நாட்டின் ஒரு சில நகர-அரசுகளில், 2500 ஆண்டுகளுக்கு முன்பாகவே மக்களாட்சி முறை தோன்றியது. வேத காலத்திற்கு முன்பாகவே இந்தியாவில் மக்களாட்சி முறை அமைப்புகள் இருந்தன என்பது பற்றி அறிவது மிக முக்கியமாக இருக்கிறது.

உள்ளாட்சி அமைப்பின் அடிப்படை அலகாக சுயாட்சி பெற்ற கிராம குழுக்கள், பண்டைக்காலத்தில் இருந்தது எனும் செய்திகளை சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் என்ற நூல் கூறுகிறது. பண்டைய தமிழகத்தில், பிற்கால சோழர்களின் காலத்தில் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்த குடவோலை மறை இருந்தது. சுதந்திரம். சமத்துவம், சகோதரத்துவம், பொறுப்புடைமை, வெளிப்படைத் தன்மை, நம்பிக்கை ஆகிய மதிப்பீடுகள் மக்களாட்சியின் வளர்ச்சியைப் பிரதிபதிக்கிறது.

**மக்களாட்சியின் வகைகள்:**

மக்களாட்சி இருவகைப்படும் அவை,

1. நேரடி மக்களாட்சி
2. மறைமுக மக்களாட்சி (பிரதிநிதித்துவ மக்களாட்சி)

- மக்களாட்சி வகைகள் என்பது மக்கள் சமமாகப் பங்கேற்க அனுமதியளிக்கும் சமூக அமைப்பு (அ) அரசாங்க வகைகளை குறிக்கிறது.

**நேரடி மக்களாட்சி:**

- பொது விவகாரங்களில் மக்களே நேரடியாக முடிவெடுக்கக்கூடிய அரசு முறையை நேரடி மக்களாட்சி என்கிறோம். எ.கா. பண்டைய கிரேக்க நகர அரசுகள், சுவிட்சர்லாந்து.

**மறைமுக மக்களாட்சி (பிரதிநிதித்துவ மக்களாட்சி)**

- பொது விவகாரங்களில் மக்கள் தங்களது விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மூலம் வெளிப்படுத்தும் அரசாங்கத்தின் முறையே மறைமுக மக்களாட்சி என்று அழைக்கப்படுகிறது.
  (எ.கா) இந்தியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து.

**மக்களாட்சியின் நிறை குறைகள்:**
**நிறைகள்:**

1. பொறுப்பும், பதிலளிக்கும் கடமையும் கொண்ட அரசாங்கம்
2. சமத்துவமும் சகோதரத்துவமும்
3. மக்களிடையே பொறுப்புணர்ச்சி
4. தல சுய ஆட்சி
5. அனைவருக்கும் வளர்ச்சியும் வளமும்
6. மக்கள் இறையாண்மை
7. சகோதர மனப்பான்மை மற்றும் கூட்டுறவு

**குறைகள்:**

1. மறைமுக அல்லது பிரதிநித்துவ முறை கொண்ட மக்களாட்சி.
2. வாக்காளர்களிடையே போதிய ஆர்வமின்மை மற்றும் குறைந்த வாக்குப்பதிவு
3. சில சமயங்களில் நிலையற்ற அரசாங்கத்திற்கு வழி வகுக்கிறது.
4. முடிவெடுக்கும் முறையில் காலதாமதம்.

**இந்தியாவில் மக்களாட்சி:**

- இந்தியா நாடாளுமன்ற மக்களாட்சி முறையைத் கொண்டுள்ள நாடாகும். இந்தியாவின் நாடாளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கியது. இது நாட்டிற்கு தேவையான சட்டங்களை உருவாக்குகிறது. கொள்கை முடிவெடுப்பதில் மக்கள் பங்கு பெறுவதும், ஒப்புதல் அளிப்பதும் இந்தியாவிலுள்ள நாடாளுமன்ற மக்களாட்சி அரசாங்கத்தின் இரு முக்கியக் கூறுகளாக விளங்குகின்றன.

- உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியாவாகும். இந்தியாவில் மக்களாட்சி பின்வரும் ஐந்து முக்கிய கொள்கைகளின் அடிப்படையில் இயங்குகிறது. அவை இறையாண்மை, சமதர்மம், மதச்சார்பின்மை, மக்களாட்சி மற்றும் குடியரசு.

- பதினெட்டு வயது நிரம்பிய ஒவ்வொரு இந்திய குடிமகனும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். சாதி, சமயம், இனம், பால், கல்வித்தகுதி என எவ்விதப் பாரபட்சமும் இன்றி சமமான வாக்குரிமையைப் பெற்றுள்ளனர்.

| |
|---|
| 1912 – 13 ஆம் ஆண்டு புது தில்லியில் உள்ள இந்தியாவின் நாடாளுமன்றக் கட்டிடத்தை எட்வின் லுட்டியன்ஸ் மற்றும் ஹெர்பர்ட் பேக்கர் எனும் பிரிட்டிஷ் கட்டிடக்கலைஞர்கள் வடிவமைத்தனர். இக்கட்டிடத்தை 1921 ஆம் ஆண்டு கட்டத் தொடங்கி, 1927-ல் முடித்தனர். |

**இந்தியாவில் தேர்தல்கள்:**

- இந்திய அரசு பகுதி கூட்டாட்சி அமைப்பு முறையைப் பெற்றுள்ள நாடு. இங்கே நடுவண் அரசு (நாடாளுமன்றம்), மாநில அரசு (சட்டமன்றம்), உள்ளாட்சி அமைப்புகள் (ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி) ஆகிய நிலைகளில் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தியாவில் பொதுத் தேர்தலை, இந்திய தேர்தல் ஆணையம் நடத்துகிறது. தேசிய அளவில், இந்திய நாடாளுமன்றத்தின் கீழவையான மக்களவையில் பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவு பெற்ற பிரதம அமைச்சரவை, இந்திய அரசின் தலைவரான குடியரசுத்தலைவர் நியமிக்கிறார்.

- நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்கள் அனைவரும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பொதுத் தேர்தல்கள் மூலம் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மேலம் இரு ஆங்கிலோ-இந்தியர்களைக் குடியரசுத்தலைவர் மக்களவைக்கு நியமனம் செய்கிறார்.

| **நாடாளுமன்றத்தின் இரு அவைகள்:** |
|---|
| • ராஜ்ய சபா / மேல் அவை / மாநிலங்களவை |
| • லோக் சபா / கீழ் அவை / மக்களவை |

- நாடாளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களவை உறுப்பினர்களை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர். மேலும் கலை, இலக்கியம், அறிவியல் மற்றும் சமூக சேவை ஆகிய துறைகளில் சிறப்பாகச் சேவை புரிந்த 12 பேரை மாநிலங்கள் அவைக்கு குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார்.

**மக்களாட்சி இந்தியாவின் முதல் தேர்தல்:**

- இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர், மக்களவையின் முதல் பொதுத் தேர்தல் 1951ம் ஆண்டு அக்டோபர் 25ம் நாள் முதல் 1952ம் ஆண்டு பிப்ரவரி 21ம் நாள் வரை பல்வேறு கால கட்டங்களில் நடைபெற்றது. மொத்தம் இருந்த 489 இடங்களில் 364 இடங்களில் வெற்றி பெற்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஆட்சியை அமைத்தது. சுதந்திர இந்தியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆவார்.

| **பொது தேர்தல்கள் - 1920** |
|---|
| இம்பீரியல் கவுன்சில் எனும் மத்திய சட்டசபைக்கும் மாகாண சட்டசபைக்கும் தேவையான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க 1920ம் ஆண்டு பிரிட்டிஷ் இந்தியாவில் முதல் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இதுவே இந்திய வரலாற்றின் முதல் பொதுத்தேர்தல் ஆகும். |

**இந்திய மக்களாட்சி எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள்:**

- தற்கால உலகில் மக்களாட்சி அரசாங்கம் தழைத்தோங்கி, அரசாங்கத்தின் மேலாதிக்கம் செலுத்தும் வடிவமாக இருக்கிறது. மக்களாட்சியானது இதுவரை கடுமையான சவாலையோ அல்லது போட்டியையோ எதிர்கொள்ளவில்லை. கடந்த நூறு ஆண்டுகளில் உலகெங்களிலும் மக்களாட்சி விரிவடைந்து வளர்ந்து வருகிறது. இந்தியாவில் மக்களாட்சி எதிர்கொள்ளும் முக்கி சவால்கள் பின்வருமாறு காணலாம்.

1. கல்வியறிவின்மை
2. வறுமை
3. பாலினப் பாகுபாடு

4. பிராந்தியவாதம்
5. சாதி. வகுப்பு, சமய வாதங்கள்
6. ஊழல்
7. அரசியல் குற்றமயமாதல்
8. அரசியல் வன்முறை

**மக்களாட்சி முறை வெற்றிகரமாகச் செயல்படுவதற்கான நிபந்தனைகள்:**

- ஏழைகள் மற்றும் எழுத்தறிவற்றோருக்கு மக்களாட்சியின் பலன்களைக் கிடைக்கச் செய்ய அதிகாரம் அளத்தல்.
- தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகள் தமது அதிகாரத்தையும், பொதுச்சொத்துக்களையும் தவறாகப் பயன்படுத்தாமல் இருத்தல்.
- மக்களாட்சி முறையைப் பீடித்திருக்கும் சமூக தீமைகளையும், சமூகக் கொடுமைகளையும் ஒழித்தல்.
- மக்களின் கருத்தைப் பிரததிபலிக்கப்பாரபட்சமற்ற, திறமைமிக்க ஊடகங்களின் தேவையை உணர்தல்.
- பொதுமக்களின் கருத்து வலுவாக இருத்தல்.
- மக்களிடையே சகிப்புத்தன்மையும், மத நல்லிணக்கமும் நிலவுதல்.
- அடிப்படை உரிமைகள் பற்றிய அறிவும் விழிப்புணர்வும் மக்களிடம் ஏற்படுத்துதல்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் செயல்பாடுகளைக் கண்காணித்தல்.
- வலுவான பொறுப்புமிக்க எதிர்க்கட்சி இருத்தல்.
- சமத்துவம், சுதந்திரம், சமூக நீதி, பொறுப்புணர்வு மற்றும் அனைவருக்கும் மதிப்பளித்தல் போன்ற அடிப்படை மக்களாட்சிப் பண்புகளை, மக்கள் மனதில் கொண்டு செயல்படும் போது, மக்களாட்சி மேலும் துடிப்பானதாகவும், வெற்றகரமானதாகவும் இருக்கும். மக்களின் எண்ணங்கள், சிந்தனைகள் மற்றும் நடத்தைகள் ஆகியவை மக்களாட்சியின் தலையாய கொள்கைகளுடன் பொருத்திச் செயல்பட வேண்டும். எனவே, மக்களாட்சியின் இலக்குகளை நடைமுறைப்படுத்த மக்களே தங்களை முன்மாதிரியாக பங்கெடுத்துக் கொள்ளவும், கடமையுணர்வோடு செயல்படவும், தங்களுக்குள் பொறுப்புணர்வை உருவாக்கவும், தமக்களிக்கப்பட்ட வாய்ப்புகளுக்கு மதிப்பளிக்கவும் வேண்டும்.

## அலகு – 2

## தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள்

**அறிமுகம்:**

- தேர்தல் என்பது தமக்கான பொது சேவகர் ஒருவரை மக்கள் வாக்களித்து தேர்வு செய்யும் முறையாகும்.

**இந்தியாவில் தேர்தல் முறை:**

இந்திய தேர்தல் முறை, இங்கிலாந்தில் பின்பற்றப்படும் தேர்தல் முறையினைப் பின்பற்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தியா ஒரு சமத்துவ, மதச்சார்பற்ற, மக்களாட்சி, குடியரசு நாடாகும், மற்றும் உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடாகும். தற்போதைய நவீன இந்தியாவானது ஆகஸ்ட் மாதம் 15ம் நாள் 1947ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்தது.

இந்திய அரசியலமைப்பின் XVம் பகுதியில் காணப்படும் 324 முதல் 329 வரையிலான பிரிவுகளில் கூறப்பட்டுள்ள பின்வரும் விதிமுறைக்கேற்ப நம் நாட்டின் தேர்தல் முறை அமைக்கப்பட்டிருக்கிறது.

1. நாட்டின் சுதந்திரமான, நியாயமான தேர்தலை உறுதி செய்திட தன்னிச்சையான தேர்தல் ஆணையம் அமைத்திட இந்திய அரசியலமைப்பின் பிரிவு 324 ன் படி வழிவகைச் செய்கிறது. தற்போது தேர்தல் ஆணையமானது ஒரு தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்களை உள்ளடக்கியுள்ளது.
2. பாராளுமன்ற தேர்தல் சம்மந்தமான வாக்காளர்களின் பட்டியல் தயாரித்தல், தொகுதிகளை வரையறை செய்தல் உட்பட அரசிலமைப்பில் வரையறுக்கப்பட்டப் பிற அனைத்து விவகாரங்களைப் பெறுவதற்கான சட்டங்களை நாடாளுமன்றம் இயற்றலாம்.

| |
|---|
| தமிழ்நாட்டில் சோழர்கள் காலத்தில் குடவோலை என்னும் வழக்கப்படி கிராமசபை உறுபினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். |

3. மாநில சட்டசபைத் தேர்தல் சம்மந்தமான வாக்காளர்களின் பட்டியல் தயாரித்தல், தொகுதிகளை வரையறை செய்தல் போன்றவற்றை அரசியலமைப்பிற்குட்பட்டு தேவையான மாற்றங்களை மாநில சட்ட சபை சட்டங்களை இயற்றலாம்.

**தேர்தல் நடைமுறை:**

- தேசிய அளவில் அரசாங்கத்தின் தலைவர் பிரதமர் ஆவார். இவர் இந்திய பாராளுமன்றத்தின் கீழவையான மக்களவை (லோக்சபா) உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். நம்மை போன்ற மக்களாட்சிப் பிரதிநிதித்துவ நாடுகளில் தேர்தல் முறை முக்கிய பங்கு வகிக்கிறது.

| |
|---|
| இந்தியாவில் ஜனவரி 25ஆம் நாளினை தேசிய வாக்காளர் தினமாக கொண்டாடுகிறோம். |

| |
|---|
| வாக்காளர் சரிபார்க்கும் காகித தணிக்கைச் சோதனை (VVPAT):<br>மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளரின் பெயருக்கு எதிரில் உள்ள பொத்தானை அழுத்தி வாக்குச் செலுத்தப்படுகிறது. ஒருவர் தாம் செலுத்திய வாக்குச் சரியான படி பதிவாகி உள்ளதா என்ற தெரிந்து கொள்ளும் வாய்ப்பை 2014ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியது. இதை ஆங்கிலத்தில் சுருக்கமாக VVPAT (Voters Verified Paper Audit Trial) என்று குறிப்பிடுகிறார்கள். |

**இந்தியாவில் தேர்தல் வகைகள்:**

- இந்தியாவில் இரண்டு வகையான தேர்தல்கள் நடைபெறுகின்றன. அவை நேரடித் தேர்தல் மற்றும் மறைமுகத் தேர்தல் ஆகும்.

**நேரடித் தேர்தல்:**

- நேரடித் தேர்தலில் வாக்காளர்கள் தமது பிரதிநிதிகளைத் தாங்களே நேரடியாக தேர்ந்தெடுக்கிறார்கள். 18 வயது பூர்த்தியடைந்த மக்கள் நேரடித் தேர்தல் முறையில் பங்கு பெற்று தங்களது வாக்குகளைப் பதிவு செய்கின்றனர். நேரடித் தேர்தல் முறைக்குப் பின்வரும் சில எடுத்துக்காட்டுக் காணலாம்.

1. மக்களவை தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர்களை (MP) தேர்ந்தெடுத்தல்.
2. சட்டமன்றத் தேர்தல்களில் சட்டப்பேரவை உறுப்பினர்களை (MLA) தேர்ந்தெடுத்தல்.
3. ஊராட்சி பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**நிறைள்:**

1. நேரடித் தேர்தல் முறை அதிக செலவு கொண்டதாக உள்ளது.
2. எழுத்தறிவற்ற வாக்காளர்கள், பொய்யானப் பரப்புரைகளால் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள். சில நேரங்களில் சாதி, மதம் மற்றும் இன்ன பிற பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் பிரச்சாரங்கள் மற்றும் பொய்யானப் பரப்புரைகளாலும் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள்.
3. நேரடித் தேர்தல் நடத்துவது மிகப்பெரும் பணியாக இருப்பதால், ஒவ்வொரு வாக்கு மையங்களிலும் சுதந்திரமான, நியாயமான தேர்தல் முறையை உறுதிசெய்வது என்பது தேர்தல் ஆணையத்திற்கு மிக பெரும் சவாலாக உள்ளது.
4. சில அரசியல் கட்சி வேட்பாளர்கள், வாக்காளர்கள் மீது பணம், பொருள் (அ) பணிகள் மூலமாக தங்களது செல்வாக்கைச் செலுத்துவது என்பது ஒரு மற்றொரு சவாலாகும்.
5. தேர்தல் பரப்புரைகளின் போது சில நேரங்களில் வன்முறைகள், பதற்றங்கள், சட்டம் - ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்பட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை முறை பாதிக்கப்படுகிறது.

**மறைமுகத் தேர்தல்:**

- மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் வாக்களித்துத் தேர்வு செய்யும் முறையே மறைமுகத் தேர்தல் ஆகும். குடியரசுத் தலைவர் தேர்தலில் இத்தகைய முறையானது கடைபிடிக்கப்படுகிறது.

**நிறைகள்:**

1. மறைமுகத் தேர்தல்கள் நடத்த செலவு குறைவானதாகும்.
2. மறைமுக தேர்தல் முறையானது பெரிய நாடுகளுக்கு உகந்தது.

**குறைகள்:**

- வாக்காளர் எண்ணிக்கைக் குறைவாக இருப்பதால் ஊழல், கையூட்டு, குதிரை பேரம் ஆகியவற்றிற்கு வாய்ப்புகள் அதிகம் காணப்படும்.
- மக்கள் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க நேரடியாக பங்கு பெறாமல், மாறாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகளே இம்முறையில் பங்குபெறுவதால், மக்கள் பிரதிநிதித்துவம்

குறைந்த மக்களாட்சி முறையாக காணப்படுகிறது. எனவே, மக்களின் உண்மையான விருப்பத்தை பிரதிபலிக்காமல் இருக்க நேரிடுகிறது.

**இந்திய குடியரசுத் தலைவர் எப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்?**

இந்திய குடியரசுத் தலைவர் பின்வரும் உறுப்பினர்கள் கொண்ட தேர்தல் குழாம் (Electoral College)மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
அவை.

1. பாராளுமன்றத்தின் இரு அவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்.

2. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள்

குறிப்பு: பாராளுமன்ற இரு அவைகள் மற்றும் மாநில சட்டமன்றங்களில் நியமிக்கப்படும் நியமன உறுப்பினர்கள் இக்குழுவில் அங்கம் இடம் பெறமாட்டார்கள்.

**தேசியக் கட்சிகள்:**

- ஒரு கட்சி குறைந்தது நான்கு மாநிலங்களிலாவது மாநிலக் கட்சி என்ற தகுதியை பெற்றிருக்குமானால் அது 'தேசியக் கட்சி' என்ற தகுதியை பெறுகிறது. அனைத்து அரசியல் கட்சிகளும் இந்திய தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்தல் வேண்டும். இந்திய தேர்தல் ஆணையம் அனைத்து அரசியல் கட்சிகளையும் சமமாகப் பாவித்தப் போதிலும், தேசியக் கட்சிகளுக்கும், மாநிலக் கட்சிகளுக்கும் சில சிறப்புச் சலுகைககளை வழங்குகிறது. இக்கட்சிகளுக்கு தனித்தனிச் சின்னங்கள் வழங்கப்படுகிறது. ஒரு கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளர் மட்டுமே அக்கட்சியின் சின்னத்தை உபயோகிக்க முடியும். 2017 நிலவரப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ள தேசிய கட்சிகளின் எண்ணிக்கை ஏழு ஆகும்.

**மாநிலக் கட்சிகள்:**

- ஏழு தேசிய கட்சிகளைத் தவிர, நாட்டின் பெரும்பான்மையான முக்கிய கட்சிகளை "மாநிலக் கட்சி"களாக தேர்தல் ஆணையம் வகைப்படுத்தியிருக்கிறது. இக்கட்சிகள் பொதுவாகப் "பிராந்தியக் கட்சிகள்" என்று குறிப்பிடுவர். மக்களவை தேர்தலிலோ அல்லது மாநில சட்டசபைத் தேர்தலிலோ ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான இடங்களை வெற்றி பெற்ற அல்லது குறிப்பிட்ட சதவிகித வாக்குகளைப் பெற்றதன் அடிப்படையில் இந்தியத் தேர்தல் ஆணையம் ஒரு கட்சியை மாநிலக் கட்சியாக அங்கீகாரம் அளிக்கிறது.

**கட்சிகளின் அங்கீகாரம்:**

- இந்தியக் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி தேசியக் கட்சி எனும் பங்கு பெற பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒன்றை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

  1. மக்களவை தேர்தலிலோ (அ) மாநில சட்டசபைத் தேர்தலிலோ குறைந்தபட்சம் நான்கு மாநிலங்களில் பதிவான மொத்தச் செல்லத்தகுந்த வாக்குகளில் குறைந்தபட்சம் 6% பெற்றிருக்க வேண்டும்.

  2. மக்களவையில் குறைந்தபட்சம் 2 சதவீத இடங்களில் வெற்றி பெற வேண்டும். மேலும் குறைந்தபட்சம் மூன்றுக்கும் மேற்பட்ட மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

  3. குறைந்தபட்சம் நான்கு மாநிலங்களில் மாநிலக் கட்சியாக அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும்.

**அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள்:**

- கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடுகின்றன. பெரும்பாலான மக்களாட்சி நாடுகளில் கட்சிகளால் நிறுத்தப்படும் வேட்பாளர்கள் இடையேதான் கடும் போட்டிகள் நிலவுகின்றன.

- கட்சிகள் தங்களைத் தேர்ந்தெடுக்க அவர்களது கொள்கைகளையும், திட்டங்களையும் தேர்தல் தொகுதிகளில் முன்னிறுத்துகின்றனர்.

- நாட்டில் சட்டங்கள் இயற்றுவதில் அரசியல் கட்சிகள் முக்கிய பங்களிப்புச் செய்கின்றன. முறையாக சட்டங்கள் நாடாளுமன்றங்களிலும், சட்டமன்றங்களிலும் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

- அரசியல் கட்சிகள் அரசாங்கத்தினை அமைத்து, அவற்றை வழிநடத்துகின்றனர்.

- தேர்தலில் தோல்வியடைந்த கட்சிகள் எதிர்கட்சியாகப் பங்களிப்புச் செய்கின்றன. இவை அரசின் குறைகள் மற்றும், தவறான கொள்கைகளை எதிர்த்து பல்வேறுபட்ட பார்வைகளை முன்வைக்கின்றன. விமர்சனம் செய்கின்றன.

- மக்கள் கருத்திற்கு அரசியல் கட்சிகள் வடிவம் கொடுக்கின்றன. மேலும் அவை முக்கிய நிகழ்வுகளை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றன.

- அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையில் ஒரு பாலமாக அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் இருக்கின்றன.

**மக்களாட்சியில் எதிர்கட்சிகளின் பங்கு:**

- மக்களாட்சியில், அமெரிக்க ஐக்கிய நாட்டைப் போல் இரு கட்சி ஆட்சி முறையோ அல்லது இந்தியா, பிரேஞ்சு நாடுகளைப்போல் பல கட்சி ஆட்சி முறையோ இருக்கலாம். பெரும்பான்மை மக்களின் ஆதரவு பெற்றக் கட்சியாக ஆளும் கட்சியும், எஞ்சிய மக்களின் ஆதரவு பெற்றக் கட்சியாக எதிர் கட்சியும் இருக்கும். மக்களாட்சி முறையிலான அனைத்து அரசாங்கங்களிலும் எதிர்கட்சித் தலைவர் முக்கிய பங்கை வகிக்கிறார். இவர் கேபினட் அமைச்சர் தகுதி பெறுகிறார். இவர் பொது நடவடிக்கைகளை பாதிக்கும் ஆளும் கட்சியின் தவறான கொள்கைகளை எதிர்க்கிறார். பொதுக்கணக்குக் குழுவின் தலைவராக இவர் அரசுத் துறைகளின் செயல்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்குவதோடு மக்கள் நலனுக்காகச் செலவிடப்படும் பொதுப் பணத்தை ஆய்வு செய்கிறார். இதே போன்று அவர் மத்தியக் கண்காணிப்பு ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பிலும் முக்கியப் பங்கு வகிக்கிறார். மக்களாட்சியில் எதிர்க்கட்சிகள் ஒரு பொறுப்பானப் பங்கினையும் மக்களின் நியாயமானக் கோரிக்கைகள் மற்றும் விருப்பத்தையும் பிரதிபலிக்கின்றது.

**அழுத்தக் குழுக்கள்:**

- ‘அழுத்தக் குழுக்கள்’ என்ற சொல் ஐக்கிய அமெரிக்க நாட்டில் உருவாக்கப்பட்டது. பொது நலன்களைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் தீவிரமாக செயல்படும் குழு அழுத்தக் குழு என்று அழைக்கப்படுகிறது. அரசு மீது அழுத்தம் செலுத்தி அரசின் கொள்கைகளில் மற்றம் கொண்டு வரும்படி நெருக்கடி தருவதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது.

- அழுத்தக் குழுக்கள் ‘நல்க்குழுக்கள்’ அல்லது தனிப்பட்ட நலக்குழுக்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. அதே சமயம் இவை அரசியல் கட்சியிலிருந்து வேறுபட்டவை. தேர்தலில் போட்டியிடுவதில்லை. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற விளைவதும் இல்லை.

**இந்தியாவில் அழுத்தக் குழுக்கள்:**

- இந்தியாவில் தற்போது அதிக எண்ணிக்கையிலான அழுத்தக் குழுக்கள் உள்ளன. ஆனால் அவைகள் அமெரிக்கா அல்லது மேற்கத்திய நாடுகளான இங்கிலாந்து, பிரெஞ்சு, ஜெர்மனி போன்ற நாடுகளில் இருப்பதைப் போல் வளர்ச்சி அடைந்தவையாக காணப்படுவதில்லை.

- இந்தாயிவல் செயல்படும் அழுத்தக் குழுக்களைக் கீழ்க்காணும் வகைகளாக வகைப்படுத்தலாம்.
  1. வணிகக்குழுக்கள்

2. தொழிற்சங்கங்கள்
3. விவசாயக் குழுக்கள்
4. தொழில் முறைக் குழுக்கள்
5. மாணவர் அமைப்புகள்
6. மத அமைப்புகள்
7. பழங்குடி அமைப்புகள்
8. மொழிக் குழுக்கள்
9. கோட்பாட்டு அடிப்படைக் குழுக்கள்
10. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுக்கள்

**அழுத்தக் குழுக்களுக்கான எடுத்துக்காட்டுகள்:**

1. இந்திய வணிகம் மற்றும் தொழிற்துறை சம்மேளத்தின் கூட்டமைப்பு (FICCI)
2. அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC)
3. அகில இந்திய விவசாயிகள் சங்கம் (AIKS)
4. இந்திய மருத்துவச் சங்கம் (IMA)
5. அகில இந்திய மாணவர் சம்மேளனம் (AISF)
6. அகில இந்திய சீக்கிய மாணவர் பேரவை
7. இளம் பதாகா சங்கம் (YBA)
8. தமிழ்ச்சங்கம்
9. தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்
10. நர்மதா பச்சாவோ அந்தோலன்

**இந்தியாவில் அழுத்தக் குழுக்களின் செயல்பாடுகள்:**

- அரசின் கொள்கையில் செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் குறிப்பிட்ட நலன்களைப் பெறச் செயல்படும் நலக் குழுக்கள் அழுத்தக் குழுக்கள் எனப்படும். அவை எந்த அரசியல் கட்சியுடனும் அணி சேருவதில்லை. ஆனால் மறைமுக முடிவுகள் எடுப்பதில் அதிக செல்வாக்குச் செலுத்தும் அளவுக்கு ஆற்றல் மிக்கவை. பிரதிநிதித்துவப்படுத்துதல், அரசியல் பங்கேற்பு, கல்வி, கொள்கை உருவாக்கம் மற்றும் கொள்கை அமலாக்கம் போன்ற பல வகைகளான செயல்பாடுகளை அழுத்தக் குழுக்கள் மேற்கொள்கின்றன.

**அரசியல் பங்கேற்பு:**

- அரசியலின் மற்றொரு முகம் என்று அழுத்தக் குழுக்களைக் கூறலாம். மனுக்கள், பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் போன்ற அரசியல் செயல்பாடுகள் மூலம் மக்கள் ஆதரவைத் திரட்டி தங்கள் செல்வாக்கினை அழுத்தக் குழுக்கள் விரிவுபடுத்துகின்றன. இத்தகைய செயல்பாடுகள் இளைய சமுதாயத்தினரை வெகுவாகக் கவர்ந்திழுக்கின்றன.

**கல்வி:**

- பல அழுத்தக் குழுக்கள் ஆராய்ச்சிகள் மேற்கொள்வது, இணையத்தளம் பராமரிப்பு, அரசுப் கொள்கைகள் மீது கருத்துகள் வெளியிடுவது மற்றும் உயர்நிலைக் கல்வியாளர்கள், அறிவியலாளர்கள் மட்டுமல்லாமல் முக்கிய பிரபலங்களிடமிருந்தும் கருத்துகளைத் திரட்டி வல்லுநர்களின் ஆதரவினைப் பெறுவது ஆகிய செயல்பாடுகளில் ஈடுபடுகின்றன.

**கொள்கை உருவாக்கம்:**

- அழுத்தக் குழுவினர் கொள்கைகளை உருவாக்குபவர்கள் இல்லை என்ற போதிலும் கொள்கை உருவாக்கச் செயல்முறைகளில் அவர்கள் பங்கேற்பதைத் தடுப்பதில்லை. அரசுக்குத் தகவல் அளிப்பதிலும், ஆலோசனைகளை வழங்குவதிலும் இந்த அழுத்தக் குழுவினர் வலுவான பங்களிப்புச் செய்து வருகின்றனர். கொள்கை உருவாக்கச் செயல்முறைகளில் அவர்கள் தொடர்ந்து ஆலோசனை தருகின்றன.

**மக்கள் குழுவும் பங்கேற்பும்**
**மக்கள் குழு**

- மக்களின் 'வாழ்க்கையை ஒட்டுமொத்தமாக மேம்படுத்தும் சமூக ரீதியிலான ஆக்கப்பூர்வ செயல்பாடுகளை நோக்கி மக்கள் குழுவை திரட்டுவது அவசியமே. சில நேரங்களில் நில நடுக்கம், சுனாமி, வெள்ளப்பெருக்கு மற்றும் பிற இயற்கைப் பேரிடர்கள் நிகழும் போது மீட்பு, நிவாரணம் போன்ற அவசரப் பணிகளுக்கு உடனடியாக மக்களைத் திரட்ட நேரிடும்.

**மக்களாட்சியில் பங்கேற்பு:**

- நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களில் மக்கள் பெருவாரியாகப் பங்கேற்கும்போதே மக்களாட்சி அமைப்பு வெற்றிகரமாக இயங்க முடியும். அதே சமயத்தில் வரி மற்றும் வருவாய் வசூலிக்கும் முறையிலும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சுத்தம் சுகாதாரம், உடல் ஆரோக்கியம் மற்றும் போலியோ சொட்டுமருந்து அளித்தல் போன்ற சிறப்புத் திட்டங்களிலும் ஒவ்வொரு குடிமகனும் சிறிய உள்ளூர் குழுக்களும் பங்கு பெறும் போது மட்டுமே மக்களாட்சி வெற்றி பெற முடியும்.

- எனவே, மக்களாட்சி அரசாங்கத்தை விட சிறந்த அரசாங்கம் இல்லை என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். சிறந்த சமூகத்தையும் நாட்டையும் உருவாக்க, இந்திய மக்களாகிய நாம் மத்திய மற்றும் மாநில அரசாங்கத்துடன் இணைந்து மனித வாழ்க்கையின் துன்பங்களை ஒழித்திட ஒற்றுமையுடன் போராட வேண்டும்.

---

## அலகு – 3 மனித உரிமைகள்

**அறிமுகம்:**

மனித உரிமைகளுக்காகப் போராடிய நிறுவனங்களின் வரலாற்றின் ஊடே பயணிக்கிறது. மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பேரறிக்கை (UDHR) மனித உரிமைகளை உறுதி செய்து வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறது. இந்திய அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றியும் தேசிய மற்றும் மாநில மனித உரிமை ஆணையங்கள் பற்றியும் அவற்றின் செயல்பாடுகள் பற்றியும் விளக்குகிறது. குழந்தைகள் உரிமைகள், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் போன்ற மனித உரிமை வகைமைகள் பற்றியும் விளக்குகிறது.

- 1893-ஆம் ஆண்டு ஜீன் மாதம் 7 ஆம் நாள் தென் ஆப்பிரிக்காவில் உள்ள பிரிடோரியா என்னும் இடத்திற்கு தொடர்வண்டியில், முதல் வகுப்பில் வெள்ளையர் அல்லாத ஒருவர் பயணம் செய்து கொண்டிருந்தார். வழியில் வண்டியில் ஏறிய வெள்ளை இனத்தவர் ஒருவர், வெள்ளையரல்லாதவரை முதல் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்புப் பெட்டிக்கு செல்லும்படி கட்டளையிட்டார். முதல் வகுப்பு பயணச் சீட்டை வைத்திருந்த வெள்ளையரல்லாதவர். அவ்வாறு செல்ல மறுத்தபோது, பீட்டர்மரிட்ஸ்பர்க் என்ற இடத்தில் ஓடும் வண்டியிலிருந்து தள்ளி விடப்பட்டார். அவ்விரவு நேர கடுங்குளிரில் அந்நிலையத்தில் குளிர் நடுக்கத்தில் உட்கார்ந்து இருந்தபோது அவரிடம் துளிர்விட்ட சிந்தனை, அவர் வாழ்வின் திசையை மாற்றியது. அந்நொடியிலிருந்து அகிம்சை வழி நின்று இனஒதுக்கல் கொள்கைக்கு எதிராக தன் வாழ்நாள் முழுவதும் போராட அந்த நபர் உறுதி பூண்டார்.

- நமது தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகள்தான். தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் உள்ளிட்ட வெள்ளயர் அல்லாதவர்களுக்கு எதிராக நிலவிய இன ஒதுக்கல் கொள்கையை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற முக்கியமான முடிவு அவரை அந்நாட்டிலேயே தங்க வைத்தது. அப்போராட்டத்தில் உருவானது தான் காந்தியின் சத்தியாகிரகம் என்ற தனித்துவமான அமைதி வழிப்போராட்டம்.

- ஒரு மனிதராக, முதல் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்ய காந்திக்கு எல்லா உரிமைகளும் இருந்தன. ஆனால், அவரைப் பாகுபடுத்திக் காட்டியது அவரது நிறமே மக்கள் நிறத்தால் மட்டுமின்றி, இனம், பாலினம், பிறந்த நாடு, சாதி மற்றும் மதம் போன்றவற்றின் அடிப்படையிலும் பாகுபடுத்தப்படுகின்றனர்.

- இப்பாகுபாடுகளினால், மக்கள் தங்கள் அடிப்படை மனித உரிமைகளை அனுபவிக்க இயலாமல் போகின்றது.

**மனித உரிமைகள் என்றால் என்ன?**

- ஐ.நா. சபை மனித உரிமைகளைப் பின்வருமாறு வரையறுக்கிறது. ‘இன, பாலின, தேசிய, இனக்குழு, மொழி, மதம் அல்லது வேறு தகுதி அடிப்படையைப் பொருத்து மாறுபடாமல் மனிதர்களாகப் பிறக்கும் அனைவருக்கும் மரபாக இருக்கும் உரிமையே மனித உரிமை ஆகும். எவர் ஒருவருக்கும் இந்த உரிமையை வழங்குவதில் பாரபட்சம் காட்டக் கூடாது.

மனித உரிமை நாள் ஒவ்வொரு வருடமும் 10ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

- மனித உரிமையின் வரலாற்று வேர்கள், உலகின் பல முக்கிய நிகழ்வுகளில் ஊடுருவி சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றினை நிலை நிறுத்தியுள்ளன. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை சமாளிக்கவும், எதிர்காலத்தில் உலகப்போர் போன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுப்பதை நோக்கமாகக் கொண்டும், 1945-ல் ஐ.நா. சபை தொடங்கப்பட்டது.

**ஐ.நா. சபை நாள் அக்டோபர் 24**

- மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் உலகளாவிய மனித உரிமைகள் பேரறிக்கை (The Universal Declaration of Human Rights) பெரும்பங்கு வகிக்கின்றது.

**இறுதிக்கு வந்த இன ஒதுக்கல் கொள்கை:**

சிறையில் 27 வருடங்கள் கழித்த மண்டேலா விடுதலையின் போது கைகளை உயர்த்தும் காட்சி.
இன ஒதுக்கல் தென்னாப்பிரிக்காவில் காணப்பட்ட இனப்பாகுபாடு ஆகும். வசிப்பிடங்களும் இனத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டன. குறைந்த எண்ணிக்கையிலான வெள்ளை இனத்தவர் அதிக எண்ணிக்கையிலான கறுப்பினத்தவரின் மீது ஆதிக்கம் செலுத்திய இந்த இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராக தென்னாப்பிரிக்க மக்கள் போராடினர்.
நெல்சன் மண்டேலா இன ஒதுக்கல் எனப்படும் கொள்கைக்கு எதிராக தொடர்ச்சியாகப் போராடினார். அரசுக்கு எதிராக போராட்டங்கள் நடத்திய போது, சிறையில் தள்ளப்பட்டார்.
உள்நாட்டிலும், உலக நாடுகளிடமிருந்தும் அவரது போராட்டத்திற்கு ஆதரவு பெருகியபோது, இனரீதியான உள்நாட்டு போர் ஏற்படுமோ என்ற அச்சத்தினால், தென்னாப்பிரிக்க தலைவர் F.W. டி கிளார்க் 1990-ல் அவரை விடுதலை செய்தார்.
மண்டேலா மற்றும் டி கிளார்க் ஆகியோரது கடும் முயற்சியினால் இன ஒதுக்கல் கொள்கை ஒரு முடிவிற்கு வந்தது. 1994ல் பல்லினப்பொதுத் தேர்தல் நடைபெற்றபொழுது, மண்டேலாவின் தலைமையிலான ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் வெற்றி பெற்று, அந்நாட்டின் தலைவரானார்.

**உலகளாவிய மனித உரிமைகள் பேரறிக்கை (UDHR):**

- வெவ்வேறு சட்ட மற்றும் பண்பாட்டுப் பின்னணியுடன் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து, கலந்துகொண்ட பிரதிநிதிகளால் தயாரிக்கப்பட்ட உலகளாவிய மனித உரிமைகள் பேரறிக்கை (Universal Declaration of Human Rights)மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும். 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 அன்று பாரிசில் நடைபெற்ற ஐ.நா. பொது சபையில் நிறைவேற்றப்பட்ட (பொது சபை தீர்மானம் 2167A) இந்தப் பேரறிக்கை, அனைத்துலக நாடுகள் மற்றும் அனைத்துலக மக்களின் பொதுத்தர சாதனை ஆகும். அடிப்படை மனித உரிமைகள் உலகளவில் பாதுகாக்கப்பட வேண்டும் எனும் நோக்கம் கொண்ட முதல் பேரறிக்கையான இது பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உள்ளது.

- மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பேரறிக்கையில் 30 உறுப்புகள் (Articles) உள்ளன. அது சுதந்திரத்திற்கான உரிமையை உறுதி செய்வதோடு குடிமை, அரசியல், சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகளையும் தருகிறது. இவ்வுரிமைகள் இனம், பால், தேசியம் ஆகியவற்றைக் கடந்து அனைத்து மக்களுக்கும் பொருந்தும். ஏனெனில் மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாகவும், சம உரிமையோடும் பிறக்கின்றனர்.

**சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள்:**

- சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள் இரண்டாம் உலகப் போரின் விளைவுகளுக்குப்பின் உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் சட்டத்தின் ஒரு பகுதியாகும்.

- ஒரு சமூகத்தில் முழுமையாகப் பங்காற்றத் தேவைப்படும் உரிமைகளே சமூக உரிமைகள். ஒவ்வொரு மனிதனும் தனது தேவைகளை நிறைவேற்றக்கூடிய பொருளாதார நிலைக்கு உறுதி அளிப்பவை பொருளாதார உரிமைகள். ஒரு நாட்டில் சட்டத்திற்கு உட்பட்ட பொருளாதார சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியன இதனால் பாதுகாக்கப்படுகின்றன.

- ஒவ்வொருவரும் தமது பண்பாட்டைக் கடைப்பிடிக்கும் உரிமைகளை உறுதிப்படுத்துபவை பண்பாட்டு உரிமைகள். பண்பாட்டு மகிழ்வில் சமத்துவம், மனித கணிணியம். பாகுபாடின்மை ஆகியவற்றையும் இது உள்ளடக்கியுள்ளது.

**குடிமை மற்றும் அரசியல் உரிமைகள்:**

- அரசு, சமூக நிறுவனங்கள் மற்றும் தனியாரின் அத்துமீறல்களிடமிருந்து ஒரு தனிமனிதனின் சுதந்திரத்தைப் பாதுகாப்பவையே இவ்வுரிமைகள். ஒருவர் சமூகத்தின் குடிமை மற்றும் அரசியல் வாழ்வில் பங்கேற்கும் திறமையை உறுதி செய்கின்றன.

- 'குடிமை உரிமைகள்' என்பன ஒவ்வொரு மனிதனுக்கும் இன, தேசிய, நிற, பால், வயது, சமய போன்ற பாகுபாடுகளின்றி, அரசின் சட்டத்தால் தரப்படும் உரிமைகளைக் குறிக்கின்றது.

- அரசாங்கம் அமைக்கவும், நிர்வாகம் செய்யவும் பயன்படுத்தப்படும் உரிமைகளே அரசியல் உரிமைகள்' ஆகும். இவை சட்டத்தின் மூலம் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நாட்டின் நிர்வாகத்தில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ குடிமக்கள் பங்காற்றும் அதிகாரத்தை இவ்வுரிமைகள் அளிக்கின்றன.

**இந்தியாவில் அடிப்படை உரிமைகள்:**

- ஒரு மனிதனின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தேவையான உரிமைகள் அடிப்படை உரிமைகள் எனப்படும். இவை குடிமக்களுக்கு பேசும் உரிமை, விரும்பிய இடத்தில் வாழும் உரிமை போன்ற மேலும் சில உரிமைகளை வழங்கி மனித வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகின்றன.

**அடிப்படை உரிமைகள்:**

- சமத்துவ உரிமை
- சுதந்திர உரிமை
- சுரண்டலுக்கு எதிரான உரிமை
- சமய மற்றும் மனச்சான்று சுதந்திரத்திற்கான உரிமை
- சிறுபான்மையினருக்கான பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள்
- அரசியலமைப்பு வழி தீர்வுக்களுக்கான உரிமை

**சமத்துவ உரிமை:**

- சட்டத்தின் முன் அனைவரும் சமம், சட்டத்தின் மூலம் அனைவருக்கும் சம பாதுகாப்பு என்பதே இவ்வுரிமை ஆகும். சமயம், இனம், பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுப்படுத்தலோ, ஒதுக்குதலோ சட்டத்திற்கு புறம்பானதாகும். அவ்வாறு நடத்தப்பட்டால் ஒருவர் நீதிமன்றத்தை அணுகலாம்.

**சுதந்திர உரிமை:**

- ஆறு வகையான சுதந்திரங்கள் நமது அரசியலமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அவை:
  - பேச்சுரிமை
  - ஆயுதமின்றி கூடும் உரிமை
  - சங்கங்கள் அமைக்கும் உரிமை
  - இந்தியாவில் எந்த பகுதியிலும் வசிக்கும் உரிமை
  - இந்தியா முழுவதும் சுதந்திரமாக நடமாடும் உரிமை
  - எந்த தொழிலையும், வணிகத்தையும் செய்யும் உரிமை

**சுரண்டலுக்கெதிரான உரிமை**

- 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களை சுரங்கங்கள், அல்லது மற்ற அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவது சட்டப்படி குற்றமாகும். எந்த ஒரு ஒப்பந்ததாரரோ, முதலாளியோ ஒரு தொழிலாளியை அவரது விருப்பத்திற்கு எதிராக ஒரு வேலையில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்த முடியாது.

**சமயச் சுதந்திரம் மற்றும் பகுத்தறிவுக்கான உரிமை:**

- குடிமக்கள் தாங்கள் விரும்பிய சமயத்தினை ஏற்கவும் பின்பற்றவும் உரிமை அளிக்கிறது. குடிமக்கள் சில சமய நம்பிக்கைகளை ஏற்று பின்பற்றுவதற்கு அல்லது சமய நம்பிக்கைகளின்றி தங்கள் மனசாட்சிபடி வாழ்வதற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

**பண்பாடு மற்றும் கல்வி உரிமகள்:**

- அரசியலமைப்பு கூட்டம் பண்பாட்டினைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் உரிமையை வழங்கியுள்ளது. கல்விக்கூடங்களை அமைக்கவும். நமது பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் நமக்கு உரிமை உள்ளது. சமயச்சார்பு கல்வி அளிக்க மக்கள் மத நிறுவனங்களை நிறுவலாம். அரசு அதற்கு மானியங்களை வழங்குகின்றது. இருப்பினும், சாதி, நிற, இனம் அல்லது சமய வேறுபாட்டினைக் காரணம் கூறி யாருக்கும் இவ்வகை நிறுவனங்களில் அனுமதி மறுத்தல் கூடாது.

| **மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு இடையிலா வேறுபாடுகள்** | |
|---|---|
| **மனித உரிமைகள்** | **அடிப்படை உரிமைகள்** |
| மனிதன் தன்மானத்தோடும், சுதந்திரத் தோடும் வாழுகின்ற உரிமைகள் | அரசியலமைப்பில் காணப்படும் குடிமக்களின் ஆதார உரிமைகள் அடிப்படை உரிமைகள் எனப்படும். இவை சட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படலாம். |
| மனிதனின் வாழ்வில் அடிப்படைத் தேவைகளுக்கான உரிமைகள் இதில் அடங்கியுள்ளன. இவற்றைப் பறிக்க இயலாது. | மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ள உரிமைகளும், அடிப்படை உரிமைகளில் அடங்கும். |
| மனித உரிமைகள் பன்னாடு அளவில் அங்கீகரிக்கப்பட்டவை | அடிப்படை உரிமைகள் நமது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் உத்திரவாதம் அளிக்கப்படுகின்றன. |

நீதிப் போராணை (writ) என்பது ஒரு செயலை செய்யவோ அல்லது அச்செயலை தடுக்கவோ, நீதிமன்றத்தால் அல்லது வேறுசட்ட அமைப்பினால் வழங்கப்படும் எழுத்துப்பூர்வமான உத்தரவு.

**அரசியலமைப்பு வழி தீர்வுகளுக்கான உரிமை:**

- அடிப்படை உரிமைகள் அரசியலமைப்புச் சட்டத்தினால் உத்திரவாதம் தரப்பட்டவை. ஒரு குடிமகனின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகையில், அரசியலமைப்பு வழி தீர்வுகளுக்கான உரிமையின்படி அவர் நீதிமன்றத்தை அணுகலாம். நீதிமன்றம் அக்குடிமகனுக்குரிய உரிமையை மீட்டளிக்குமாறு அரசுக்கு ஆணையிடுகிறது. இது நீதிப்போராணை என்று அழைக்கப்படுகிறது. ஒரு செயல் அரசியலமைப்பு சட்டத்தின் படி ஏதேனும் தவறானதாக கருதப்படின் அதற்கான சரியான தீர்வுகளை அரசியலமைப்புச் சட்ட தீர்வாணைகள் வழங்குகின்றன. இவ்வாறு, இவ்வுரிமை அனைத்து உரிமைகளுக்கும் பாதுகாப்பாகவும், காவலாகவும் அமைகின்றது.

**அப்படைக் கடமைகள்:**

- அடிப்படைக் கடமைகள் என்பவை குடிமக்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் என்ற விதத்தில் அமைந்துள்ளன. 1950 ஜனவரி 26 முதல் நடைமுறைக்கு வந்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அடிப்படைக் கடமைகள் என்ற பகுதி இடம்பெற்றிருக்கவில்லை.

- 1976 ஆம் ஆண்டு 42வது சட்ட திருத்தத்தின் மூலம் அவை இணைக்கப்பட்டன. அரசியலமைப்பு கிழ்கண்ட 11 அடிப்படைக் கடமைகளைக் குறிப்பிடுகின்றது.

1. ஒவ்வொரு இந்திய குடிமகனும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினை மதிப்பதுடன், அரசியலமைப்புச் சட்ட நிறுவனங்கள், இலட்சியம், தேசியக்கொடிய மற்றும் தேசியகீதம் ஆகியவற்றையும் மதிக்க வேண்டும்.

2. விடுதலைப் போராட்டத்தின்போது புத்துணர்வளித்த உன்னதமான இலட்சியங்களை நினைவிற்கொண்டு பின்பற்ற வேண்டும்.

3. இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

4. தேவை ஏற்படின், நாட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு, நாட்டுப்பணியாற்ற வேண்டும்.

5. சமய, மொழி, மண்டல அல்லது பிரிவு வேறுபாடுகளைக் கடந்து இந்திய மக்கள் அனைவா் மனதிலும் சகோதரத்துவமும் இணக்கமும் ஏற்பட பாடுபட வேண்டும். பெண்களை இழிவு செய்யும் செயல்களை விட்டொழிக்க வேண்டும்.

6. நமது கூட்டுப் பண்பாட்டு மரபினைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

7. காடுகள், ஏரிகள், ஆறுகள், விலங்கினங்கள் ஆகியவை உள்ளிட்ட புறச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதுடன் உயிரினங்கள் மீதும் கருணை காட்ட வேண்டும்

8. அறிவியல் உணர்வு, மனிதநேயம், பகுத்தறிவு மற்றும் சீர்திருத்த உணர்வை வளர்க்க வேண்டும்.

9. பொதுச் சொத்துக்களைப் பாதுகாக் வன்முறையை வெறுத்து ஒதுக்க வேண்டும்.

10. தனிப்பட்ட அளவிலும் கூட்டு செயற்பாட்டிலும் மிகச் சிறந்த நிலையை அடைய முயலுவதன் மூலமாக நாட்டின் மேம்பாட்டிற்கு முயல வேண்டும்.

11. 14 வயது வரை உள்ள குழந்தைகளின் பெற்றோர் அல்லது காப்பாளர் குழந்தைகளின் கல்விக்கான வாய்ப்புக்கு வகை செய்திடல் வேண்டும்.

மூத்த குடிமக்கள் மற்றும் பெற்றோர் நலன்கள் பராமரிப்புச் சட்டம் 2007-ஆம் ஆண்டில் சட்டமாக இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் பிள்ளைகளுக்கும் வாரிசுகளுக்கும் தங்கள் பெற்றோரை அல்லது மூத்த குடிமக்களைப் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்ளும் சட்டப்பூர்வ வேண்டுகோள் ஆகும்.

## இந்திய மனித உரிமைகள் ஆணையம் (National Human Rights Commission):

- மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் நாள் அமைக்கப்பட்டது. தேசிய மனித உரிமைகள் ஆணையம். இது ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இவ்வமைப்பு ஒரு தலைவரையும், சில உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சர்வதேச உடன்படிக்கையில் உத்திரவாதம் தரப்பட்டுள்ள ஒரு தனி மனிதனின் வாழ்வு, சுதந்திரம், சமத்தவம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் பொறுப்பேற்கிறது.

### தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் பணிகள்:

- மனித உரிமை மீறல் அல்லது அத்தகைய மீறல் குறித்து அரசு ஊழியர் அலட்சியம் காட்டுதல் ஆகியவை மீது விசாரணை நடத்திடுதல்.

- மனித உரிமை மீறல் வழக்குகளில் தன்னை இணைத்துக் கொள்ளுதல்

- மனித உரிமைகள் குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஊக்குவித்தல்.
- சமூகத்தின் பல்வேறு பிரிவினரிடையே மனித உரிமைக் கல்வியைப் பரப்புதல்
- மனித உரிமைத் துறையில் பணியாற்றும் அரசுசாரா அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் முயற்சிகளை ஊக்குவித்தல்

**மாநில மனித உரிமைகள் ஆணையம் (State Human Rights Commission)**

- இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைக்க வழி செய்யும் வகையுரை ஒன்று பிரிவு 21, மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993ல் உள்ளது. மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு ஆகியவை இவ்வாணையத்தின் முதன்மை நோக்கமாகும். மேலதிகமாக, எழுத்து மூலமான புகார் பெறாவிட்டாலும்கூட ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை நடத்தும் வகையிலும், மாநில மனித உரிமை ஆணையங்களின் செயல்பாடுகளை வெளிப்படைத் தன்மையாக்கியது போன்ற ஒழுங்காற்று விதிகளை ஆணையம் வகுத்ததன் மூலமாக மாநிலங்களில் ஆணையத்தின் செயல்முறைகள் வலுவாக்கப்பட்டுள்ளது.

**மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் பணிகள்:**

- மாநில பட்டியல், பொதுப்பட்டியல் ஆகியனவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் குறித்தான மனித உரிமை மீறல்களை விசாரித்தல்.
- இதன் நோக்கங்களும் பணிகளும் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தைப் போன்றே உள்ளன. அனால் மாநில எல்லைக்குட்பட்டதாகும். இவ்வாணையத்தில் ஒரு தலைவரும் இரு உறுப்பினர்களும் உள்ளனர்.
- இவ்வாணையத்திற்கு உரிமையியல் நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரம் உண்டு. எனவே, தொடுக்கப்படும் வழக்குகள் அல்லது தானாக முன்வந்து தொடுக்கும் வழக்குகளை விசாரித்து தீர்ப்பளிக்கலாம்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகள் வழங்க பரிந்துரைகளும் செய்யலாம்.

**குழந்தைகளுக்கான உரிமைகள்:**

- அரசியலமைப்பினால் விளக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைக் கடந்து நாம் வேறு சில உரிமைகளையும் உறுதி செய்தல் வேண்டும்.
- ஐக்கிய நாடுகள் சபை 18 வயதுவரையுள்ள அனைவரையும் குழந்தைகள் என வரையறுக்கிறது. இது உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தின் பிரிவு 25ல் காணப்படுகின்றது. இக்கொள்கைகளின் அடிப்படையில் ஐ.நா. சபை 1989 ஆம் ஆண்டு நவம்பர் 20 அன்று குழந்தைகள் உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.
    - வாழ்வதற்கான உரிமை
    - குடும்பச் சூழலுக்கான உரிமை
    - கல்விக்கான உரிமை
    - சமூகப் பாதுகாப்பு உரிமை
    - பாலியல் தொல்லைகளுக்கு எதிரான உரிமை
    - விற்பது அல்லது கடத்தலுக்கெதிரான உரிமை
    - குழந்தை உழைப்பு முறை போன்ற மற்ற சுரண்டல்களுக்கெதிரான உரிமை

**வாழ்வதற்கான உரிமை**:

- ஒரு குழந்தை பிறப்பிற்கு முன்பே அது வாழத்தகுதி பெறுகின்றது. வாழ்வதற்கான உரிமை என்பது பிறப்புரிமை, அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை மற்றும் கண்ணியமான வாழ்வு வாழும் உரிமை ஆகியவற்றை உள்ளடக்கியது.

**குடும்பச் சூழலுக்கான உரிமை:**

- ஒரு குழந்தைக்கு ஒரு நல்ல குடும்பச் சூழலில், இயல்பான குழந்தைப் பருவத்தினைக் கழிக்க உரிமையுண்டு. ஆதரவற்ற, கைவிடப்பட்ட அல்லது அனாதைக் குழந்தைகளும் வாழ தகுதியுடையவர்கள். இது போன்ற குழந்தைகள், அக்கறையுள்ள குடும்பங்களுக்குத் தத்துக் கொடுக்கப்படலாம்.

**சமூகப் பாதுகாப்பு உரிமை:**

- உடல் நலமின்மை, இயலாமை அல்லது வயது முதிர்வு காரணமாகப் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களால், குழந்தைகளுக்குத் தரமான வாழ்வைத் தர இயலாத சூழ்நிலையில் அக்குழந்தைகளுக்கு அரசு நிதியுதவி அளிக்க வேண்டும்.

**கல்விக்கான உரிமை:**

- அசியலமைப்பின் பிரிவு 21யு ல் உள்ளபடி 6 முல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி வழங்க 2009 ஆம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றம் கல்வி உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தியது.

இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் (Rihgt of children to free and compulsory education) சட்டம் 2009, ஒவ்வொரு குழந்தையும் தொடக்கக் கல்வி பயில உரிமை உள்ளது என்பதை வலியுறுத்துகின்றது. இவ்வுரிமை, குழந்தைகள் தொடக்கக் கல்வி முடியும் வரை அருகாமையில் உள்ள பள்ளியில் இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்க வழிவகை செய்கிறது. கல்வி பயிலும் குழந்தை எந்த வகையான கட்டணமும் செலுத்த வேண்டிய அவசியமில்லை.

மலாலா – நோபில் பரிசு வென்றவர் கூறுகிறார்

“நான் பள்ளியை நேசித்தேன். ஆனால் அடிப்படைவாதிகள் என் வசிப்பிடமாகிய ஸ்வாட் பள்ளத்தாக்கினை ஆக்கிரமித்தபொழுது அனைத்தும் மாறியது. பெண்கள் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. மற்ற பெண்களுக்காகவும், எங்கள் கல்வி கற்கும் உரிமைக்காகவும் நான் குரல் கொடுத்தேன்.

2012 அக்டோபரில், பள்ளியிலிருந்து வீடு திரும்பும்பொழுது, துப்பாக்கி ஏந்திய ஒருவர் எங்கள் பேருந்தில் ஏறி இதில் மலாலா யார்? என்று கேட்டு, தன் தலையின் இடது பக்கத்தில் சுட்டான். பத்து நாட்கள் கழிந்து இங்கிலாந்தில் உள்ள பர்மிங்ஹாம் என்னுமிடத்தில் உள்ள மருத்தவமனையில் கண்விழித்தேன். பல மாதங்கள் அறுவை சிகிச்சைகளிலும், மறுவாழ்வு சிகிச்சையிலும் கழிந்தது இங்கிலாந்திலுள்ள எனது புது வீட்டில் என் குடும்பத்தினரோடு மீண்டு சேர்ந்த நான், ஒவ்வொரு பெண் குழந்தையும் பள்ளி செல்லும்வரை என் போராட்டத்தைத் தொடர்வேன் என உறுதி பூண்டேன்

அனைத்து பெண்களும் 12 வருட இலவச, பாதுகாப்பான மற்றும் தரமான கல்வி பயில வேண்டும் என்பதை உறுதி செய்ய நான் ஒவ்வொரு நாளும் போராடுகிறேன். 130 மில்லியன் பெண்கள் பள்ளியில் பயிலாத இன்றைய சூழலில், நான் செய்ய வேண்டிய வேலைகள் அதிகம் உள்ளன. கல்வி மற்றும் சமத்துவத்திற்காக என்னோடு சேர்ந்து போராடுவீர்கள் என நம்புகிறேன். நாம் இணைந்து, பெண்கள் கல்வி பயின்று, வழிநடத்தும் ஓர் உலகை உருவாக்குவோம்”.

நீ மலாலாவாக இருந்தால், என்ன செய்திருப்பாய்? மாலாலாவின் போராட்டம் தேவையா? பெண்களுக்கு சமமான கல்வி உரிமை கொடுக்கப்பட்டு, சமமாக நடத்தப்படுகின்றனரா?

**குழந்தை விற்பனை அல்லது கடத்தலுக்கெதிரான உரிமை:**

- குழந்தைகள் அனைவரும் அடிப்படை மனித உரிமைகள் கொண்ட தனிநபர்கள் எனக் கருதுதல் வேண்டும் அவர்கள் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்கள். குழந்தைகள் விற்பனை மற்றும் கடத்தல் நடைபெற ஏழ்மை, பாலினப்பாகுபாடு, சிதறிய குடும்பங்கள் ஆகியன முக்கிய காரணங்களாகும்.

ஆபத்து காலத்தில் உதவிட காவலன் SOS செயலி தமிழ்நாடு அரசினால் பொது மக்களின் பன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பெண்கள் மட்டுமின்றி, சிக்கலான அல்லது நெருக்கடியான சூழலில் இருக்கும் அனைவரும் மாநில காவல் கட்டுப்பாட்டு அறையினை இச்செயலியின் உதவியோடு எளிதாகவும், நேரடியாகவும், தொடர்பு கொள்ள இயலும்.

- குழந்தைகள் பொருளாதாரச் சுரண்டல், பாலியல் சுரண்டல், பாலியல் துன்புறுத்தல் போதைப்பொருள் கடத்தல் மற்றும் குழந்தைத் தொழில் ஆகிய காரணங்களுக்காக விற்பனை அல்லது கடத்தல் செய்யப்படுகின்றனர்.

**பாலியல் தொந்தரவுக்கெதிரான உரிமை:**

- குழந்தைகள் உடலளவிலோ, மனதளிவிலோ பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட கட்டாயப்படுத்தப்படுமபோது, மாநில அரசு அக்குழந்தைகளைப் பாலியல் சுரண்டலிலிருந்தும் தொல்லைகளிலிருந்தும் பாதுகாக்க வேண்டும்.

**குழந்தை உழைப்பு முறை போன்ற மற்ற சுரண்டல்களுக்கு எதிரான உரிமை:**

- பல்வேறு தொழிலகங்களில் குழந்தைகள் பணியமர்த்தப்படுகின்றனர். இவர்கள் தங்கள் குழந்தைப் பருவத்தினையும், உடல்நலம் மற்றும் கல்வி ஆகியவற்றையும் இழக்கின்றனர். இது வறுமை மற்றும் தேவைகள் நிறைவேற்றப்படாத வாழ்விற்கு வழிவகுக்கும். இக்குழந்தைகள் கண்ணாடி, தீப்பெட்டி, பூட்டு தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும், குப்பை பொறுக்குதல், கம்பளம், பீடி தயாரிப்பு, சுரங்கவேலை, கல் குவாரிகள், செங்கல் சூளைகள் மற்றும் தேயிலைத் தோட்டங்கள் ஆகிய இடங்களில் பணியமர்த்தப்படுகின்றனர்.

- POSCO சட்டம் - பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம்.
- பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (The Protection of children from sexual offence Act, 2012) ஒவ்வொரு நிலையிலும் குழந்தைகளின் நலனை மையமாகக் கொண்டு செயல்படுகின்றது.

**பாஸ்கோ சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:**

- பாலியல் வன்கொடுமையில் அதிகாரத்தில் இருப்பவரோ, குடும்ப உறுப்பினரோ, அண்டை வீட்டாரோ அல்லது அறிமுகமானவரோ ஈடுபட்டால் அவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கப்படும்.
- பாதிக்கப்பட்ட குழந்தையை அடிக்கடி சாட்சி சொல்ல அழைக்கக் கூடாது.
- பனிரெண்டு வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் பாலியல் வன்கொடுமைச் செய்யப்படும்போது, வன்கொடுமை செய்தவருக்கு மரண தண்டனை வழங்குவதோடு கடுமையான தண்டனைகள் விதிக்க வகைசெய்யும் சட்டம் 2018 ஏப்ரல் மாதம் கொண்டுவரப்பட்டது. குற்றவியல் சட்ட திருத்தச்சட்டம் 2018. இது இந்திய குற்றவியல் சட்டத்தில் கடுமையான திருத்தங்களைக் கொண்டு வந்தது. இதன் சிறப்பம்சம் என்னவென்றால் விதிக்கப்படும் அபராதத் தொகையானது பாதிக்கப்பட்டவரின் மருத்துவச் செலவை ஈடுகட்டும் வகையில் இருக்க வேண்டும் என்பதாகும்.

1098

1098-உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கான உதவி மைய எண் (Child line) இந்தியாவின் முதல் 24 மணி நேர கட்டணமில்லா அவசர தொலைதொடர்பு சேவை ஆகும். குழந்தைத் தொழிலாளர், குழந்தைத் திருமணம் மற்றும் ஏதேனும் வன்கொடுமைக்கு ஆளாகும் குழந்தைகளுக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

- வேலைவாய்ப்புகளில் பாலினப்பாகுபாடு காணப்படுகின்றது. பெண் குழந்தைகள் வீடு சார்ந்த வேலைகளிலும் ஆண் குழந்தைகள் கூலி வேலைகளிலும் பணியமர்த்தப்படுகின்றனர். இக்குழந்தைகள் விவசாய நிலங்கள், உணவகங்கள், வாகனங்களைப் பழுது பார்க்கும்

பட்டறைகள் மற்றும் குடிசைத் தொழில்களில் பணிபுரிவதால், குழந்தை உழைப்பை ஒழிப்பது மிகப் பெரிய சவாலாக உள்ளது.

பக்பன் பச்சாவ் அந்தோலன் (இளமையைக் காப்பாற்று இயக்கம்) போன்ற பல குழந்தைகள் உரிமை அமைப்புகளின் நிறுவனர் கைலாஷ் சத்யார்த்தி. அவர் குழந்தை உழைப்பு, கொத்தடிமை, கடத்தல் போன்ற பல குழந்தைகளுக்கு எதிரான நடவடிக்கைகளிலிருந்து சுமார் 86,000 த்திற்கும் அதிகமான இந்தியக் குழந்தைகள் இவராலும், இவரது குழு உறுப்பினர்களாலும் மீட்கப்பட்டுள்ளனர். 1998 ல் உலக மக்களின் கவனத்தை குழந்தை உழைப்பு முறை மீது திசை திருப்ப, 80,000 கி.மீ நீள குழந்தை உழைப்புக்கு எதிரான உலகளாவிய அணிவகுப்பை (Global March against child labour) முன்னின்று நடத்தினார்.

- குறைபாடுகள் உடைய குழந்தைகளே, மற்ற குழந்தைகளை விட 3.4% அதிகமாக பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர் என உலகளாவிய ஆராய்ச்சி ஒன்றின் முடிவுகள் குறிப்பிடுகின்றன.

**இந்திய அரசியலமைப்பில் குழந்தைகள் உரிமை:**
பிரிவு 24: பதினான்கு வயதுக்குட்பட்ட எந்த குழந்தையும் ஆபத்தான வேலைகளில் ஈடுபடுத்தக்கூடாது.
பிரிவு 45: பதினான்கு வயது நிறைவடையும் வரை இலவச மற்றும் கட்டாயக் கல்வி அனைத்து குழந்தைகளுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

குழந்தைகள் தேசத்தின் அடித்தளமாக விளங்குகின்றனர். சிறு வயதிலேயே பெண் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைக்கப்படும்போது குழந்தைப் பருவத்தின் மகிழ்ச்சிகள், கல்வியறிவு, ஆரோக்கியமான வாழ்வு போன்ற பல சலுகைகளை அவர்கள் இழந்து விடுகின்றனர். இதனால் குழந்தைத் திருமணங்கள் சமூகத்தைப் பெருமளவில் பாதிக்கின்றன. எனவே குழந்தைத் திருமணங்கள் அனைத்து விதத்திலும் தடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

**பெண்களுக்கான உரிமைகள்:**

- இந்தியாவில் பெண்களுக்கான தேசிய ஆணையம் அமைக்கப்பட்டு பெண்களுக்கான அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியிலான பாதுகாப்பினை மீளாய்வு செய்து உறுதிப்படுத்துகிறது. பெண்களுக்கான நலவாழ்வு மற்றும் வளர்ச்சி குறித்த அரசின் அனைத்து செயல் திட்டங்கள் மீதான தனது கருத்தையும் மாற்றுக் கருத்துக்களையும் இவ்வாணையம் பரிந்துரை செய்கிறது.

- குடியரசுத் தலைவர், பிரதமர், நாடாளுமன்ற அவைத்தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், மத்திய அமைச்சர்கள், முதலமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் என இந்தியாவின் முக்கிய பதவிகளில் பெண்கள் பதவி வகிக்கின்றனர். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள பெண்கள் உரிமைகளில் சமத்துவம், கண்ணியம் மற்றும் பாகுபாடுகளில் இருந்து சுதந்திரம் ஆகியன அடங்கும். பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் மேலும் பல்வேறு சட்டங்கள் இந்தியாவில் உள்ளன.

**பெண்களுக்கு மூதாதையர் சொத்துரிமை:**
தமிழ்நாடு இந்து வாரிசு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம், 1989 ஐ நிறைவேற்றி மூதாதையரின் சொத்துகளில் பெண்களுக்கும் சம உரிமை வழங்கியுள்ளது.
மத்திய அரசு இந்து வாரிசுரிமைச் சட்டம் 2005-இல் திருத்தங்களை மேற்கொண்டது. இதில் மூதாதையரின் பிரிக்கப்படாத சொத்தில் வாரிசு அடிப்படையில் பெண்களுக்கு சம உரிமையினை அளித்தது.

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள பெண்கள் உரிமைகளில் சமத்துவம், கண்ணியம் மற்றும் பாகுபாடுகளில் இருந்து சுதந்திரம் ஆகியன அடங்கும். பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் மேலும் பல்வேறு சட்டங்கள் இந்தியாவில் உள்ளன.

**பெண் தொழிலாளர் நலனும் - டாக்டர் பி.ஆர். அம்பேத்கரும்:**
சுரங்கத் தொழிலாளர் பேறுகால நன்மைச் சட்டம், பெண் தொழிலாளர் நல நிதி, பெண்கள் மற்றும் குழந்தைத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம், பெண் தொழிலாளர்களுக்கான பேறுகால நன்மைகள், நிலக்கரிச் சுரங்கங்களில் சுரங்கப் பணிகளில் பெண்களை ஈடுபடுத்தப்படவதற்கான தடையை மீட்டெடுத்தல் போன்ற சட்டங்கள் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களால் பெண் தொழிலாளர்களுக்காக இந்தியாவில் இயற்றப்பட்டது.

**இடஒதுக்கீடு:**

- பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு, முஸ்லீம்கள், மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர், ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு அரசு வேலைவாய்ப்பு மற்றும் கல்வியில் 69மு இடஒதுக்கீட்டைத் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. ஆதிதிராவிடர் பிரிவில் இடம் பெற்றுள்ள அருந்ததியர் வகுப்பினருக்கு முன்னுரிமை அடிப்படையில் சிறப்பு ஒதுக்கீடு வழங்கியுள்ளது.

- கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை மூலம் தமிழ்நாட்டின் பல்வேறு வகுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டினைப் பற்றி தெளிவாக புரிந்துகொள்ள இயலும்.

| **பிரிவுகள்** | **இட ஒதுக்கீடு (சதவீதத்தில்)** |
|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் | 26.5 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் | 3.5 |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் | 20 |
| ஆதிதிராவிடர் | 18 |
| பழங்குடியினர் | 1 |
| மொத்தம் | 69 |

- மேலும் பெண்களுக்கு 30% மாற்றுத் திறனாளிகளுக்கு 4% முன்னுரிமை அடிப்படையில் ஒவ்வொரு பிரிவின் கீழும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கு ஒவ்வொரு பிரிவின்கீழும் முன்னுரிமை அடிப்படையில் 20% ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் திருநங்கையர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

**தகவல் அறியும் உரிமைச்சட்டம்:**

- தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஓர் புரட்சிகரமான சட்டமாகும். அரசு நிறுவனங்களின் வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வருவதற்கான இச்சட்டம் இந்தியாவில் 2005 அக்டோபர் மாதம் இயற்றப்பட்டது.

- இச்சட்டத்தின்படி அரசு நிறுவனங்களில் தேவைப்படும் தகவல்களை எந்த ஒரு சாதாரண குடிமகனும் கோரிப் பெறலாம். தகவல்கள் 30 நாட்களுக்குள் வழங்கப்படுதல் வேண்டும். அவ்வாறு தகவறும் பட்சத்தில் தகவல் வழங்கும் அதிகாரியிடமிருந்து கட்டணமாக ஒரு குறிப்பிட்டத் தொகை வசூலிக்கப்படும்.

- நாட்டின் வலிமை வாய்ந்த சட்டங்களுள் தகவல் அறியும் உரிமைச் சட்டமும் ஒன்றாகும். இச்சட்டம் மிகவும் எளிமையானதாகவும், சாதாரண மக்களும் பயன்படுத்தக்கூடிய வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இச்சட்டத்தின் வாயிலாக தகவல்களைப் பெற படிக்கத் தெரியாதவர்களுக்கு பொதுத்தகவல் அலுவலர் உதவி செய்ய வேண்டும். அனைத்து அரசு அலுவலகங்கள் அதாவது ஊராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலகங்கள் போன்ற உள்ளாட்சி அமைப்புகள் பல்வேறு அரசுத் துறைகள், அரசுப் பள்ளிகள், நெடுஞ்சாலைத் துறைகள் போன்றவை இச்சட்டத்திற்கு உட்பட்டதாகும்.

- தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் ஒருவர் அரசு ஆவணங்களான கோப்புகள், அறிக்கைகள், தாள்கள் மற்றும் தனிப்பட்ட ஒருவரின் தகவல்கள் போன்றவைகள் கிடைக்கப்பெறலாம். நாட்டின் பாதுகாப்பு மற்றும் உளவுத்துறைகளான எல்லைப் பாதுகாப்புப் படை (BSF), மத்திய சேமக் காவல் படை (CRPR) மற்றும் உளவுத்துறைப் பணியகம் (Intelligence Bureau) ஆகிய அமைப்புகளுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

- விண்ணப்பத்தில் உங்கள் முழுபெயர், முகவர் எழுதி கையெழுத்திட்டு தேதியுடன் பதிவு தபாலின் குறிப்பிட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

- அனுப்பப்பட்ட அஞ்சலுக்கு 30 நாட்களுக்குள் பதில் பெறப்படவில்லை எனில் 1 விண்ணப்பத்தை மேல் முறையீடுக்கு அனுப்பலாம்.

பத்து ஆண்டுகளாக கேரளாவில் உள்ள கடைகள் மற்றும் வணிக வளாகங்களில் வேலை செய்யும் பெண்கள் ஒரு நாளில் ஏறக்குறைய 12 – 14 மணிநேரம் நின்றுகொண்டே வேலை செய்து கொண்டிருந்தனர்.
கடைகளிலிலும், வணிக வளாகங்களிலிலும் வேலை செய்யும் பெண் பணியாளர் அமர்ந்தோ, சுவரில் சாய்ந்தபடியோ பணியாற்ற அனுமதிக்கப்படவில்லை. ஒரு நாளைக்கு, இருமுறை 5 நிமிடங்கள் மட்டுமே ஓய்வு எடுக்க அனுமதிக்கப்பட்டனர்.
பெண்களுக்கு இழைக்கப்படும் இந்த மனித தன்மையற்ற செயலுக்காக நீண்ட நாள்களாக பெருத்த கண்டனக் குரல்கள் ஒலித்து வந்தன.
இப்பிரச்சனையைப் பரிசீலித்து குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு கேரள அரசு வணிக நிறுவன சட்டத்தில், 2018 ஜுலை மாதத்தில் சட்ட திருத்தம் கொண்டு வந்தது. இதன் மூலம் பெண்கள் இந்துயர் நீங்கி வெற்றி கண்டுள்ளனர்.

**தொழிலாளர் நலனில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் பங்களிப்புகள்:**

- தொழிற்சாலையில் வேலை நேரம் குறைப்பு
- தொழிற்சங்கங்களின் கட்டாய அங்கீகாரம்
- இந்தியாவில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அமைத்தல்
- தொழிலாளர் காப்பீட்டுக்கழகம் (ESI)
- தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம்
- நிலக்கரி மற்றும் மைகா சுரங்கத்தின் வருங்கால வைப்பு நிதி

**தொழிலாளர் உரிமைகள்:**

- சமத்துவத்திற்கான உரிமை, பொது வேலைவாய்ப்பில் சமத்துவம், அமைப்புகள் மற்றும் சங்கம் தொடங்குவதற்கான உரிமை, வாழ்வாதார உரிமை, கடத்தலைத் தடுத்தல், மற்றும் கட்டாயத் தொழிலாளர் மற்றும் குழந்தைகள் உரிமைகளை, இந்திய அரசியலமைப்பு உறுதி செய்கிறது. பிரிவு 39பி, இருப்பாலினருக்கும் சம வேலைக்கு சம ஊதியம் என்பதை உறுதி செய்கிறது.

- ‘‘ஒரு மனிதனுடைய உரிமை அச்சுறுத்தப்படும் போது, ஒவ்வொரு மனிதனுடைய உரிமையும் குறைக்கப்படுகிறது’’ என்றார் ஜான். எ∴ப் கென்னடி. உலகின் நாகரிகமடைந்த நாடுகள் சமத்துவத்தை வலியுறுத்துகின்றன. சமத்துவத்தை உறுதி செய்ய, நாடுகள் மனித உரிமைகள் மீது கவனம் செலுத்துகின்றன. இது ஒரு நாட்டின் அமைதி, நல்லிணக்கம் மற்றும் முன்னேற்றத்திற்கு உதவுகிறது.

**அலகு –4 அரசாங்கங்களின் வகைகள்**


**அறிமுகம்:**

- ஒரு அரசாங்கத்தின் முக்கிய நிறுவனம் அரசு ஆகும். இது அரசியல் மற்றும் நிர்வாக குழுக்களைச் சார்ந்த பல உறுப்பினர்களை உள்ளடக்கியதாகும். மக்களுக்கான பொதுநலன் சார்ந்த அரசின் கொள்கைகளைப் பிரதிநிதித்துவம் படுத்துவதற்கும் செயல்படுத்துவதற்குமான கருவியாக இது திகழ்கிறது. அரசு ஓர் மாநிலத்தின் விருப்பத்தை உணர்ந்த அதனை வெளிப்படுத்தும் விதமாக திட்டங்களை அமைக்கிறது. இந்திய அரசியலமைப்பு மற்றும் சட்டங்களுக்கு உட்பட்ட சட்டமன்ற, நிர்வாக மற்றும் நீதித்துறை அதிகாரங்களை அரசு செயல்படுத்துகிறது. அரசாங்கத்தின் உறுப்புகளாகச் சட்டமன்றம், நிர்வாகத் துறை மற்றும் நீதித்துறை அமைந்துள்ளன. இவ்வுறுப்புகள் அரசின் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துகின்றன. ஒற்றை ஆட்சிமுறை,'கூட்டாட்சி ஆட்சி முறை, நாடாளுமன்ற ஆட்சி முறை மற்றும் ஜனாதிபதி ஆட்சி முறை என வகைப்படுத்தப்படுகின்றன.

**பொருள்:**

- ஒரு அரசின் நிர்வாக செயல்பாடுகளை அரசாங்கம் குறிக்கிறது. அரசு என்பது, பொதுமக்கள் சார்ந்த, பெரு நிறுவனங்கள் மதம் சார்ந்த கல்வி மற்றும் பிற குழுக்களுக்கு சட்டங்கள் இயற்றி அவற்றை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் படைத்த ஓர் அமைப்பாகும்.

**அரசியலமைப்பின் வகைகள்:**




**ஒற்றை ஆட்சி முறை:**

- ஒற்றை ஆட்சி முறை என்பது இறையாண்மை மிக்க ஓர் அரசு ஒரே நிறுவனமாக இருந்து ஆட்சி செய்வதாகும். மத்திய அரசு அதிகாரம் மிக்கதாகும். நிர்வாக அமைப்புகள் மத்திய அரசினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை மட்டுமே செயல்படுத்தும்.

- இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், மற்றும் இலங்கை ஆகியவை ஒற்றை ஆட்சி முறைக்கான உதாரணங்களாகும்.

- அரசு என்னும் பதம், பழைய பிரெஞ்சு வார்த்தையான கவர்னர் (governer)என்பதிலிருந்தும் இயக்கு, ஆட்சி செய், வழி நடத்து, ஆள் என்று பொருள் தரும் லத்தீன் வார்த்தையான குபர்னர் (gubemear) என்பதிலிருந்தும் பெறப்பட்டது.

- ஒற்றையாட்சி முறையில் அனைத்து அதிகாரங்களும் ஒரே இடத்தில் மையப்படுத்தப்படுகின்றன. ஆனால் கூட்டாட்சி அரசு முறையில் அதிகாரமானது, மத்திய அரசு மற்றும் அதன் அமைப்புப் பிரிவுகளுக்குள்ளும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஒற்றையாட்சி முறை அரசியலமைப்பிலும் அதிகாரப் பரவலாக்கம் இருக்கக்கூடும். ஆனாலும் அதனைக் கூட்டாட்சி முறை எனக் கொள்ளலாகாது.

**ஒற்றை ஆட்சி முறையின் நிறைகள்:**

- சிறு நாடுகளுக்குப் பொருத்தமானது

- அதிகாரம் மற்றும் பொறுப்புகளுக்கு இடையில் மோதல்கள் இருப்பதில்லை.
- ஒற்றை ஆட்சி முறை உடனடியாக முடிவெடுத்துத் துரிதமாகச் செயல்படுகிறது.
- ஒற்றை ஆட்சி குறைந்த செலவுடையது
- அரசியலமைப்பு திருத்தங்களை எளிதில் மேற்கொள்ள இயலும்
- ஒற்றுமை, சீரான சட்டம், கொள்கை மற்றும் நிர்வாகத்தினை உள்ளடக்கியது.

| |
|---|
| மிகவும் பழமையான அரசாங்கம் எது?<br>ஐக்கிய பேரரசு 'காணப்பட்ட முடியாட்சி அமைப்பே மிகவும் பழமையான அரசாங்கம் ஆகும். முடியாட்சியில் அரசரோ அல்லது மகாராணியோ அரசாங்கத்தின் தலைவராவார். ஆங்கில முடியாட்சி என்பது அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி ஆகும். அதாவது அரசின் தலைமையாகவே இருந்தாலும் சட்டமியற்றும் வல்லமை தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்திடமே உள்ளது. |

**குறைகள்:**
- மிகப்பபெரிய நாடுகளுக்குப் பொருத்தமற்றது.
- மத்திய அரசு பலதரப்பட்ட பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். அதனால் நிர்வாக தாமதங்கள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன.
- மத்திய அரசு உள்ளூர் பிரச்சினைகள் சார்ந்தும் உள்ளூர் மக்கள் நலனிலும் உள்ளூர் முயற்சிகளிலும் அக்கறை காட்டாது.
- அதிகமான அதிகாரங்கள் குவிக்கப்படுவதால் மத்திய அரசின் சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கவும் கூடும்.

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஒற்றை ஆட்சி முறையின் அம்சங்கள்:**
- பலமான மத்திய அரசு
- மாநில அரசின் மீது மத்திய அரசின் ஆளுமை
- ஒற்றை அரசமைப்பு
- அரசியமைப்பின் நெகிழ்வுத்தன்மை
- மாநிலங்களின் சமமற்ற பிரதிநிதித்துவம்
- அவசரகால ஏற்பாடுகள்
- ஒற்றைக் குடியுரிமை
- ஒருங்கிணைக்கப்பட்ட ஒற்றை நீதித்துறை
- அகில இந்தியச் சேவைகள்
- ஆளுநர்கள் மத்திய அரசினால் நியமிக்கப்படுதல்

**கூட்டாட்சி முறை ஆட்சி**
- தேசிய அரசுக்கும் பிராந்திய அரசுக்கும் இடையில் இருக்கும் உறவின் அடிப்படையிலேயே ஒற்றை ஆட்சி முறை என்றும் கூட்டாட்சி முறை என்றும் அரசு வகைப்படுத்தப்படுகிறது.
- அரசியலமைப்பு சட்டத்தின்படி தேசிய அரசும் பிராந்திய அரசுகளும் தங்களது அதிகாரங்களைப் பகிர்ந்து அவரவர் எல்லைக்கு உட்பட்டு சுதந்திரமாகச் செயல்படுவது கூட்டாட்சி முறை ஆட்சியாகும். ஐக்கிய அமெரிக்க நாடுகள், சுவிட்சர்லாந்து ஆஸ்திரேலியா,கனடா, ரஷ்யா, பிரேசில், அர்ஜென்டினா ஆகிய நாடுகள் கூட்டாட்சி முறையை கொண்டவை. கூட்டாட்சி

முறையில் தேசிய அரசை மைய அரசு அல்லது மத்திய அரசு என்றும் பிராந்திய அரசை மாநில அரசு அல்லது மாகாண அரசு என்றும் அழைக்கின்றனர்.

**கூட்டாட்சி முறையின் நிறைகள்:**

- உள்ளூர் சுய ஆட்சி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு இடையே சமரசம் ஏற்படுத்துதல்.
- மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான அதிகாரப் பகிர்வு, நிர்வாகத் திறன்கள் மேம்பட வழிவகுக்கிறது.
- மிகப் பெரிய நாடுகள் தோன்றுவதற்கு வழி செய்கிறது.
- அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்படுவதால் மத்திய அரசின் சர்திவதிகாரர் போக்கைத் தடுக்கிறது.
- மிகப் பெரிய நாடுகளுக்குப் பொருத்தமானது
- பொருளாதார மற்றும் பண்பாட்டு முன்னேற்றங்களுக்கு நன்மை அளிக்கிறது.

**குறைகள்:**

- ஒற்றையாட்சி முறையோடு ஒப்பிடும்போது கூட்டாட்சி முறை பலவீனமானது
- கூட்டாட்சி முறை அதிக செலவினம் கொண்டது
- பிராந்திய போக்குகள்தான் பொதுவாக காணப்படும்.
- நிர்வாகச் சமநிலையில் குறைபாடுகள்.
- தேசிய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தல்
- அதிகாரப் பகிர்வில் மத்திய மாநில அரசுகளுக்கு இடையே முரண்பாடு உருவாகிறது.
- இரட்டைக் குடியுரிமை
- மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்க இயலாது திடமான அரசியலமைப்பு.
- வெளியுறவுக் கொள்கைகளில் சில நேரங்களில் மாநில அரசுகள் தடைகளை ஏற்படுத்துகின்றன.

**ஒற்றையாட்சி முறை மற்றும் கூட்டாட்சி முறைகளுக்கு இடையேயான வேறுபாடுகள்:**

| ஒற்றையாட்சி முறை | கூட்டாட்சி முறை |
|---|---|
| ஒரேயொரு அரசு அல்லது துணைக் குழுக்கள் | இரண்டு நிலையில் அரசாங்கம் |
| பெரும்பாலும் ஒரே குடியுரிமை | இரட்டைக் குடியுரிமை |
| துணைக் குழுக்கள் தன்னிச்சையாகச் செயல்பட இயலாது | கூட்டாட்சியின் குழுக்கள் மத்திய அரசுக்கு உட்பட்டவை |
| அதிகாரப் பகிர்வு இல்லை | அதிகாரப் பகிர்வு |
| மையப்படுத்தப்பட்ட அதிகாரம் | அதிகாரப் பரவல் |

**இந்திய அரசியலமைப்பில் கூட்டாட்சி முறையின் அம்சங்கள்:**

- இரட்டை அரசாங்கம்
- எழுதப்பட்ட அரசியலமைப்பு
- அதிகாரப் பகிர்வு
- அரசியல் அமைப்பின் உயர் அதிகாரம்
- நாட்டின் உச்சபட்ச சட்டமாக அரசியலமைப்புச் சட்டம் விளங்குகிறது. மத்திய மாநில அரசுகளால் இயற்றப்படும் சட்டங்கள் அதன் விதிகளுக்கு உட்பட்டு அமைதல் வேண்டும்.
- நெகிழும் தன்மையற்ற அரசியல் அமைப்பு
- சுதந்திரமான நீதித்துறை
- இரண்டு அவை ஆட்சி

**நாடாளுமன்ற ஆட்சி முறை:**

- நவீன மக்களாட்சி முறைகளைப் நாடாளுமன்றப் ஆட்சி முறை அதிபர் மக்களாட்சி முறை என இருவகைகளாகப் பிரிக்கலாம். நிர்வாக மற்றும் சட்டமன்ற அமைப்புகளுக்கு இடையே உள்ள தொடர்பின் தன்மையைப் பெறுத்து அரசுகள் இவ்விரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

- நாடாளுமன்ற ஆட்சி முறையில் சட்டமன்றத்தில் கொள்கைகள் மற்றும் செயல்களுக்கு நிர்வாகத்துறை பொறுப்பேற்கிறது.

- நாடாளுமன்ற ஆட்சிமுறை அமைச்சரவை அரசாங்கம் அல்லது பொறுப்பு அரசாங்கம் அல்லது வெஸ்ட் மினிஸ்டர் அரசாங்க மாதிரி எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. இவ்வகை ஆட்சிமுறை பிரிட்டன், ஜப்பான், கனடா, இந்தியா போன்ற நாடுகளில் காணப்படுகிறது.

| **நாடுகள்** | **நாடாளுமன்றங்களின் பெயர்கள்** |
|---|---|
| இஸ்ரேல் | கெனெஸட் |
| ஜெர்மனி | பந்தெஸ்டாக் |
| டென்மார்க் | போக்டிங் |
| நார்வே | ஸ்டார்டிங் |
| ஐக்கிய அமெரிக்க நாடுகள் | காங்கிரஸ் |
| ஜப்பான் | டயட் |
| பிரிட்டன் | பார்லிமெண்ட் |

**நாடாளுமன்ற ஆட்சி முறையின் அம்சங்கள்:**
- பெயரளவில் மற்றும் உண்மையான நிர்வாகிகள்
- பெரும்பான்மை கட்சி ஆட்சி
- கூட்டுப் பொறுப்புணர்வு
- இரட்டை உறுப்பினர்
- பிரதம மந்திரியின் தலைமை

**நாடாளுமன்ற ஆட்சி முறை நிறைகள்:**
- சட்டமன்றம் மற்றும் நிர்வாகத் துறைக்கு இடையிலான இணக்கம்
- பொறுப்பான அரசாங்கம்
- சர்வாதிகாரத்தைத் தடுக்கிறது
- பரவலான பிரதிநிதித்துவம்

**குறைகள்:**
- நிலையற்ற அரசாங்கம்
- தொடர்ச்சியற்ற கொள்கைகள்
- அமைச்சரவையின் சர்வாதிகாரம்
- அதிகாரங்களைப் பிரிப்பதில் உள்ள சிக்கல்கள்

**அதிபர் மக்களாட்சி முறை:**
- அதிபர் மக்களாட்சி முறை என்பது சட்ட மன்றத்திற்காக பொறுப்பில்லாததாகவும் நாடாளுமன்றம் அற்றதாகவும் நிலைத்த நிர்வாக அற்றதாகவும் நிலைத்த நிர்வாக அமைப்பு உடையதாகவும் இருக்கும். அதிகாரப் பகிர்வு கொள்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இவ்வரசு முறை அமெரிக்கா, பிரேசில், இரஷ்யா, இலங்கை போன்ற நாடுகளில் நடை முறையில் உள்ளது.

**அதிபர் மக்களாட்சியின் அம்சங்கள்:**
- அரசின் தலைவர் என்பது ஒரு பெயரளவிற்கான பதவியாகும்.
- அதிபர் வாக்காளர் மன்றத்தினால் நான்காண்டுகளுக்கொரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

- அதிபர் ஆட்சியில் அமைச்சரவையைக் "கிச்சன் கேபினட்" என்று அழைக்கிறார்கள்.
- அரசின் சட்டமன்ற, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் மூன்றும் தனியாக பிரிக்கப்பட்டு சுதந்திரமாக இயங்கும் அமைப்புகளாகும்.

**அதிபர் மக்களாட்சி ஆட்சி முறையின் நிறைகள்:**
- ஜனநாயகமானது
- அதிபரின் முறையான கட்டுப்பாடு
- முடிவெடுத்தலை மேம்படுத்துதல்
- மாகாண அரசாங்கம்

**குறைகள்:**
- சர்வாதிகாரமாகச் சிதையும் வாய்ப்பு
- நிர்வாக மற்றும் சட்டமன்றத்திற்கு இடையிலான இணக்கமற்ற உறவு
- சட்டமன்றம் மற்றும் நிர்வாகக் குழுவுக்கு இடையிலான நல்லுறவின்மை

**நாடாளுமன்ற மற்றும் அதிபர் மக்களாட்சி இடையிலான வேறுபாடுகள்**

| அதிபர் மக்களாட்சி முறை | நாடாளுமன்ற ஆட்சி முறை |
|---|---|
| குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் | பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் பிரதம மந்திரியாவார் |
| அதிகாரப் பிரிவினை | மத்திய சட்டமன்றம் அதிகாரம் படைத்தது |
| சுதந்திரமாகச் செயல்படும் பிரிவுகள் | தனித்தனியான சார்புடைய செயல்பாடுகளைக் கொண்ட பிரிவுகள் |
| மாகாணத்தின் தலைவர் அதிபர் ஆவார் | அரசின் தலைவர் - குடியரசுத் தலைவர் |
| அரசாங்ககத்தின் தலைவரும் அதிபரே | அரசாங்கத்தின் தலைவர் - பிரதம அமைச்சர் |
| தனிநபர் தலைமை | கூட்டுத் தலைமை |
| மகா சபையின் செயல்களுக்கு அதிபர் பொறுப்பை ஏற்க மாட்டார். | கூட்டு மற்றும் தனித்தனியான பொறுப்புகள் |

**இந்திய மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே உள்ள உறவு:**
இந்திய நாடு, இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழி முறைகளுக்கு உட்பட்டு மதிப்பு, மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளும் மாநிலங்களின் கூட்டமைப்பு ஆகும். மத்திய மாநில அரசுகளுக்கு இடையே அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டாலும் அனைத்து விவகாரங்களிலும் முடிவெடுப்பது மத்திய அரசே ஆகும். மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான உறவு என்பது.
1. சட்ட மன்ற உறவுகள் (பிரிவுகள் 245 முதல் 255 வரை)
2. நிர்வாக உறவுகள் (பிரிவுகள் 256 முதல் 263 வரை)
3. நிதி உறவுகள் (பிரிவுகள் 268 முதல் 294 வரை)

மத்திய மாநில அரசுகள் சட்டங்கள் இயற்றும் அதிகாரம் படைத்தவை. ஆனாலும் அதிகாரங்கள் வேறுபடுகின்றன. சில குறிப்பிட்ட துறைகளுக்கு சட்டமியற்றும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் உள்ளது. இத்துறைகள் மத்தியப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. சில துறைகளுக்கு சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசாங்கத்திற்கு உள்ளது. அத்துறைகளுக்கான சட்டங்களை அந்தந்த மாநில அரசுகளே இயற்றிக் கொள்ளும். இவை மாநிலப்பட்டியல் எனப்படுகிறது. சில துறைகளுக்கு மத்திய அரசும் மாநில அரசும் சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றுள்ளன. இவை பொதுப்பட்டியல் எனப்படுகிது.

**மத்திய பட்டியல்:** மத்தியப் பட்டியலில் 100 துறைகள் உள்ளடங்கியுள்ளது. வெளியுறவுத் துறைகள், பாதுகாப்பு, ஆயுதப்படைகள், தொலைதொடர்பு, தபால் மற்றும் தந்தி, மாநிலங்களுக்கிடையிலான வியாபாரம் மற்றும் வணிகம்.

**மாநிலப் பட்டியல்:** மாநிலப் பட்டியல் 61 துறைகளைக் கொண்டுள்ளது. மாநிலத்தின் பொது ஒழுங்கு,

காவல் துறை, நீதித்துறை நிர்வாகம், சிறைத்துறை, உள்ளாட்சி அமைப்புகள், விவசாயம் போன்றவை.

**பொது பட்டியல்:** பொதுப்பட்டியல் 52 துறைகளாக உள்ளன. குற்றவியல் மற்றும் சிவில் நடைமுறைகள், திருமணம் மற்றும் விவாகரத்து பொருளாதாரம் மற்றும் சிறப்புத் திட்டமிடல், செய்தித்தாள், புத்தகங்கள் மற்றும் அச்சகங்கள், மக்கள் தொகை கட்டுப்பாடு ஆகியன.

**மொத்த தேசிய மகிழ்ச்சி 9Gross National happiness GNH)**

மொத்த தேசிய மகிழ்ச்சி என்பது தற்போது வளர்ந்து வரும் ஓர் தத்துவமாகும். இது ஒரு குறிப்பிட்ட நாட்டில் உள்ள மொத்த மகிழ்ச்சியைக் குறிக்கும் ஒரு குறியீடு ஆகும். பூட்டான் அரசின் அரசமைப்பில் இடம் பெற்றுள்ள இக்கருத்து ஜுலை 18, 2008 ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மொத்த தேசிய மகிழ்ச்சி என்னும் பதத்தைப் பூட்டானின் நான்காம் அரசரான ஜிக்மே சிங்கியே வான்சுக் அவர்களால் 1970 இல் உருவாக்கப்பட்டது. மொத்த தேசிய மகிழ்ச்சி நிலையான மற்றும் சமமான சமூக பொருளாதார வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மற்றும் ஊக்குவிப்பு, பண்பாடு மற்றுமு் நல்ல ஆட்சி ஆகியவற்றை மையக் கருத்தாகக் கொண்டுள்ளது.

இயற்கை மற்றும் பாரம்பரிய மதிப்புகளுக்கிடையே இசைவை வலியுறுத்தும் வகையில் மக்களிடையே கூட்டு மகிழ்ச்சியை ஏற்படுத்துவது அரசின் இலக்காக இருக்க வேண்டும்.

## அலகு – 5
## உள்ளாட்சி அமைப்புகள்

**உள்ளாட்சி அமைப்பு – விளக்கம்:**

- ஒரு பகுதி அல்லது ஒரு கிராமம், சிறிய நகரம் அல்லது மாநகம் போன்ற சிறிய சமூகத்தினை நிர்வாகம் செய்யும் அமைப்புகளே உள்ளாட்சி அமைப்புகள் எனப்படுகின்றன. உள்ளாட்சி அமைப்புகள் மக்களுக்கு நெருக்கமாகவும், அன்றாடகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாகவும், அடிமட்டத்திலிருந்து செயல்படுகின்றன. உள்ளாட்சி அமைப்பின் உறுப்பினர்கள் உள்ளூர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

- இவ்வமைப்புகள் உள்ளூர் தேவைகளை மேலாண்மை செய்கின்றன. உள்ளாட்சி அமைப்புகள் உள்ளூர் சமூகத்திற்குப் பணியாற்றுவதுடன், தன்னாட்சிக் குடியரசுக்கும் கருவியாகச் செயல்படுகின்றன.

**வரலாற்றுப் பின்னணி:**

- உள்ளாட்சி அமைப்பு இந்தியாவில் தொன்றுதொட்டு காணப்படும் கருத்துரு ஆகும். இது பிற்காலச் சோழர்கள் அல்லது தஞ்சை சோழப்பேரரசு காலத்தில் உச்சநிலையை அடைந்தது. மௌரியப் பேரரசு காலத்திலும் உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றிய ஆவணக் குறிப்புகள் உள்ளன. பண்டைய இந்தியா முழுவதும் உள்ளாட்சி அமைப்புகள் பல் வேறுபட்ட அம்சங்களுடன் காணப்பட்டன. இடைக்காலத்தில் நிலபிரபுவத்துவத்தின் முறையின் தாக்கத்தால், உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவம் குறைந்தது. ரிப்பன் பிரபுவின் 1882 ஆம் ஆண்டு தீர்மானத்தின்படி, மேற்கத்திய நாடுகளின் மக்களாட்சி முறையின் அடிப்படையில் 19ஆம் நூற்றாண்டின் கால் இறுதியில் இவ்வமைப்புகள் இந்தியாவில் புத்துயிர் பெற்றன. நவீன உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடித்தளமிட்டதால் ரிப்பன் பிரபு, “உள்ளாட்சி அமைப்புகளின் தந்தை“ என அழைக்கப்படுகிறார்.

- 1935 இந்திய அரசு சட்டம், மாகாணங்களில் தன்னாட்சியை அறிமுகப்படுத்தியது. இச்சட்டம் 1937 இல் நடைமுறைக்கு வந்தது. காங்கிரஸ் ஆட்சி அமைத்த மாகாணங்களில், ஊரக வளர்ச்சிக்குச் சிறப்பு கவனம் அளிக்கப்பட்டது. பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் கிராமங்களிலிருந்து நகரங்கள் வரை கட்டமைக்கப்பட வேண்டும் என்பது காந்தியடிகளின் திட்டங்களின் ஒரு முக்கியக் கூறாக இருந்தது.

- இந்திய விடுதலைக்குப் பின்பு, இந்திய அரசமைப்பினை உருவாக்கியவர்கள் காந்தியடிகளின் கிராம தன்னாட்சிக் கொள்கையினைப் பெரிதும் கவனத்தில் கொண்டு செயலாற்றினர். கிராமங்கள் நிறைந்த இந்தியாவில், கிராம ஊராட்சிகளின் உருவாக்கம் ஒரு சமூக இயக்கமாகவே அமைந்தது. விடுதலைப் போராட்டத்தின்போது பஞ்சாயத்து மறுசீரமைப்பு என்பது மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டியது.

**ரிப்பன் பிரபு:**

- 1882 ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளை அறிமுகம் செய்ததன் மூலம் இந்தியர்களுக்கு சுதந்திரத்தின் சுவையை அறிமுகப்படுத்தியவர் ரிப்பன் பிரபு ஆவார்.

- இந்தியாவில் நிர்வாகத்தை தாராளமயம் ஆக்கும் சில நடவடிக்கைகளை ரிப்பன் மேற்கொண்டார். நிர்வாகத்தை பரவலாக்க வேண்டும் என்பதற்காகவே உள்ளாட்சி அமைப்புகளை அவர் முறைப்படுத்தினார்.

உள்ளாட்சி அமைப்புகளை நடைமுறைப்படுத்துவதில் இருந்த சில தடைகளை 1882 ஆம் ஆண்டு அவர் இயற்றிய தீர்மானத்தின் மூலம் அகற்ற முயன்றார். கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள அமைப்புகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கும் அதிக அதிகாரங்களையுடைய ஊள்ளாட்சி நிர்வாக உரிமைகளை வழங்கும் விதமாக ரிப்பன் தொடர்ச்சியான பல சட்டங்களை ஏற்படுத்தினர்.

**இந்திய விடுதலைக்குப்பின் உள்ளாட்சி அமைப்புகள்:**

- உள்ளாட்சி அமைப்புகள் என்ற முறையின் கருத்துருவாக்கம், 1957 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டு வரை, நான்கு முக்கிய குழுக்களின் உருவாக்கம் மற்றும் அவற்றின் முயற்சியினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. சமூக அபிவிருத்தி திட்டம் (1952) மற்றும் தேசிய நீட்டிப்பு சேவை (1953) ஆகியன, 1957 ஆம் ஆண்டின் பஞ்சாயத்து ராஜ் சட்டத்திற்கு அடிப்படையாகத் திகழ்ந்தன.

**73 மற்றும் 74 வது அரசமைப்பு திருத்தச் சட்டங்களின் (1992) சிறப்பம்சங்கள்:**

- ஊராட்சி மற்றும் நகராட்சிகள் "உள்ளாட்சி அமைப்பு" நிறுவனங்களாகச் செயல்படும்.
- குடியரசு அமைப்பின் அடிப்படை அலகுகள்: வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள உரிய வயதுடையோரைக் கொண்ட கிராம சபைகள் (கிராமங்கள்) மற்றும் பகுதி குழுக்கள் (நகராட்சிகள்) ஆகியன.

- கிராமங்கள் இடையில் காணப்படும் வட்டாரம் / வட்டம் / மண்டலம் மற்றும் மாவட்ட அளவில் ஊராட்சிகள் என மூன்றடுக்கு முறையில் செயல்படுகின்றன. இரண்டு மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகையை உடைய சிறு மாநிலங்களில் பஞ்சாயத்துக்கள் இரண்டடுக்கு முறையில் இயங்குகின்றன.

- நேரடித் தேர்தலின் மூலம் அனைத்து அளவிலும் இடங்கள் நிரப்பப்படுகின்றன.

- அனைத்து அளவு நிலைகளில் பஞ்சாயத்து தலைவர்களுக்கான இடங்களில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு, மக்கள்தொகை விகிதாச்சார அடிப்படையில் இட ஒதுக்கீடு அளிக்கப்படும்.

- பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கான ஒதுக்கீட்டில் பெண்களுக்கும் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. எல்லா அளவு நிலைகளிலும் தலைவர்கள் பதவிக்கு மூன்றில் ஒரு பங்கு இடம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

- ஒரே மாதிரியான ஐந்தாண்டு பதவிக்காலம் மற்றும் பதவிக்காலம் நிறைவடையும் முன்பாகவே தேர்தல்கள் நடத்தப்பெற்று, புதிய அமைப்புகள் உருவாக்கப்படுதல் வேண்டும். ஆட்சி கலைக்கப்பட்டால், ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படுதல் வேண்டும்.

**1994 தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் சிறப்பம்சங்கள்:**

- 1994 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒரு புதிய சட்டத்தின் அடிப்படையில், புதிய பஞ்சாயத்து ராஜ் அமைப்பு செயல்படுத்தப்பட்டது. அதன் சிறப்பம்சங்களாவன:
    1. மூன்று அடுக்கு அமைப்பு
    2. கிராம சபை
    3. தேர்தல் ஆணையத்தினை நிறுவுதல்
    4. நிதி ஆணையத்தினை நிறுவுதல்
    5. மக்கள் தொகைக்கு ஏற்ற விகிதத்தில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு
    6. பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு மற்றும்
    7. மாவட்ட திட்டக்குழுக்களை அமைத்தல்.

**கிராம ஊராட்சி**

- கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்புகள், கிராம ஊராட்சி என்று அழைக்கப்படுகின்றன. தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத்

தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். (18 வயது பூர்த்தியடைந்தோர்) அவர்களது பணிக்காலம் 5 வருடங்கள் ஆகும். கிராம ஊராட்சியின் ஆய்வாளராக மாவட்ட ஆட்சியர் செயல்படுகின்றார். ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள்தொகையைக் கொண்டுள்ள ஒவ்வொரு கிராமமும் கிராம ஊராட்சியாக உருமாறியுள்ளது.

**கிராம ஊராட்சியின் செயல்பாடுகள்**

- குடிநீர் வழங்குதல்
- தெருவிளக்குகளைப் பராமரித்தல்
- சாலைகளைப் பராமரித்தல்
- சிறிய பாலங்களைப் பராமரித்தல்
- வீட்டு மனைகளுக்கு அனுமதி அளித்தல்
- வடிகால் அமைப்புக்களைப் பராமரித்தல்
- தொகுப்பு வீடுகளைக் கட்டுதல்
- தெருக்களைச் சுத்தம் செய்தல்
- இடுகாடுகளைப் பராமரித்தல்
- பொதுக்கழிப்பிட வசதிகளைப் பராமரித்தல்

**விருப்பப் பணிகள்:**

- 1994 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் கீழ்க்கண்ட விருப்ப செயல்பாடுகளை உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் நடைமுறைப்படுத்தியது.
- கிராமங்களிலுள்ள தெரு விளக்குகளைப் பராமரித்தல்
- சந்தைகளையும் திருவிழாக்களையும் நடத்துதல்
- மரங்களை நடுதல்
- விளையாட்டு மைதானங்களைப் பராமரித்தல்
- வண்டிகள் நிறுத்தப்படும் இடங்களில் உள்ள வாகனங்கள், இறைச்சி கூடங்கள் மற்றும் கால்நடைகளின் கொட்டகை ஆகியவற்றைப் பராமரித்தல்
- பொருட்காட்சிகள் நடைபெறும் இடங்களைக் கட்டுப்படுத்துதல்.

**வருவாய்**

- மூன்றடுக்கு அமைப்பு உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்பில் கிராம ஊராட்சி மட்டுமே வரி விதிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

**தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் வரலாற்றுத் தொடக்கம் மற்றும் வளர்ச்சி**

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுகளில் காணப்படுகின்ற ஆதாரங்களின்படி, உள்ளாட்சி அமைப்புகளில் தமிழ்நாடு ஒரு நீண்ட வரலாற்றினைக் கொண்டதாக அறியப்படுகின்றது. அக்காலத்தில் தமிழ்நாடு பல கிராம குடியாட்சியைக் கொண்ட நிலமாக விளங்கியது. பல சமூகக் குழுக்கள் தங்களது பகுதி மேம்பாட்டிற்காக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பத்து மற்றும் பதினோறாம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற சோழர்களது ஆட்சிக் காலத்தில் இந்த முறை உச்சநிலையை அடைந்தது. கிராம சபைகள் வரி விதித்தன. சமூக வாழ்வினை மேம்படுத்தின, தங்களது குறிப்பிட் பகுதியில் நீதியையும் நிலைநாட்டின. இந்தக் கிராம சபைகள் சோழ அரசர்களுடன் வலிமையான உறவுகளைக் கொண்டிருந்தனர். கிராம சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க "குடவோலை முறை" என்ற இரகசிய தேர்தல் முறை புழக்கத்தில் இருந்தது.

சோழர்களின் வீழச்சிக்குப் பிறகு, கிராம தன்னாட்சி சரியவும், நிலப்பிரபுக்களின் மையப்படுத்தப்பட்ட நிர்வாக முறை மேலோங்கவும் தொடங்கியது. இம்முறை, ஆகிலேய காலணி ஆதிக்க ஆட்சி உள்ளாட்சி அமைப்புகளை அவர்களுக்கு ஏதுவாக இருக்கும் விதமாக அறிமுகம் செய்யும் வரை தொடர்ந்தது.

- சுதந்திர இந்தியாவில், ஜனநாயக பரவலாக்கத்தின் முதல் சட்டமாக, 1950 இல் மதராஸ் கிராம பஞ்சாயத்து சட்டம் இயற்றப்பட்டது. 1957, உள்ளூர் நிர்வாக சீர்திருத்தங்கள் தொடர்பாக வெளியான விவரங்களின் தொடர்ச்சியாக, 1958ல் மதராஸ் பஞ்சாயத்து சட்டமும், மதராஸ் மாவட்ட வளர்ச்சி கவுன்சில் சட்டமும் இயற்றப்பட்டன.

**வரிகள்:**
- சொத்து வரி
- தொழில் வரி
- வீட்டு வரி
- குடிநீர் இணைப்புக்கான கட்டணம்
- நில வரி
- கடைகள் மீது விதிக்கப்படும் வரிகள்

**கிராம சபை கூட்டங்கள்:**
- ஒவ்வொரு ஊராட்சியிலும், அவ்வூராட்சி அதிகார எல்லைக்கு உள்ளே வசிக்கும் மக்களே கிராம சபை உறுப்பினர்களாக இருப்பர். ஊராட்சித் தலைவர் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவார். கிராம சபை கூட்டங்களில், வரவு செலவு கணக்குகளும், திட்டங்களினால் பயனடைந்தோர் பற்றியும் கலந்துரையாடப்படும்ட.

ஒரு வருடத்தில் நான்கு முறை கிராம சபை கூட்டங்கள் நடத்தப்படும்
1. ஜனவரி 26 – குடியரசு தினம்
2. மே 1 – உழைப்பாளர் தினம்
3. ஆகஸ்ட் 15 – சுதந்திர தினம்
4. அக்டோபர் 2 – காந்தி பிறந்த தினம்

**ஊராட்சி ஒன்றியம்:**
- பல ஊராட்சிகள் ஒன்றிணைந்து ஊராட்சி ஒன்றியம் உருவாக்கப்படுகின்றது. மக்கள் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களை (கவுன்சிலர்) நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். உறுப்பினர்கள் தங்களில் ஒருவரை ஊராட்சி ஒன்றியத் தலைவராகத் (Chairman) தேர்ந்தெடுக்கின்றனர்.

- **மாவட்ட ஊராட்சி:**

- **ஊராட்சி ஒன்றியம்:**
- **கிராம ஊராட்சி**

**ஊராட்சி ஒன்றியத்தின் பணிகள்:**
- குடிநீர் வழங்கல்
- கிராம சுகாதார நிலையங்கள் பராமரிப்பு
- சாலைகள் பராமரிப்பு
- மகப்பேறு விடுதிகளை நிறுவுதல்
- பொதுக் கண்காட்சிகள் நடத்துதல்
- கால்நடை மருத்துவமனைகளை நிறுவுதல்
- சமூக காடுகளை பராமரித்தல்
- துவக்கப்பள்ளி கட்டங்களை சீர் செய்தல்

- மாவட்ட ஆட்சியர், திட்ட அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் ஊராட்சி ஒன்றியத்தின் வளர்ச்சிப் பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரம் பெற்றுள்ளனர்.

**மாவட்ட ஊராட்சி:**

- ஒவ்வொரு மாட்டத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது. 50,000 மக்கள் தொகை என்ற அடிப்படையில் மாவட்டம் பல பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. பகுதி உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்கள் தங்களில் ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர். அவர்களது பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும்.

**மாவட்ட ஊராட்சியின் பணிகள்:**

- கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து அரசுக்கு தெரிவித்தல்.
- மாவட்ட திட்ட ஆணையத்தின் பணிகளை மேற்பார்வையிடல்

**நகர்ப்புற உள்ளாட்சி:**
பேரூராட்சி
நகராட்சி
மாநகராட்சி

**காந்தியின் கிராம சுயராஜ்யம்:**

காந்தியடிகள் கிராமப்புறங்களின் பிரதிநிதிகளைக் மக்களாகக் கொண்ட கிராம சுயராஜ்ஜியத்தை விரும்பினார். இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் வாழ்கிறது என்பதை உணர்ந்தார் காந்தியடிகள். சுதந்திர இந்தியாவில், கிராம குடியரசு எனும் பஞ்சாயத்துக்களை கனவு கண்டார்.
காந்தியடிகள் பஞ்சாயத்து ராஜ் ஒரு அதிகார பகிர்வு கொண்ட அரசாக இருக்க அறிவுறுத்தினார். இந்திய அரசிலமைப்பின் அடிப்படையாக திகழும் கிராமங்கள் தங்களின் தேவைகளுக்கு தாங்களே பொறுப்பாவர்.
எளிமையான சொற்களில் சொல்வதென்றால் காந்தியின் சுயராஜ்ய கிராமம், அடிப்படையில் சுயசார்புடையதாக இருக்க வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையான உணவு, தூய்மையான நீர், சுகாதாரம், வீட்டு வசதி, கல்வி மற்றும் பிற தேவைகளுக்கு என அனைத்து தேவைகளையும் ஏற்கும் அரசாங்கம் மற்றும் சுய பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்தையும் வழங்க வேண்டும்.

**பேரூராட்சி:**

- பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழும் பகுதி பேரூராட்சி எனப்படும். பேரூராட்சித் தலைவரும் உறுப்பினர்களும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். பேரூராட்சியின் நிர்வாகத்தினை மேற்கொள்ள ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்படுகிறார்.

**நகராட்சி:**

- ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழும் பகுதி நகராட்சி எனப்படும். நகர சபைத் தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் (கவுன்சிலர்) மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களது பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகும். இந்நகராட்சியினை நிர்வாகம் செய்ய ஒரு நகராட்சி ஆணையர் அரசால் நியமிக்கப்படுகிறார்.

**மாநகராட்சி:**

- பல இலட்சம் மக்கள்தொகை கொண்ட ஒரு நகரப்பகுதிகள் மாநகராட்சி என அழைக்கப்படுகிறது. மாநகராட்சித் தலைவர் மேயர் என்று அழைக்கப்படுகிறார். மேயர் மற்றும் பிற உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள் ஆகும். இம் மாநகராட்சிக்கு மாநகராட்சி ஆணையர் நிர்வாக அலுவலர் ஆவார்.

தமிழ்நாட்டில் 12 மாநகராட்சிகள் உள்ளன. அவை சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம்,ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திருப்பூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல்.

- இந்திய ஆட்சிப்பணி (ISA) அதிகாரி ஒருவர் மாநகராட்சியின் ஆணையராக நியமிக்கப்படுகிறார். மாநகராட்சி சபையில் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் அனைத்தும் இவரால் செயல்படுத்தப்படுகின்றன. மாநகராட்சி அலுவலகம் இவரது செயல்பாடுகளுக்கு உதவுகின்றது.

| சென்னை மாநகராட்சித் கட்டத்திற்கு எந்த ஆங்கிலேயப் பிரபுவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது? |
|---|

**மாநகராட்சித் தலைவரின் (மேயரின்) முக்கிய பணிகள்:**

- அரசுக்கும் மாநகராட்சி உறுப்பினர்களுக்கும் இடையே ஓர் இணைப்புப்பாலமாக மேயர் செயல்படுகிறார்.
- மாநகராட்சி குழு கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகிறார்.
- வெளிநாட்டு பிரமுகர்களை வரவேற்று உபசரிப்பார்.

**பிற நகர்ப்புற பஞ்சாயத்துக்கள்:**

- அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள்
- நகர் பகுதி குழுக்கள்
- இராணுவக் குடியிருப்பு வாரியம்
- குடியிருப்புகள்
- துறைமுகப் பொறுப்பு கழகம்
- சிறப்பு நோக்க நிறுவனம்

**தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்கள்:**

- உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்களை பொதுத் தேர்தல்களைப் போன்றே மாநிலத் தேர்தல் ஆணையம் நடத்துகின்றது. வாக்காளர் பட்டியல் பகுதி வாரியாகத் தயாரிக்கப்படுகின்றது. பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு சுழற்சி முறையில், மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.
- உள்ளாட்சி அமைப்புகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும், சவால்களும்
- நமது மக்களாட்சிக்கு உள்ளாட்சி அமைப்புகளே அடிப்படைகளாகும். உள்ளாட்சி அமைப்புகளின் அரசமைப்பு நிலை, அவற்றின் செயல்பாட்டிற்கு மிகவும் முக்கியத்துவத்தினை அளிக்கின்றது. இருப்பினும், இந்தியாவில் இவற்றின் செயல்பாடுகளில் ஒரு சில நெருக்கடிகள் உள்ளன. அவற்றின் முதன்மையான சிக்கல்களும் சவால்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.
- உள்ளாட்சி அமைப்புகளின் பணிகள் மற்றும் அதிகாரங்களைப் பற்றிய தெளிவான வரையறையின்மை
- நிதி ஒதுக்கீடு மற்றும் தேவைகளின் மதீப்பீடு ஒத்துப்போவதில்லை.
- உள்ளாட்சி அமைப்புகள் எடுக்கும் முக்கிய முடிவுகளில் சாதி, வகுப்பு மற்றும் சமயம் ஆகிய மூன்றும் முக்கியப் பங்காற்றுகின்றன.
- மக்களாட்சியின் அடிப்படை நிலையிலுள்ள அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பொறுப்பற்ற நிலை.

**நகராட்சி தலைவராக பெரியார்:**
பெரியார் ஈ.வே. இராமசாமி அவர்கள் 1917 ஆம் ஆண்டில் இருந்து பல ஆண்டுகள் ஈரோடு நகராட்சியின் பெருந்தலைவராக பதவி வகித்தார். அவரது பதவிக் காலத்தில் ஈரோடு நகராட்சி மக்களுக்கான முறையான குடிநீர் வசதி மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி தருவதில் முனைப்பு காட்டினார். 1919 இல் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் முறையினை பெரியார் செயல்படுத்தினார். இந்திய நகராட்சி நிர்வாகங்களின் வரலாற்றில் இத்திட்டத்தினை முதன் முதலில் செயல்படுத்தியவர் பெரியார் என அறியப்படுகிறது.

# 10ம் வகுப்பு
# குடிமையியல்
# அலகு – 1 இந்திய அரசியலமைப்பு

**அறிமுகம்**

ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும். அது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அச்சாணி ஆகும். குறிப்பாக அரசின் நிறுவனக் கட்டமைப்பு பல்வேறு துறைகள் மற்றும் மத்திய, மாநில அரசுகளிடையே அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் கட்டமைப்புடன் அரசியலமைப்பு சம்மந்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பு என்ற கொள்கை முதன்முதலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (U.S.A) தோன்றியது.

**அரசியலமைப்பின் அவசியம்**

அனைத்து மக்களாட்சி நாடுகளும் தங்களை நிர்வகித்துக் கொள்ள ஓர் அரசியலமைப்புச் சட்டத்தை பெற்றுள்ளன. ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ விரும்பும் வகையில் சில அடிப்படைக் கொள்கைகளை அரசியலமைப்பு வகுத்து கொடுக்கிறது. நமது சமூகத்தின் அடிப்படை தன்மையை அரசியலமைப்பு நமக்கு தெரிவிக்கிறது.

பொதுவாக ஒரு நாடு பல்வேறு நம்பிக்கைகளைக் கொண்டுள்ள பல்வேறு இன மக்களைக் கொண்டிருக்கும். எனவே அரசியலமைப்பானது அவ்வாறான குடிமக்களின் நம்பிக்கைகளை நிறைவு செய்ய உதவி செய்யும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கும்.

**இந்திய அரசியலமைப்பு உருவாக்கம்**

1946 ஆம் ஆண்டு, அமைச்சரவை தூதுக்குழு திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட, இந்திய அரசியல் நிர்ணய சபையால் இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இச்சபையில் 292 மாகாணப் பிரதிநிதிகள், 93 சுதேச அரசுகளின் நியமன உறுப்பினர்கள், பலுச்சிஸ்தானின் சார்பில் ஒருவர் (1) மற்றும் மாகாண முதன்மை ஆணையர்கள் சார்பில் மூவர் (3) என மொத்தம் 389 உறுப்பினர்கள் இருந்தனர். ஆரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம், 1946ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் நாள் நடைபெற்றது. இச்சபையின் தற்காலிக தலைவராக மூத்த உறுப்பினர் Dr. சச்சினாந்த சின்கா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய அரசியலமைப்பை உருவாக்க கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் போதே அவர் இறந்ததைத் தொடரந்து,Dr. இராஜேந்திரபிரசாத், இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் தலைவராகவும்,HC. முகர்ஜி மற்றும் V.T. கிருஷ்ணமாச்சாரி இருவரும் துணைத் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இக்கூட்டத் தொடர் 11 அமர்வுகளாக 166 நாட்கள் நடைபெற்றது. இக்கூட்டத்தின் போது 2473 திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. அவற்றுள் சில ஏற்கப்பட்டன. அரசியல் நிர்ணய சபை பல்வேறு குழுக்களின் மூலம் இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கும் பணியை மேற்கொண்டது. இந்திய அரசியலமைப்ப சட்ட வரைவுக் குழுத் தலைவர் Dr. B.R. அம்பேத்கர் தலைமையின் கீழ் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. எனசே அவர் ''இந்திய அரசியலமைப்பின் தந்தை'' என அறியப்படுகிறாா்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்ட பின்னர், பொதுமக்கள், பத்திரிக்கைகள், மாகாண சட்டமன்றங்கள் மற்றும் பலரால் விவாதிக்கப்பட்டது. இறுதியாக முகவுரை, 22 பாகங்கள், 395 சட்டப்பிரிவுகள் மற்றும் 8 அட்டவணைகளைக் கொண்ட இந்திய அரசியலமைப்பு, 1950 ஆம்

ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இந்த நாளே ஒவ்வொரு ஆண்டும் இந்திய குடியரசு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

பிரேம் பெஹாரி நரேன் ரைஜடா என்பவரால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் இத்தாலிய பாணியில், அவரது கைப்பட எழுதப்பட்டது.

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்புக் கூறுகள்**

- உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.
- இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.
- இது நெகிழாத்தன்மை கொண்டாதகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
- கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.
- மத்தியில் மட்டுமல்லாமல் மாநிலங்களிலும் நாடாளுமன்ற முறையைத் தோற்றுவிக்கிறது.
- இந்தியாவைச் சமயச்சார்பற்ற நாடாக்குகிறது.
- சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
- ஊலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்த வித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.
- ஒற்றை குடியுரிமையை வழங்குகிறது.
- சிறுபான்மையினர், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்கு சிறப்பு விதிகள் மூலம் சலுகைகள் வழங்க வகை செய்கிறது.

**முகவுரை**

'முகவுரை' (Preamble) என்ற சொல் அரசியலமைப்பிற்கு அறிமுகம் அல்லது முன்னுரை என்பதைக் குறிக்கிறது. இது அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் இலட்சியங்களை உள்ளடக்கியது. இது அரசியலமைப்பின் சுருக்கம் அல்லது சாராம்சத்தைக் கொண்டது. இது பெரும் மதிப்புடன் "அரசியலமைப்பின் திறவுகோல்" என குறிப்பிடப்படுகிறது.

1947 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் நாள் இந்திய அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜவகர்லால் நேருவின் 'குறிக்கோள் தீர்மானத்தின்' அடிப்படையில் இந்திய அரசியலமைப்பின் முகவுரை அமைந்துள்ளது. முகவுரையானது 1976 ஆம் ஆண்டு 42வது அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின்படி திருத்தப்பட்டது. அதன்படி, சமதர்மம், சமயச்சார்பின்மை, ஒருமைப்பாடு, என்ற மூன்று புதிய சொற்கள் சேர்க்கப்பட்டன. 'இந்திய மக்களாகிய நாம்' என்ற சொற்களுடன் இந்திய அரசியலமைப்பின் முகவுரை தொடங்குகிறது. இது இந்திய அரசியலமைப்புத் தனது அதிகாரத்தை மக்களிடமிருந்து பெறப்பட்டதைத் தெளிவுபடுத்துகிறது. இதிலிருந்து, இந்திய மக்களே இந்திய அரசியலமைப்பின் ஆதாரம் என நாம் கூறமுடியும். இந்தியா ஒரு இறையாணமைமிக்க, சமதர்ம, சமயச்சார்பற்ற, ஜனநாயக, குடியரசு என நமது அரசியலமைப்பின் முகவுரை கூறுகிறது. இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி என அனைத்திலும் பாதுகாப்பு வழங்குவதே இதன் நோக்கமாகும். இந்திய மக்கள் அனைவருக்கும் சுதந்திரமாகச் சிந்தித்தல், உணர்வுகளை, வெளிப்படுத்துதல், நம்பிக்கை, சமய வழிபாடு ஆகியவற்றில் சுதந்திரமாக செயல்பட இந்திய அரசியலமைப்பு உத்திரவாதம் அளிக்கிறது. தகுதி, வாய்ப்பு ஆகியவற்றில் அனைவருக்கும் சமத்துவத்தை அளிக்கிறது. இந்தியர்களிடையே சகோதரத்துவத்தை வளர்க்க ஊக்கமளிக்கிறது.

**குடியுரிமை**

'சிட்டிசன்' (Citizen) எனும் சொல் 'சிவிஸ்' (Civis) எனும் இலத்தின் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் ஒரு 'நகர அரசில் வசிப்பவர்' என்பதாகும். இந்திய அரசியலமைப்பு, இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான ஒற்றை குடியுரிமையை வழங்குகிறது. இந்திய அரசியலமைப்பின் பாகம் II சட்டப்பிரிவுகள் 5 லிருந்து 11 வரை குடியுரிமையைப் பற்றி விளக்குகின்றன.

**குடியுரிமைச் சட்டம் (1955)**

இந்திய அரிசயலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின்பு, 1955ல் இயற்றப்பட்ட குடியுரிமைச்சட்டம், குடியுரிமை பெறுதல் மற்றும் குடியுரிமை இழத்தல் ஆகியன பற்றி விளக்குகிறர். இச்சட்டம் அரசியலமைப்பு சட்ட திருத்தத்தால் எட்டு முறை திருத்தப்பட்டுள்ளது. முதலில், இக்குடியுரிமைச் சட்டம் காமன்வெல்த் குடியுரிமையை வழங்கியது. ஆனால் 2003 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சட்ட திருத்ததின்படி இவ்வுரிமை நீக்கப்பட்டது.

**குடியுரிமை பெறுதல்**

குடியுரிமைச் சட்டம் 1955, குடியுரிமைப் பெற ஐந்து வழிகளைப் பரிந்துரை செய்கிறது. அவை; பிறப்பு, வம்சாவளி, பதிவுசெய்தல், இயல்புரிமை மற்றும் பிரதேச இணைவு ஆகும்.

குடியுரிமைச் சட்டம் 1955ன் படி ஒருவர் கீழ்க்காணும் ஏதேனும் ஒரு முறையில் குடியுரிமை பெறமுடியும்.

1. **பிறப்பின் மூலம்:** 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்தியக் குடிமக்களாகக் கருதப்படுவர்.
2. **வம்சாவளி மூலம்:** 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ வெளிநாட்டில் பிறந்த ஒருவரின் தந்தை (அவர் பிறந்த போது) இந்தியக் குடிமகனாக இருக்கும் பட்சத்தில் வெளிநாட்டில் பிறந்த அவர், வம்சாவளி மூலத் இந்தியக் குடியுரிமை பெறமுடியும்.
3. **பதிவின் மூலம்:** ஒருவர் இந்தியக் குடியுரிமை கோரி, பொருத்தமான அங்கீகாரத்துடன் பதிவு செய்வதன் மூலம் இந்தியக் குடியுரிமை பெறலாம்.
4. **இயல்புரிமை மூலம்:** ஒரு வெளிநாட்டவர், இந்திய அரசிற்கு, இயல்புரிமை கோரி விண்ணப்பிப்பதன் மூலம் அவர், இந்தியக் குடியுரிமை பெறலாம்.
5. **பிரதேச (நாடுகள்) இணைவின் மூலம்:** பிற நாடுகள் / பகுதிகள் இந்தியாவுடன் இணையும் போது இந்திய அரசு அவ்வாறு இணையும் நாடுகளின் மக்களைத் தமது குடிமக்களாகக் கருதி அவர்களுக்குக் குடியுரிமை வழங்கலாம்.

**குடியுரிமையை இழத்தல்**

குடியுரிமைச் சட்டம் 1955ன் படி, ஒருவர் தன் குடியரிமையை, சட்டத்தின் மூலமாக பெறப்பட்டதாகவோ (அ) அரசியலமைப்பின் கீழ் முன்னுரிமையால் பெறப்பட்டதாகவோ இருக்கும்பட்சத்தில் பெற்ற குடியுரிமையைத் துறத்தல், முடிவுறச் செய்தல், இழத்தல் என்ற பின்வரும் மூன்று வழிகளில் இழப்பார்.

1. ஒரு குடிமகன் தாமாக முன்வந்து தனது குடியுரிமையை இழத்தல்.

2. வேறு ஒரு நாட்டில் குடியுரிமை பெறும்போது தாமாகவே இந்தியக் குடியுரிமை முடிவுக்கு வந்துவிடுதல்.

3. இயல்புரிமையின் மூலம் குடியுரிமை பெற்ற ஒரு குடிமகன், மோசடி செய்து குடியுரிமை பெற்றவர், தவறான பிரதிநிதித்துவம் தந்தவர் (அ) உண்மைகளை மறைத்தவர் (அ) எதிரி நாட்டுடன் வாணிகம் செய்தவர் அல்லர் இரண்டாண்டு காலத்திற்கு சிறை தண்டனை பெற்றவர் என்பதை மத்திய அரசு கண்டறிந்து அவர் குற்றம் புரிந்தவர் என்று திருப்திப்படும் பட்சத்தில் மத்திய அரசு, அவரது குடியுரிமையை இழக்கச் செய்யும்.

**அடிப்படை உரிமை**

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி (III) 12ல் இருந்து 35 வரையுள்ள சட்டப்பிரிவுகள் அடிப்படை உரிமைகள் பற்றி கூறுகின்றன. அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இந்த அடிப்படை உரிமைகளை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகளின் தாக்கத்தால் உருவாக்கினார்கள். முதலில் இந்திய அரசியலமைப்பு ஏழு அடிப்படை உரிமைகளை வழங்கியது. ஆனால், தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் மட்டுமே உள்ளன. இந்திய அரசியலமைப்பின் பகுதி (III) 'இந்தியாவின் மகாசாசனம்' என அழைக்கப்படுகிறது. இந்தியாவில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் அடிப்படை உரிமைகள் பொதுவானது. ஆனால் இந்திய குடிமக்களுக்கு மட்டுமேயான சில அடிப்படை உரிமைகளும் உள்ளன.

**I. சமத்துவ உரிமை**

பிரிவு 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

பிரிவு 15 – மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபடுத்து வதைத் தடைசெய்தல்.

பிரிவு 16 – பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்

பிரிவு 17 – தீண்டாமையை ஒழித்தல்

பிரிவு 18 - இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்.

**II. சுதந்திர உரிமை**

பிரிவு 19 – பேச்சுரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள், அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் மற்றும் தொழில் செய்யும் உரிமை.

பிரவு 20 – குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.

பிரவு 21 – வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு பெறும் உரிமை.

பிரிவு 21 A– தொடக்கக்கல்வி பெறும் உரிமை.

பிரிவு 22 – சில வழக்குகளில் கைது செய்து, தடுப்புக்காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை

**III. சுரண்டலுக்கெதிரான உரிமை**

பிரிவு 23 – கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத்தன்மையற்ற வியாபாரத்தைத் தடுத்தல்.

பிரிவு 24 – தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்.

**IV. சமயச்சார்பு உரிமை**

பிரிவு 25 – எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.

பிரிவு 26 – சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை.

பிரிவு 27 – எந்தவொரு மதத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்துவதற்கெதிரான சுதந்திரம்.

பிரிவு 28 – மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் நடைபெறும் வழிபாடும் மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமலிருக்க உரிமை

**V கல்வி, கலாச்சார உரிமை**

பரிவு 29 – சிறுபான்மையினரின் எழுத்து, மொழி, மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு.

பிரிவு 30 – சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை.

**VI அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை**

பிரிவு– 32 தனிப்பட்டவரின், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது, நீதிமன்றத்தை, அணுகி உரிமையைப் பெறுதல்.

இந்த அஞ்சல் வில்லைகள் எந்த அடிப்படை உரிமைகள் மீறுதலைக் குறிப்பிடுகிறன்றன?

1978 ஆம் ஆண்டு, 44ஆவது அரசியலமைப்புச் சட்டத்திருத்தப்படி, அடிப்படை உரிமைகள் பட்டியலிலிருந்து சொத்துரிமை (பிரிவு 31) நீக்கப்பட்டது.

இது இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி XII பிரிவு 300 A வின் கீழ் ஒரு சட்ட உரிமையாக வைக்கப்பட்டுள்ளது.

பெரும் முதலாளிகளிடமிருந்து வந்த எதிர்ப்பு காரணமாக கி.பி. (பொ. ஆ) 1215 இல் இங்கிலாந்து மன்னர் முதலாம் ஜான் என்பவரால் வெளியிடப்பட்ட உரிமைகள் பட்டயமே,'மகாசாசனம்' எனப்படும். இதுவே, குடிமக்களின் அடிப்படை உரிமைகளுடன் தொடர்புடைய முதல் எழுதப்பட்ட ஆவணமாகும்.

**அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை (சட்டப்பிரிவு-32)**

நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும். இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும். உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் இரண்டுமே ஐந்து வகையான நீதிபேராணைகளை வெளியிட அதிகாரம் பெற்றுள்ளன. அவை ஆட்கொணர்வு நீதிப்பேராணை, கட்டளையுறுத்தும் நீதிபேராணை, தடையுறுத்தும் நீதிபேராணை ஆவணக் கேட்பு நீதிப்பேராணை, தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை ஆகியனவாகும். இது போன்ற ஆணைகளை வெளியிட்டு மக்களின் உரிமைகளைக் காப்பதினால் உச்சநீதிமன்றம் 'அரசியலமைப்பின் பாதுகாவலன்' என அழைக்கப்படுகிறது. அம்பேத்கரின் கூற்றுப்படி அரசியலமைப்பு சட்டப்பிரிவு 32, இந்திய அரசியலமைப்பின்' இதயம் மற்றும் ஆன்மா' ஆகும்.

**அ) ஆட்கொணர்வு நீதிப்பேராணை (Habeas Corpus)**

சட்டத்திற்கு புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து இது பாதுகாக்கிறது.

### ஆ) கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை (Mandamus)

மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனுதொடர்பான பணியினைச் சம்மந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

### இ) தடையுறுத்தும் நீதிப்பேராணை (Prohibition)

ஒரு கீழ்நீதிமன்றம் தனது, சட்ட எல்லையைத் தாண்டி செயல்படுவதைத் தடுக்கிறது.

### ஈ) ஆவணக் கேட்பு பேராணை (Certiorari)

உயர்நீதிமன்றம், ஆவணங்களை நியாயமான பரிசீலனைக்கு தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ அனுப்பச் செய்ய கீழ்நீதிமன்றங்களுக்கு இடும் ஆணை ஆகும்.

### உ) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Quo - Warranto)

இப்பேராணை சட்டத்திற்கு புறம்பாக, தகாத முறையில் அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதை தடை செய்கிறது.

### அடிப்படை உரிமைகளை நிறுத்தி வைத்தல்

இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352ன் கீழ் குடியரசுத் தலைவரால் அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது, இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 19ன் கீழ் உத்திரவாதம் அளிக்கப்பட்ட சுதந்திரம் தாமாகவே நிறுத்தப்படுகிறது. மற்ற அடிப்படை உரிமைகளையும் குடியரசுத் தலைவல் சில குறிப்பிட்ட ஆணைகளைப் பிறப்பிப்பதின் மூலம் தடை செய்யலாம். குடியரசுத் தலைவரின் இந்த ஆணைகள் நாடாளுமன்றத்தால் கட்டாயம் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆனால் எந்த சூழ்நிலையிலும், குடியரசுத்தலைவரால் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 20 மற்றும் 21ன் கீழ் வழங்கப்பட்ட உரிமைகள் (குற்றங்கள் மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு, வாழ்க்கை மற்றும் தனிநபர் சுதந்திரம் பாதுகாப்பு) தடைசெய்ய முடியாது.

### அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள்

அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள், இந்திய அரசியலமைப்புச்சட்டம் பகுதி IV சட்டப்பிரிவு 36ல் இருந்து 51 வரை தரப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டம், வழிகாட்டும் நெறிமுறைகளுக்காகத் தனியாக வகைபாட்டினையும் கொண்டிருக்கவில்லை. இருப்பினும் பொருளடக்கம் மற்றும் வழிகாட்டுதல் அடிப்படையில் அவை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதாவது சமதர்ம, காந்திய மற்றும் தாராள-அறிவுசார்ந்தவை என்று பிரிக்கப்பட்டுள்ளன. இந்த கொள்கைகளை, நீதிமன்றத்தால் வலுக்கட்டாயமாகச் செயற்படுத்த முடியாது. ஆனால் இவை ஒரு நாட்டினை நிர்வகிக்க அவசியமானவை. ஓர் அரசு சட்டத்தை இயற்றும் போது இந்த கொள்கைகளையும் கவனத்தில் கொள்ளவேண்டியது முக்கிய கடமையாகும். சமுதாய நலநன மக்களுக்கு தருவதே இதன் நோக்கமாகும். இந்திய அரசியலமைப்பின் 'புதுமையான சிறப்பம்சம்' என Dr. B.R அம்பேத்கர் இதனை விவரிக்கிறார்.

2002ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட, 86வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தின்படி, இந்திய அரசியலமைப்பின் பிரிவு 45 திருத்தப்பட்டு, பிரிவு 21 A வின் கீழ் தொடக்கக்கல்வி,

| |
|---|
| அடிப்படை உரிமையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் திருத்தம், மாநில அரசுகள் முன்பருவ மழலையர் கல்வியை (Early Childhood care and Education - EECE) 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்க அறிவுறுத்துகிறது. |

| அடிப்படை உரிமைகள் | அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் |
|---|---|
| இவை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை. | இவை அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை. |
| அரசாங்கத்தால் கூட இந்த உரிமையை சுருக்கவோ, நீக்கவோ முடியாது. | இவை அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும். |
| இவற்றை நீதிமன்ற சட்டத்தால் செயற்படுத்த முடியும். | எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது |
| இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை. | இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை. |
| இந்த உரிமைகள் நாட்டின் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துகின்றன. | இந்தக் கொள்கைகளைச் செயற்படுத்தும் பொழுது, சமுதாய மற்றும் பொருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது. |
| இவை இயற்கையான உரிமைகள். | இவை மனித உரிமைகளைப் பாதுகாக்க வழிவகுக்கிறது. |

**அடிப்படைக் கடமைகள்**

இந்திய அரசியலமைப்பில் அடிப்படைக் கடமைகள் என்பவை முன்னாள் சோவியத் யூனியன் (USSR) அரசியலமைப்பின் தாக்கத்தால் சேர்க்கப்பட்டதாகும். 1976 ஆம் ஆண்டு, காங்கிரஸ் கட்சி சர்தார் ஸ்வரன் சிங் கமிட்டியை அமைத்து அடிப்படைக் கடமைகள் குறித்து ஆராய பரிந்துரை செய்தது. அக்கமிட்டி அரசியலமைப்புச் சட்ட திருத்தம் செய்ய பரிந்துரைத்தது. அதன்படி 1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 42வது அரசியல் அமைப்புச் சட்டத்திருத்தம் நமது அரசியலமைப்பில் குடிமக்களின் பொறுப்புகள் சிலவற்றைச் சேர்த்தது. இவ்வாறு சேர்க்கப்பட்ட பொறுப்புகளே குடிமக்களின் கடமைகள் என்றழைக்கப்பட்டன. மேலும் இந்தச் சட்டத்திருத்தம், அரசியலமைப்பின் பகுதி IV A என்ற ஒரு புதிய பகுதியைச் சேர்த்தது. இந்தப் புதிய பகுதி 51 A என்ற ஒரேயொரு பிரிவை மட்டும் கொண்டது. இது முதன்முறையாக, குடிமக்களின் பத்து அடிப்படைக் கடமைகளை விளக்கும் குறிப்பிட்ட சட்டத் தொகுப்பாக உள்ளது.

**அடிப்படைக் கடமைகளின் பட்டியல்**

ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் கடமைகளாக பின்வருவனவற்றை சட்டப்பிரிவு 51 A வலியுறுத்துகிறது.

அ) ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அரசியலமைப்பு, அதன் கொள்கைகள், நிறுவனங்கள், தேசியகீதம், தேசியக்கொடி, தேசிய சின்னங்கள் ஆகியவற்றை மதித்தல்.

ஆ) சுதந்திர போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உயரிய நோக்கங்களைப் போற்றி வளர்த்தல்.

இ) இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றைப் பேணிப் பாதுகாத்தல்.

ஈ) தேசப் பாதுகாப்பிற்காகத் தேவைப்படும் பொழுது தேசப்பணியாற்ற தயாராயிருத்தல்.

உ) சமய, மொழி மற்றும் பிராந்திய அல்லது பகுதி சார்ந்த வேறுபாடுகளை மறந்து, பெண்களைத் தரக்குறைவாக நடத்தும் பழக்கத்தை நிராகரித்து, பெண்களின் கண்ணியத்தைக் காக்கும் எண்ணங்களை மேம்படுத்தி, இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதரத்துவத்தை வளர்த்தல்.

ஊ) நமது உயர்ந்த, பாரம்பரிய கலப்பு சலாச்சாரத்தை மதித்து பாதுகாத்தல்.

எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் மற்றும் உயிரினங்கள் அடங்கிய இயற்கை சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்தி அவை வாழும் சூழலை ஏற்படுத்துதல்.

ஏ) அறிவியல் கோட்பாடு, மனிதநேயம், ஆராய்ச்சி மனப்பான்மை மற்றும் சீர்திருத்தம் ஆகியவற்றை வளர்த்தல்.

ஐ) வன்முறையைக் கைவிட்டு பொது சொத்தக்களைப் பாதுகாத்தல்.

ஒ) தனிப்பட்ட மற்றும் கூட்டுசெயல்பாடுகள் என அனைத்து செயல்பாடுகளிலும் சிறந்தவற்றை நோக்கி செயல்பட்டு, தேசத்தின் நிலையான, உயர்ந்த முயற்சி மற்றும் சாதனைக்காக உழைத்தல்.

ஓ) 6 முதல் 14 Zவயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை வழங்குதல். (2002இல் அறிமுகப்படுத்ZZ அடிப்படைக் கடமையை அறிமுகப்படுத்தியது. இந்த பிரிவின் கீழ் அனைத்து இந்திய குடிமக்கள் அல்லது பெற்றோர்கள் 6 முதல் 14 வயதுள்ள தங்கள் குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை ஏற்படுத்தி தர வேண்டும்.)

**மத்திய-மாநில உறவுகள்**

இந்திய அரசு கூட்டாட்சி முறையில் அமைந்துள்ளதால் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்களை அரசியலமைப்பு பிரிக்கிறது. மத்திய-மாநில அரசுகளுக்கிடையே நிலவும் உறவினை நாம் மூன்று தலைப்புகளின் கீழ் காணலாம்.

**சட்டமன்ற உறவுகள்**

மத்திய நாடாளுமன்றம், இந்தியா முழுவதற்கும் அல்லுது இந்தியாவின் எந்த பகுதிக்கும் சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ளது. இது இந்தியாவின் மாநிலங்களுக்கு மட்டுமின்றி யூனியன் பிரதேசங்களுக்கும் பொருந்தும். இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணை, மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான அதிகாரப் பகிர்வினைப் பற்றி கூறுகிறது. அவை மத்திய பட்டியல், மாநில பட்டியல், பொதுப்பட்டியல் என மூன்று பட்டியல்கள் முறையே 97, 66, 47 என்று அதிகார்தை நாடாளுமன்றம் பெற்றுள்ளது. மாநில அரசுக்குச் சொந்தமான பட்டியலில் சட்டமியற்றும் பிரத்யேக அதிகாரத்தை மாநில சட்டமன்றம் பெற்றுள்ளது. நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள் பொதுப்பட்டியலில் உள்ள துறைகளின் மீது சட்டமியற்றும் பொழுது முரண்பாடு ஏற்பட்டால், மத்திய அரசு இயற்றும் சட்டமே இறுதியானது.

தற்போது அதிகாரப் பகிர்வு என்பது மத்திய அரசு பட்டியலில் 100 துறைகள், மாநில அரசு பட்டியலில் 61 துறைகள், மற்றும் இரண்டுக்கும் பொதுவான பொதுப்பட்டியலில் 52 துறைகள் என்றும் மாற்றப்பட்டுள்ளது. 1976 ஆம்ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 42வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மாநிலப்பட்டியலில் இருந்து 5 துறைகளை, பொதுப்

பட்டியலுக்கு மாற்றியது. அவை, கல்வி, காடுகள், எடைகள் மற்றும் அளவுகள், பறவைகள் மற்றும் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற அமைப்புகளைத் தவிர பிற நீதிமன்றங்களின் நீதி நிர்வாகம் ஆகியனவாகும்.

**நிர்வாக உறவுகள்**

ஒரு மாநில அரசின் நிர்வாக அதிகாரம் அதன் சொந்த மாநிலத்தில் மட்டுமே உள்ளது மற்றும் அம்மாநிலத்தில் மட்டுமே தனக்கான சட்டமியற்றும் தகுதியையும் பெற்றுள்ளது. அதே வேளையில், மத்திய அரசும், பிரத்தியோக நிர்வாக அதிகாரம் பெற்றுள்ளது. அவை அ) நாடாளுமன்றம் தொடர்பான விஷயங்களில் சட்டங்களை இயற்ற சிறப்பு அதிகாரம், ஆ) மாநில அரசுகள் செய்து கொள்ளும் உடன்படிக்கை (அ) ஒப்பந்தங்களை அங்கீகரிப்பது ஆகியனவாகும்.

1969 இல் மத்திய- மாநில அரசுகளின் உறவுகள் குறித்து முழுவதும் ஆராய தமிழக அரசு Dr. P.V. இராஜமன்னார் தலைமையின் கீழ் மூவர் ஒன்றை நியமித்தது.

**நிதி உறவுகள்**

இந்திய அரசியலமைப்பு சட்டம் பகுதி சட்டப்பிரிவு 268ல் இருந்து 293 வரை உள்ள பிரிவுகள் மத்திய-மாநில அரசுகளின் நிதிசார்ந்த உறவுகளைப் பற்றி விளக்குகிறது. மத்திய-மாநில அரசுகள், அரசியலமைப்புச் சட்டத்தின மூலம், பலவகையான வரிகளை விதிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன. இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 280ன் கீழ் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்பட்ட நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையில், மத்திய அரசால் சில வரிகள் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு, மத்திய அரசாலும், மாநில அரசாலும் பிரித்துக்கொள்ளப்படுகின்றன.

மத்திய-மாநில அரசுகளின் உறவினை விசாரிக்க மறைந்த முன்னாள் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் 1983ஆம் ஆண்டு சர்க்காரியா குழுவினை நியமித்தார். அக்குழுவின் 247 பரிந்துரைகளில் 180 பரிந்துரைகளை மத்திய அரசு செயல்படுத்தியது. அவற்றுள் மிக முக்கியமானது 1990இல் அமைக்கப்பட்ட மாநிலங்களுக்கிடையிலான குழு ஆகும்.

**அலுவலக மொழிகள்**

அரசியலமைப்பு சட்டப் பகுதி XVIIஇல் 343 லிருந்து 351 வரையுள்ள சட்டப்பிரிவுகள் அலுவலக மொழிகள் பற்றி விவரிக்கின்றன. இவை நான்கு தலைப்புகளில் பிரிக்கப்பட்டுள்ளன. அவை யூனியன் பிரதேச மொழிகள், சட்டம் மற்றும் சிறப்பு வழிகாட்டு மொழிகள் என்ற பெயரில் உள்ளன.

முதலாவது மொழிக்குழு 1955 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. இது தனது அறிக்கையை, 1956இல் சமர்ப்பித்தது. இவ்வறிக்கையின் தொடர்ச்சியாக நாடாளுமன்றம் 1963ஆம் ஆண்டில் அலுவலமொழி சட்டம் இயற்றியது. இச்சட்டம் ஹிந்தியுடன் ஆங்கிலம் மத்திய அரசின் அனைத்து அலுவலக நோக்கங்களுக்காகவும், நாடாளுமன்ற கருத்து பரிமாற்றத்திற்காகவும், 15 ஆண்டுகளுக்கு பிறகும் கூட அதன் பயன்பாட்டைத் தொடரலாம் என்று அறிவித்தது. மீண்டும் 1967 ஆம் ஆண்டு அலுவலக மொழிகள் திருத்தச் சட்டம், அலுவலக மொழியாக ஆங்கிலம் காலவரையறையின்றி தொடரலாம் என்று அறிவித்தது. அரசியலமைப்பும் கூட சில வட்டார மொழிகளை மாநிலங்களுக்கான அலுவலக பரிமாற்ற மொழியாகப் பயன்படுத்த அனுமதித்தது. தொடக்கத்தில் 14 மொழிகள் அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. தற்போது 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மொழிகளை பட்டியலிடுக.

2004ஆம் ஆண்டு இந்திய அரசு “செம்மொழிகள்” எனும் புதிய வகைப்பாட்டினை ஏற்படுத்த தீர்மானித்தது. அதன்படி 6 மொழிகள் செம்மொழி தகுதியை பெற்றுள்ளன. அவை, தமிழ் (2004)இ சமஸ்கிருதம் (2005), தெலுங்கு (2008), கன்னடம் (2008), மலையாளம் (2013) மற்றும் ஒடியா (2014).

**அவசரகால ஏற்பாடுகள்**

அவசரகால நிலைகளை எதிர்கொள்ளும் விதமாக மத்திய அரசு கூடுதல் அதிகாரங்களைப் பெற்றுள்ளது. அரசியலமைப்பில் மூன்று வகையான அவசரநிலைகள் பற்றி கூறப்பட்டுள்ளன.

**தேசிய அவசரநிலை (சட்டப்பிரிவு 352)**

போர், வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு, அல்லது ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது உடனடி ஆபத்து அல்லது அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், குடியரசுத் தலைவர், அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352ன் கீழ் அவசரநிலை அறிவிக்கலாம். போர் அல்லது வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பின் காரணமாக அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது அது ‘வெளிப்புற அவசரநிலை’ எனப்படுகிறது. ஆயுதமேந்திய கிளர்ச்சிக் காரணமாக அவசர நிலை அறிவிக்கப்படும்பொழுது அது ‘உள்நாட்டு அவசர நிலை’ எனப்படுகிறது. இந்த வகையான அவசரநிலைகள் 1962, 1971, 1975 ஆகிய ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டன.

**மாநில அவசரநிலை (சட்டப்பிரிவு 356)**

ஒரு மாநிலத்தில், மாநில அரசால் கட்டுப்படுத்த முடியாத சூழல் ஏற்படும்பொழுது அரசியலமைப்பின் விதிகளுக்கேற்ப ஆளுநர் அறிக்கை அளிக்கும் பொழுது, குடியரசுத் தலைவர் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 356ன் கீழ் அவசரநிலையை அறிவிக்கலாம். இந்த அலசரநிலை, சட்டப்பிரிவு 352ன் படி நடைமுறையில் இருந்தாலும் அல்லது தேர்தல் ஆணையம் சட்டமன்றத் தேர்தலை நடத்த உகந்த சூழல் இல்லை என்று சான்றளித்தாலும் மட்டுமே ஓராண்டைத் தாண்டியும் தொடரமுடியும். அதிகபட்சம் அவசரநிலையின் காலம் 3 ஆண்டுகள் இருக்க முடியும். இந்த வகையான அவசரநிலையில் சட்டமியற்றுதல் மற்றும் நிர்வாக செயல்பாடுகளில் மாநிலங்கள் தங்கள் தன்னாட்சியை இழக்கின்றன. அவசரநிலை அறிவித்த பிறகு மாநில சட்டமன்றம் முடக்கப்படுகிறது. மாநிலமானது, குடியரசுத் தலைவர் சார்பாக ஆளுநரால் ஆளப்படுகிறது. இந்தியாவில் முதன்முறையாக 1951இல் பஞ்சாப் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.

**நிதி சார்ந்த அவசரநிலை (சட்டப்பிரிவு 360)**

நிதிநிலைத் தன்மை, இந்தியாவின் கடன் தன்மை மற்றும் இந்தியாவின் பகுதிகள் ஆபத்தில் இருந்தால் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 360ன் கீழ் குடியரசுத் தலைவர் நிதிசார்ந்த அவசரநிலையைப் பிறப்பிக்கலாம். இந்த வகையான அவசர நிலையில் மத்திய-மாநில அரசு ஊழியர் எந்த வகுப்பினராயினும் அவர்களது ஊதியம், படிகள் மற்றும் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் உட்பட அனைவரது ஊதியமும் குடியரசுத் தலைவரின் ஓர் ஆணையின் மூலம் குறைக்கப்படும். இந்த வகையான அவசரநிலை இந்தியாவில் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

**அரசியலமைப்புச் சட்டத்திருத்தம்**

'அமெண்ட்மெண்ட்' (Amendment) எனும் சொல் மாற்றம், மேம்படுத்துதல், மற்றும் சிறு மாறுதல் என்பதைக் குறிக்கிறது. வழக்கமாக இச்சொல் ஒரு நாட்டின் அரசியலமைப்பில் செய்யப்படும் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது. அரசியலமைப்பின் சட்டம் பகுதி XXல் 368வது சட்டப்பிரிசு, அரசியலமைப்பினை சட்ட திருத்தம் செய்வதில் பின்பற்றப்படும் முறைகள் மற்றும் திருத்தம் செய்வதில் நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் பற்றி தெரிவிக்கிறது.

**அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் செய்வதில் பின்பற்றப்படும் வழிமுறைகள்**

நாடளுமன்றத்தின் இரு அவைகளிலும், அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதா அறிமுகப்படுத்தப்பட வேண்டும். நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும், அவையின் ஒட்டுமொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் மற்றும் அவைக்கு வந்து, வாக்களித்தவர்களில் 3ல் 2 பங்குக்கு குறையாமல் மசோதாவிற்கு ஆதரவாக வாக்களித்தால் மட்டுமே, குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பட வேண்டும். குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தபின் மசோதா திருத்தப்பட்டச் சொற்களுடன் அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்படும். நாடாளுமன்றத்தால் மட்டுமே அரசியலமைப்பு சட்டத் திருத்ததைக் கொண்டுவரமுடியும். மாநில சட்ட மன்றத்தால் அரசியலமைப்பில் எந்தவொரு சட்டத்திருத்தத்தையும் கொண்டுவர முடியாது.

**அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் வகைகள்**

அரசியலமைப்பின் 368 வது சட்டப்பிரிவு மூன்று வகைகளில் அரசியலமைப்புச் சட்டத்திருத்தங்களைச் செய்ய வழிவகுக்கிறது. அதாவது நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மை மற்றும் மொத்த மாநிலங்களில் பாதிக்கும் மேற்பட்ட மாநிவங்களின் எளிய அறுதிப் பெரும்பான்மையுடன் திருத்தம் மேற்கொள்ளலாம். ஆனால் சில அரசியலமைப்பு சட்டப்பிரிவுகளைத் திருத்துவதற்கு நாடாளுமன்றத்தின் எளிய அறுதி பெரும்பான்மை தேவை என அரசியலமைப்புச் சட்டம் வகுத்துள்ளது. அதாவது, நாடாளுமன்றத்தின் இருஅவைகளிலும் வந்திருந்து, வாக்களித்த பெரும்பான்மை உறுப்பினர்கள் மூலம் சாதாரண சட்டமன்ற நடைமுறை போல் செய்யப்பட்ட அரசியலமைப்புத் திருத்தங்கள், திருத்தங்களாகக் கருதப்படமாட்டாது. 368வது சட்டப்பிரிவும் இதனை ஏற்காது. ஆகையால் அரசியலமைப்பினை மூன்று வழிகளில் மட்டுமே திருத்தமுடியும்.

1. நாடாளுமன்றத்தின் சாதாரண அறுதிப் பெரும்பான்மை மூலம் திருத்தப்டுதல்.
2. நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மை மூலம் திருத்தப்படுதல்.
3. நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் பாதிக்கும் மேற்பட்ட மாநில சட்டமன்றங்களின் ஒப்புதலைப் பெறுவதன் மூலம் திருத்த்படுதல்

**அரசியலமைப்பு சீர்திருத்தக் குழுக்கள்**

அரசியலமைப்பு செயல்பாடு குறித்து ஆய்வு செய்ய 2000ஆம் ஆண்டில் இந்திய அரசு ஒரு தீர்மானத்தின்படி திரு M.N. வெங்கடாசலய்யா தலைமையில் அரசியலமைப்புச் சட்ட செயல்பாட்டிற்கான தேசிய சீராய்வு ஆணையம் ஒன்றை அமைத்தது.

அரசின் பல்வேறு நிலைகள், அவற்றிற்கிடையேயான தொடர்பு மற்றும் பங்களிப்புகள் குறித்துப் புதிய நோக்கத்தோடு ஆராய ஏப்ரல் 2007ஆம் ஆண்டு மூன்று உறுப்பினர்களைக் கொண்ட M.M. பூஞ்சி தலைமையில் அப்போதைய அரசு ஓர் ஆணையத்தை அமைத்தது.

## அலகு – 2 - மத்திய அரசு

மத்திய அரசு மூன்று அங்கங்களைக் கொண்டது. அவை நிர்வாகம், சட்டமன்றம், நீதித்துறை அகியனவாகும் மத்திய நிர்வாகம், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவைக் குழு மற்றும் இந்திய அரசின் தலைமை வழக்கரைஞர் ஆகியோரை உள்ளடக்கியது ஆகும். மத்திய சட்டமன்றம் நாடாளுமன்றம் என்றழைக்கப்படுகிறது. இது இரண்டு அவைகளைக் கொண்டது. அவை மாநிலங்களவை (ராஜ்ய சபா) மற்றும் மக்களவை (லோக் சபா) ஆகியனவாகும். மத்திய நீதித்துறை உச்சநீதிமன்றத்தைக் கொண்டுள்ளது.

### இந்தியக் குடியரசுத் தலைவர்

நமது அரசியலமைப்புச் சட்டம் நாடாளுமன்ற முறையிலான அரசாங்கத்தை நமக்கு அளித்துள்ளது. மத்திய அரசின் நிர்வாகத் தலைவர் குடியரசுத் தலைவர் ஆவார். அவர் பெயரளவில் நிர்வாக அதிகாரம் பெற்றவர் ஆவார். ஆவர் இந்தியாவின் முதல் குடிமகன் ஆவார். அவர் முப்படைகளின் தலைமை தளபதியாகச் செயல்படுகிறார். நீதித்துறையை அமைக்கும் பொறுப்பு அவருக்கு உண்டு. அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 53ன் படி குடியரசுத் தலைவர் நேரடியாகவோ, அல்லது அவருடைய சார்நிலை அலுவலர்கள் மூலமாகவோ மத்திய அரசின் நிர்வாக அதிகாரங்களை அரசியலமைப்பின் ப டி செயல்படுத்துகிறார்.

### குடியரசுத் தலைவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகள்

குடியரசுத் தலைவர் வேட்பாளருக்கான தகுதிகளை அரசியலமைப்புச் சட்டம் வகுத்துள்ளது.

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- மத்திய அரசிலோ, மாநில அரசிலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மக்களவை உறுப்பினராவதற்கான தகுதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- அவரின் பெயரைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர்க் குழுவிலுள்ள பத்து வாக்காளர்கள் முன்மொழியவும் மேலும் பத்து வாக்காளர்கள் வழிமொழியவும் வேண்டும்.

குடியரசுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்ட மன்ற உறுப்பினராகவோ பதவி வகிக்கக் கூடாது.∴ ஒருவேளை பதவி வகிக்கும் பட்சத்தில் குடியரசுத் தலைவராக அவர் பதவி ஏற்கும் நாளில் அப்பதவி காலியானதாகக் கருதப்படும்.

புதுதில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவன் - குடியரசுத் தலைவரின் இல்லம் ஆகும். அவருடைய இல்லம் மற்றும் அலுவலகம் இரண்டும் ஒரே கட்டடத்தில் அமைந்துள்ளன. இருந்த போதிலும் அவருக்கு இருப்பிடத்துடன் கூடிய அலுவலகங்கள் மேலும் இரண்டு இடங்களில் உள்ளன. அங்கு வருடத்திற்கு ஒரு முறை சென்று தன்னுடைய அலுவலக பணிகளை அவர் மேற்கொள்கிறார். அவைகள் சிமலாவில் உள்ள ரிட்ரீட் கட்டடம் (The Retreat Building) மற்றும் ஹைதராபாத்தில் உள்ள ராஷ்டிரபதி நிலையம் ஆகும். இவைகளில் ஒன்று வடக்கிலும் மற்றொன்று தெற்கிலும் அமைந்துள்ளது. இது நாட்டின் ஒற்றுமையையும், மக்களின் பல்வேறுபட்ட கலாச்சதரத்தின் ஒற்றுமையையும்

| |
|---|
| பறைசாற்றுகின்றது. |

**குடியரசுத் தலைவருக்கானத் தேர்தல்**

குடியரசுத் தலைவர், ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின் படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

வாக்காளர் குழுமம் என்பது மாநிலங்களவை மற்றும் மக்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அனைத்து மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், தேசிய தலைநகர் டெல்லி, மற்றும் புதுச்சேரியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும். குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவருக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பதவியேற்பு உறுதிமொழி செய்து வைக்கிறார். குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். அவர் மீண்டும் தேர்நதெடுக்கப்பட தகுதி உடையவர் ஆவார்.

**குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள்**

குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் விரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**நிர்வாக அதிகாரங்கள்**

இந்திய அரசியலமைப்புச் சட்டம் மத்திய அரசின் அனைத்து நிர்வாக அதிகாரங்களையும் குடியரசுத் தலைவருக்கு வழங்குகிறது. அரசியலமைப்பு சட்டப்பிரிவு 77ன் படி மத்திய அரசின் ஒவ்வொரு நிர்வாக நடவடிக்கையும் குடியரசுத் தலைவரின் பெயராலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். நிர்வாகம் திறம்பட செயல்பட முக்கிய அலுவலகங்களுக்கானப் பல நியமனங்களைக் குடியரசுத் தலைவர் மேற்கொள்கிறார்.

**இந்தியக் குடியரசுத் தலைவர்களின் பட்டியல்**

| | | |
|---|---|---|
| 1. | திரு.ராஜேந்திர பிரசாத் | 1950 – 1962 |
| 2. | திரு. சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் | 1962 – 1967 |
| 3. | திரு. ஜாகிர் உசேன் | 1967 – 1969 |
| 4. | திரு. வி.வி. கிரி | 1969 – 1974 |
| 5. | திரு. பக்ருதீன் அலி அஹமத் | 1974 – 1977 |
| 6. | திரு. நீலம் சஞ்சீவி ரெட்டி | 1977 – 1982 |
| 7. | திரு. கியானி ஜெயில் சிங் | 1982 – 1987 |
| 8. | திரு. ஆர். வெங்கடராமன் | 1987 – 1992 |
| 9. | திரு. சங்கர் தயாள் சர்மா | 1992 – 1997 |
| 10. | திரு. கே.ஆர். நாராயணன் | 1997 – 2002 |
| 11. | திரு. அ.ப.ஜ. அப்துல் கலாம் | 20002 – 2007 |
| 12. | திருமதி பிரதீபா பாட்டீல் | 2007 – 2012 |
| 13. | திரு. பிரணாப் முகர்ஜி | 2012 – 2017 |
| 14. | திரு. ராம் நாம் கோவிந்த் | 2017 |

பிரதம அமைச்சரையும், மற்ற அமைச்சர்களையும் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். அவர் பிரதம அமைச்சரின் ஆலோசனைப் படி அமைச்சரவை உறுப்பினர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு

செய்கிறார். இந்தியாவின் மிக முக்கிய பதவிகளான மாநில ஆளுநர்கள், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிகள், இதர நீதிபதிகள், இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர், தலைமைக் கணக்ககு தணிக்கையாளர், இந்தியத் தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்கள், மத்திய அரசுப் பணியாளர் உறுப்பினர்கள், மற்ற நாடுகளுக்கான தூதர்கள் மற்றும் உயர் ஆணையர்கள் ஆகியோரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

குடியரசுத் தலைவர், தாழ்த்தப்பட்ட, பழங்குடியின் மற்றும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் நிலையை ஆய்வு செய்ய ஓர் ஆணையத்தை நியமிக்கும் அதிகாரம் பெற்றவர் ஆவார். முப்படைகளின் தலைமை தளபதியான குடியரசுத் தலைவர், இராணுவப் படை, கப்பற் படை, விமானப் படை தளபதியை நியமனம் செய்கிறார்.

**சட்டமன்ற அதிகாரங்கள்**

குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறார். பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை இவர் உரையாற்றி துவக்கி வைக்கிறார். மேலும் ஒவ்வொரு ஆண்டின் நாடாளுமன்றத்தின் முதல் கூட்டம் இவருடைய உரையுடன் துவங்குகிறது. குடியரசுத் தலைவர் ஆண்டுக்கு இரண்டுமுறை நாடாளுமன்றத்தைக் கூட்டுகிறார்.

அவர் நாடாளுமன்றத்தின் எந்தவொரு அவையிலும் ஒரு சட்ட மசோதா நிலுவையில் இருந்தாலும் அது குறித்து செய்தி அனுப்பலாம். குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தின் இரு அவைகளையோ அல்லது ஏதேனும் ஒரு அவையின் கூட்டத்தையோ குடியரசுத்தலைவல் முடிவுக்குக் கொண்டுவரலாம். மக்களவையின் ஐந்து ஆண்டுகாலம் முடியும் முன்னரே அதனைக் கலைக்கும் அதிகாரமும் இவருக்கு உண்டு.

கலை, இலக்கியம், அறிவியல், விளையாட்டு, மற்றும் சமூகப் பணி ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் 12 நபர்களைக் குடியரசுத் தலைவர் மாநிலங்களவைக்கு நியமிக்கிறார். மேலும் ஆங்கிலோ-இந்தியர் சமூகத்தைச் சேர்ந்த 2 நபர்களை மக்களவையில் போதுமான பிரதிநிதித்துவம் இல்லை என்று கருதும்பட்சத்தில் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

**நிதி அதிகாரங்கள்**

நிதி மசோதா, குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்கு பின்னரே நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும். மத்திய அரசின் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினைக் குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்ற பின்னரே மத்திய நிதி அமைச்சர் மக்களவையில் சமர்ப்பிக்கிறார். இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்திய அவசரகால நிதியினைக் குடியரசுத் தலைவரிடம் அளித்துள்ளது. அவரின் பரிந்துரை இன்றி எந்தவொரு மானியக் கோரிக்கையையும் கொண்டுவர முடியாது. இந்தியாவின் அவசர நிதியிலிருந்து அரசின் எதிர்பாராத செலவினங்களை மேற்கொள்ளும் அதிகாரம் அவருக்கு மட்டுமே உண்டு. ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒரு நிதிக்குழுவினை அமைக்கிறார். அல்லது மத்திய, மாநில அரசுகளின் வருவாயை பகிர்ந்து கொள்ள மாநிலங்கள் கோரிக்கை வைக்கும் பட்சத்தில் முன்கூட்டியே நிதிக் குழுவினை அவர் அமைக்கிறார்.

**நீதி அதிகாரங்கள்**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 72-வது சட்டப்பிரிவு நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற ஒருவரின் தண்டனையைக் குறைக்கவும், ஒத்திவைக்கவும், தண்டனையிலிருந்து விடுவிக்கவும், மன்னிப்பு வழங்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அனைத்து தண்டனைகள், மத்திய சட்டத்திற்கு எதிராகச் செயல்பட்டதால்

வழங்கப்பட்ட தண்டனைகள், மரண தண்டனைகள் ஆகியன இவற்றுள் அடங்கும். இவர் தன்னுடைய அதிகாரத்தைச் செயல்படுத்துவதில் (நாடாளுமன்றத்தால் அவருக்கு எதிராக அரசியல் குற்றச்சாட்டு கொண்டு வரும் போது தவிர) எந்த நீதிமன்றத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.

**இராணுவ அதிகாரங்கள்**

மத்திய பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதி என்ற அதிகாரத்தைச் சட்டப்பிரிவு 53(2) குடியரசுத் தலைவருக்கு வழங்கியுள்ளது. அவர் சட்டத்தின்படி இராணுவத்தை வழிநடத்துகிறார். எனவே அவர் பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதி என அறியப்படுகிறார். இதன் மூலம் மற்ற நாடுகளின் மீது போர் அறிவிக்கவும், அமைதியை ஏற்படுத்தவும் அவர் அதிகாரம் பெற்றவர் ஆவார்.

**இராஜதந்திர அதிகாரங்கள்**

வெளிநாடுகளுக்கான இந்திய தூதர்களைக் குடியரசுத் தலைவர் நியமிப்பதோடு மட்டுமல்லாமல் அவர் இந்தியாவுக்கான வெளிநாட்டுத் தூதர்களையும் வரவேற்கிறார். வெளிநாட்டுத் தூதர்களையும் வரவேற்கிறார். வெளிநாடுகளுக்கான அனைத்து உடன்படிக்கைகளும் ஒப்பந்தகளும் குடியரசுத் தலைவரின் பெயராலேயே நடைபெறுகின்றன.

**நெருக்கடி நிலை அதிகாரங்கள்**

நெருக்கடி நிலையை அறிவிக்கும் அதிகாரத்தை இந்திய அரசியலமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவருக்கு வழங்கியுள்ளது. அவைகள் பின்வருவன: போர், வெளிநாட்டு ஆக்கிரமிப்பு, ஆயுதமேந்திய கிளர்ச்சி ஆகிய சூழ்நிலைகளில் குடியரசுத் தலைவர் நெருக்கடி நிலையை அறிவிக்கும் அதிகாரத்தை 352-வது சட்டப்பிரிவு வகுத்துள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஒரு மாநில அரசாங்கம் செயல்படவில்லை எனில் அம்மாநிலத்தில் நெருக்கடி நிலையை அறிவித்து, அம்மாநில அரசாங்கத்தை முடிவுக்கு கொண்டுவரும் அதிகாரத்தைக் குடியரசுத் தலைவருக்கு 356வது சட்டப்பிரிவு வழங்குகிறது.

இந்தியாவின் நிதி நிலையில் திருப்தியின்மை காணப்பட்டாலும், இந்தியாவின் எந்த ஒரு பகுதியில் ஏதாவது ஒரு காரணத்திற்காக அச்சுறுத்தல் ஏற்படும் பொழுதும் 360வது பிரிவின்படி குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலையை அறிவிக்கிறார்.

கேரளா மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் அதிகபட்சமாக 9 முறை குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டடுள்ளது.

**துணைக் குடியரசுத் தலைவர்**

63வது பிரிவின் படி நாட்டின் இரண்டாவது உயர்ந்த பதவியைத் துணைக் குடியரசுத் தலைவர் வகிக்கிறார். அலுவலக முன்னுரிமையின் படி குடியரசுத் தலைவருக்கு அடுத்த தர நிலையில் இவர் உள்ளார். இப்பதவி அமெரிக்க துணைக் குடியரசுத் தலைவரின் பதவியைப் போன்றது. நாட்டின் அரசாங்க நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற இப்பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

**துணைக்குடியரசுத் தலைவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகள்**

இந்திய அரசியலமைப்புச் சட்டம் துணைக்குடியரசுத் தலைவருக்கான தகுதிகளை வகுத்துள்ளது.

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- மத்திய அரசிலோ, மாநில அரசிலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மாநிலங்களவை உறுப்பினராவதற்கான மற்ற தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**துணைக் குடியரசுத் தலைவர் - தேர்தல் மற்றும் பதவிக்காலம்**

சட்டப்பிரிவு 66(1) ன் படி துணைக் குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாக தேர்நதெடுக்கப்படாமல் குடியரசுத் தலைவர் போல மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்களை உள்ளடக்கிய வாக்காளர் குழுமத்தின் மூலம் இவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். துணைக் குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். பதவிக்காலம் முடியும் முன்னரே பணித்துறப்பு, இறத்தல், பணிநீக்கம் ஆகிய காரணங்களால் அவரது பதவி முடிவுக்கு வரலாம். அவர் மீண்டும் துணைக் குடியரசுத் தலைவராகத் தேர்நதெடுக்கும் தகுதி உடையவராவார்.

அரசியலமைப்புச் சட்டம் துணைக் குடியரசுத் தலைவர் பதவிக்கான தொடர் வழிமுறைகளை நமக்கு வழங்கவில்லை. இது போன்ற சூழ்நிலைகளில், துணைக் குடியரசுத் தலைவருக்கான தேர்தல் முடிந்தவரையில் விரைவில் நடத்த நடவடிக்கை எடுத்தப்படும். புதிய துணைக் குடியரசு தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை மாநிலங்களவையின் துணைத் தேர்நதெடுக்கப்படும் வரை மாநில ங்களவையின் துணைத் தலைவர் துணைக் குடியரசுத் தலைவரின் பணிகளைச் செய்வார்.

| |
|---|
| குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகள் ஒரே சமயத்தில் காலியாக இருக்கும் பட்சத்தில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி குடியரசுத் தலைவரின் பணிகளைச் செயலாற்றுவார். 1969ஆம் ஆண்டு இத்தகைய ஒரு நிகழ்வின் போது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி M.ஹிதயதுல்லா குடியரசுத் தலைவராக நியமிக்கப்பட்டார். |

**துணைக் குடியரசுத் தலைவர் பதவி நீக்கம்**

மக்களவையின் ஒப்புதலுடன், மாநிலங்களவையில் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் துணைக் குடியரசுத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கலாம். இத்தகைய தீர்மானம் கொண்டு வர குறைந்தபட்சம் 14 நாட்களுக்கு முன்னரே துணைக் குடியரசுத் தலைவருக்கு ஒரு அறிவிப்பை வழங்க வேண்டும்.

**துணைக் குடியரசுத் தலைவரின் செயல்பாடுகள்**

துணைக் குடியரசுத் தலைவர் அவர் வகிக்கும் பதவியின் நிமித்தமாக மாநிலங்களவையின் தலைவராகச் செயல்படுகிறார். மாநிலங்களவையின் தலைவர் என்கிற முறையில் அவர் பல்வேறு பணிகளை மேற்கொள்கிறார்.

- மாநிலங்களவையின் நடவடிக்கைகளை முறைப்படுத்துகிறார்.

- மாநிலங்களவையின் மரபு ஒழுங்கு முறைகளைத் தீர்மானிக்கிறார்.
- மாநிலங்களவையின் தீர்மானம் அல்லது கேள்விகளை அனுமதிப்பதை முடிவு செய்கிறார்.
- மிகப் பெரிய பிரச்சனையின்போது அவையின் நடவடிக்கைகளை அவர் ஒத்திவைக்கவும் அல்லது முடிவுக்குக் கொண்டு வரவும் செய்கிறார்.
- பல்வேறு குழுக்களுக்கு அதனுடைய செயல்பாடுகள் தொடர்பாக அவர் வழிமுறைகளை வழங்குகிறார்.
- குடியரசுத் தலைவர் உடல்நலக் குறைவால் தனது கடமைகளை ஆற்ற இயலாத போதும் அல்லது நாட்டில் இல்லாத போதும் துணைக் குடியரசுத் தலைவர், குடியரசுத் தலைவரின் பணிகளைக் கவனிப்பார். குடியரசுத் தலைவர் பதவியானது, அவரின் பதவித்துறப்பு, இறப்பு, அரசியலமைப்பை மீறிய குற்றச் சாட்டின் மூலம் பதவி நீக்கம் ஆகிய காரணங்களால் காலியாகும் போது துணைக் குடியரசுத் தலைவர் அதிகபட்சமாக ஆறு மாத காலத்திற்கு அவரின் பணிகளைக் கவனிப்பார்.

**முடிவு வாக்கு (Casting vote)**

மாநிலங்களவையில் சட்ட மசோதாவின் மீது நடைபெற்ற வாக்கெடுப்பு சமநிலையில் இருக்கும்பட்சத்தில் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 100ன் படி துணைக் குடியரசுத் தலைவர் வாக்கு அளிக்கலாம். இது சட்ட மசோதாவின் ஒப்புதலுக்கு ஒரு வாக்கு மட்டுமே தேவை என்ற நிலையைக் குறிக்கிறது. ஆகையால் அவர் இந்த விருப்புரிமை அதிகாரத்தைச் சட்டம் மசோதாவுக்கு ஆதரவாகவோ எதிராகவோ வாக்களிக்கும் அதிகாரம் பெற்றவர் ஆவார். அவருடைய முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்க எவருக்கும் உரிமை இல்லை.

**பிரதம அமைச்சர்**

அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 74 (1) குடியரசுத் தலைவருக்கு உதவிடவும், அறிவுரை வழங்கிடவும் பிரதம அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஒரு மத்திய அமைச்சரவைக் குழு இருக்கும் எனக் குறிப்பிடுகிறது. குடியரசுத் தலைவர் அமைச்சரவை வழங்கும் அறிவுரையை மறு பரிசீலனைச் செய்யச் சொல்லலாம். ஆனால் மறுபரிசீலனைக்குப் பின்னர் அந்த அறிவுரையின்படி அவர் நடந்து கொள்ள கடமைப் பட்டவராவார்.

(இங்கிலாந்தின் நாடாளுமன்றம் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மையில் அமைந்துள்ளதால் அவர்களின் நாடாளுமன்ற முறை வெஸ்ட்மினிஸ்டர் முறை என்றழைக்கப்படுகிறது). இந்தியாவின் பிரதம அமைச்சர் பதவியானது வெஸ்மின்ஸ்டர் அரசியலமைப்பு ஜனநாயக முறையில் இருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மக்களவையின் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரை பிரதம அமைச்சராகக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். முற்ற அமைச்சர்களை பிரதம அமைச்சரின் ஆலோசனையின்படி குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். மக்களவையில் எந்த ஒரு கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை பலம் இல்லையெனில் குடியரசுத் தலைவர் எந்தக்கட்சி அமைச்சரவையை அமைக்க முடியுமோ அக்கட்சியின் தலைவரை அவர் அழைத்து அரசு அமைக்கக் கூறலாம். குடியரசுத் தலைவர் அமைச்சர்களுக்குப் பதவிப் பிரமாணமும், இரகசியக்காப்புப் பிரமாணமும் செய்து வைக்கின்றார். பிரதம அமைச்சர் மற்றும் மற்ற அமைச்சர்களின் ஊதியங்களையும், படிகளையும் நாடாளுமன்றம் நிர்ணயிக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினராய் இல்லாதவர் கூட அமைச்சராக நியமிக்கப்படலாம். ஆனால் அவர் 6 மாதங்களுக்குள் நாடாளுமன்றத்திற்குத் தேர்நதெடுக்கப்படுதல் வேண்டும். அமைச்சர்கள் தனிப்பட்ட முறையிலும், ஒட்டு மொத்தமாகவும் மக்களவைக்கு பொறுப்புடையவர்களாவர்.

## இந்திய பிரதமர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஜவகர்லால் நேரு | 1947 – 64 |
| 2. | திரு. லால் பகதூர் சாஸ்திரி | 1964 – 66 |
| 3. | திருமதி. இந்திரா காந்தி | 1966 – 77 |
| 4. | திரு. மொரார்ஜி தேசாய் | 1977 – 79 |
| 5. | திரு. சரண் சிங் | 1979 – 80 |
| 6. | திருமதி. இந்திரா காந்தி | 1980 – 84 |
| 7. | திரு. ராஜீவ் காந்தி | 1980 – 89 |
| 8. | திரு. வி.பி. சிங் | 1989 – 90 |
| 9. | திரு சந்திரசேகர் | 1990 – 91 |
| 10. | திரு. பி.வி. நரசிம்ம ராவ் | 1991 – 96 |
| 11. | தரு. அடல் பிகாரி வாஜ்பாய் | மே 1996 |
| 12. | திரு. டி. தேவகவுடா | 1996 – 97 |
| 13. | திரு. ஐ. கே குஜ்ரால் | 1997 – 98 |
| 14. | திரு. அடல் பிகாரி வாஜ்பாய் | 1998 – 2004 |
| 15. | திரு. மன்மோகன் சிங் | 2004 – 14 |
| 16. | திரு. நரேந்திர மோடி | 2014 முதல் |

**பிரதம அமைச்சரின் செயல்பாடுகளும், கடமைகளும்**

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 78 பிரதம அமைச்சரின் கடமைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

- பிரதம அமைச்சர் அமைச்சர்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- தான் தலைமை வகிக்கும், அமைச்சரவைக் கூட்டத்தின் தேதி, நிகழ்ச்சி நிரல் (Agenda) குறத்து முடிவு செய்வார்.
- பிரதம அமைச்சரே அமைச்சரவையின் தலைவர் ஆவார். மற்றவர்கள் அரசின் துறைகளைப் பகிர்ந்து கொள்ளும் சக அமைச்சர்கள் ஆவர்.
- கேபினெட் கூட்டம் நடைபெறாத பொழுது பிரதம அமைச்சர் தனது மூத்த சகாக்கள் இருவர் அல்லது மூவரை இயல்பாகக் கலந்தாலோசிக்கலாம்.
- பிரதம அமைச்சர் பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.
- மத்திய அரசின் விவகாரங்கள் மற்றும் சட்டத்திற்கான முன்மொழிவுகள் போன்ற அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும் குடியரசுத் தலைவருடன் விவாதிக்கிறார்.
- பிரதம அமைச்சர், குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் இடையே பாலமாக செயல்படுகிறார்.
- பிரதம அமைச்சர் நாட்டின் உண்மையான தலைவராவார். அவர் நாட்டின் முக்கிய செய்தித் தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.
- சர்வதேச மாநாடுகளான காமன்வெல்த், அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு, சார்க் நாடுகளின் மாநாடு ஆகியவற்றில் இந்திய நாட்டின் பிரதிநிதியாகப் பிரதமர் பங்கு கொள்கிறார்.

**அமைச்சரவைக் குழு**

தேர்தலுக்குப் பின்னர் பரதம அமைச்சரின் ஆலோசனையின்படி குடியரசுத் தலைவர் அமைச்சரவையை நியமிக்கிறார். சில சமயங்களில் நாடாளுமன்ற உறுப்பினராய் இல்லாதவர்கூட அமைச்சராக நியமிக்கப்படலாம். ஆனால் அவர் ஆறு மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தின் ஏதேனும் ஓர் அவைக்குத் தேர்நதெடுக்கப்பட வேண்டும். ஒட்டு மொத்த மக்களவை உறுப்பினர்களினல் 15% மட்டுமே அமைச்சரவை உறுப்பினர்களாக (பிரதம அமைச்சர் உட்பட) இருத்தல் வேண்டும் என இந்திய அரசியலமைப்புச் சட்டம் வரையறுத்துள்ளது.

**மத்திய அமைச்சர்களின் வகைகள்**

மத்திய அமைச்சர்கள் மூன்று தரநிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

1. கேபினெட் (அ) ஆட்சிக்குழு அமைச்சர்கள்
2. இராசாங்க அமைச்சர்கள்
3. இணை அமைச்சர்கள்

**கேபினெட் அமைச்சர்கள்**

நிர்வாகத்தின் மையக் கருவை உருவாக்கும் மூத்த அமைச்சர்களின் முறைசாரா அமைப்பே காபினெட் ஆகும். காபினெட் அரசாங்கத்தின் பாதுகாப்பு, நிதி, வெளியுறவுக் கொள்கைகள், உள்துறை ஆகியவற்றின் முக்கிய முடிவுகளை எடுக்கிறது. குடியரசுத் தலைவர் அவசரநிலையைப் பிரகடனம் செய்ய அமைச்சரவை பரிந்துரைக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவர அமைச்சரவை ஒரு கருவியாக செயல்படுகிறது. நிதி மசோதாவானது அமைச்சரவையில் இருந்து தொடங்கும். பின்னர் குடியரசுத்தலைவர் பரிந்துரையுடன் மக்கள்வையில் அறிமுகப்படுத்தப்படும். அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையை அமைச்சரவை முடிவு செய்வதோடு, சர்வதேச அமைச்சரவை முடிவு செய்வதோடு, சர்வதேச உடன்படிக்கைகளுக்கும் ஒப்புதல் அளிக்கிறது. பல்வேறு நாடுகளுக்கானத் தூதர்களை நியமிப்பதில் அமைச்சரவை முக்கிய பங்கு வகிக்கிறது.

**இராசாங்க அமைச்சர்கள்**

அமைச்சரவை குழுவின் இரண்டாவது வகையினலே இராசாங்க அமைச்சர்கள் ஆவர். அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளின் பொறுப்பு அமைச்சராக செயல்படுகின்றனர். ஆனால் அழைப்பு விடுத்தால் மட்டுமே இவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

**இணை அமைச்சர்கள்**

அமைச்சரவையில் மூன்றாவதாக, இணை அமைச்சர்கள் உள்ளனர். காபினெட் அமைச்சர்கள் (அ) இராசாங்க அமைச்சர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளைச் செயலாற்றுவதில் இவர்கள் உதவி புரிகின்றனர்.

**இந்திய நாடாளுமன்றம்**

மத்திய அரசின் சட்டம் இயற்றும் அங்கமாக நாடாளுமன்றம் திகழ்கிறது. இது இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி V இல் 79 முதல் 122 வரை உள்ள சட்டப்பிரிவுகள், இந்திய

நாடாளுமன்ற அமைப்பு, உள்ளடக்கம், ஆயட்கலம், அலுவலர்கள், செயல்முறைகள், சிறப்புச் சலுகைகள், அதிகாரங்கள் பற்றி குறிப்பிடுகிறது. இந்திய நாடாளுமன்றம் மூன்று பகுதிகளைக் கொண்டது. அவைகள் 1. குடியரசுத்தலைவர் 2. ராஜயசபா (மாநிலங்களவை) 3 லோக்சபா (மக்களவை). நாடாளுமன்றமானது மாநிலங்களவை என்னும் மேலவையையும் கொண்டுள்ளதால் இது ஈரவை சட்டமன்றம் என்றும் அழைக்கப்படுகிறது.

**மாநிலங்களவை**

ராஜ்யசபா என்றழைக்கப்படும் மாநிலங்களவை 250 உறுப்பினர்களைக் கொண்டது. இதில் 238 உறுப்பினர்கள், மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் யூனியன் பிரதேச சட்டமன்ற உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்நதெடுக்கப்படுகின்றனர்.

12 உறுப்பினர்கள், இலக்கியம், அறிவியல், விளையாட்டு, கலை மற்றும் சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்த அறிவு அல்லது செயல்முறை அனுபவம் கொண்டவர்களைக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

**மாநிலங்களவை உறுப்பினராவதற்கானத் தகுதிகள்**

மாநிலங்களவை உறுப்பினராக ஒருவர் கீழ்காணும் தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 30 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- அரசாங்கத்தில் ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மனநிலை சரியில்லாதவராகவோ அல்லது பெற்ற கடனைத் திருப்பித்தர முடியாதாவராகவோ இருத்தல் கூடாது.
- நாடாளுமன்றத்தால் அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்படும் தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- மக்களவையிலோ (அ) எந்தவொரு சட்டமன்றத்திலோ உறுப்பினராக இருத்தல் கூடாது.

**மாநிலங்களவை உறுப்பினரின் பதவிக் காலம்**

மாநிலங்களவை ஒரு நிரந்திர அவை ஆகும். அதனைக் கலைக்க முடியாது. மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகளாகும். அதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வு பெறுகின்றனர். அதனால் ஏற்படும் காலியிடங்கள் புதிய உறுப்பினர்களால் நிரப்பப்படுகின்றன.

துணைக் குடியரசுத் தலைவர் பதவி வழி மாநிலங்களவையின் தலைவராகச் செயல்படுகிறார். மாநிலங்களவையின் துணைத் தலைவர் அதன் உறுப்பினர்களால் தேர்நதெடுக்கப்படுகிறார்.

**தேர்தல்**

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில சட்டமன்ற உறுப்பினர்களால் (MLA's) ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரநிதித்துவ முறையில் மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த தேர்தல் முறை மறைமுக தேர்தல் எனப்படும். இவர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவதில்லை.

**மாநிலங்களவையின் செயல்பாடுகள்**

- எந்தவொரு மசோதாவும் (நிதி மசோதா தவிர) சட்டமாவதற்கு மாநிலங்களவையின் ஒப்புதல் தேவை ஆறு மாதங்களுக்கு மேல் ஒரு மசோதா ஒப்புதல் பெறவில்லை எனில் குடியரசுத் தலைவர் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்து மசோதாவின் முடக்கத்தைத் தீர்த்து வைக்கிறார்.
- அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்திற்கான எந்த ஒரு மசோதாவை நிறைவேற்றுவதிலும் மக்களவையைப் போன்றே மாநிவங்களவையும் அதிகாரம் பெற்றுள்ளது.
- மாநிலங்களவை உறுப்பினர்கள் குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்களிக்கும் அதிகாரம் பெற்றுள்ளனர். இவர்கள் மக்களவை உறுப்பினர்கள் மற்றும் அனைத்து மாநிலங்களின் சட்டமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர்.
- இவர்கள், குடியரசுத் தலைவர், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பதவிநீக்க செயல் முறைகளில் அதிகாரம் பெற்றுள்ளனர்.
- தேசிய முக்கியத்துவம் கருதி மாநில அரசு பட்டியலை உருவாக்கும் அதிகாரத்தை மாநிலங்களவை பெற்றுள்ளது. மாநிலங்களவையின் 2/3 உறுப்பினர்கள் பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானம் ஒப்புதல் பெறுகிறது. இதன் 2/3 உறுப்பினல்கள் பெரும்பான்மையுடன் அகில இந்தியப் பணிகளை உருவாக்கவும், நீக்கவும் அதிகாரம் பெற்றுள்ளது.

**நிதி மசோதா**

நிதி மசோதாவினை திருத்தம் செய்யவோ அல்லது நிராகரிக்கவோ மாநிலங்களவைக்கு அதிகாரம் இல்லை. மக்களவையில் மட்டுமே நிதி மசோதாவினை அறிமுகப்படுத்த முடியும். இம்மசோதா மாநிலங்களவையின் ஒப்புதலுடன் சட்டமாக மாறும். மாநிலங்களவை 14 நாட்களுக்குள் ஒப்புதல் அளிக்கவில்லையெனில், ஒப்புதல் பெறாமலேயே சட்டமாகிவிடும். மாநிலங்களவையின் சட்டத் திருத்தத்திற்கான முன்மொழிவுகளை மக்களவை கருத்தில் கொள்ள வேண்டியதில்லை. எந்த முன்மொழிவுகளையும் மக்களவை நிராகரிக்கலாம்.

**மக்களவை**

மக்களவையானது மக்களால் தேர்நதெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தின் புகழ்மிக்க அவை ஆகும். மக்களவைக்கு அதிகபட்சமாக தேர்நதெடுக்கப்படும் உறுப்பினர்கள் 552 அவற்றில் 530 உறுப்பனிர்கள் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், 13 உறுப்பினர்கள் யூனியன் பிரதேசங்களில் இருந்தும் தேர்நதெடுக்கப்படுகின்றனர். ஆங்கிலோ-இந்தியன் சமூகத்திலிருந்து 2 உறுப்பினர்களைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். தற்சமயம் மக்களவை 545 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

**மக்களவை உறுப்பினராவதற்கான தகுதிகள்**

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 25 வயதிற்கு குறைவுடையவராய் இருத்தல் கூடாது.
- அவரது பெயர் நாட்டின் ஏதாவது ஒரு பகுதியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.
- மத்திய, மாநில அரசு அலுவலகங்களில் ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.

- மனநிலை சரியில்லாதவராகவோ அல்லது பெற்ற கடனை திருப்பி செலுத்த இயலாதவராகவோ இருத்தல் கூடாது.

**மக்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம்**

பொதுவாக, மக்களவை தன்னுடைய முதல் கூட்டத்திலிருந்து ஐந்து ஆண்டுகள் செயல்படும். அதன் காலம் முடிவதற்கு முன் பிரதம அமைச்சரின் ஆலோசனையின்பேரில் குடியரசுத் தலைவர் மக்களவையைக் கலைக்கலாம். இந்திய அரசியலமைப்பின் நெருக்கடி நிலை சட்டத்தின்படி மக்களவையின் நம்பிக்கை வாக்கெடுப்பில் எந்தவொரு கட்சிக்கோ (அ) கூட்டணிக்கோ பெரும்பான்மை இல்லாத பட்சத்தில் குடியரசுத் தலைவர் மக்களவையைக் கலைக்கலாம்.

**தேர்தல்**

மக்கள் தொகையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நாடாளுமன்ற தொகுதிகளில் உள்ள மக்களால் நேரடியாக மக்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மக்களவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள், மேற்பார்வையிடுதல், நடத்துதல் ஆகிய பணிகளை இந்தியத் தேர்தல் ஆணையம் செய்கிறர். மக்களவைத் தேர்தலுக்காக நாடு முழுவதும் மக்கள் தொகையின் அடிப்படையில் பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

மக்களவை உறுப்பினர்களைத் தேரந்தெடுப்பதில் ‘வயது வந்தோர் வாக்குரிமை’ பின்பற்றப்படுகிறது. வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்ட 18வயது நிரம்பிய இந்தியக் குடிமக்கள் அனைவரும் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்நதெடுக்க தகுதியுடையவர் ஆவர்.

**மக்களவையின் செயல்பாடுகள்**

- அனைத்து மசோதாக்களையும் மக்களவையில் அறிமுகப்படுத்தவும், நிறைவேற்றவும் முடியும் (நிதி மசோதா உள்பட).
- குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்ற நீதிபதிகள் போன்றவர்களின் பதவி நீக்க விவகாரங்களில் பங்கேற்க மாநிலங்களவையைப் போலவே மக்களவையும் அதகிாரம் பெற்றுள்ளது.
- அரசியலமைப்பு சட்டத்திருத்தத்திற்கான எந்தவொரு மசோதாவை நிறைவேற்றுவதிலும் மாநிலங்களவையைப் போலவே மக்களவையும் சமமான அதிகாரம் பெற்றுள்ளது.
- மக்களவை உறுப்பினர்கள், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்குத் அதிகாரம் பெற்றுள்ளனர்.
- நம்பிக்கையில்லாத் தீர்மானம் லோக்சபாவில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் பிரதம அமைச்சர் உட்பட மற்ற அமைச்சர்களும் தங்களது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும்.

தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள்.

- மாநிலங்களவை – 18 உறுப்பினர்கள்
- மக்களவை – 39 உறுப்பினர்கள்

**சபாநாயகர்**

மக்களவையைத் தலைமை ஏற்று நடத்துபவர் சபாநாயகர் ஆவார். ஆவர் மக்களவை உறுப்பினர்களால் தேர்நதெடுக்கப்படுகிறார். நாடாளுமன்ற மக்களாட்சியில் சபாநாயகரின் பதவி ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. மக்களவை கலைக்கப்பட்டாலும் புதிய சபாநாயகர் தேர்ந்தெடுக்கும் வரை அவர் பதவியில் நீடிப்பார். நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டு கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார். அவர் ஒரு மசோதாவை நிதி மசோதாவா அல்லது சாதாரண மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றுள்ளார். பண மசோதாவை தீர்மானிப்பதில் இவருடைய முடிவே இறுதியானது ஆகும். 1985ஆம் ஆண்டு கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்படி இந்திய அரசியலமைப்புச் சட்டம் 10வது அட்டவணை அடிப்படையில் ஒரு உறுப்பினர் மக்களவை உறுப்பினர் ஆக தகுதி பெற்றவரா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு. சபாநாயகர் பதவி காலியாக இருக்கும் போதும் அல்லது வருகை புரியாத போதும் துணை சபாநாயகர் மக்களவைக்குத் தலைமை வகிப்பார்.

**நாடாளுமன்றக் கூட்டத் தொடர்**

பட்ஜெட் கூட்டத் தொடர்: பிப்ரவரி முதல் மே வரை
மழைக் (பருவ) காலக் கூட்டத் தொடர் : ஜூலை முதல் செப்டம்பர் வரை
குளிர் காலக் கூட்டத் தொடர்: நவம்பர் மற்றும் டிசம்பர்

**நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்**

- இந்திய நாடாளுமன்றம் சட்டமியற்றுதல் நிர்வாகத்தினை மேற்பார்வையிடுதல், வரவு-செலவு திட்டத்தினை நிறைவேற்றுதல், பொதுமக்கள் குறைகளைப் போக்குதல், மேலும் வளர்ச்சித் திட்டங்கள், சர்வதேச உறவுகள், உள்நாட்டுக் கொள்கைகள் போன்றவைகளை விவாதித்தல் என பல பணிகளைச் செய்கிறது.
- நாடாளுமன்றம் குடியரசுத் தலைவர் மீதான அரசியல் குற்றச்சாட்டுகளை (Impeachment) விசாரிக்கவும், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள், தலைமை தேர்தல் ஆணையர், இந்தியத் தலைமைக் கணக்கு தணிக்கையாளர் ஆகியோரை அரசியலமைப்புச் சட்ட விதிமுறைகளின்படி பதவி நீக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது.
- நாடாளுமன்றமானது நிர்வாகத்தினை கேள்விகள், துணைக் கேள்விகள் கேட்பதன் மூலமாகவும், ஒத்திவைப்புத் தீர்மானங்கள், விவாதங்கள், தீர்மானங்கள் இயற்றுதல், கண்டனத் தீர்மானம் அல்லது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதித்து அவையில் கொண்டு வருதல் போன்றவைகளில் மூலமாகவும் தனது கட்டுப்பாட்டினைச் செலுத்தி வருகின்றது.
- மாநிலங்களின் எல்லைகளை மாற்றி அமைத்திட நாடாளுமன்றதிற்கே அதிகாரம் உண்டு.

**இந்திய அரசின் தலைமை வழக்கரைஞர்**

இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 76 இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரை நியமிக்க வழிவகை செய்கிறது. இவர் நாட்டின் உயர்ந்த சட்ட அதிகாரி ஆவார். இவர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். உச்ச நீதிமன்ற நீதிபதியாகத் தேவையான தகுதிகளை இவரும் கொண்டிருக்க வேண்டும். இவர் இந்தியக் குடிமகனாய் இருத்தல் வேண்டும். அவர் ஏதாவது ஒரு உயர் நீதிமன்றத்தில் ஐந்து ஆண்டுகள் நீதிபதியாகவோ (அல்லது) உயர் நீதிமன்றத்தில் பத்து ஆண்டுகள் வழக்குரைஞராகவோ அல்லது குடியரசுத் தலைவரின் பார்வையில் மேம்பட்ட சட்ட வல்லுநராகவோ இருத்தல் வேண்டும். குடியரசுத் தலைவர் விரும்பும் வரை இவர் பதவியில்

நீடிக்கலாம். எந்த நேரத்திலும் குடியரசுத் தலைவரால் அவர் பதவியிலிருந்து அகற்றப்படலாம். அல்லது அவர் குடியரசுத் தலைவருக்குப் பதவி விலகல் கடிதத்தை அளித்து பதவி விலகலாம்.

**இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்**

இவர் குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்பட்ட சட்ட விவகாரங்கள் மீது இந்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவார். குடியரசுத் தலைவரால் ஒதுக்கப்படும் சட்டரீதியிலான மற்ற கடமைகளையும் அவர் மேற்கொள்வார். அரசியலமைப்புச் சட்டம் அல்லது ஏனைய சட்டத்தின்படி வழங்கப்படும் பணிகளையும் அவர் மேற்கொள்வார். இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்காடும் உரிமை இவருக்கு உண்டு. நாடாளுமன்ற இரு அவைகளின் செயல்முறைகளிலும் பேசுவதற்கும், பங்கு கொள்ளுவதற்கும் இவருக்கு உரிமை உண்டு. நாடாளுமன்றத்தின் இரு அவையின் கூட்டத்திலோ அல்லது எந்தவொரு கூட்டுக் குழு கூட்டத்திலோ வாக்கு அளிக்கும் உரிமை இன்றி உறுப்பினராக இவர் இடம் பெறுவார். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியக் அனைத்து சலுகைகளையும், சட்ட விலக்களிப்புகளையும் இவரும் பெறுகிறார்.

**நீதித்துறை**

மத்திய அராசாங்கத்தின் மூன்றாவது அங்கம் நீதித்துறை ஆகும். குடிமக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதில் நீதித்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. இந்திய அரசியலமைப்பு மற்றும் சட்டத்தின் விதிகள் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்வதிலும், விளக்கமளிப்பதிலும் இது முக்கிய பங்கை வகிக்கிறது.

**உச்சநீதிமன்றம்**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் உச்சநீதிமன்றம் ஆகும். நாட்டின் முதன்மை நீதிமன்றமாக, சுதந்திரமான, ஒருங்கிணைந்த நீதி அமைப்பாக உச்சநீதிமன்றம் நிறுவுவதற்கு நமது அரசியலமைப்பு வழிவகை செய்கிறது. மத்திய, மாநில அரசுகளின் சட்டமன்ற, நிர்வாகப் பிரிவுகளிலிருந்து நீதித்துறை தன்னாட்சி பெற்று விளங்குகிறர். ஒருங்கிரணந்த நீதித்துறை என்பது நாடு முழுவதும் நீதித்துறையானது ஒற்றை அதிகாரப் படிநிலையைக் கொண்டுள்ளதாகும். குடிமக்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதில் நீதித்துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

| |
|---|
| புதுதில்லியில் அமைந்துள்ள இந்திய உச்சநீதிமன்றம் 1950 ஜனவரி 28ஆம் நாள் துவங்கப்பட்டது. இது 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கூட்டாட்சி நீதிமன்றத்தைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டது. |

**உச்ச நீதிமன்றத்தின் அமைப்பு**

1950 ஆம் அண்டு அரசியலமைப்பின் தொடக்கத்தில் ஒரு தலைமை நீதிபதி உட்பட 8 நீதிபதிகளை உச்ச நீதிமன்றம் கொண்டிருந்தது. தற்சமயம் உச்ச நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதி உட்பட 28 நீதிபதிகளைக் கொண்டுள்ளது.

**நீதிபதிகள் நியமனம்**

இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். மற்ற நீதிபதிகளைத் தலைமை நீதிபதியைத் தலைவராகக் கொண்ட மூத்த நீதிபதிகள குழுவின் (Collegiums) ஆலோசனையுடன் குடியரசுத் தலைவர் நியமிக்கறார்.

**உச்சநீதிமன்ற நீதிபதிக்கான தகுதிகள்**

- அவர் இந்தியக் குடிமகனாய் இருத்தல் வேண்டும். (அல்லது) அவர் ஐந்து ஆண்டுகள் உயர் நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்திருத்தல் வேண்டும்.
- அவர் பத்து ஆண்டுகள் உயர் நீதிமன்றத்தில் வழக்குரைஞராக செயலாற்றியிருத்தல் வேண்டும்.
- குடியரசுத் தலைவர் பார்வையில் சிறப்பு மிக்க சட்ட வல்லுநராய் இருத்தல் வேண்டும்.

தற்காலிக அடிப்படையில் (ad-hoc basis) உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்க அரசியலமைப்புச் சட்டம் வழிவகை செய்கிறது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உட்பட இதர நீதிபதிகள் 65 வயது வரை பதவியில் நீடிப்பர்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் பதவிக்காலம் முடிவதற்கு முன்பாக குடியரசுத் தலைவரிடம் பதவி விலகல் கடிதத்தை அளித்து பதவி விலகலாம் அல்லது பெருங்குற்றத்தின் மூலம் உண்டான கண்டனத் தீர்மானத்தின் மூலம் உண்டான கண்டனத் தீர்மானத்தின் மூலம் உச்ச நீதிமன்ற நீதிபதிகளைப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரத்தினை நாடாளுமன்றம் பெற்றுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் நிரந்தர தலைமையிடம் புதுதில்லியில் உள்ளது. எனினும் இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவு பெற்று இந்தியத் தலைமை நீதிபதியின் முடிவின்படி வேறு எந்த மாநிலத்திலும் அல்லது எந்த ஒரு இடத்திலும் இந்நீதிமன்ற அமர்வு அமையலாம்.

**உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்களும், பணிகளும்**

உச்சநீதிமன்றம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ஆகும். கீழ்க்கண்டவைகள் உச்சநீதிமன்றத்தின் செயல்பாடுகளாகும்.

**(அ) தனக்கேயுரிய நீதி வரையறை**

உச்ச நீதிமன்றத்திற்கு நேரடியாக வரும் வழக்குகள் தனக்கேயுரிய நீதிவரையறைக்குட்பட்டவையாகும். அவைகள்

1. இந்திய அரசிற்கும் ஒரு மாநிலம் அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்கள்.
2. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கிடையிலான சிக்கல்கள்
3. அடிப்படை உரிமைகளை நடைமுறைபடுத்துவது தொடர்பாக எழும் சிக்கல்கள் ஆகியன உச்ச நீதிமன்றத்தின் தனக்கேயுரிய நீதி வரையறைக்குட்பட்டதாகும்.

அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்திட கீழ்க்கண்ட நீதிப்பேராணைகளை உச்சநீதிமன்றம் வழங்குகிறது. அவைகள்

1. ஆட்கொணர் நீதிப்பேராணை
2. கீழ் நீதிமன்றங்களுக்கு விடுக்கும் கட்டளை நீதிப்பேராணை

3. வழக்கு விசாரணைத் தடை நீதிப்பேராணை
4. தடைமாற்று நீதிப்பேராணை
5. உரிமை வினவு நீதிப்பேராணை

**(ஆ) மேல்முறையீட்டு நீதிவரையறை**

உச்ச நீதிமன்றமே நாட்டின் இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாகும். மாநில உயர் நீதிமன்றங்கள் உரிமையியல், குற்றவியல் (Civil and Criminal) அரசியலமைப்பு வழக்குகள் மீதான தீர்ப்புகளுக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்குகளை உச்ச நீதிமன்றம் விசாரிக்கின்றது. அப்படிப்பட்ட வழக்குகளைத் தீர்க்க அரசியலமைப்புச் சட்டப்படி மேலும் சட்டவிளக்கம் தேவையென உயர் நீதிமன்றம் சான்றிதழ் அளித்தால் மட்டுமே அவ்வழக்குகளை உச்ச நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்ல முடியும்.

**(இ) ஆலோசனை நீதிவரையறை**

பொது முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு சட்டம் அல்லது உண்மை மீதான உச்ச நீதிமன்றத்தின் கருத்தினைப் பெற அரசியலமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவருக்கு அதிகாரத்தினை வழங்குகிறது.

**(ஈ) இதர நீதிவரையறை**

உச்ச நீதிமன்றம் கீழ்க்காணும் இதர அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

- உச்சநீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை இந்தியாவின் அனைத்தப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.
- குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று நீதிமன்றத்தின் பொதுவான செயல்முறைகள், வழிமுறைகளை ஒழுங்குபடுத்தும் விதிகளை உருவாக்க உச்சநீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**(உ) நீதிப்புனராய்வு**

ஒரு சட்த்தினை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முராணானது என அறிவிக்கும் அதிகாரம் உச்சநீதிமன்றத்திடம் உள்ளது இது நீதிப்புனராய்வு (நீதிமன்ற மறுஆய்வு அதிகாரம்) எனப்படும். பின்வரும் தனிப்பட நீதிமன்ற மறுஆய்வு அதிகாரங்களை உச்சநீதிமன்றம் பெற்றுள்ளது. அவை

1. மத்திய, மாநிலங்களுக்கிடையிலான பிரச்சனைகள்.
2. அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்படும் சந்தேகங்கள், கருத்து வேற்றுமைகளை விளக்கி தெளிவுபடுத்ததல்.
3. அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்.
4. மாநில சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்கள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என அறிவிக்கும் அதிகாரம் போன்றவைகளை உச்ச நீதிமன்றம் பெற்றுள்ளது.

## அலகு – 3 மாநில அரசு

### அறிமுகம்

இந்திய அரசியலமைப்பு மத்திய, மாநில அரசுகளுக்கான தனித்தனி நிர்வாக முறைகளைக் கொண்ட கூட்டாட்சி அரசாங்கத்தை வழங்குகிறது. இக்கூட்டாட்சியில், தேசியத் தலைநகரான டெல்லி, 6 யூனியன் பிரதேசங்கள் மற்றும் 29 மாநிலங்கள் உள்ளன. மத்திய-மாநிவ அரசுகளுக்கான ஒரு சீரான நிர்வாக அமைப்பினை ஏற்படுத்த அரசியலமைப்பு வழிவகுக்கிறது. அரசியலமைப்பின் பகுதி VI இல் 152 முதல் 237 வரையிலான சட்டப்பிரிவுகள் அனைத்து மாநிலங்களுக்கான சீரான அமைப்பினைப் பற்றி குறிப்பிடுகிறது. ஆனால் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 370 ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு மட்டும் சிறப்பு அந்தஸ்து வழங்கியுள்ளது. மத்திய அரசைப் போன்று மாநில அரசுகளும் நிர்வாகத்துறை, சட்டமன்றம், நீதித்துறை என்ற மூன்று பிரிவுகளின் கீழ் இயங்குகின்றன.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும், ஜம்மு-காஷ்மீர் அரசியலமைப்பு 1957-ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் நாள் ஏற்கப்பட்டு, 1957-ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. இந்திய அரசியலமைப்பின் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் மற்றும் அடிப்படை உரிமைகள் ஜம்மு – காஷ்மீர் மாநிலத்திற்குப் பொருந்தாது. இந்திய அரசியலமைப்பு நீக்கிய அடிப்படை உரிமைகளில் ஒன்றான சொத்துரிமை ஜம்மு – காஷ்மீரில் இன்றும் நடைமுறையில் உள்ளது.

### நிர்வாகத் துறை

### ஆளுநர்

மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர் ஆளுநர் ஆவார். மாநில ஆளுநரின் பெயரில் மாநில நிர்வாகம் செயல்படுகிறது. பொதுவாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநர் இருக்கிறார். ஆனால் நிர்வாகச் சூழலின் காரணமாக ஒரு மாநிலத்தின் ஆளுநர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் ஆளுநராகவும் நியமிக்கப்படலாம்.

ஆரசியலமைப்பு சட்டப்பிரிவு 154 மாநில ஆளுநரின் நிர்வாக அதிகாரத்தைப் பற்றி கூறுகிறது. சட்டப்பிரிவு 154(1) –ன் படி மாநில ஆளுநரின் நிர்வாக அதிகாரம் ஆளுநரிடம் இருக்க வேண்டும். இந்த அதிகாரம் அவரால் நேரடியாகவோ அல்லது அவரின் கீழுள்ள அலுவலர்களாலோ, அரசியலமைப்பின்படி செயல்படுத்தப்பட வேண்டும்.

### ஆளுநர் நியமனம்

மாநில ஆளுநர், குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார். வழக்கமாக, அவரது பதவிக்காலம் 5 ஆண்டுகள். ஆனால் குடியரசுத் தலைவரின் விருப்பத்தின் பேரில் அவரது பதவிக்காலம் நீட்டிக்கப்படலாம். பொதுவாக, ஒருவர் தனது சொந்த மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்படமாட்டார். மேலும், அவர் குடியரசுத் தலைவரால் ஒரு மாநிலத்திலிருந்து வேறொரு மாநிலத்திற்கு மாற்றப்படலாம். குடியரசுத் தலைவருக்குத் தனது பணித்துறப்பு கடிதத்தைக் கொடுப்பதன் மூலம் ஆளுநர் எந்நேரத்திலும் பதவி விலகலாம்.

மாநில சட்டமன்றமோ அல்லது உயர் நீதிமன்றமோ ஆளுநரின் பணி நீக்கத்தில் பங்கு பெற முடியாது. ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் ஆளுநராக நியமிக்கப்படலாம். ஓருவரை ஒரு மாநில ஆளுநராக நியமனம் செய்யப்படுவதில் இரண்டு மரபுகள் பின்பற்றப்படுகின்றன. அவை:

ஆளுநராக நியமிக்கப்படும் ஒருவர் தான் எந்த மாநிலம்திற்கு ஆளுநராக நியமிக்கப்ட உள்ளரோ அந்த மாநிலத்தில் வசிப்பவராக இருத்தல் கூடாது. மேலும் ஆளுநராக நியமிக்கப்படும் ஒருவரை மத்திய அரசு, மாநில அரசுடன் கலந்தாலோசித்து அவரது பெயரை முன்மொழிய வேண்டும்.

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 158 (3A) –ன் படி ஒருவர், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் ஆளுநராக நியமிக்கப்படும் பொழுது, குடியரசுத் தலைவர் ஓர் ஆணையின் மூலம், ஆளுநரின் ஊதியம் மற்றும் படிகளை சம்பந்தப்பட்ட மாநிலங்கள் பகிர்ந்து வழங்க தீர்மானிக்கலாம்.

மத்திய – மாநில அரசுகளின் உறவுகளைக் குறித்து ஆராய அமைக்கப்பட்ட சர்க்காரியா குழு ஆளுநர் நியமனம் குறித்த பல ஆலோசனைகளை வழங்கியுள்ளது. அவை:

ை. மாநில சட்டமன்ற குழுவால் தயாரிக்கப்பட்ட பட்டியலிலிருந்து அல்லது

ைை. முதலமைச்சருடன் ஒப்புதலுடன் மாநில அரசால் தயாரிக்கப்படும் பட்டியலிலிருந்து அல்லது

ைைை. முதலமைச்சருடன் நடத்தப்படும் கலந்துரையாடல் ஆகியவற்றின் மூலம், ஆளுநர் நியமனம் நடைபெறும்.

**ஆளுநராவதற்கான தகுதிகள்**

இந்திய அரசியலமைப்பின் 157 மற்றும் 158 வது சட்டப்பிரிவுகள் ஆளுநர் பதவிக்குத் தேவையான பின்வரும் தகுதிகளைக் கூறுகின்றன.

- அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
- நாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினராகவோ இருத்தல் கூடாது. அவ்வாறு இருப்பின் அவர் ஆளுநராக பதவியேற்கும் பொழுது தாமாகவே அப்பதவி காலியாகிவிடும்.
- மேலும் அவர், இலாபம் தரும் எந்த தொழிலிலும் ஈடுபடக்கூடாது.

**ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

ஆளுநர், மாநில நிர்வாகத்தின் தலைவராக செயல்படுவது மட்டுமல்லாமல் ஏராளமான அதிகாரங்கள் பெற்றவராகவும் திகழ்கிறார். சட்டப்பிரிவு 163-ன் படி, முதலமைச்சரின் தலைமையிலான அமைச்சரவையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்படி ஆளுநர் குறிப்பிட்ட செயல்படுத்துகிறார். மாநில நிர்வாகத் தலைவராக ஆளுநர் பின்வரும் அதிகாரங்களைப் பெற்று பணிகளைச் செய்கிறார்.

**நிர்வாக அதிகாரங்கள்**

- இந்திய அரசியலமைப்பு, மாநில நிர்வாகத்தின் அனைத்து அதிகாரங்களையும் ஆளுநருக்கு வழங்குகிறது. இவற்றை ஆளுநர் நேரடியாகவோ அல்லது அவரின் கீழுள்ள அலுவலர்கள் மூலமோ செயல்படுத்தலாம். ஆளுநரே மாநிலத்தின் அரசியலமைப்புத் தலைவர். அவரது பெயராலே அனைத்து நிர்வாகமும் நடைபெறுகின்றன. ஆளுநரின் நிர்வாக அதிகாரங்கள் மற்றும் பணிகளாவன:
- மாநில சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெறும் கட்சியின் தலைவரை முதலமைச்சராக ஆளுநர் நியமனம் செய்கிறார்.

- முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் அமைச்சரவையின் மற்ற உறுப்பினர்களை நியமனம் செய்கிறார்.
- மாநிலத்தின் அரசு வழக்கறிஞரை நியமனம் செய்து அவரது ஊதியத்தையும் நிர்ணயம் செய்கிறார். ஆளுநர் விரும்பும் வரை அரசு வழக்குரைஞர் அவரது பதவியைத் தொடரலாம்.
- அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறார். இருப்பினும் ஆளுநரால் இவர்களை பணிநீக்கம் செய்ய முடியாது. குடியரசுத் தலைவரால் மட்டுமே பணி நீக்கம் செய்ய முடியும்.
- மாநில தலைமை தேர்தல் ஆணையரை நியமனம் செய்து, அவரது பணிக்காலம், பணியின் தன்மையைத் தீர்மானிக்கிறார். இருந்த போதிலும்ஈ உயர் நீதிமன்ற நீதிபதியைப் பதவி நீக்கம் செய்யும் அதே முறையைப் பின்பற்றியே மாநிலத் தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்கம் செய்யலாம்.
- ஆளுநர், மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தராக செயல்படுவதுடன், துணை வேந்தர்களையும் நியமனம் செய்கிறார்.
- குடியரசுத் தலைவரின் அவசரநிலை பிரகடனம் செய்யப்படும் பொழுது, குடியரசுத் தலைவரின் பெயரில் இவரே மாநிலத்தை நேரடியாக ஆட்சி செய்கிறார்.

**சட்டமன்ற அதிகாரங்கள்**

ஆளுநர் மாநில சட்டமன்றத்தின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாவார். ஆனால், அவர் சட்டமன்றத்தின் உறுப்பினராக இல்லை. ஆளுநர் பின்வரும் சட்டமன்ற அதிகாரங்களைப் பெற்றுள்ளார்.

- ஆளுநர் சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும் ஒத்திவைக்கவும் சட்டமன்றத்தைக் கலைக்கவும் உரிமைப் பெற்றுள்ளார்.
- பொதுத் தேர்தல் முடிந்து முதலமைச்சர் மற்றும் மற்ற அமைச்சர்களின் நியமனத்திற்குப் பிறகு நடைபெறும் சட்டமன்றக்கூட்டத்தின் முதல் கூட்டத்தில் உரை நிகழ்த்துகிறார்.
- நிலுவையிலுள்ள மசோதா குறித்து சட்டமன்ற அவைகளுக்கு ஆளுநர் செய்தி அனுப்பலாம்.
- சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் பணியிடம் காலியாக இருக்கும்பொழுது சட்டமன்றத்தை தலைமை ஏற்று நடத்த எந்த சட்டமன்ற உறுப்பினரை வேண்டுமானாலும் ஆளுநர் நியமனம் செய்யலாம்.
- ஆங்கிலோ - இந்தியன் வகுப்பினரிலிருந்து ஓர் உறுப்பினரை மாநில சட்டமன்றத்திற்கு நியமனம் செய்யலாம்.
- கலை, இலக்கியம், அறிவியல், கூட்டுறவு இயக்கம் மற்றும் சமூக சேவை போன்றவற்றில் சிறந்து விளங்கும் நபர்களைத் தேர்ந்தெடுத்து மாநில சட்டமேலவையின் 6 இல் 1 பங்கு இடங்களுக்கு அவர்களை நியமனம் செய்கிறார்.
- சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்து தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசித்து முடிவு செய்கிறார்.
- மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு மசோதாவும் ஆளுநர் கையொப்பமிட்ட பின்னர் மட்டுமே சட்டமாகும். ஆனால், சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா ஆளுநர் ஒப்புதலுக்காக அனுப்பப்படும் பொழுது ஆளுநர் கையொப்பமிடலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம் அல்லது மீண்டும் மறு பரிசீலனைக்காக சட்டமன்றத்திற்கே திருப்பி அனுப்பலாம்.

- மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட எந்த ஒரு மசோதாவும் மாநில உயர் நீதிமன்றத்தின் அதிகாரத்திற்குத் தீங்கு விளைவிக்கும் நிலையில் இருக்குமாயின், அதனைக் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக நிறுத்திவைக்கலாம்.
- அரசியலமைப்பு சட்டப்பிரிவு 213-ன் கீழ் ஆளுநர் மாநில சட்டமன்ற நடைபெறாத பொழுது அவசர சட்டத்தைப் பிறப்பிக்கலாம். ஆனால் அந்த அவசரச்சட்டம், 6 மாதத்திற்குள் மாநில சட்டமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அவசரச்சட்டத்தை எந்நேரத்திலும் ஆளுநர் திரும்பப் பெறலாம்.
- மாநிலத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை, அரசுப்பணியாளர் தேர்வாணையக் குழுவின் அறிக்கை, அரசின் தணிக்கைக்குழு அறிக்கைகளை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கின்றார்.

**நிதி அதிகாரங்கள்**

- மாநிலத்தின் ஆண்டு வரவு செலவு திட்டத்தினை தயார் செய்து சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யும் கடமையை ஆளுநருக்கு அரசியலமைப்பு வழங்குகிறது. தேவைப்பட்டால், துணை வரவு செலவு திட்டத்தையும் அறிமுகம் செய்யலாம்.
- ஆண்டு நிதிநிலை அறிக்கையை (வரவு செலவு திட்டம்) சட்டமன்றத்தில் அறிமுகம் செய்ய காரணமாகிறார்.
- மாநில சட்டமன்றத்தில் மாநில நிதியமைச்சர் மூலம் துணை வரவு செலவு திட்டத்தை தேவைப்பட்டால் சமர்ப்பிக்கின்றார்.
- ஆளுநரின் முன் அனுமதியுடன்தான் பண மசோதாவை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியும்.
- ஆளுநரின் பரிந்துரையின்றி நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது.
- அரசின் எதிர்பாராச் செலவினங்களுக்காக ஆளுநர் அவசர நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய முடியும்.
- பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளின் நிதிநிலையை ஆய்வு செய்ய ஒவ்வொரு ஐந்தாண்டிற்கு ஒருமுறை நிதி ஆணையம் ஒன்றை அமைக்கிறார்.

**நீதித்துறை அதிகாரங்கள்**

- மாநில அரசின் தலைமை வழக்குரைஞரை நியமனம் செய்கிறார்.
- கீழ் நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமனம் செய்கிறார்.
- உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையின் பேரில் மாவட்ட நீதிபதிகளின் நியமனம் மற்றும் பதவி உயர்வு போன்ற பணிகளை மேற்கொள்கிறார்.
- ஆளுநரின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியை நியமனம் செய்கிறார்.
- குற்றவாளிகளின் கருணை மனு அடிப்படையில் குற்றவாளிகளை மன்னிக்கலாம் அல்லது குற்றவாளிகளின் தண்டனையைக் குறைக்கலாம் அல்லது குற்றவாளிகளின் தண்டனையைக் குறைக்கலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம்.

**விருப்புரிமை அதிகாரங்கள்**

- குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக ஆளுநர் ஒரு மசோதவை நிறுத்தி வைக்க முடியும்.
- மாநிலத்தில், குடியரசுத் தலைவரின் ஆட்சிக்கு ஆளுநர் பரிந்துரை செய்கிறார்.

- மாநில நிர்வாகம் மற்றும் சட்டமன்ற செயல்பாடுகள் தொடர்பானச் செய்திகளை முதலமைச்சரிடமிருந்து ஆளுநர் பெறுகிறார்.
- மாநில சட்டமன்ற பொதுத் தேர்தலில் எந்த கட்சியும் அறுதி பெரும்பான்மையைப் பெறாத போது, ஆளுநர் எந்தக் கட்சி தலைவரையும் ஆட்சி அமைக்க அழைக்கலாம்.
- சட்டமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பின் பொழுது பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் போனால் அமைச்சரவையை ஆளுநர் கலைக்க முடியும்.
- அமைச்சரவை பெரும்பான்மையை இழந்தால், சட்டமன்றத்தை ஆளுநர் கலைக்க முடியும்.

**அவசரகால அதிகாரங்கள்**

மாநில அரசு அரசியலமைப்பு விதிகளுக்கேற்ப செயல்படவில்லை என்று ஆளுநர் உறுதியாக நம்பினால் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 356-ன் கீழ் மாநில அரசை கலைக்க குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யலாம். மாநில அரசு கலைக்கப்பட்டவுடன், மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைக்கு வரும். ஆளுநர் குடியரசுத் தலைவரின் பிரதிநிதியாக மாநிலத்தை நிர்வாகம் செய்கிறார்.

**ஆளுநரின் சிறப்புரிமைகள்**

- சட்டப்பிரிவு 361(1) ஆளுநருக்கான கழ்க்காணும் சிறப்பரிமைகளை வழங்குகின்றது. (அ) தனது பணிகள் மற்றும் அதிகாரத்தைச் செய்ய வேண்டும் என எண்ணுவதிலும் செயல்படுத்துவதிலும் எந்த நீதிமன்றத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.
- ஆளுநரின் பதவிக்காலத்தில் அவர் மீது குற்றவியல் நடவடிக்கைகளை அவருக்கு எதிராக எந்த நீதிமன்றத்திலும் தொடர முடியாது.
- ஆளுநரின் பதவி காலத்தில் அவர் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தவோ அல்லது அவரை கைது செய்யவோ எந்த நீதிமன்றமும் உத்தரவு பிறப்பிக்க முடியாது.

**முதலமைச்சர்**

அரசியலமைப்பால் அமைக்கப்பட்ட நாடாளுமன்ற முறையில் அமைந்த அரசில், ஆளுநர், மாநிலத்தின் பெயரளவு நிர்வாகியாகவும் முதலமைச்சர் உண்மையான நிர்வாகியாகவும் உள்ளனர். வேறு வகையில் கூற வேண்டுமாயின் ஆளுநர் மாநிலத்தின் அரசின் தலைவர் முதலமைச்சர் அரசாங்கத்தின் தலைவர் ஆவார்.

**முதலமைச்சரின் நியமனம்**

முதலமைச்சர் மாநில ஆளுநரால் நியமனம் செய்யப்படுகிறார். சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் அல்லது பெரும்பான்மை பெற்ற கூட்டணிக் கட்சியின் தலைவர் முதலமைச்சராக நியமிக்கப்படுகிறார். ஒருவேளை எந்த கட்சியும் முழுமையான பெரும்பான்மை பெறாத பொழுது அல்லது பெரும்பான்மை பெற்றவர்கள் தங்களது தலைவரைத் தேர்ந்தெடுக்க தவறும் பொழுது ஆளுநர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அடுத்ததாக பெரும்பான்மை பெற்ற பெரிய கட்சியை அமைச்சரவை அமைக்க அழைப்பார். அவ்வாறு அழைக்கப்படும் தலைவர், ஆளுநரால் வழங்கப்படும் கால அவகாசத்திற்குள் சட்டமன்றத்தில் அவரது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்.

முதலமைச்சரின் பதவிக்காலம் நிர்ணயிக்கப்பட்ட பெரும்பான்மை ஆதரவு எவ்வளவு காலத்திற்கு தொர்கிறதோ அதுவரை அவர் முதலமைச்சராக நீடிக்கலாம். சட்டமன்றத்தில் எப்பொழுது

அவர் பெரும்பான்மையை இழக்கிறாரோ அப்பொழுது தனது பதவியை இராஜினாமா செய்கிறார். சட்டமன்றத்தில் மற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் போலவே முதலமைச்சரின் பதவிக்காலம் போலவே முதலமைச்சரின் பதவிக்காலமும் 5 ஆண்டுகள் ஆகும்.

**1947 –லிருந்து பதவி வகித்த தமிழக முதலமைச்சர்கள்**

| | |
|---|---|
| திரு. O.P. இராமசாமி | - 1947 – 1949 |
| திரு. P.S. குமாரசாமி ராஜா | - 1949 – 1952 |
| திரு. C. இராஜகோபாலாச்சாரி | - 1952 – 1954 |
| திரு. K. காமராஜர் | - 1954 – 1963 |
| திரு. M. பக்தவச்சலம் | - 1963 – 1967 |
| திரு. C.N. அண்ணாதுரை | - 1967 – 1969 |
| திரு. M. கருணாநிதி | - 1969 – 1976 |
| திரு. M.G. இராமச்சந்திரன் | - 1977 – 1987 |
| திருமதி ஜானகி இராமச்சந்திரன் | - ஜனவரி 1988 |
| திரு. M. கருணாநிதி | - 1989 – 1991 |
| செல்வி J. ஜெயலலிதா | - 1991 – 1996 |
| திரு. M. கருணாநிதி | - 1996 – 2001 |
| செல்வி J. ஜெயலலிதா | - 2001 |
| திரு. O. பன்னீர்செல்வம் | - 2001 – 2002 |
| செல்வி J. ஜெயலலிதா | - 2002 – 2006 |
| திரு. M. கருணாநிதி | - 2006 – 2011 |
| செல்வி J. ஜெயலலிதா | - 2011 – 2014 |
| திரு. O. பன்னீர்செல்வம் | - 2014 – 2015 |
| செல்வி J. ஜெயலலிதா | - 2015 – 2016 |
| திரு. O. பன்னீர்செல்வம் | - 2016 – 2017 |
| திரு. எடப்பாடி K. பழனிசாமி | - 2017 முதல் |

**முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

மாநில நிர்வாகத்தின் உண்மையான தலைவர் முதலமைச்சர் ஆவார். முதலமைச்சரின் அதகாரங்கள் மற்றும் பணிகளாவன.

- அமைச்சரவை தொடர்பானவை
- ஆளுநர் தொடர்பானவை
- சட்டமன்றம் தொடர்பானவை
- இதர பணிகள் மற்றும் அதிகாரங்கள்

**அமைச்சரவை தொடர்பானவை**

அமைச்சரவையின் தலைவரான முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளாவன்.

- முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கிறார்.

- அமைச்சர்களுக்குத் துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- தனது அமைச்சரவையை மாற்றியமைக்கிறார்.
- ஓர் அமைச்சருடன் கருத்து வேறுபாடுகள் எழும்பொழுது, இராஜினாமான செய்யும்படி கேட்கிறார் அல்லது பதவி நீக்கம் செய்ய ஆளுநருக்குப் பரிந்துரை செய்கிறார்.
- அமைச்சரவைக் கூட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுக்கிறார்.
- அமைச்சரவையின் குழப்பத்தைத் தனது இராஜினாமா மூலம் முடித்து வைக்கிறார்.
- அமைச்சர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி, வழிநடத்தி, இயக்கி, அவர்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.

**ஆளுநர் தொடர்பானவை**

ஆளுநருக்கும் அமைச்சரவைக்குமிடையே செய்தித்தொடர்புகளில், முதலமைச்சர் முதன்மையாக விளங்குகிறார். கீழ்க்காணும் அலுவலர்களின் நியமனங்கள் தொடர்பாக ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறார்.

- மாநில அரசு வழக்குரைஞர்
- மாநில தேர்தல் ஆணையர்
- அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
- மாநில திட்டக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
- மாநில நிதிக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

**சட்டமன்றம் தொடர்பானவை**

- சட்டமன்ற கூட்டத்தொடரை ஆரம்பிக்கவும் ஒத்திவைக்கவும் ஆளுநருக்கு முதலமைச்சர் ஆலோசனை வழங்குகிறார்.
- சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை அறிவிக்கிறார்.
- சட்டமன்றத்தில் மசோதாக்களை அறிமுகப்படுத்துகிறார்.
- எந்நேரத்திலும் சட்டமன்றத்தைக் கலைக்க ஆளுநருக்குப் பரிந்துரை செய்கிறார்.

**இதர அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

- ஆளுங்கட்சியின் தலைவராக முதலமைச்சர் கட்சியைக் கட்டுப்படுத்தி அதன் ஒழுக்கத்தை மேம்படுத்துகிறார்.
- மாநிலத்தின் தலைவராகப் பல்வேறுபட்ட மக்களின் தேவைகளை உற்று நோக்குகிறார்.
- மாநிலத்தின் அரசியல் தலைமையாக பல்வேறு பணிகளைக் கட்டுப்படுத்தி, மேற்பார்வையிட்டு, பல்வேறு துறை செயலர்களின் பணிகளை ஒருங்கிணைக்கிறார்.
- மாநில அரசு சுமூகமாக இயங்க மத்திய அரசுடன் இணக்கமான உறவை வைத்துக்கொள்கிறார்.

**அமைச்சரவை**

அமைச்சரவை மாநில சட்டமன்றத்திற்குக் கூட்டாகப் பொறுப்பானது. அமைச்சரவைக்குழுவின் அமைச்சர்கள் அனைவரும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்

அல்லாத ஒருவர் அமைச்சராக பதவியேற்றால் 6 மாத காலத்திற்குள் அவர் சட்டமன்ற உறுப்பினராக வேண்டும். முதலமைச்சரின் தலைமையின் கீழ் அமைச்சர்கள் அனைவரும் ஒரு குழுவாக செயல்பட வேண்டும். முதலமைச்சர் எவ்வளவு காலம் பதவியில் நீடிக்கிறாரோ அதுவரை அமைச்சரவை தொடரும். சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டால் மாநில அமைச்சரவை இராஜினாமா செய்ய வேண்டும்.

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 163 ஆளுநருக்கு ஆலோசனைகள் வழங்க அமைச்சரவையை உருவாக்க வழிவகை செய்திருக்கிறது. சட்டப்பிரிவு 163(1)-ன் படி, முதலமைச்சரை தலைவராகக் கொண்ட அமைச்சரவை ஆளுநருக்கு தேவைப்டும் பொழுது உதவி செய்யவும் ஆலோசனை வழங்கவும் வேண்டும்.

**அமைச்சர்களுடனான மற்ற விதிகள்**

சட்டப்பிரிவு 164 (1), ஆளுநரால் முதலமைச்சர் நியமிக்கப்படுவதைக் கூறுகிறது. மற்றும் முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் மற்ற அமைச்சர்களையும் நியமிக்க வகை செய்கிறது.

ஆளுநர் விரும்பு வரை முதலமைச்சர் பதவியில் தொடரலாம். முதலமைச்சர் உட்பட மொத்த அமைச்சர்களின் எண்ணிக்மக மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 15 விழுக்காட்டை தாண்டக்கூடாது என சட்டப்பிரிவு 164 (1A) கூறுகிறது.

**அமைச்சரவையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

- மாநில அரசிற்கான கொள்கைகளை உருவாக்கி அவற்றை திறம்பட நடைமுறைப்படுத்துகிறது.
- சட்டமன்ற நிகழ்ச்சிகளை முடிவு செய்து எல்லா முக்கியமான மசோதாக்களுக்கும் ஆதரவளிக்கிறது.
- நிதிக்கொள்கையைக் கட்டுப்படுத்துவதுடன் மாநில பொது நலனுக்கான வரிக்கொள்கையை முடிவு செய்கிறது.
- சமூக, பொருளாதார மாற்றங்களுக்கான நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களை உருவாக்கி அதன்படி மாநில அரசின் தலைமையில் பல்வேறு தொடர்புடைய துறைகள் உருவாக்கப்படுகின்றன.
- முக்கியமான துறைத் தலைவர்களின் நியமனங்களைச் செய்கிறது.
- மற்ற மாநிலங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி மேற்கொள்கிறது.
- கீழ் நீதிமன்ற நீதிபதிகளின் நியமனங்களில் ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறது.
- மாநிலத்திற்கான செலவுகளைச் சமாளிக்க திட்ட அறிக்கையை உருவாக்குகிறது.
- ஒரு மசோதா சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் போது அது சாதாரண மசோதாவா அல்லது நிதி மசோதாவா என்று தீர்மானிக்கிறது.
- அமைச்சரவையின் ஒவ்வொரு அமைச்சரின் பணிகளைக் கட்டுப்படுத்தி, கண்காணித்து ஒருங்கிணைக்கின்றது.
- ஆண்டு வரவு செலவு திட்டம் (Budget) அமைச்சரவையால் இறுதி செய்யப்படுகிறது.

## மாநில சட்டமன்றம்

இந்திய அரசியலமைப்பு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு சட்டமன்றம் ஏற்பட வகை செய்கிறது. பெரும்பாலான மாநிலங்கள் ஓரவையைக் கொண்ட சட்டமன்றங்களை மட்டும் பெற்றுள்ளன. சில மாநிலங்கள் ஈரவை சட்டமன்றங்களைக் கொண்டுள்ளன. (எடுத்துக்காட்டு: பீகார், கர்நாடகா, மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா மற்றும் ஜம்மு – காஷ்மீர்). கீழவையானது மாநில மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டது. மேலவையானது ஆசிரியர்கள், பட்டதாரிகள், மற்றும் உள்ளாட்சி உறுப்பினர்கள் ஆகியோர்களைப் பிரதிநிதிகளாகக் கொண்டது.

தமிழகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் படி (234 உறுப்பினர்கள்) அமைச்சர்களின் எண்ணிக்கை 36 வரை இருக்கலாம். அதாவது 234-ல் 15 விழுக்காடு.

## சுட்டமன்றப் பேரவை (கீழவை)

மாநில சட்டமன்றம் பிரபலமான ஓர் அவை ஆகும். இதுவே மாநில அதிகாரத்தின் உண்மையான அதிகார மையமாகும். இது வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது. சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, மக்கள் தொகையைப் பொறுத்து மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் 500க்கு மிகாமலும் குறைந்த பட்சம் 60க்கு குறையாமலும் இருக்க வேண்டும். சட்டமன்றத்தின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும். இருப்பினும் 5 ஆண்டுகள் முடியும் முன்னரே சட்டமன்றம் கலைக்கப்படலாம்.

சட்ட மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அம்மாநில சட்டமன்ற கீழவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 3-ல் 1-பங்குக்கு மிகாமல் இருக்க வேண்டும். ஆனால் மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 40க்கு குறையாமல் இருக்க வேண்டும் (ஜம்மு-காஷ்மீர் தவிர). நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் காஷ்மீர் சட்ட மேலவையில் 36 உறுப்பினர்களே உள்ளனர். சட்ட மேலவை உறுப்பினர்கள் மாநில சட்டமன்றத்தால் அவ்வப்போது நிறைவேற்றப்படும் சட்டங்கள் மூலம் தங்களது ஊதியம் மற்றும் படிகளைப் பெறுகின்றனர்.

## சட்டமன்றத்தின் அமைப்பு

தமிழக சட்டமன்றம் 235 உறுப்பினர்களைக் கொண்டது. இவர்களில் 234 உறுப்பினர்கள் வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆங்கிலோ - இந்தியன் வகுப்பினரில் ஒருவர் ஆளுநரால் நியமனம் செய்யப்படுகிறார். அட்டவணைப்படுத்தப்பட்டோர் (தாழ்த்தப்பட்டோர்) மற்றும் பழங்குடியினருக்கு சட்டமன்றத் தேர்தலில் தனித் தொகுதிகள் ஒதுக்கப்படுகின்றன.

## அமைச்சரவை மற்றும் அமைச்சரவைக் குழுக்கள்

அமைச்சரவை (Cabinet) என்ற சிறிய அமைப்பானது அமைச்சரவையின் உட்கரு ஆகும். இது காபினெட் அமைச்சர்களை மட்டும் உள்ளடக்கியது. இதுவே மாநில அரசின் உண்மையான அதிகார மையமாக விளங்குகிறது.

அமைச்சரவை குழுக்கள் எனப்படும் வெவ்வேறு குழுக்கள் மூலம் காபினெட் செயலாற்றுகிறது. அவற்றில் இரண்டு வகைகள் உள்ளன. அவை: ஒன்று நிரந்தரமானது மற்றொன்று தற்காலிகமானது ஆகும்.

**சபாநாயகர்**

சட்டமன்ற உறுப்பினர்களிடையே சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் தேர்நதெடுக்கப்படுகின்றனர். சபாநாயகர் தனது பதவியை இராஜினாமா (பதவி துறப்பு) செய்தால் சட்டமன்ற உறுப்பினராக தொடர முடியாது. சுபாநாயகர் எந்நேரத்திலும் இராஜினாமா (பதவி துறப்பு) செய்யலாம். சட்டமன்றம் ஒரு தீர்மானத்தின் மூலம் 14 நாட்கள் அறிவிப்பு கொடுத்த பிறகு சபாநாயகரைப் பதவி நீக்கம் செய்யும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடக்கும் நேரத்தில் அவைக்கு வந்த பெரும்பாலான உறுப்பினர்கள் வாக்களித்து தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். சட்டமன்றம் கலைக்கப்படும்பொழுது சபாநாயகர் தமது பதவியை இழக்க மாட்டார். மேலும், புதிய சட்ட மன்றத்தின் முதல் கூட்டம் வரை தனது பதவியைத் தொடர்கிறார். சபாநாயகர் இல்லாதபோது அவரது பணியைத் துணை சபாநாயகர் மேற்கொள்கிறார்.

**சட்டமன்ற மேலவை (சட்ட மேலவை)**

சட்ட மேலவை என்பது மாநில சட்டமன்றத்தின் மேலவையாகும். இது ஒரு நிரந்திர அவையாகும். சட்ட மேலவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை அம்மாநில சட்டமன்ற பேரவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் 3-ல் 1-பங்குக்கு மிகாமலும் குறைந்த பட்ச எண்ணிக்கை 40-க்கு குறையாமலும் இருக்க வேண்டுமென அரசியலமைப்பு சட்டப்பிரிவு 171(1) கூறுகிறது.

சட்டமேலவை (விதான் பரிஷத்) இந்திய மாநில சட்டமன்றங்களின் ஓர் அங்கமாக செயல்படுகிறது. இந்தியாவின் 29 மாநிலங்களில் 7 மாநிலங்களில் சட்டமேலவை உள்ளது. ஈரவை சட்டமன்றத்தில் மறைமுகத் தேர்தலால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சட்ட மேலவையில் செயலாற்றுகின்றனர். சட்ட மேலவை ஒரு நிரந்தர அவையாகும். ஏனென்றால், இதனை கலைக்க முடியாது. சட்ட மேலவை உறுப்பினர்களின் பதவி காலம் 6 ஆண்டுகள் ஆகும்.

1986-ல் இயற்றப்பட்ட தமிழ்நாடு சட்ட மேலவை (நீக்கம்) மசோதா மூலம் தமிழ்நாட்டில் சட்ட மேலவை நீக்கப்பட்டது. இச்சட்டம் 1986 நவம்பர் முதல் நாளான்று நடைமுறைக்கு வந்தது.

அதன் ஒவ்வொரு இரண்டாண்டிற்கும் மூன்றில் 1-பங்கு உறுப்பினர்கள் ஓய்வு பெறுவர். ஒருவர் சட்ட மேலவை உறுப்பினராவதற்கு அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும். 30 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். தெளிவான மனநிலை உடையவராக இருத்தல் வேண்டும். பெற்ற கடனைத் திரும்ப செலுத்த முடியாதவராக இருத்தல் கூடாது மற்றும் எந்த மாநிலத்தில் போட்டியிடுகிறாரோ அம்மாநில வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் இடம் பெற்றிருக்க வேண்டும்.

**சட்ட மேலவைக்கான தேர்தல்**

- மூன்றில் 1 பங்கு உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- பன்னிரெண்டில் 1 பங்கு $(1/12)$ உறுப்பினர்கள் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- பன்னிரெண்டில் 1 பங்கு $(1/12)$ உறுப்பினர்கள் பட்டதாரி ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

- மூன்றில் 1 பங்கு (1/3) உறுப்பினர்கள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- ஆறில் 1 பங்கு உறுப்பினர்கள் (1/6) கலை, இலக்கியம், அறிவியல், சமூக சேவை, மற்றும் கூட்டுறவு இயக்கம் இவற்றில் சிறந்து விளங்குபவர்களை ஆளுநர் நேரடியாக நியமனம் செய்கிறார்.

**தலைவர்**

மேலவைத் தலைவர் (Chairman) மேலவை கூட்டத்தைத் தலைமையேற்று நடத்துகிறார். மேலவை உறுப்பினர்களிடையே தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தலைவர் இல்லாதபோது துணைத்தலைவர் கூட்டத்தைத் தலைமையேற்று நடத்துகிறார்.

**சட்டமேலவை உருவாக்கம் அல்லது நீக்கம்**

சட்டமேலவை உருவாக்கம் அல்லது நீக்கம் பற்றி சட்டப்பிரிவு 169 விவரிக்கிறது. இப்பிரிவின் படி, சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்களிவ் மூன்றில் 2 பங்கு (2/3) உறுப்பினர்கள் வாக்களித்து தீர்மானத்தை நிறைவேற்றி சட்டமேலவையை உருவாக்கவோ அல்லது நீக்கவோ நாடாளுமன்றத்தைக் கேட்டுக் கொண்டால் நாடாளுமன்றம் ஒரு சட்டத்தின் மூலம் மேலவையை உருவாக்கும் அல்லது நீக்கும்.

**சட்டமன்றத்தின் செயல்பாடுகள்**

சட்டமன்றத்தின் அதிகாரங்களும் செயல்பாடுகளும் பெரும்பாலும் நாடாளுமன்றத்தைப் பின்பற்றியே உள்ளன.

**சட்டமன்ற அதிகாரங்கள்**

அரசியலமைப்பின்படி மாநிலப் பட்டியலிலுள்ள அனைத்து துறைகள் மீதும் சட்டமன்றம் சட்டத்தை நிறைவேற்றலாம். பொதுப்பட்டியலிலும் சட்டமன்றம் சட்டம் இயற்றலாம். ஆனால் அதே சட்டத்தை மத்திய அரசு இயற்றும்பொழுது மாநில அரசின் சட்டம் செயலற்றதாகி விடும். மத்திய நாடாளுமன்ற நடைமுறையைப் போன்றே மாநில சட்டமன்றத்தின் மசோதாவும் சட்டமாக நிறைவேற்றுகிறது. ஒவ்வொரு மசோதாவும் சட்டமன்றத்தில் மூன்று நிலைகளுக்குப் பிறகே நிறைவேறுகிறது. ஆளுநரின் ஒப்புதலுக்குப் பின்பு அம்மசோதா சட்டமாகிறது.

**நிதி அதிகாரங்கள்**

சட்டமன்றம் மாநிலத்தின் நிதி நிலையைக் கட்டுப்படுத்துகிறது. சட்டமன்றக் கீழவையானது மேலவையைக் காட்டிலும் பண நடவடிக்கைகளில் அதிக அதிகாரத்தைப் பெற்றுள்ளது. பண மசோதா கீழவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். சட்டமன்றக் கீழவையின் அனுமதியின்றி புதிய வரிகளை விதிக்க முடியாது.

**நிர்வாகத் துறையின் மீது கட்டுப்பாடுகள்**

சட்டமன்றம் நிர்வாகத் துறையைக் கட்டுப்படுத்துகிறது. அமைச்சரவையானது சட்டமன்றத்திற்குப் பொறுப்பானது. சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள்

பதிலளிக்க வேண்டும். அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டால் அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவர்.

**பரந்த அதிகாரங்கள்**

சட்டமன்றம் ஈரவைகளைப் பெற்றிருக்கும் பொழுது மேலவையைக் காட்டிலும் சட்டமன்றக் கீழவை அதிக அதிகாரங்களுடன் விளங்குகிறது. சட்டமன்றப் பேரவை மாநில நிதிநிலையை முற்றிலும் கட்டுப்படுத்துகிறது. மேலவை நிதி சார்ந்த நடவடிக்கையில் வாக்களிக்க முடியாது.

**மாநில நீதித்துறை**
**உயர் நீதிமன்றங்கள்**

1862-ல் உயர் நீதிமன்றங்கள் கல்கத்தா, பம்பாய் மற்றும் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டன. காலப்போக்கில் பிரிட்டிஷ் இந்தியாவின் ஒவ்வோர் மாகாணமும் ஓர் உயர் நீதிமன்றத்தைக் கொண்டிருந்தது. 1950-க்குப் பிறகு தோற்றுவிக்கப்பட்ட உயர் நீதிமன்றமாக விளங்கியது. மாநில அளவில் உயர் நீதிமன்றங்களே மிக உயர்ந்த நீதிமன்றங்களாகும். இருப்பினும் உச்ச நீதிமன்றத்தின் வழ்காட்டுதல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் உயர் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

இந்திய அரிசியலமைப்புச் சட்டம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் உயர் நீதிமன்றத்தைத் தோற்றுவிக்க வழிவகுக்கிறது. ஆனால் 1956-ஆம் ஆண்டு ஏழாவது திருத்தச்சட்டம், இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாநிலங்கள் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்களுக்கென்று ஒரு பொதுவான உயர் நீதிமன்றத்தை நிறுவ நாடாளுமன்றத்திற்கு அங்கீகாரம் வழங்கியது.

| |
|---|
| 1862-ஆம் ஆண்டு ஜுன் 26 ஆம் நாளில் விக்டோரியா மகாராணி வழங்கிய காப்புரிமை கடிதத்தின் மூலம் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மாகாணங்களில் உயர் நீதிமன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவற்றில் சென்னை உயர் நீதிமன்ற வளாகம் உலகிலேயே இலண்டனுக்கு அடுத்து இரண்டாவது பெரிய நீதித்துறை வளாகமாகும். |

எடுத்துக்காட்டாக பஞ்சாப், ஹரியானா மற்றும் யூனியன் பிரதேசமான சணடிகர் ஆகிய பகுதிகளுக்குச் சண்டிகரிலுள்ள உயர் நீதிமன்றம் பொது நீதிமன்றமாக உள்ளது. இதேபோன்று கவுகாத்தியிலுள்ள உயர் நீதிமன்றம் ஏழு வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், நாகலாந்து, மணிப்பூர், மிசோரம், மேகாலயா, திரிபுரா மற்றும் அருணாச்சலப்பிரதேசம் போன்றவைகளுக்கு பொது நீதிமன்றமாக உள்ளது. டெல்லி ஒரு மாநிலமாக இல்லாத போதும் தனக்கென்று சொந்தமாக ஓர் உயர் நீதிமன்றத்தைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு நீதிமன்றமும் தலைமை நீதிபதி மற்றும் பல நீதிமன்றமும் தலைமை நீதிபதி மற்றும் பல நீதிபதிகளைக் கொண்டுள்ளது. உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும். உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை குடியரசுத் தலைவரால் தீர்மானிக்கப்படுகிறது. தற்போது இந்தியாவில் 29 மாநிலங்கள் (2019 ஜனவரியில் தோற்றுவிக்கப்பட்டு அமராவதியில் இயங்கும் ஆந்திரப்பிரதேசத்தின் புதிய உயர் நீதிமன்றத்தையும் சேர்த்து) மற்றும் 7 யூனியன் பிரதேசங்களுக்கும் சேர்த்து 25 நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

**நீதிபதிகளின் நியமனம்**

சட்டப்பிரிவு 216-ன் படி ஒவ்வொரு உயர் நீதிமன்றத்திற்கும், தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகளை குடியரசுத் தலைவர் காலத்திற்கேற்றவாறு நியமனம் செய்கிறார்.

**உயர் நீதிமன்ற நீதி வரையறை மற்றும் அதிகாரங்கள்**

தற்போது உயர் நீதிமன்றம் பின்வரும் அதிகாரங்களைக் கெண்டுள்ளது.

**தனக்கேயுரிய நீதிவரையறை**

சென்னை, பாம்பாய், கல்கத்தா நீதிமன்றங்கள் தங்களுக்கான நீதிவரையறை அதிகாரங்களுடன் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களையும் பெற்றுள்ளன. அதே வேளையில் மற்ற நீதிமன்றங்கள் பெரும்பாலும் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களை மட்டுமே பெற்றுள்ளன.

முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள், உயில், திருமணம் சார்ந்த வழக்குகள் மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் ஆகியவற்றை மட்டும் நேரடியாக விசாரிக்கும் அதிகாரங்களை இவை பெற்றுள்ளன. மாகாண நீதிமன்றங்கள தன் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ரூபாய் 2000 மற்றும் அதற்கு மேற்பட்ட தொகை மதிப்புடைய குற்றவியல் வழக்குகளை தனக்கே உரிய நீதிவரையறையை பயன்படுத்தி மாகாண நீதிபதிகள் விசாரிக்க முடியும்.

**மேல்முறையீட்டு நீதிவரையறை**

உயர் நீதிமன்றங்கள் தங்களிடம் வரும் மேல்முறையீட்டு வழக்குகளையும் கீழ் நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல்முறையீட்டு வழக்குகளையும் (உரிமையியல், குற்றவியல்) விசாரிக்கின்றன. நாட்டின் இராணுவ தீர்ப்பாயங்களின் கீழ்வரும் ஆயுதம் சார்ந்த வழக்குகளை விசாரிக்க இவைகளுக்கு அதிகாரம் இல்லை.

**பேராணை அதிகாரங்கள்**

இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 226, அடிப்படை உரிமைகளுக்காக மட்டுமன்றி மற்ற நோக்கங்களுக்காகவும் பேராணைகளை வெளியிடும் அதிகாரங்களை உயர் நீதிமன்றங்களுக்கு வழங்குகிறது.

சட்டப்பிரிவு 32-ன் கீழ் உச்ச நீதிமன்றம் வழங்கும் நீதிப்பேராணைகள், ஆணைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் போன்றே உயர் நீதிமன்றமும் அவைகளை வழங்க அதிகாரம் பெற்றுள்ளது.

இந்த சட்டப்பிரிவுகளின் கீழ் நீதிப்பேராணைகளை வெளியிட உயர் நீதிமன்றங்களுக்கு வழங்கிய அதிகாரம் பெரியதாகும். அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் மட்டுமே உச்ச நீதிமன்றம் இவைகளை வெளியிடுகிறது. உயர் நீதிமன்றம் இது போன்ற வழக்குகளில் மட்டுமின்றி சாதாரண சட்டமீறலுக்கும் நீதிப்பேராணைகளை வெளியிட முடியும்.

**ஆட்கொணர்வு நீதிப் பேராணை (Habeas Corpus)**

தவறாக ஒருவர் காவலில் வைக்கப்பட்டால் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டால் நீதிமன்ற காவலில் வைத்த அதிகாரக்கோ அரசாங்கத்திற்கோ ஆணை வழங்கி காவலில் வைக்கப்பட்டவரை நீதிமன்றத்தின் முன் கொண்டுவரச் செய்வதாகும். குாவலில் வைக்கப்பட்டது. சட்டத்திற்கு புறம்பானது என நிரூபிக்கப்பட்டால் நீதிமன்ற ஆணை மூலம் விடுவிக்கப்படுவார்.

**கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை (Mandamus)** கீழ் நீதிமன்றங்களுக்கு உயர் நீதிமன்றம் இடும் ஆணை (Mandamus) ஆகும். ஓர் அரசு அலுவலர் அல்லது ஒரு கழகம் அல்லது மற்ற நிறுவனங்கள் பணியை விரைந்து நிறைவேற்றுமாறு கீழ் நீதிமன்றங்களுக்கு உயர் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது. இதனால் தடைப்பட்ட பணிகள் விரைந்து முடிக்கப்படுகின்றன.

**தடையுறுத்தும் நீதிப்பேராணை (Prohibition)**

கீழ் நீதிமன்றங்கள் தனது அதிகார எல்லையைத் தாண்டி செயல்படாமல் இது தடுக்கிறது.

**தகுதி வினவும் நீதிப்பேராணை (Quo Warranto)**

பொதுப்பதவிக்கு தவறாக வரும் ஒருவரை இது தடுக்கிறது. இதன் படி ஒருவர் அவர் எந்த அடிப்படையில் குறிப்பிட்டப பதவியை வகிக்கிறார் என்பதை தெளிவுபடுத்திக் கோரும் நீதிப்பேராணை ஆகும்.

**ஆவணக் கேட்பு பேராணை** (Certiorari)

கீழ் நீதிமன்றங்களிடமிருந்து வழக்கு சம்பந்தமான ஆவணங்கள், ஆதாரங்கள், கோப்புகள் ஆகியவற்றை உயர் நீதிமன்றங்கள் கேட்டுபெறும் ஆணை. இதன்மூலம் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் உறுதி செய்யப்படுகின்றன.

**மேற்பார்வை அதிகாரம்**

இராணுவ நீதிமன்றங்களைத் தவிர மற்ற அனைத்து சார்பு நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்களின் பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரத்தை உயர் நீதிமன்றம் பெற்றுள்ளது.

(அ) கீழ் நீதிமன்றங்களில் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை திரும்ப பெறும் அதிகாரம்.
(ஆ) பொதுச் சட்டங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட படிவங்கள் மூலம் பயிற்சி மற்றும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த ஓர் ஆணையை வெளியிடச் செய்தல்.
(இ) பரிந்துரைக்கப்பட்ட முறைகளில் கீழ் நீதிமன்றங்கள் புத்தகங்கள், பதவிகள், கணக்குகளைப் பராமரித்தல்.
(ஈ) ஷெரிப், எழுத்தர்கள், அலுவலர்கள் மற்றும் சட்ட வல்லுநர்கள் ஆகியோருக்கான கட்டணத்தைச் செலுத்துதல் போன்றவை குறித்துத் தீர்மானித்தல்.

**கீழ் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்துதல்**

உயர் நீதிமன்றம் கீழ் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தவும் மேலும் மற்ற அதிகாரங்களையும் பெற்றுள்ளன.

(அ) மாவட்ட நீதிபதிகளின் நியமனம் மற்றும் பதவி உயர்வு குறித்து ஆளுநரால் ஆலோசிக்கப்படுகிறது. மாவட்ட நீதிபதிகளைத் தவிர, மற்ற நீதிப்பணிகளுக்கு நியமனம் செய்வது குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்படுகிறது.
(ஆ) உயர் நீதிமன்ற நீதிபதிகளின் பதவி, நியமனம், பதவி உயர்வு, விடுமுறை, இடமாற்றம் மற்றும் ஒழுங்கு குறித்து விவரிக்கிறது (மாவட்ட நீதிபதிகள் நீங்கலாக).
(இ) சார் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கினை உயர் நீதிமன்றம் விசாரித்து கணிசமான கேள்விகளைக் கேட்டு குறுக்கு விசாரணை செய்வதால் வழக்கு தாமாகவே முடிவுக்கு வரும் அல்லது வழக்கின் தீர்ப்புடன் மீண்டும் சார் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும்.

(ஈ) உச்ச நீதிமன்றம் இந்தியாவின் அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துவது போல் உயர் நீதிமன்றம் சார் நிலை நீதிமன்றங்களை தனது ஆணையினால் கட்டுப்படுத்துகின்றது.

**ஆவணங்களின் பாதுகாப்புப் பெட்டகம்**

உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அனைத்து முடிவுகள் மற்றும் தீர்ப்புகள் அச்சடிக்கப்பட்டு சான்றாதாரமாக பாதுகாக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் எழும் கேள்விகளுக்கு தீர்வாக கடந்த கால தீர்ப்புகள் உதவுகின்றன. இதனால் உயர் நீதிமன்றம் பதிவேடுகளின் நீதிமன்றமான செயல்படுகிறது.

**நீதிப்புனராய்வு அதிகாரம்**

நீதிப்புனராய்வு என்பது மத்திய-மாநில அரசுகள் இயற்றும் சட்டங்கள் அரசியலமைப்புக்கு உட்பட்டதா அல்லது முரண்பட்டதா என்பதை ஆராய உயர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட ஓர் அதிகாரமாகும். நீதிப்புனராய்வு என்ற சொல் இருப்பினும் அரசியலமைப்பில் பயன்படுத்தப்படவில்லை. 226 மற்றும் 227-வது சட்டப்பிரிவுகள் உயர் நீதிமன்றத்தின் நீதிப்புனராய்வு அதிகாரம் பற்றி வெளிப்படையாக கூறுகிறது.

1979 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 42 ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் உயர் நீதிமன்ற நீதிப்புனராய்வு அதிகாரத்தைக் குறைத்தது மற்றும் தடை செய்தது. இருப்பினும் 1977 ஆம் ஆண்டு 43 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் மீண்டும் உயர் நீதிமன்றத்திற்கு நீதிப்புனராய்வு அதிகாரத்தை வழங்கியது.

---

**பாடம்-4**

**இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை**

**அறிமுகம்:**

வெளியுறவுக்கொள்கை என்பது ஒரு நாடு வெளியுறவு விவகாரங்களின் மூலம் தேசிய நலனைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகளைப் பேணவும் வடிவமைக்கப்பட்ட கொள்கை ஆகும். இது நாட்டு மக்களின் சிறந்த நலன்கள், நாட்டின் பரப்பு மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றைப் பாதுகாக்க முயல்கிறது. வெளியுறவுக் கொள்கை என்பது நாட்டின் பாரம்பரிய மதிப்புகள், ஒட்டுமொத்த தேசியக் கொள்கை, எதிர்பார்ப்பு மற்றும் சுய கருத்து ஆகியவற்றின் நேரடி பிரதிபலிப்பாகும். நாடுகள் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. சர்வதேச உறவுகளில் ஒன்றையொன்று சார்ந்திருப்பது தவிர்க்க இயலாததாகும்.

வெளியுறவு அமைச்சகம் எனப்படும் இந்திய வெளிவிவகார அமைச்சரவை இந்திய அரசின் ஒரு அங்கமாக இருந்து நாட்டின் வெளியுறவுகளைப் பொறுப்பேற்று நடத்துகிறது. 1986ஆம் ஆண்டு புது டெல்லியில் நிறுவப்பட்ட இந்திய வெளிநாட்டுச் சேவை பயிற்சி நிறுவனம் இந்திய வெளியுறவுச் சேவை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கிறது.

ஒரு குறிக்கோள் மற்றும் இலக்கு சார்ந்த வெளியுறவுக் கொள்கையானது நாடுகளிடையே மேம்பட்ட உறவுகளை அடையும் திறனையும் விரைவான வளாச்சிக்கான பலத்தையும் கொண்டிருக்கும். வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்கள்: உடன்படிக்கைகள், நிர்வாக ஒப்பந்தங்கள், தூதுவர்களை நியமித்தல், வெளிநாட்டு உதவி, சர்வதேச வணிகம் மற்றும் ஆயுதப் படைகள் ஆகியவைகள் ஆகும்.

**இந்திய அரசியலமைப்புச் சட்டம்-1950**
**சட்டப்பிரிவு-51**

அரசு நெறிமுறையுறுத்தும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள்:
அரசு முயற்சி செய்ய வேண்டியவைகள்:

- சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்
- நாடுகளிடையே நியாயமான மற்றும் கௌரவமான உறவுகளைப் பேணுதல்
- சர்வதேசச் சட்டம் மற்றும் சர்வதேச அமைப்புகளை மதித்தல்

- சர்வதேச பிரச்சனைகளை நடுவர் மன்றம் மூலம் தீர்க்க ஊக்குவித்தல்

**நமது வெளியுறவுக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள்:**
- தேசிய பாதுகாப்பு
- தேசிய வளமை
- நட்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- உலக அமைதி அடைதல் மற்றும் ஒவ்வொரு நாட்டுடனும் அமைதியுடன் சேர்ந்திருத்தல்
- பொருளாதார வளர்ச்சி

நாடுகளுக்கிடையேயான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்க வலிமையைப் பயன்படுத்தாமல் அமைதி வழிமுறைகளைப் பின்பற்றுவதைப் புத்தர் ஆதரித்தார்.

**பஞ்சசீலம்:**

(சமஸ்கிருதச் சொற்களான பாஞ்ச் = ஐந்து, சீலம் = நற்பண்புகள் ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டது)

இந்தியா (பிரதமர் - ஜவகர்லால் நேரு) மற்றும் சீனா (பிரதமர் - சூ-யென்-லாய்) ஆகிய நாடுகளுக்கிடையே அமைதியுடன் இணங்கியிருத்தலுக்கான 5-கொள்கைகள் (பஞ்சசீலம்), 1954 ஏப்ரல் மாதம் 28-ஆம் நாள் கையெழுத்தானது. இரு அரசாங்கங்களும் பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டன.

**பஞ்சசீலம்:**

1. ஒவ்வொரு நாட்டின் எல்லையையும் இறையாண்மையையும் பரஸ்பரம் மதித்தல்.
2. பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை
3. பரஸ்பர உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்
4. பரஸ்பர நலனுக்காக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல்
5. அமைதியாக சேர்ந்திருத்தல்

இந்தக் கொள்கைகள் இந்தோனேசியாவில் 1955ஆம் ஆண்டு நடைபெற்ற ஆப்பிரிக்க-ஆசிய மாநாட்டில் கையெழுத்தான பாண்டுங் பிரகடனத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

**வெளியுறவுக் கொள்கையினை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள்:**
- நாட்டின் புவியியல் அமைப்பு மற்றும் பரப்பளவு
- நாட்டின் வரலாறு, பாரம்பரியம் மற்றும் தத்துவம் அடிப்படையிலானவை
- இயற்கை வளங்கள்
- பொருளாதார வளர்ச்சியின் அவசியம்
- அரசியல் நிலைத்தன்மை மற்றும் அரசாங்க அமைப்பு
- அமைதிக்கான அவசியம், ஆயுதக் குறைப்பு, அணு ஆயுதக் பெருக்கத் தடை
- ராணுவ வலிமை
- சர்வதேச சூழ்நிலை

**1950 மற்றும் 1960-களில் வெளியுறவுக் கொள்கைகள்:**

நாடு சுதந்திரம் அடைந்தது முதல் 1950 மற்றும் 1960-களில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள், நாட்டின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு வழிகாட்டுதலின்படி முக்கியக் குறிக்கோள்களைக் கொண்டதாக அமைந்திருந்தன. நீண்டகாலமாகக் காலனியாதிக்கத்தில் இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் பொருளாதார மேம்பாடு தொடர்பாகக் கடுமையான சூழ்நிலையை எதிர்கொண்டன. எனவே சோவியத் சோஷலிச குடியரசுகளின் ஒன்றியம் (USSR) அல்லது அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) ஆகியவற்றின் ஏதேனம் ஒரு முகாம்களில் சேர்வது அவசியமாயிற்று. நாட்டின் முதல் பிரதமரான நேரு, அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா ஆகிய வல்லரசு நாடுகள் ஆப்பிரிக்கா, ஆசியாவில் புதிதாகத் தோன்றிய நாடுகளில் தங்களது

செல்வாக்கைச் செலுத்துவதை எதிர்த்தார். எனவே பனிப்போர் நிலவும் இரு துருவ உலகமான அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா வல்லரசுகளுடன் சேராமல் அணிசேரா இயக்கம் என்ற வழியைத் தேர்ந்தெடுத்ததோடு சர்வதேச விவகாரங்களில் மூன்றாவது அணியை உருவாக்க முயன்றார். அச்சமயத்தில் இந்திய வெளியுறவுக் கொள்கையின் நோக்கம் உலக ஒத்துழைப்பு, உலக அமைதி, காலனிய ஏகாதிபத்திய முடிவு, இனச் சமத்துவம் மற்றும் அணிசேராமை ஆகியனவாகும்.

"பரந்த அளவில் அணிசேராமை என்பது இராணுவக் கூட்டணியில் இணைத்துக் கொள்ளாதது அல்ல. அதாவது பிரச்சனைகளை முடிந்தவரை இராணுவக் கண்ணோட்டத்தில் பாாக்காமல், அது சில நேரங்களில் மட்டும் ஏற்பட்டாலும் சுதந்திரமாக மற்றும் அனைத்து நாடுகளுடனும் நட்பு ரீதியிலான உறவைப் பராமரித்தல்.

**அணிசேரா இயக்கம்:**

'அணிசேரா இயக்கம்' என்ற சொல் 1953-இல் ஐ.நா. சபையில் உரையாற்றிய வி.கிருஷ்ணமேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது. அணிசேராமை என்பது இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக விளங்குகிறது. இதன் நோக்கம் ராணுவக் கூட்டணியில் சேராமல் வெளிநாட்டு விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரித்தலாகும். பன்முகக் கூட்டரங்கில் இது மிகப்பெரிய அரசியல் குழுவாக விளங்குகிறது. அணிசேரா இயக்கமானது 120 உறுப்பு நாடுகளையும் 17-நாடுகளைப் பார்வையாளராகவும் 10-சர்வதேச நிறுவனங்களையும் கொண்டுள்ளது. வளர்ச்சி குறைந்த நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பிற்கான அடித்தளத்தை நிறுவுவதில் அணிசேரா நாடுகள் வெற்றி அடைந்துள்ளன. மற்றொரு குறிப்பிடத்தக்க உண்மை என்னவென்றால் இது ஒரு அரசியல் இயக்கத்திலிருந்து பொருளாதார இயக்கமாக மாற்றம் கொண்டுள்ளது.

**அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள்:**

இந்தியாவின் ஜவஹர்லால் நேரு, யுகோஸ்லாவியாவின் டிட்டோ, எகிப்தின் நாசர், இந்தோனேசியாவின் சுகர்னோ மற்றும் கானாவின் குவாமே நிக்ரூமா ஆகியோராவர்.

**புதிய சவால்கள் மற்றும் கொள்கை மாற்றங்கள்:**

இந்தியா அணிசேரா இயக்கத்தில் இருந்த போதும் சோவியத் யூனியனுடன் 1971-ஆம் ஆண்டில் இந்திய – சோவியத் ஒப்பந்தத்தின் (20 ஆண்டு கால ஒப்பந்தமான அமைதி, நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு) மூலம் இணைந்தது. பின்னர் இந்தியா ராணுவ நவீனமயமாக்கலை மேற்கொண்டது. சீனா 1964-ஆம் ஆண்டு லாப் நார் (Lop Nor) என்னுமிடத்தில் மேற்கொண்ட அணு சோதனைக்குப் பதிலடியாக இந்தியா தனது முதல் பூமிக்கடியிலான அணு சோதனைத் திட்டத்தினை 1974-ல் நடத்தியது. (நிலத்தடி அணு வெடிப்புத் திட்டம்/ Subterranean Nuclear explosions Project) மாறிவரும் உலகச் சூழ்நிலைகள் வெளியுறவுக் கொள்கை விவரங்களைத் தீர்மானிக்கின்றன. எனினும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை நன்கு வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் உள்ளது. இக்கோட்பாடுகள் வெறும் கொள்கை அளவில் இல்லாமல் நடைமுறை சாத்தியம் கொண்டவையாகவும் உள்ளன. பேரழிவை ஏற்படுத்திய இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் இந்தியா அரசியல் விடுதலை பெற்றது. மேலும் தீவிர வறுமை,படிப்பறிவின்மை, குழப்பமான சமூக-பொருளாதார நிலைகளிலிருந்து இந்தியா தன்னை மீட்டெடுக்க வேண்டியிருந்தது. இதனால் நமது புதிய நாடு ராணுவக் கூட்டு மற்றும் ஒப்பந்தத்தில் ஈடுபட இயலவில்லை. சுதந்திர இந்தியா தனது மக்களாட்சி முறையைப் பாதுகாக்க வேண்டிய அதே நேரத்தில் பின்தங்கிய நிலையிலிருந்த தேசத்தைக் காப்பாற்றும் வழிகளையும் உருவாக்க வேண்டியிருந்தது. இராணுவக் கூட்டினைத் தவிர்ப்பது என்பது அப்போது ஒரு விருப்பமாக மட்டுமின்றி ஒரு தேவையாகவும் இருந்தது. தற்போது அணிசேராமை என்பது நடுநிலைமையாக இருப்பது என்பது பொருள் அல்ல: பிரச்சனைகளுக்கு முடிவுகளை நாடுகள் சுதந்திரமாகத் தீர்மானிப்பதாகும். அணிசேராமை என்பது இராணுவ வலிமை இல்லாது இருத்தல் என்று பொருள் அல்ல. மோதல்கள் மற்றும் பதட்டங்களைக் குறைப்பதை உறுதிசெய்வது எனப் பொருள்படுவதாகும். பரந்த அளவில் இது, இந்தியா தனது சமூக – பொருளாதார மேம்பாட்டில் கவனம் செலுத்திட உதவியது. இக்காலகட்டத்தில் இந்தியா இரண்டு போர்களைப் பாகிஸ்தானுடன் எதிர்கொண்டது,

அழிவை ஏற்படுத்திய சீன - இந்தியப் போர் கூட்டுசேராமையை நடைமுறை சாத்தியமற்றதாக்காமல் இராணுவக் கட்டமைப்பின் பற்றாக்குறையை வெளிப்படுத்தியது. கூட்டுசேராமையை விலக்கினாலும்கூட இந்தியா அதிக அளவில் தனது ராணுவ அமைப்பைப் பலப்படுத்தவும் ஒரு அணுசக்தி நாடாகவும் ஆகமுடிந்தது. வெளியுறவுக் கொள்கைகளை நிர்வகிப்பதில் ஏற்படும் குறைகளும் தவறுகளும் அவ்வப்போது சரி செய்யப்பட்டாலும் இந்தியாவின் அடிப்படைக் கொள்கையான அணிசேராமை இன்னும் நடைமுறையில் உள்ளது. அணிசேரா இயக்கம் என்பது நாடுகளிடையே அமைதி மற்றும் முன்னேற்றத்திற்கான பரஸ்பர உதவிக்கானதாகும்.

**இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் நிலைப்பாடுகள்:**

- காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட ஆதரவளித்தல்
- தென்னாப்பிரிக்காவில் நிலவிய இனவெறியைக் கடுமையாக எதிர்த்தல்
- பாதுகாப்பு, ஆயத்த நிலைமையின் முக்கியத்துவத்தை எதிர்கொள்ளுதல்.

**புதிய மாற்றங்கள் - 1990 மற்றும் இருபதாம் நூற்றாண்டு:**

1990-களில் சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் மேற்கத்திய நாடுகளின் ஆதரவோடு ஒரு புதிய உலகளாவிய பொருளாதார கொள்கை (தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல்) எழுச்சி பெற்றது. புதிய பொருளாதார ஒழுங்கும் ஒரு துருவ உலகமும் (அமெரிக்க ஐக்கிய நாடுகள் மையமாக) இந்தியா உள்ளிட்ட நாடுகள் தங்களின் வெளியுறவு மற்றும் பொருளாதார கொள்கைகளை மாற்றியமைக்க வலியுறுத்தின. இந்தியா உலகப் பொருளாதாரக் கொள்கைகளை மாற்றியமைக்க வலியுறுத்தின. இந்தியா உலகப் பொருளாதார மன்றத்துடன் (GATT) ஓர் ஒப்பந்தத்தில் சேர்ந்ததோடு இருதரப்பு, முத்தரப்பு, பலதரப்பு ஒப்பந்தங்களிலும் இணைந்துள்ளது. இந்தியாவின் அணு ஆயுத சோதனைகள் மேற்கத்திய நாடுகளில் இருந்து அச்சுறுத்தும் எதிர் விளைவுகளை ஏற்படுத்தின.

இந்தியா வெளியுறவுக் கொள்கை பின்வரும் பல்வேறு வகைகளில் மாற்றம் கொண்டது.

- சீனாவுடனான நட்புறவு– கிழக்கு நோக்கு கொள்கை (1992)
- பொக்ரான் (ராஜஸ்தானில்) நடைபெற்ற இரண்டாவது அணு சோதனை (1998)
- இஸ்ரேலிடமிருந்து பாதுகாப்புத் தளவாடங்களைத் கொள்முதல் செய்தலுக்கான உறவு
- அரபு நாடுகள் மற்றும் ஈரானுடன் எரிசக்தி ஆற்றல் வள தூதராக உறவு
- அமெரிக்காவின் அணு ஏவுகணைப் பாதுகாப்பு திட்டத்தை ஏற்றுக் கொள்ளுதல்
- சர்வதேச அணுசக்தி நிறுவனத்தில் ஈரானுக்கு எதிராக இந்தியாவின் வாக்களிப்பு

**21-ஆம் நூற்றாண்டில் மீண்டெழும் இந்தியா**

சர்வதேச அமைப்பின் அமைப்புமுறை மாறி உள்ளது. இந்திய வெளியுறவுக் கொள்கையின் முதன்மையான பணி இந்தியாவின் உள்நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகும். இதன் மூலம் இந்தியாவின் பன்முக மதிப்பீடுகளை ஊக்குவிப்பதுடன் இந்தியப் பொருளாதாரம் மற்றும் சமூக மாற்றங்களை மேம்படுத்த இயலும். வெளியுறவுக் கொள்கை நோக்கில் பொருளாதார வளமே இந்தியா வல்லரசு தன்மை அடைவதற்கான திறவுகோலாகக் காணப்படுகிறது. தற்போது நமது வெளியுறவுக் கொள்கை உள்நாட்டு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான உள்முதலீட்டை அதிகரித்தல், வணிகம், தொழில்நுட்பம் ஆகியவற்றை உருவாக்குவதற்கான வழிமுறையாகச் செயல்படுகிறது. தெற்காசியாவில் பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் நிலைத்தன்மையை ஏற்படுத்துவதன் மூலம் இது எளிதாக்கப்படும்.

உலகின் தீவிரமான பொருளாதார நடவடிக்கைகளுக்காக இந்திய தனது கொள்கைகளைச் சரி செய்துள்ளது. இது நமது மூலதனங்களுக்கான உள் முதலீட்டை அதிகரித்தல், தொழில்நுட்பயோசனை, வளர்ச்சிக்கான கருத்துகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் உலகின் முன்னணி பொருளாதாரங்களுள் ஒன்றாக மறுவெழுச்சி அடைதல் ஆகியவற்றிற்கேற்ப வடிவமைத்துள்ளது. இக்காலகட்டத்தில் ஏற்பட்ட நிலையான அதிக பொருளாதார வளர்ச்சியானது நாட்டு மக்களை மேம்படுத்துவதற்கு உதவியதோடல்லாமல் இந்தியா வெளி உலக தொடர்பில் அதிக அளவில் ஈடுபடவும் வழிவகுத்தது.

இந்தியா தற்போதைய உலகளாவிய விவகாரங்களில் ஈடுபட்டு தனது சர்வதேச கொள்கைகள் முக்கிய இடத்தைப் பெற முனைவதோடு உலக அளவில் தனது இருப்பை

உணரச்செய்கிறது. இந்தியா G-20,IBSA,BRICS போன்ற புதிய உலகக் குழுக்களில் இணைந்துள்ளதானது உலகளாவிய விவகாரங்களில் பெரிய பங்கை வகிக்க இந்தியாவிற்கு அதிக வாய்ப்பை வழங்குகிறது.

உலக பாதுகாப்புக் குறித்த அக்கறை இந்தியாவின் ராணுவ நவீனமயமாக்கல், கடல்சார் பாதுகாப்பு மற்றும் அணுசக்திக் கொள்கைகளில் பிரதிபலிக்கின்றன.

இந்தியா உலகளவில் முடிவெடுக்கும் மற்றும் நிர்வாகத்தில் ஒரு முக்கியக் குரலாகவும் வளர்ந்து வரும் உலகளாவிய கட்டமைப்பில் ஒரு பாலமாகவும் சமநிலைப்படுத்தும் மிகப்பெரிய சக்தியாகவும் உருவெடுத்துள்ளது. இந்தியா மிகப்பெரிய பொருளாதார சவால்களை எதிர் கொண்டாலும் பொருளாதாரம், அரசியல் மற்றும் போர்த்திறன் சார்ந்த துறைகளில் கொள்கை வகுப்பாளர்களின் முடிவுகள் இந்தியாவை வலிமை வாய்ந்த சக்தியாக உருக்கொள்ளச் செய்துள்ளன. இத்தகைய சவால்கள் பொருளாதார வளர்ச்சியை நீட்டிக்கச் செய்தல், வளம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் போன்றவைகளிலும் இராணுவத்தன்மை அல்லாத பிரச்சனைகளான காலநிலை மாற்றம், எரிசக்தி ஆற்றல் பாதுகாப்பு, அரிதான வளங்களுக்குப் போட்டி, உணவு மற்றும் நீர் பாதுகாப்பு, தொற்று நோய்கள் மற்றும் இடம்பெயர்தல் போன்ற விவகாரங்களிலும் மிகப்பெரிய வளர்ச்சி மாற்றங்களை அடைந்துள்ளது, இந்த சவால்கள் எண்ணற்றவையாகவும் கடினமானவையாகவும் இருந்த போதிலும் அவை இந்தியாவின் கொள்கை அமைப்புகளுக்கு எட்டாதவை அல்ல.

இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக்கருத்துக்கள்:

- தேசிய நலனைப் பேணுதல்
- உலக அமைதியை எய்துதல்
- ஆயுதக் குறைப்பு
- பிற நாடுகளுடன் நல்லுறவை வளர்த்தல்
- அமைதியான வழிகளில் பிரச்சனைகளைத் தீர்த்தல்
- அணிசேராக் கொள்கையின்படி சுதந்திரமான சிந்தனை மற்றும் செயல்பாடு
- சர்வதேச விவகாரங்களில் சமத்துவம்
- காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம், இனப்பாகுபாடு ஆகியவற்றிற்கு எதிரான நிலைப்பாடு.

**படைவலிமை குறைப்புக் கொள்கை:**

நமது மரபு மற்றும் தேசிய நெறிமுறைகள் படைவலிமைக் குறைப்பை நடைமுறைப்படுத்துவது ஆகும். அமைதியை விரும்பும் நாடான இந்தியா, தொடக்கத்திலிருந்தே கருத்து மற்றும் எண்ணிக்கை அடிப்படையில் படைவலிமை குறைப்புக் காரணங்களுக்காகப் போராடி வருகிறது. இதனால் ஐ.நா.வின் படை வலிமைக் குறைப்புத் திட்டங்களுக்கு இந்தியா ஆதரவளித்தது. 1974 மற்றும் 1998 அணு சோதனைகள் போர்த்திறமை சார்ந்த நடவடிக்கைகளுக்காகவே செய்யப்பட்டவையாகும்.

**இந்தியாவின் அணுக்கொள்கையின் இரண்டு மையக் கருத்துகள்**:

- முதலில் பயன்படுத்துவதில்லை.
- குறைந்தபட்ச நம்பகமான தற்காப்புத்திறன் அணு ஆயுதத்தைப் போர்த்தாக்குதலுக்குப் பயன்படுத்துவது இல்லை என்பதோடு அணு ஆயுதமற்ற எந்த ஒரு நாட்டிற்கு எதிராகவும் பயன்படத்துவதில்லை என இந்தியா தீர்மானித்துள்ளது.
- இந்தியா-அமெரிக்கா அணுசக்தி ஒப்பந்தம் இந்திய வெளியுறவுக் கொள்கையில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

**சார்க் - தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு:(SAARC – South Asian Association for Regional Cooperation)**

சார்க் நாடுகளின் கூட்டமைப்பு என்பது தெற்காசியாவில் அமைந்துள்ள எட்டு நாடுகளின் ஒரு பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் அமைப்பாகும். சார்க்(SAARC) நாடுகளின் கொள்கை நோக்கமானது நலம்சார் பொருளாதாரத்தை ஊக்குவித்தல், தெற்காசிய நாடுகளுக்கிடையே கூட்டுத்தன்னிறைவு மற்றும் இப்பிராந்தியத்தில் சமூக-பண்பாட்டு மேம்பாட்டினை விரைவுப்படுத்துதல்

ஆகியவையாகும். சார்க் அமைப்பின் பேரிடர் மேலாண்மை மையம் புதுடெல்லியில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையம் தெற்காசியாவில் பேரிடர் குறைப்பு மற்றும் மேலாண்மைக்கான வல்லுநர்களைக் கொண்ட அமைப்பாகும். இஸ்ரோ(ISRO) அமைப்பு சார்க் பிராந்தியத்திற்கான "செய்தித் தொடர்பு மற்றும் வானிலை ஆய்விற்காக" சார்க் செயற்கைக்கோளைச் செலுத்த உள்ளது.

| |
|---|
| வெளியுறவுக்கொள்கை என்பது மற்ற நாடுகளுடன் உறவைப் பேணுவதற்காக ஒரு நாட்டால் கவனமாக வடிவமைக்கப்பட்ட உத்திகளின் கலவையாகும்.<br>இராஜதந்திரம் என்பது ஓர் அரசின் வெளியுறவுக் கொள்கையைச் சூழலுக்குத் தகுந்தாற்போல் செயல்படுத்துவதற்கான கருவி ஆகும். |

சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகள், ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், பூடான், இந்தியா, நேபாளம், மாலத்தீவு, பாகிஸ்தான் மற்றும் இலங்கை.

**இந்தியாவில் வெளியுறவுக் கொள்கையின் தற்காலச் சூழல் மாற்றம் மற்றும் தொடர்ச்சி**

**அ. ஒருங்கிணைந்த அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை: முதலில் அண்டை நாடுகள் கொள்கை**
வரலாறு மற்றும் கலாச்சார ஒற்றுமைத் தன்மைகளை மையமாகக் கொண்ட அண்டை நாடுகள் என்ற கருத்து இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையாக எப்பொழுதும் இருந்து வருகிறது. இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள மாலத்தீவு உள்ளிட்ட நாடுகளுக்கும் அரசியல் மற்றும் ராஜதந்திர முன்னுரிமையை இந்தியா அளித்து வருகிறது. இந்தியா வெளியுறவுக் கொள்கை இந்த அண்டை நாடுகளை மையம் கொண்டது என்பது பல்வேறு வகையான வளர்ச்சி இலக்குகளை இந்தியா அடைவதற்கு அமைதியான சுற்றுப்புறம் அவசியம் என்ற தெளிவான புரிதலை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா தனது அண்டை நாடுகளுக்குத் தேவைப்படும் ஆதரவினை வளஆதாரங்கள், கருவிகள் மற்றும் பயிற்சியாக அளித்து வருகிறது. பொருள்கள், மக்கள், ஆற்றல், மூலதனம் மற்றும் தகவல்கள் எளிதாகச் செல்வதை மேம்படுத்துவதற்காக மிகப்பெரிய இணைப்பும் ஒருங்கிணைப்பும் அளிக்கப்படுகிறது.

**ஆ. அரசதந்திரம் மற்றும் வளர்ச்சியை இணைத்தல்:**
இந்தியாவின் உள்நாட்டு முக்கிய வளர்ச்சி மேம்பாட்டிற்குச் சர்வதேச ஒத்துழைப்பைப் பெறுவது, இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் நோக்கங்களில் ஒன்றாக விளங்குகிறது. இது தொழில்நுட்ப உதவி கிடைப்பதை மேம்படுத்துதல், மூலதனத்தைப் பெறுதல், சந்தையினைப் பெறுதல் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

**இ. "கிழக்கே நோக்கு" என்பதிலிருந்து "கிழக்குச் செயல்பாடு" என்ற கொள்கைக்குப் படிப்படையான மாற்றம்:**
வடகிழக்கு இந்தியாவிலிருந்து தென்கிழக்கு ஆசியா தொடங்குகிறது. மியான்மர் இந்தியாவிற்கும் தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள நாடுகளுக்கும் (ASEAN) பாலமாக உள்ளது. இதன் நோக்கம் ஆசியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பதோடு, இந்தோ – பசிபிக் பகுதியில் நிலையான மற்றும் பல்முனை சமநிலையை உறுதிப்படுத்துவதாகும். இக்கொள்கை ஆசியா மற்றும் கிழக்காசிய நாடுகளுக்கிடையே ஆக்கப்பூர்வமான பங்கினை வலியுறுத்துகிறது. நமது கிழக்குக் கொள்கையின் மூன்று முக்கியக்கூறுகள் வலிமையான நிலப்பரப்பு இணைப்பு, வணிகம் மற்றும் பாதுகாப்பு தொடர்பானவை ஆகியனவாகும்.

**உ. வழிகாட்டும் சக்தியாக இந்தியா:**
ஜி-20 நாடுகள்,கிழக்காசிய உச்சிமாநாடு, பிரிக்ஸ் (BRICS) ஆகியவற்றில் உறுப்புநாடாக இந்தியா இருப்பதும் வேகமாக வளர்ந்து வரும் மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட ஒரு நாடாக இருப்பதும் அதன் நிலைக்கு ஒரு சான்றாகும். ஐ.நா.சபையின் பாதுகாப்புச் சபையில் ஒரு நிரந்தர உறுப்பு நாடாக இருக்க இந்தியா விரும்புகிறது. இந்தியா தற்போது தனது அதிகரித்துவரும் நலநன உலகின் பல பகுதிகளில் ஆழப்பதித்து வருகிறது. மேலும் ஆற்றல் வளம், முக்கிய இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், அவசியமான கப்பல் வழித்தடங்களைப் திறத்தல் மற்றும் பராமரித்தல், முதலீடுகளை எதிர்நோக்கல், கடல்கடந்த வணிக வாய்ப்புகள் மற்றும் வணிக நுழைவினைப் பெறுதல் போன்ற பல்வேறு காரணிகளால் முன்னேற்றம் கண்டு வருகிறது.

| உள்நாட்டுக் கொள்கை | வெளியுறவுக் கொள்கை |
|---|---|
| ▪ உள்நாட்டுக் கொள்கை என்பது ஒரு நாடு தனது நாட்டிற்குள்ளான விவகாரங்கள் தொடர்பாகக் கொண்டுள்ள கொள்கையாகும். | ▪ வெளியுறவுக் கொள்கை என்பது ஒரு நாடு பிற நாடுகளுடன் கொண்டுள்ள விவகாரங்கள் தொடர்பானதாகும். |
| ▪ இது உள்விவகாரங்கள், சமூக நலம், சுகாதாரம், கல்வி, குடியியல் உரிமைகள், பொருளாதார விவகாரங்கள் மற்றும் சமூகப் பிரச்சனைகள் ஆகியவற்றை மையமாகக் கொண்ட சட்டங்களை உள்ளடக்கியது. | ▪ வணிகம், அரச தந்திரம், தடுப்பு நடவடிக்கைகள், பாதுகாப்பு, உளவுத்துறை மற்றும் உலகளாவிய சூழல் ஆகிய வகைகளைக் கொண்டது வெளியுறவுக் கொள்கை. |

**முடிவுரை:**

தற்போது இந்தியா உலகின் பெரும்பான்மையான நாடுகளுடன் உலகின் பெரும்பான்மையான நாடுகளுடன் தூதரக உறவுகளைக் கொண்டுள்ளது. மேலும் உலகின் இரண்டாவது மிகப்பெரிய மக்களாட்சி நாடுகளில் ஒன்றாகவும் விளங்கி வருகிறது. இந்தியா எந்தவொரு மிகப்பெரிய ராணுவக் கூட்டணியில் இல்லை என்றாலும் பெரிய நாடுகளுடன் போர்த்திறன் சார்ந்த ஒரு ஆழமான உறவைக் கொண்டுள்ளது. தீவிரவாதத்திற்கு எதிரான நமது பொதுவான போராட்டம் என்பது குறிப்பிடத்தக்க பலமாகும். இந்தியா தனது பாதுகாப்பு மற்றும் சமூகப் பொருளாதார முன்னேற்றங்களை அடைய எதிர்பார்க்கும் அதேவேளையில் அனைத்து நாட்டு மக்களுக்கும் அமைதி, சுதந்திரம், முன்னேற்றம் மற்றும் நீதி ஆகியவற்றையும் வேண்டுகிறது. இவ்வாறு சர்வதேச விவகாரங்களில் நிரந்தர நண்பனும் இல்லை: நிரந்தர பகைவனும் இல்லை: நலன்கள் மட்டுமே நிரந்தரமானவை என்ற வெளியுறவுக் கொள்கையை இந்தியா பின்பற்றுகிறது. புதிய வகை சவால்கள் புதிய உண்மைக்கேற்ப அமைத்துக்கொள்ள வலியுறுத்துகிறது. அப்போதும்கூட அதன் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கட்டமைப்பு மாறாமல் உள்ளது.

## பாடம்-2
## இந்தியாவின் சர்வதேச உறவுகள்

**அறிமுகம்:**

சுதந்திர இந்தியா தொடர்ந்து உலக அமைதியையும் சர்வதேச ஒற்றுமையையும் நிலைநிறுத்த ஊக்கமளிக்கிறது. இந்தியா வெளிப்படையாக ராணுவக் கூட்டணியைக் கைவிட்டாலும், அமைதி மற்றும் பொருளாதார வளர்சிக்காக மற்ற நாடுகளுடன் ஒத்துழைப்பிலும் ஒருங்கிணைப்பதிலும் மிகவும் ஈடுபாட்டுடன் செயல்படுகிறது. இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு கூறியது போல "நாம் ஒருவரை முற்றிலும் சார்ந்தோ அல்லது தனித்தோ இருக்க முடியாது. ஆனால் இவ்வுலகில் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்கிறோம்.

இந்தியா தனது தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ற வகையில் அமைதியான வளமான அண்டை நாடுகளுடனான உறவை விரும்புகிறது. இந்தியா எப்பொழுதும் அமைதியை விரும்பும் நாடாக இருப்பதோடு மட்டுமல்லாமல் உலக அமைதிக்குத் தொடர்ந்து கடுமையாகப் போராடி வருகிறது. ஒரு நாடு வளர்ச்சியில் போதிய அளவு முன்னேற்றம் அடைவதற்குச் சர்வதேச உறவுகளைப் பராமரிப்பது என்பது முக்கியமான ஒரு பகுதி ஆகும். இந்தியா அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இருந்தாலும் ஏராளமான அண்டை நாடுகளுடன் சூழப்பட்டிருப்பதால் அந்நாடுகளுடன் மரபுரீதியாக நட்புறவு மற்றும் நல்ல உறவினைப் பராமரித்து வருகிறது.

**இந்தியாவும் அதன் அண்டை நாடுகளும்:**

அண்டை நாட்டுறவைப் பொருத்த வரையில் இந்தியா ஒரு உன்னத நிலையைக் கொண்டுள்ளது. இந்திய துணைக்கண்டத்தில் கடந்த 5000 ஆண்டுகளாக நிலவி வந்த ஒரே மாதிரியான பண்பாட்டின் ஒரு பகுதியாக அண்டை நாடுகள் விளங்குகின்றன.

- அண்டை நாட்டுறவைப் பொருத்த வரையில் இந்தியா ஒரு உன்னத நிலையைக் கொண்டுள்ளது. இந்திய துணைக்கண்டத்தில் கடந்த 5000 ஆண்டுகளாக நிலவி வந்த ஒரே மாதிரியான பண்பாட்டின் ஒரு பகுதியாக அண்டை நாடுகள் விளங்குகின்றன.
- வடக்கில் சீனா, நேபாளம், பூடான்
- கிழக்கில் வங்காள தேசம்
- தூரக்கிழக்கில் மியான்மர்
- தென்கிழக்கில் இலங்கை, தென்மேற்கில் மாலத்தீவு போன்ற இந்தியாவிற்கு மிக அருகில் அமைந்துள்ள இரு நாடுகளும் இந்திய பெருங்கடலால் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தியா இந்த அண்டை நாடுகளுடன் வரலாற்று ரீதியாகவும், சமய, பொருளாதார, இன, மற்றும் மொழியின் அடிப்படையிலும் நல் நல்லுறவைப் பேணுகிறது. அண்டை நாடுகளுடனான இந்தியாவின் உறவுகளைப் பற்றி அறிந்து கொள்வோம்.

சீனாவும் ரஷ்யாவும் அதிக எண்ணிக்கையிலான அண்டை நாடுகளுடன் தனது எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.

**இந்தியாவும் ஆப்கானிஸ்தானும்**

இந்தியா, ஆப்கானிஸ்தான் உறவு போர்த்திறம் சார்ந்த பங்களிப்பு ஒப்பந்தம் (Strategic Partnership Agreement) மூலம் வலிமை பெற்றுள்ளது. இந்த ஒப்பந்தம்

சிந்துவெளி நாகரிகம் முதல் சந்திரகுப்த மௌரியர் ஆட்சி வரையிலான காலத்தில் இந்தியாவும் ஆப்கானிஸ்தானும் பன்முகத்தன்மையையும் மிக ஆழமான நட்புறவையும் கொண்டிருந்தன. கனிஷ்கருடைய ஆட்சியின் போது ஏராளமான இந்திய சமய பரப்புக் குழுக்கள் சீனா, மத்திய ஆசியா மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்குத் தங்கள் மதத்தைப் பரப்பச் சென்றனர்.
பலுசிஸ்தான் (தற்காலத்தில் பாகிஸ்தானின் எல்லைப்புற மாகாணம்) பகுதியைச் சார்ந்த கான் அப்துல் கபார்கான் இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தின் முக்கியத் தலைவரும் இந்திய தேசிய காங்கிரசின் தீவிர ஆதரவாளரும் ஆவார்.

ஆப்கானிஸ்தான் உள்கட்டமைப்பை மறுசீரமைக்கவும், நிறுவனங்கள், வேளாண்மை, நீர், கல்வி, சுகாதாரம் மற்றும் வரியில்லாமல் இந்திய சந்தையை எளிதாக அடைதல் போன்ற

துறைகளில் ஒத்துழைப்பை நல்கவும் வழிகோலுகிறது. ஹீரட் மாகாணத்திலுள்ள சல்மா அணையைக் கட்ட ஆப்கானிஸ்தானிற்கு இந்தியா உதவியது. ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புப் படையில் பணிபுரிந்து உயிரிழந்த வீரர்களின் குழந்தைகள் 500 பெருக்கு இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயில்வதற்கான உதவித்தொகையை இந்தியா அறிவித்துள்ளது. மேலும் ஆப்கானிஸ்தானின் பொது சுகாதாரம் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக இந்தியா ஆதரவு அளித்து வருகிறது. ஆப்கானிஸ்தானில் முதலீடு செய்வதில் முன்னணியில் இந்தியா இருப்பதோடு, பொதுத்துறை மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த இந்திய நிறுவனங்கள் ஆப்கானிஸ்தானில் சுரங்கத் தொழிலில் அதிக அளவில் முதலீடு செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்தியா தனது விளையாட்டுத் திறமையைப் பறைசாற்றும் விதமாக காந்தகார் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தைக் கட்டியுள்ளது. இந்தியாவின் மகளிர் சுய வேலை வாய்ப்புச் சங்கம் நிலையான வாழ்வாதாரம் மற்றும் தன்னம்பிக்கை பெறுவதற்குமான பயிற்சியை ஆப்கானிஸ்தானில் அளிக்கிறது. இந்தியா இவ்விதமாக ஆப்கானிஸ்தானின் வளர்ச்சிக்கு நிதி உதவி மற்றும் கடனுதவி அளித்துப் பங்காற்றி வருகிறது.

**இந்தியாவும் வங்காளதேசமும்**

வங்காளதேசத்தின் (முந்தைய கிழக்கு பாகிஸ்தான்) சுதந்திரத்தை அங்கீகரித்த முதல் நாடு இந்தியா ஆகும். இந்தியாவும் வங்காளதேசமும் 4,096.7 கி.மீ நீளம் கொண்ட மிக நீண்ட நிலப்பரப்பை எல்லையாகப் பகிர்ந்து கொள்கின்றன. அகர்தலாவிற்கும் (இந்தியா) அகவுராவிற்கும் (வங்காளதேசம்) இடையேயான ரயில் போக்குவரத்து இணைப்பிற்கான முன்மொழிவை செயல்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது. இந்தியாவின் பகுதிகளான கொல்கத்தாவில் இருந்து அகர்தலாவிற்கு டாக்கா வழியாக செல்வதற்கான சாலை வழியினை BBIN-MVA(வங்காளதேசம், பூடான், இந்தியா, நேபாளம் மோட்டார் வாகன ஒப்பந்தம்) ஒப்பந்தத்தின் கீழ் அமைக்க இந்தியாவிற்கு வங்காளதேசம் அனுமதி வழங்கியுள்ளது. கங்கை நீரைப் பகிர்ந்து கொள்ள 1977இல் கையெழுத்தான பராக்க ஒப்பந்தம் ஒரு வரலாற்று ஒப்பந்தமாகும். இந்தியாவிற்கும் வங்காள தேசத்திற்கும் பொதுவானதாக உள்ள 54 நாடுகளிலிருந்து அதிகபட்ச நலனைப் பெறுவதற்காக இரு நாட்டு கூட்டு நிதி ஆணையம் செயல்படுகிறது. இந்திய அரசாங்கம் 'வங்காளதேசத்திற்கான உதவி' என்ற திட்டத்தின் கீழ் கட்டடங்கள் கட்டவும், ஆய்வுக்கூடங்கள், மருந்தகங்கள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கவும் மானியம் வழங்கி உதவுகிறது. மேலும் இந்திய பண்பாட்டு உறவுகளுக்கான குழுவின் (ICCR) மூலம் வங்காளதேச மாணவர்களுக்கு ஆண்டுதோறும் உதவித்தொகை அளிக்கப்படுவதோடு டாக்கா பல்கலைக்கழகத்தில் 'தாகூர் இருக்கை' ஏற்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. (மேற்கு வங்காளம்) சிலிகுரி-பர்பதிபூர் (வங்காளதேசம்) ஆகிய இடங்களுக்கிடையே 130 கிலோமீட்டர் நீளம் கொண்ட நட்புறவுக் குழாய் போக்குவரத்தை அமைக்கும் பணியை இரு நாடுகளும் இணைந்து தொடங்கி வைத்தன.

இந்தியாவிற்குச் சொந்தமான டீன்பிகா (Teen Bigha) என்ற பகுதி மேற்கு வங்காளம் மற்றும் வங்காளதேசத்திற்கு இடையேயான எல்லையில் உள்ளது. குறுகலான இப்பாதை 2011ஆம் ஆண்டு வங்காளதேசத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டது.

**இந்தியாவும் பூடானும்**

பூடான் இமயமலையில் உள்ள ஒரு சிறிய அரசு ஆகும். 'இடி மின்னல் நிலம்' என்று அறியப்படும் இது உலகின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாகும். இந்தியா மற்றும் பூடான் இடையேயான இராஜதந்திர உறவுகள் 1968ஆம் ஆண்டில் இந்திய பிரதிநிதி ஒருவரைத் திம்புவில் நியமித்ததிலிருந்து தொடங்கியது. பூடான் நிலங்களால் சூழப்பட்ட நாடாகும். அதனால் கடல் சார்ந்த தொடர்புகளுக்கு இந்தியாவையே பெரிதும் சார்ந்துள்ளது. பூடானின் பொருளாதார மேம்பாட்டிற்கு இந்தியா முதன்மைப் பங்காற்றுகிறது. இந்தியா 'பாரத் முதல் பூடான் வரை' (B2B)என்று அறியப்படும் இருதரப்பு வணிக உறவினை அறிவித்தது. பூடான் மாணவர்கள் புகழ் பெற்ற நிறுவனங்களில் உயர் கல்வி பெறுவதற்கு இந்தியா உதவித்தொகை அளிப்பதோடு பூடானில் ஒரு டிஜிட்டல் நூலகம் அமைத்திடவும் உதவியுள்ளது. மதிப்புமிக்க நேரு வாங்சுக் கல்வி உதவித்தொகை தகுதியும் திறமையும் கொண்ட பூடான் நாட்டினருக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மையான இந்திய கல்வி நிறுவனங்களில் கல்வி பயில வாய்ப்பு அளிக்கிறது. இந்தியா

மற்றும் பூடான் இடையே இரு தரப்பு ஒத்துழைப்பிற்கு நீர்மின்சக்தித் துறை ஒரு முக்கிய எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இதுவரை இந்திய அரசாங்கம் மூன்று நீர்மின்சக்தி (சுக்கா, குரிச்சி, தலா) திட்டங்களைப் பூடானில் அமைத்துள்ளது. பூடான் நாட்டில் தொலைத் தொடர்பு வசதியை ஏற்படுத்தவும் மருத்துவமனைகள், சாலைகள் மற்றும் பாலங்கள் ஆகியவற்றைக் கட்டுவதற்கும் அந்நாட்டின் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்தவும் இந்தியா உதவியுள்ளது.

குரு பத்மசம்பவா எனும் புத்த துறவி இந்தியாவிலிருந்து பூடானுக்குச் சென்றார். அங்கு தனது செல்வாக்கை ஏற்படுத்தி புத்த சமயத்தைப் பரப்பியதன் மூலம் இரு நாட்டு மக்களிடையே பாரம்பரியத்தை உறுதிப்படுத்தினார்.

**இந்தியாவும் சீனாவும்**

புவியியல் அமைப்பு, மக்கள்தொகை, திறன் கொண்ட மனித ஆற்றல் மற்றும் நாகரிகத் தொன்மை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவுடன் ஒப்பிடுவதற்குத் தகுதி வாய்ந்த நாடு சீனா மட்டுமே. ஊலகில் உள்ள உற்பத்தி மண்டலங்களில் ஒன்றாக இருக்கும் சீனா, இந்தியாவிற்கு மிக முக்கியமான நாடாகும். இந்தியாவும் சீனாவும் உலக வர்த்தக நிறுவனம், சர்வதேச காலநிலை மாற்றம் குறித்த பேச்சுவார்த்தைகள், உலகவங்கி சீர்திருத்தம் ஆகியவற்றில் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளன. சீனாவால் துவங்கி வைக்கப்பட்ட ஷாங்காய் ஒத்துழைப்புக் கூட்டமைப்பில் (Shanghai Cooperation) இந்தியாவிற்குப் பார்வையாளர் தகுதியை வழங்கியுள்ளது. அதேபோன்று சார்க்(SARRC) அமைப்பில் பார்வையாளர் தகுதி சீனாவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இருநாடுகளும் பல்வேறு மாறுபட்ட துறைகளில் பேச்சுவார்த்தை நடத்திட வழிகளை ஏற்படுத்தியுள்ளன. இருதரப்பு வணிகம் மகத்தான வளர்ச்சியைக் கண்டுள்ளது. இந்தியாவும் சீனாவும் கல்வி பரிமாற்றத் திட்டத்தில் கையெழுத்திட்டுள்ளன. அதன்படி இரு நாடுகளிலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் உயர் கல்வி பயில தலா 25 மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

மக்மகான் எல்லைக்கோடு - இந்தியா, சீனா மற்றும் பூடானின் கிழக்குப் பகுதி ஆகிய பகுதிகளுக்கு இடையேயான எல்லைக்கோடு ஆகும். இது 1914ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இந்தியா, திபெத் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பிரிட்டிஷ் இந்தியாவின் சார்பில் இந்தியாவிற்கான செயலாளர் ஆர்தர் ஹென்றி மக்மகான் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

**இந்தியாவும் மாலத்தீவும்**

மாலத்தீவு இந்தியப் பெருங்கடலில் இலட்சத்தீவுகளுக்குத் தெற்கில் அமைந்துள்ளது. இதன் அமைவிட முக்கியத்துவத்தினாலும் அருகாமையில் அமைந்திருப்பதாலும் மாலத்தீவினுடனான உறவு இந்தியாவிற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இந்தியாவும் மாலத்தீவும் இனம், மொழி, பண்பாடு, சமயம் மற்றும் வணிகத் தொடர்பு ஆகிய பல பரிமாணத் தொடர்புகளைப் பழங்காலத்திலிருந்தே சுமுகமாகப் பேணி வருகின்றன. இரு நாடுகளுக்கிடையே வணிகம் மற்றும் சுற்றுலா மேம்பட்டு இருக்கின்றன. இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஒருங்கிணைந்த ரோந்து மற்றும் வான்வழி கண்காணிப்புத் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றின் மூலம் கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்பை நல்க இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

**இந்தியாவும் மியான்மரும்**

இந்தியா தன் இரண்டாவது மிக நீளமான எல்லையை மியான்மர் நாட்டோடு பகிர்ந்து கொண்டுள்ளது. (1989 ஆம் ஆண்டு வரை பர்மா என அறியப்பட்டது) இந்தியாவின் நான்கு வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம் ஆகியவை மியான்மர் நாட்டுடன் தங்கள் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன. இந்தியா தென் கிழக்காசியாவிற்குள் செல்வதற்கான நுழைவு வாயிலாக மியான்மர் இருக்கிறது. கொல்கத்தாவை மியான்மரில் உள்ள சிட்வேயுடன் இணைப்பதற்காகச் சாலை – நதி – துறைமுகம் - சரக்குப் போக்குவரத்துத் திட்டமான கலடன் பன்முக மாதிரி போக்குவரத்துத் திட்டத்தினை (Kaladan Multi Model Transit Transport)இந்தியா உருவாக்கி வருகிறது. தென்கடலில் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்காகக் கொல்கத்தா நகரை ஹோசிமின் உடன் இணைக்கும் நோக்கம் கொண்ட ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மியான்மர், கம்போடியா, வியட்நாம் வழியே சாலைப்

போக்குவரத்தையும் கொண்ட இத்திட்டத்தின் ஒரு பகுதியாகக் கவுகாத்தியுடன் மாண்டலேவை இணைக்கும் முதற்கட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. நமது எரிபொருள் தேவைகளான பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஆகியவற்றில் முக்கியப் பங்குதாரராக மியான்மர் உள்ளது. சில இந்திய நிறுவனங்களான எஸ்சார்(ESSAR), கெயில் (GAIL), ஓஎன்ஜிசி (ONGC), விதேஷ் லிமிடெட் (Videsh Ltd.,) ஆகிய நிறுவனங்கள் மியான்மரின் எரிசக்தித்துறையில் முதலீடு செய்துள்ளன.

**இந்தியாவும் நேபாளமும்**

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான இயற்கையாக அமைந்த இடைப்படு நாடு நேபாளம் ஆகும். நேபாளம் நிலப்பகுதிகள் சூழப்பட்ட நாடாக இருப்பதால் பொருளாதார உதவிக்கும் வழித்தடங்களுக்கும் இந்தியாவையே சார்ந்துள்ளது. இந்தியாவின் ஐந்து மாநிலங்களுக்கான சிக்கிம், மேற்கு வங்காளம், பீகார், உத்திரப்பிரதேசம், உத்தரகாண்ட் ஆகியவை நேபாள எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன. இரு நாட்டின் எல்லை மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் தங்களிடையே ஆழமான பண்பாட்டுப் பிணைப்பினைக் கொண்டுள்ளனர். நேபாளத்தின் பெரிய முதலீட்டாளராக இந்தியா திகழ்கிறது.

அடிப்படைக் கட்டமைப்பு, நீர்பாசனம், சுகாதாரம், ஆற்றல் திட்டங்கள் மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றை மையமாகக் கொண்ட மேம்பாட்டிற்கு இந்தியா உதவுவதோடு, நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளையும் அளித்து வருகிறது. இந்தியாவையும் காத்மண்டுவையும், இணைப்பதற்கான 204 கிலோ மீட்டர் நீளமுள்ள மகேந்திர ராஜ் மார்க் (Mahendra Raj Marg) என்னும் இணைப்பை இந்தியா கட்டியுள்ளது. நேபாளம் மிக வேகமாக ஓடும் ஆறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதால் நீர் மின்சக்தி நிலையங்களை நிறுவுவதற்கு அதன் நிலப்பரப்பு ஏற்றதாக உள்ளது. 18 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒப்பந்தமான 5600 மெகாவாட் பஞ்சேஷ்வர் திட்டப்பணிகளை இந்தியா மேற்கொண்டு உள்ளது. இந்தியா மற்றும் நேபாள மக்கள் ஆன்மீக பயணங்களுக்காக இரு நாடுகளுக்கும் சென்று வருகின்றனர். நேபாளத்தில் பசுபதி, ஜனக்பூர் ஆகிய பாரம்பரியமிக்க மையங்கள் உள்ளன. அதே போல இந்தியாவில் வாரணாசி மற்றும் நான்கு தாம்ஸ் (Four Dhamms– பத்ரிநாத், பூரி, துவாரகை மற்றும் இராமேஸ்வரம்) ஆகிய முக்கியமான புனிதத் தலங்களும் உள்ளன. நேபாள மொழியை, இந்தியா அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் சேர்த்துள்ளது இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புப் பிணைப்பை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

சாரதா ஆற்றின் குறுக்கே ஒரு கூட்டு மின்சக்தித் திட்டம் கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டம் முறையே மின்சார உற்பத்தி, நீர்ப்பாசன வசதிகள் ஆகியவை இந்தியா மற்றும் நேபாளத்திற்கு உதவும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது. சுற்றச்சூழல் நோக்கில் இந்தியா, நேபாளம் எல்லையோரம் பல்வேறு எண்ணிக்கையிலான புலிகள் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்திய மற்றும் நேபாள அரசு இரட்டை நகரங்களான காத்மண்டு – வாரணாசி, லும்பினி – புத்தகயா மற்றும் ஜனக்பூர் - அயோத்தி ஆகிய மூன்று சகோதரி நகர் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

**இந்தியாவும் பாகிஸ்தானும்**

1947ஆம் அண்டு இந்திய-பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர் பல்வேறு முக்கிய விவகாரங்களில் இரு நாடுகளுக்கும் இடையே வேறுபாடு காரணமாக நெருடலான உறவு இருந்து வருகிறது. பாகிஸ்தானுடனான உறவில் தீவிரவாதமே தொடர்ந்து நமது முக்கியக் கவலையாக உள்ளது. இந்தியாவுடனான உறவுகளைப் பராமரிப்பதில் பாகிஸ்தான் விரோத மனப்பான்மையுடனே இருந்து வருகின்றது. ஆனால் இந்தியா, உறவுகளை மேம்படுத்தவும் நிலைநிறுத்தவும் தீவிரமாக முயன்று வருகிறது. எல்லை தாண்டிய துப்பாக்கிச் சண்டை மற்றும் தீவிரவாதிகள் தாக்குதல் ஆகியவை காஷ்மீர் மக்களின் உயிர்களைக் காவு கொண்டது. மேலும் அம்மக்கள் ஏழ்மை நிலை மற்றும் மனித உரிமை மீறல் ஆகியவற்றால் அவதியுறுகின்றனர். இந்தியா பாகிஸ்தானிடையே காஷ்மீர் முக்கிய விவகாரமாக இருந்து வருவதோடு இரு நாடுகளும் வெளிப்படையாகவே மோதிக்கொள்ளும் நிலையினை பல்வேறு சமயங்களில் ஏற்படுத்தியுள்ளது.

**கட்டுப்பாடுக்கோடு**
1949ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்ட போர் நிறுத்தக் கோடு 1972 ஆம் ஆண்டிற்குப் பின்னர் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு என அழைக்கப்பட்டது. இது 1972ஆம் ஆண்டின் சிம்லா ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லையாகும். இக்கோடு பிரிவினை செய்யப்பட்டபோது ராட்க்ளி.்.ப் கோடு (Radcliffe Line) என்று அழைக்கப்பட்டது. (ராட்க்ளி.்.ப் என்பவர் எல்லை ஆணையத்தின் தலைவராக இருந்தார்) இக்கோடு தற்போது கட்டுப்பாடுக்கோடு என அழைக்கப்படுகிறது.

எல்லை தாண்டிய பயங்கரவாதம் மிகப்பெரிய அச்சுறுத்தல் ஆகும். சிம்லா ஒப்பந்தம் மற்றும் லாகூர் பிரகடனம் ஆகியவற்றின் மூலம் இரு நாடுகளுக்குமிடையேயான உறவை மேம்படுத்தவும் நேர்மறையான மாற்றங்களைக் கொண்டுவரவும் இந்திய முயன்றுள்ளது.

**இந்தியாவும் இலங்கையும்**

இந்திய நாடு பண்பாடு,கலாச்சார, வரலாறு மற்றும் சமய உறவுகளை இலங்கையுடன் கொண்டுள்ளது. பாக் ஜல சந்தியால் பிரிக்கப்பட்டுள்ள இந்தியாவும் இலங்கையும் சிறந்த வணிக உறவுகளைத் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்வதோடு இருதரப்பு ஒப்பந்தங்கள் மட்டுமல்லாமல் சார்க் அமைப்பின் மூலமும் மேம்பாட்டிற்கு ஒருங்கிணைந்து செயலாற்றி வருகின்றன. இந்தியா மற்றும் இலங்கை உறவு நட்பு ரீதியாக அமைந்திருக்கிறது எனினும் தமிழ் இனப்பிரச்சினை தொடர்பான காலகட்டத்தில் சிறிது காலத்திற்கு மட்டும் உறவில் பின்னடைவு ஏற்பட்டது. இரு நாடுகளும் மரபுரீதியாக ஒன்றுக்கொன்று நெருங்கிய நிலையில் இருந்து வருகின்றன. இலங்கையில் முதலீடு செய்துள்ள நாடுகளில் இந்தியா முன்னணியில் இருப்பதோடு, பெட்ரோலியம், சில்லரை வணிகம், தகவல் தொழில்நுட்பம், ரியல் எஸ்டேட், தொலைத்தொடர்புகள் மற்றும் சுற்றுலா போன்ற பல்வேறு துறைகளில் இந்தியா முதலீடு செய்துள்ளது. இலங்கையின் முதலீடுகள் இந்தியாவில் சரக்கு சேவை மற்றம் தளவாடத்துறை ஆகியவற்றைத் தவிர பிராண்டிக்ஸ் (Brandix) (தயாரிக்கப்பட்ட ஆடை/விசாகப்பட்டினத்தின் ஆடை நகரம்) எம்.ஏ.எஸ். ஹோல்டிங்ஸ் (MAS Holdings), ஜான் கீல்ஸ் (Hohn Keels), ஹேலேஸ் (Hayleys) போன்றவற்றிலும் செய்துள்ளது. இந்தியா தகுதியுள்ள இலங்கை மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையை ஆண்டுதோறும் அளித்து வருகிறது. இந்தியாவின் நாளந்தா பல்கலைக்கழகத் திட்டத்தில் இலங்கை ஒரு பங்குதாரர் ஆகும்.

அசோகர் புத்த மதத்தைப் பரப்புவதற்காக அவரது மகன் மகிந்தாவையும் மகள் சங்க மித்திரையையும் இலங்கைக்கு அனுப்பினார். சோழ அரசர்களான முதலாம் இராஜராஜன் மற்றும் முதலாம் ராஜேந்திரன் ஆகியோர் இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றினர்.

**வளர்ச்சியடைந்த நாடுகளுடனான இந்தியாவின் உறவுகள்**

ஒரு வளர்ந்த நாடு என்பது இறையாண்மை கொண்ட நாடாகும், இது மிகவும் வளர்ந்த பொருளாதாரம் மற்றும் குறைந்த தொழில்மயமான தேசத்துடன் ஒப்பிடும்போது மேம்பட்ட தொழில்நுட்ப உள்கட்டமைப்பைக் கொண்டுள்ளதும் ஆகும். இந்தியா வல்லரசு நாடுகளுடன் மிக கவனத்துடன் தன்னைச் சமநிலைப்படுத்தி உள்நாட்டு வளர்ச்சிக்கான அதிகப் பலனைப் பெறுவதற்கு முயன்று வருகிறது.

**அ. அமெரிக்க ஐக்கிய நாடுகள்**

அமெரிக்காவும் இந்தியாவும் புதிய தலைமுறை இராணுவக் கூட்டாண்மைக்கு வழிவகுக்கும் தகவல் தொடர்பு, இணக்கத்தன்மை மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் (Communication Compatibility and Security Agreement – COMCASA)கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் 10 ஆண்டுகள் காலவரையறை கொண்டதாகும். இதன்படி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு உபகரணங்களில் பயன்படுத்தப்படும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பெறுவதற்கான வழிவகை ஏற்படுதோடும், இரு நாடுகளின் இராணுவங்களுக்கிடையே நிகழ்நேரத் தகவல் பகிர்வுக்கும் அனுமதியளிக்கிறது.

**ஆ. ஐரொப்பிய நாடுகள்**

அனைத்து விவகாரங்களிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்து வருவதோடு குறிப்பாகப் பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு, அணுசக்தி ஆற்றல், விண்வெளி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு மற்றும் பரிமாற்றம் அதிகரித்து வருகிறது. பிரான்ஸ் நாட்டின் விண்வெளி ஏவுதளங்கள் இந்தியாவின் இஸ்ரோ (ISRO) அமைப்பினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பிரான்ஸ் நாடு இந்தியாவில் உள்ள சண்டிகர் நாக்பூர் மற்றும் பாண்டிச்சேரி போன்ற நகரங்களை திறன்மிகு நகரங்களாக மேம்படுத்த இந்தியாவோடு கூட்டாக ஒத்துழைக்கிறது. இந்தியாவும் பிரான்சும் சர்வதேச சூரியசக்தி கூட்டணியை (International Solar Alliance) அறிமுகப்படுத்தி கடகரேகை மற்றும் மகரரேகை ஆகியவற்றிற்கு இடையே உள்ள நாடுகளைச் சூரிய ஆற்றலுக்கான ஒத்துழைப்பில் ஒன்று சேர்க்கின்றன.

**இ. ஆஸ்திரேலியா**

இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் நம்பிக்கைக்குரிய திட்டங்களைப் பல ஆண்டுகளாக மெதுவாகவும் படிப்படியாகவும் ஏற்படுத்தி வருகின்றன. ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் ஒருங்கிணைந்து இந்திய ஆஸ்திரேலிய கடற்படை பயிற்சி (AUSINDEX) ஒத்திகையின் மூலம் கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்த உறுதி பூண்டுள்ளன. ஆஸ்திரேலியா இந்தியா கவுன்சில் இரு நாடுகளுக்கு இடையே உறவை விரிவுபடுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தி பரிமாற்றங்களை ஊக்குவித்து வருகிறது.

**ஈ. ஜப்பான்**

ஜப்பான் நாட்டின் ஷிங்கன்சென்(Shinkansen) முறையை இந்தியாவில் அறிமுகப்படுத்த முடிவு செய்தது. இது பாதுகாப்பு மற்றும் துல்லியத்தன்மை கொண்ட உயர்தர அதிவேக ரயில் அமைப்பு ஆகும். டெல்லி மெட்ரோ ரயில் ஜப்பானிய ஒத்துழைப்பில் உருவான வெற்றிகரமான எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகும். மும்பை, அகமதாபாத் இடையேயான அதிவேக ரயில் போக்குவரத்து (MAHSR)இருநாட்டு ஒத்துழைப்பின் மற்றுமொரு முயற்சியாகும்.

ஜப்பானிய அரசாங்கம் இந்தியக் குடிமக்களுக்கு இந்திய ரயில்வே துறையில் பணிபுரியும் வகையில் ஜப்பானியப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டப்படிப்பைப் படிக்க ஆண்டுதோறும் 20 இடங்களை வழங்கி வருகிறது.

உற்பத்தித் துறையில் உற்பத்தி மற்றும் திறன் இந்தியா (Make in India, Skill India)திட்டங்களில் பங்களிக்கவும் ஜப்பானிய உற்பத்தித் திறன்களை வழங்கி இந்தியாவின் உற்பத்தித் தொழில்துறை தரத்தை மேம்படுத்தவும் 30,000 இந்திய மக்களுக்குப் பயிற்சி வழங்க ஜப்பான் இந்தியா உற்பத்தி நிறுவனம் (Japan India Institute of Manufacturing)அறிவித்துள்ளது.

2017ஆம் ஆண்டு குஜராத், கர்நாடகம், ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு ஆகிய 4 மாநிலங்களில் ஜப்பான் - இந்தியா உற்பத்தி நிறுவனம் (JIM)இரண்டு ஜப்பானிய மானியம் மூலமான படிப்புகள் (Japanese Endowed Courses)அறிவித்துள்ளது.

2017 ஆம் ஆண்டு குஜராத், கர்நாடகம், ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு ஆகிய 4 மாநிலங்களில் ஜப்பான் - இந்தியா உற்பத்தி நிறுவனம்(JIM)ஏற்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு ஜப்பானிய மானியம் மூலமான படிப்புகள் (Japanese Endowed Cources) ஆந்திரப்பிரதேச பொறியியல் கல்லூரிகளில் தொடங்கப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பங்கள் தொடர்பான (இணையதள பொருள்கள், செயற்கை நுண்ணறிவு, பெருமளவு தரவு பகுப்பாய்வு) மூன்று இந்திய ஜப்பான் கூட்டு ஆயவகங்களை நிறுவுவது சமீபத்திய முயற்சிகளில் அடங்கும்.

**இந்தியாவும் மேற்கு ஆசியாவும்**

மேற்கு ஆசியா என்பது எகிப்து, அரேபிய தீபகற்பம், துருக்கி மற்றும் ஈரான் ஆகிய நாடுகளை உள்ளடக்கியது ஆகும். இந்தியாவும் மேற்கு ஆசிய நாடுகளும் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே உறவுகளைக் கொண்டிருக்கின்றன. சிந்துவெளி மற்றும் மெசபடோமியா நகரங்களுக்கு இடையே வணிக உறவு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

மேற்கு ஆசியா பொருளாதார அடிப்படையில் குறிப்பிடத்தக்க பகுதியாக இந்தியாவிற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. நிலத்தால் சூழப்பட்ட, எண்ணெய் வளமிக்க மத்திய ஆசியாவிற்கு ஒரு நுழைவு வாயிலாக அமைந்துள்ளது.

புதிய நூற்றாண்டு தொடங்கியதிலிருந்து இந்தியா மற்றும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் (Gulf Cooperation Council) இடையிலான உறவில் அசாதாரணமான திருப்பம் ஏற்பட்டுள்ளது.

சபஹார் ஒப்பந்தம் எனப்படும் முக்கூட்டு ஒப்பந்தம் இந்தியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி சபஹார் துறைமுகத்தைப் பயன்படுத்தி மூன்று நாடுகளிலும் போக்குவரத்து வழிதடங்கள் ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்துறைமுகம் பாகிஸ்தானைத் தவிர்த்து ஆப்கானிஸ்தான் மற்றும் ஆசியா ஆகிய சந்தைகளை இந்தியா அணுக ஒரு நுழைவு வாயிலாக இருக்கும்.

உலகின் மிகப் பழமையான கடல் வர்த்தக பாதைகளில் ஒன்று சுமேரியாவில் இருந்து பஹ்ரைன் வழியாக மெலுக்கா என்று அழைக்கப்பட்ட சிந்துவெளி நாகரிகம் வரை அமைக்கப்பட்டிருந்தது.

பிரபல அறிஞரான எம்.எஸ். அக்வானி,''இடைக்காலத்தில் இந்தியர்களின் மருத்துவம் கணிதம் மற்றும் வானியல் திறமைகளை அரேபிய மற்றும் ஈரானிய அறிஞர்கள் பெரிதும் மதித்ததோடு, இறுதியில் அவர்களது, அறிவுசார் பாரம்பரியத்தின் பகுதியாகவும் ஆனது'' என்றும் குறிப்பிடுகிறார்.

**இந்தியா மற்றும் சர்வதேச அமைப்புகள்**

இந்தியா ஒரு வலிமை வாய்ந்த வல்லரசாகும். வளர்ந்து வரும் உலகளாவிய செல்வாக்கை அனைத்து நாடுகளிலும் பெற்றுள்ளது. புதிதாக தொழில்மயமாக்கப்பட்ட நடாக இருப்பதால் பல்வேறு நாடுகளுடன் ஒத்துழைக்கும் சிறந்த வரலாற்றைக் கொண்டுள்ளது. பல்வேறு சர்வதேச அமைப்புகளில் முக்கியத்துவம் வாய்ந்த உறுப்பினராக இந்தியா செயல்படுவதோடு, அவற்றில் சிலவற்றின் நிறுவன உறுப்பினராகவும் இருந்து வருகிறது. இந்தியா முறைப்படி அமைக்கப்பட்ட அமைப்புகளான ஐ.நா.சபை, அணிசேரா இயக்கம், சார்க், ஜி-20 மற்றும் காமன்வெல்த் போன்றவைகளில் உறுப்பினராக உள்ளது.

இராணுவ மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவது மற்றும் நாடுகளிடையே அமைதி மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது போன்ற ஐ.நா. சபை எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் இந்தியா உதவுகிறது.

**பிரிக்ஸ் (BRICS)**

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் பிராந்திய அளவில் மற்றும் சர்வதேச அளவில் வளர்ந்து வரும் பொருளாதார, அரசியல் சக்திகள் ஆகும். பிரிக்ஸ் அமைப்பின் தலைமையகம் சீனாவின் ஷாங்காய் நகதில் அமைந்துள்ளது. உலகின் வடபகுதியில் உள்ள நாடுகளின் சவால்களை எதிர்கொள்ளும் விதமாகத் தென்பகுதியில் உள்ள நாடுகளுக்கு நல்வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா, இக்கூட்டமைப்பில் ஒரு தீவிர உறுப்பினராக இருப்பதோடு உலகளவில் தன்னை வடிவமைக்கவும் இது வழிவகுக்கிறது.

**பிரிக்ஸ் கூட்டமைப்பு உருவாவதற்கான காரணம்**

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு ஒரு மாற்றாகவும், அமெரிக்க இந்திய பொருளாதாரத் துறையில் தீவிரமாகச் செயல்பட்டு வருவது கீழ்க்காணும் கூட்டமைப்புகளின் ஒரு பகுதியாக இந்தியா இருப்பதிலிருந்தே நன்கு புலனாகிறது.

| உலகளாவிய குழுக்களின் பெயர்கள் | உறுப்பினர் நாடுகள் | குறிக்கோள்கள் |
|---|---|---|
| ஐ.பி.எஸ்.எ (IBSA) | இந்தியா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா | வேளாண்,கல்வி, ஆற்றல், வர்த்தகம், கலாச்சாரம் மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்துவது. |
| பி.சி.ஐ.எம் (BCIM) | வங்காளதேசம், சீனா, இந்தியா, மியான்மர் | இயற்கைப் பேரழிவுகள் மற்றும் தரவு மீறல்கள் போன்ற அச்சுறுத்தல்களை சமாளிக்கவும் வணிக நலன் பாதுகாப்பிற்கும் |
| எம்.ஜி.சி (MGC) (மீகாங்-கங்கா ஒத்துழைப்பு) | இந்தியா, கம்போடியா, லாவோஸ் மக்கள் ஜனநாயக குடியரசு,மியான்மர், தாய்லாந்து, வியட்நாம் | கங்கா-மீகாங் தாழ்நிலத்தில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கதல் |
| பிம்ஸ்டெக் (BIMSTEC) வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார கூட்டுறவிற்கான முயற்சி | வங்காளதேசம், இந்தியா, மியான்மர், இலங்கை, தாய்லாந்து, பூடான் மற்றும் நேபாளம் | தொழில்நுட்ப பொருளாதார ஒத்துழைப்பு, சர்வதேச வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு ஆகியவற்றை வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் |
| ஆர்.சி.இ.பி (RCEP)ஒருங்கிணைந்த வர்த்தக மண்டலம் | ஆஸ்திரேலியா, புருனே, கம்போடியா, சீனா, இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், கொரியா, லாவோஸ், மலேசியா மியான்மர், நியூசிலாந்து சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, வியட்நாம் | பொருள்கள் வர்த்தகம், சேவை வர்த்தகம், முதலீடுகள், தொழில்நுட்ப ஒத்துழைப்பு, தீர்வு மற்றும் பல பிரச்சனைகளுக்கு உயர்தரமான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் வகையிலான ஒப்பந்தத்தை ஏற்படுத்த |
| ஈ.எ.எஸ் (EAS) கிழக்கு ஆசிய உச்சிமாநாடு | 10 ஆசிய நாடுகள் மற்றும் ஐக்கிய அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான், உள்பட எட்டு முக்கிய நாடுகள் | ஆமைதி மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவிக்க |
| ஜி.சி.சி(GCC) வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் | பஹ்ரைன், குவைத், ஓமன், கத்தார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள், இந்தியா | பொதுவான நோக்கங்கள் மற்றும் ஒத்த அரசியல் மற்றும் கலாச்சார அடையாளங்களின் அடிப்படையில் ஒற்றுமையை அடைய |
| பி.பி.ஐ.என் (BBIN) | வங்காளதேசம், பூடான், இந்தியா, நேபாளம் | எரிசக்தி ஆற்றலுக்காக |
| ஷாங்காய் ஒத்துழைப்பு நிறுவனம் (SCO) | இந்தியா, குஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் | பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பது, எல்லை பிரச்சினைகளைத் தீர்ப்பது நுண்ணறிவு பகிர்வு மற்றும் பயங்கரவாதத்தை எதிர்கொள்வது |

மேலாதிக்கத்திற்குப் போட்டியாகவும் பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

உறுப்பு நாடுகளிடையே பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றவும், சொந்த மற்றும் சுயமாக நிரூபிக்கும் விதமாக இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

**பிரிக்ஸின் நோக்கங்கள்**

- பிராந்திய வளர்ச்சியை அடைவது
- வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் இடையே பாலமாக செயல்படுவது
- மனித மேம்பாட்டிற்கு மிகப்பரந்த அளவில் பங்களிப்பு செய்தல்
- அதிக சமத்துவம் மற்றும் நியாயமான உலகத்தை ஏற்படுத்துதல்

- வணிக ஒத்துழைப்பை அதிகரிக்க பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே உள்நாட்டு நாணயங்கள் மூலம் வணிகம் மேற்கொள்வதை ஊக்குவித்தல் மற்றும் நடப்பு சர்வதேச சிக்கல்களை எதிர்கொல்லுதல்.
- உறுப்பு நாடுகளிடையே தகவல் தொழில்நுட்பங்களைப் பரிமாறிக் கொள்வதை ஊக்குவித்தல், உறுப்பு நாடுகளில் வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு பொருளாதார மாற்றங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல்.

பிரிக்ஸ் (BRICS)என்ற சொல் ஜிம் ஓ′ நேய்ல் (Jim O′ Neill) என்ற பிரபலமான பிரிட்டிஷ் பொருளாதார நிபுணரால் உருவாக்கப்பட்டது. பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் 2050 ஆம் ஆண்டு வாக்கில் ஆறு தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளைவிட டாலர் மதிப்பில் பெரிய நாடுகளாக உருவாகும் என்றும் கடந்த 300 ஆண்டுகளின் அதிகாரப் போக்கு முற்றிலும் மாறுபடும் என்றும் அவர் ஊகித்தார்.

**பிரிக்ஸ் நிதி கட்டமைப்பு**

புதிய மேம்பாட்டு வங்கி (NDB) என்பது பல துறை வளர்ச்சி வங்கி ஆகும். அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களுக்குக் கடன் வழங்குவதே இதன் முதன்மைச் செயலாகும். தேசிய அளவில் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களான சமூக சுற்றுச்சூழல் மற்றும் நீடித்த பொருளாதாரத் திட்டங்களுக்குப் பங்களிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களை மேம்படுத்தும் திட்டங்களுக்கு இது முன்னுரிமை வழங்குகிறது.

அவசரகால நிதி ஒதுக்கீடு ஏற்பாடு (CRA)நாணய விவகாரங்கள் உள்ளிட்ட உலக அளவிலான பண நெருக்கடியில் இருந்து பாதுகாத்திட அடிப்படைத் திட்டம் வழங்க வகை செய்கிறது.

**பிரிக்ஸ் பணம் செலுத்தும் திட்டம்**

2015ஆம் ஆண்டு நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டில் பிரிக்ஸ் நாடுகளின் அமைச்சர்கள் பணம் செலுத்தும் முறை தொடர்பான ஆலோசனைகளைத் தொடங்கினர். இது உலகளாவிய வங்கிகளுக்கு இடையேயான நிதி, செய்திப் பரிமாற்ற அமைப்பிற்கு (SWIFT – Society for World for Worldwide Interbank Financial Telecommunication System)

**உறுப்பு நாடுகளிடையே ஒத்துழைப்பு அதிகரிக்கும் காரணிகள்**

முதலாவதாக வளரும் நாடுகளிடையே தற்போதைய சூழ்நிலையைப் பிரதிபலிக்கும் ஒரு பொருளாதார ஒழுங்கை உருவாக்குவதற்கு பிரிக்ஸ் அமைப்பு முயற்சிகளைத் தூண்டும். இது தொடர்பாக மாற்றங்களை வரையறுப்பதற்கான புதிய வளர்ச்சி வங்கி (NDB) மற்றும் அவசர ஒதுக்கீடு ஏற்பாடு (CRA)ஆகியவற்றின் யோசனையானது பொருளாதாரம் மற்றம் அரசியலில் மிகுந்தத் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இரண்டாவதாக உலக நிர்வாகத்தில் பிரிக்ஸ் நாடுகளின் மாற்று யோசனை இதர நாடுகளின் ஆதரவை ஈர்க்கும். மூன்றாவதாக மற்ற துறைகளுடனான பிரிக்ஸ் தொடர்புகளின் விரிவாக்கம் அதை மேலும் வலுவான கூட்டண்மையாக உருவாக்கும்.

**பெட்ரோலியம் உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (OPEC)**

பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு (எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள்) ஈராக்கில் பாக்தாத் நகரில் நிறுவப்பட்ட ஒரு அரசு அமைப்பாகும். இதன் தலைமையகம் ஆஸ்திரியாவின் வியன்னா நகரில் உள்ளது. ஒபெக் நிறுவன உறுப்பினர்கள் ஈரான்,ஈராக், குவைத், சவுதி அரேபியா மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகள் ஆகும்.

**OPEC** இலச்சினை
இது 1969 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு சர்வதேச வடிவமைப்புப் போட்டியின் மூலம் இச்சின்னமானது தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆஸ்திரிய வடிவமைப்பாளர் ஸ்வோபோடா இதை

வடிவமைத்து போட்டியில் வென்றார். இது இந்த அமைப்பினுடைய பெயரின் வெவ்வேறு எழுத்துக்களை (OPEC) ஒரு வட்டமான வடிவமைப்பில் காணலாம்.

இவ்வமைப்பில் மூன்று வகையான உறுப்பினர்கள் முறையே நிறுவன உறுப்பினர்கள் உள்ளனர். (தென் அமெரிக்காவில் 2, மத்திய கிழக்கில் 6, ஆப்பிரிக்காவில்7). கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யும் மற்றும் அமைப்பின் நோக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் எந்த ஒரு நாடும் ஒபெக் அமைப்பில் உறுப்பினராகலாம்.

**பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் திட்டம்**

- அதன் உறுப்பு நாடுகளுக்குள் எண்ணெய் கொள்கைகளை ஒருங்கிணைத்தல்
- எண்ணெய் சந்தையை நிலைநிறுத்த உதவுதல்
- பெட்ரோலிய உற்பத்தியாளர்களுக்கு நியாயமான நிலையான வருவாய் கிடைப்பதை உறுதி செய்தல்.
- எண்ணெய் நுகர்வு செய்யும் நாடுகளுக்குத் திறமையான, சிக்கனமான, வழக்கமான, விநியோகத்தை அளித்தல்
- பெட்ரோலியத் தொழிலில் முதலீடு செய்பவர்களுக்கு மூலதனத்திற்கு நியாயமான வருவாய் கிடைக்கச் செய்தல்.

**ஒபெக் எவ்வாறு பிற நாடுகளுக்கு உதவி செய்கின்றன?**

பெட்ரோலிய ஏற்றுமதி செய்யும் நாடுகளின் சர்வதேச மேம்பாட்டு நிதி (OPID) என்பது குறைந்த வட்டி வீதத்தில் கடன் அளிக்கும் நிதி நிறுவனம் ஆகும். இது சமூக மற்றும் மனிதாபிமானத் திட்டங்களுக்கு மானியங்களை வழங்குகிறது.

புத்தகங்கள், அறிக்கைகள், வரைபடங்கள், பெட்ரோலிய எரிசக்தி மற்றும் எண்ணெய் சந்தை தொடர்பான மாநாட்டு நடவடிக்கைகள் உள்பட 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொகுதிகளைக் கொண்ட ஒரு தகவல் மையத்தை ஒபெக் கொண்டுள்ளது. இத்தகவல் மையம் பொதுமக்களாலும் பெரும்பாலும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களாலும் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**ஒபெக் நாடுகளுடனான இந்தியாவின் உறவு**

கச்சா எண்ணெய் அதிக அளவில் நுகர்வு செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் தங்களுடைய ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளன. 86 சதவிகித கச்சா எண்ணெய், 70 சதவிகித இயற்கை எரிவாயு, 95 சதவிகித சமையல் எரிவாயு ஆகியவற்றை இந்தியா ஒபெக் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக அதிக எண்ணெய் தேவையினால் இந்தியா ஒரு சிறந்த பங்காளராக ஒபெக் நாடுகளால் அடையாளம் காணப்படுகிறது. இந்தியாவில் போதுமான எண்ணெய் வள இருப்பு இல்லை. இதனால் எண்ணெய்யை இந்தியா உற்பத்தி செய்ய முடியாது. அதனால் இந்தியா விவசாயம் மற்றும் தொழில்துறை உற்பத்தியில் கவனம் செலுத்துகிறது.

**முடிவுரை**

இந்தியா பொருளாதாரம் மற்றும் வணிக ஒத்துழைப்பு தவிர ஒரு நட்பான நீடிக்கப்பட்ட உறவினை தனது அண்டை நாடுகளுடன் ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறது. மேலும்,கல்வி, சுகாதாரம், தீவிரவாத எதிர்ப்பு, பேரிடர் மேலாண்மை, குடிமக்களுக்கான வேலைவாய்ப்பு, குற்றங்களைக் கட்டுப்படுத்தல், தொழில்நுட்ப மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைக்க விரும்புகிறது.